1009

1009
3.20

"கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்(கு)
ஒற்கத்தின் ஊற்றாம் துணை."

நாச்சியார் கோவில்

# முஸ்லிம் சங்க முதற்கமலம்

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."

இதைத் தங்கள் மித்திரர்களுக்கும்
படிக்கக் கொடுங்கள்.

Q7:4.
M20
170241

29 SEP 1920
MADRAS

பிஸ்மில்லாஹ்.

# நாச்சியார் கோவில்

# முஸ்லிம் சங்க

## முதற்கமலம்

…ISTRAR OF…
SEP 1920
10.09
3.20

முஸ்லிம் சங்கத்துக்காக அதன் காரியதரிசியால்
பிரசுரிக்கப்பட்டது

1920

அல்லாஹ்வுக்காகவும் அல்லாஹ்வுடைய ரஸூலுக்காகவும் தீனுல் இஸ்லாத்தைப் பரப்ப மேல்நாடுகளில் சென்று உழைத்துவரும் உண்மையான முஸ்லிம்களுக்கு இப்புத்தகம் உரிமையாக்கப்பட்டது.

கார்டியன் பிரஸ்

சென்னை.

OFFICE OF ... 29 SEP 1920 MADRAS.

# முகவுரை

இம் முஸ்லிம் சங்கத்திலிருந்து யாங்கள் சென்ற 1919-ம் ஆண்டில் 20 இதழ்கள் பிரசுரம் செய்து மொத்தம் 35,200 நோட்டீஸ்கள் வரையில் முஸ்லிம்களின் நன்மைக்கென இலவசமாக வெளியில் பரத்தியிருக்கின்றோம். அவற்றையெல்லாம் படித்து விட்டுப் பலர் அலக்ஷியமாய் அப்பால் போட்டிருத்தல் கூடும். இந்த 20 இதழ்களிலும் சொல்லப்படும் விஷயங்கள் மிகவும் அருமையானவை யாயிருக்கின்றமையாலும் அவை எப்பொழுதும் எல்லோருக்கும் அதிசமீபத்தில் பார்வைக்கு முன்வரவேண்டிய முக்கிய அம்சங்களுள் முதன்மை பெற்றிருப்பதனாலும் இவற்றையெல்லாம் திரட்டி முஸ்லிம்சங்க முதற்கமலம் என்னும் ஒரு சிறுபுத்தகமாக வெளியிட்டிருக்கின்றோம். இதிலுள்ள அரிய பெரிய விஷய நுணுக்கங்களை ஆராய்ந்தறிபவருக்கு, "நாடியபொருள் கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம், வீடியல் வழியதாகும்," என்று வேண்டுகிறோம்.

நாச்சியார்கோவில்
1—8—20.

முஸ்லிம் சங்கம்,
மஜ்மஉல்பஹ்றைன்.

# விஷய அட்டவணை


| இதழ். | பெயர். | பக்கம். |
|---|---|---|
| 1 | ஈமான் அல்லது உறுதி | 1 |
| 2 | நரகத்தின் முடிவு | 42 |
| 3 | சுவர்க்கானந்த விருத்தி | 45 |
| 4 | ஓரேமந்திரமும் உலகத்திருத்தமும் | 47 |
| 5 | லா இக்ராஹபித்தீன் | 50 |
| 6 | உலகத்துக்கெல்லாம் ஒரேமதம் | 53 |
| 7 | பஞ்சமந்திரங்கள் | 57 |
| 8 | ஏழை வரி | 59 |
| 9 | நோன்பும் வணக்கமும் | 63 |
| 10 | மாட்சிமையான இரவு | 66 |
| 11 | பித்ரா | 73 |
| 12 | இணையற்ற ஏகபராபரன் | 76 |
| 13 | ஈதுல் அல்ஹா | 87 |
| 14 | குர்பானும் சற்குணமும் | 99 |
| 15 | அழுக்காறும் அவதூறும் | 125 |
| 16 | இஸ்லாமும் விக்கிரக ஆராதனையும் | 141 |
| 17 | ஸ்திரீ புருஷவாழ்க்கை (அனு - 1) | 156 |
| 18 | எமது ஆசிரியர்கள் ... 2 | 161 |
| 19 | இஸ்லாமும் பகுத்தறிவும் ... 3 | 166 |
| 20 | அல்கௌலு பிபனுயின்னூரி... 4 | 191 |

# பிழை திருத்தம்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 16 | 26 | மடைத்தல் | மடைதல் |
| 45 | 26 | மேலும். ஓங்கி | மேலும் ஓங்கி |
| 71 | 1 | இதழ்-1. | இதழ்-10. |
| 72 | 12 | உற்வினர் | உறவினர் |
| 79 | 12 | காக்கவாது | காக்கவாவது |
| 81 | 7 | மார்த்தியம் | மர்த்தியம் |
| 87 | 21 | நன் | நன்மை |
| 88 | 27 | ஹாஜராவு | ஹாஜராவும் |
| 91 | 11 | புறிவோர் | புரிவோர் |
| 95 | 15 | கண்டறி.;' | கண்டறி,' |
| 100 | 9 | அதனின்றும் | அதினின்றும் |
| 111 | 1 | இதழ்-13 | இதழ்-14. |
| 131 | 26 | செய்யாதவருக்கு- | செலவு செய்யாதவருக்கு |
| 146 | 2 | தவறு | தவறுக |
| 155 | 7 | பாகு படு | பாகுபாடு |
| 163 | 16 | முறைப் | முறை |
| 172 | 23 | எத்னை | எத்தனை |
| 174 | 2 | னுட்காணப்படின் | காணப்படின் |
| 175 | 25 | வர்களுடைய | அவர்களுடைய |
| 184 | 25 | ஒடக் | ஓடக் |
| 187 | 28 | ஆகாயத்துச்கு | ஆயத்துக்கு |
| 188 | 11 | முக்கலே | முக்காலே |
| 205 | 14 | மறிவ. | மறிவு. |
| 205 | 20 | அதற்குதக | அதற்குத்தக. |

பக்கம் 10, வரி 11—15-ல் உள்ள குர்ஆன் ஆயத்தை, பக்கம் 9, வரி 22-க்குக் கீழ் வைத்துப் படிக்க.

'புறட்டு,' "புறட்டி" என்று வருமிடங்களில் "புரட்டு," "புரட்டி" என்று படிக்க.

# நன்றிகூறல்

இப்புத்தக விஷயமாகவும் இதிலடங்கிய இதழ்களின் விஷயமாகவும் பாடுபட்டுத் தம்முடைய உடல் பொருள் ஆவியை யெல்லாம் தத்தம் செய்து வரும் எமது உத்தம மித்திரர்களுக்கெல்லாம் இம் முஸ்லிம் சங்கம் "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ வுலகு," என்பதேபோல் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றது.

முஸ்லிம் சங்கம்.

REGISTRAR OF BOOKS
29 SEP 1920
MADRAS

கமலம்—1 இதழ்—1

# முஸ்லிம்சங்க முதற்கமலம்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

நஹ்மதுஹூ வனுசல்லிஅலா ரஸூலிஹில் கரீம்.

நாச்சியார்கோவில் முஸ்லிம் சங்கத்தில்

அதன் ஆரம்ப தினமாகிய

1919-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1வ-யில்

ஷையூர், பா. தாவுத்ஷா சாஹிப், பி. ஏ.,

அவர்களால் உபன்யசிக்கப்பட்டது.

---

விஷயம் :

## ஈமான் அல்லது உறுதி

---

### முகவுரை

இச்சங்கத்தில் விஜயம் செய்திருக்கும் முஸ்லிம் சகோதரர்களே!

இன்று நாமெல்லோரும் இச்சபையில் கூடியிருப்பதன் கருத்து இன்னதென்பதும் இச்சங்கத்தின் நோக்கங்கள் இன்ன இன்னவென்பதும் இது வரையில் நீங்கள் கேட்டுவந்த விஷயத்தால் நன்குணர்ந் திருக்கின்றீர்கள்.

இச்சங்கத்தின் நோக்கங்களுக்கு இணங்க இச்சிற்றறிவுடையேனாகிய யான் இன்று ஓர் உபன்யாசம் செய்யத் துணிந்திருக்கிறேன். என்னால் இயலாத இப்பெருங்காரியத்தை ஏற்றுக்கொண்ட என்னுடைய மனத்துணிவையும் யான் சொல்லப்போகும் விஷயத்தில் காணப்படும் சொற்குற்றம் பொருட்குற்றம் முதலியவற்றையும் மன்னித்து விஷயத்தின் சாரத்தை மட்டும் நல்லோர்களாகிய நீங்கள் எல்லோரும் கிரகிப்பீர்களெனத் துணிந்து பின்வருமாறு சொல்ல முன்வந்திருக்கிறேன்.

## மதமென்பதென்ன?

பூவுலகின்கண் மானிடவர்க்கத்தில் பிறந்தாரெல்லாரும் பகுத்தறிவுடையவரா யிருக்கின்றாரென்பது உலகமறியக் கிடக்கும் உண்மையன்றோ? யுக்திக்குப் பக்கத்தில் குயுக்தியும் தர்க்கத்துக்குப் பக்கத்தில் குதர்க்கமும் செய்யக்கூடியவர்கள் அநேகர் காணப்படுகின்றனர்; இப்படிப்பட்ட குதர்க்கமும் குயுக்தியும் செய்யத்தக்கவர் உலகில் இருக்கின்றார்கள் என்பதே மனிதனுக்கு இயற்கையில் பகுத்தறிவு உண்டென்பதை நன்கு விளக்குகின்றது. முற்காலத்தில் எவ்வாறாயினும் இக்காலத்தில் பகுத்தறிவுக்கு முரணான விஷயத்தை மனிதர் நம்பும்படி செய்வது அசாத்தியமான காரியமாயிருக்கின்றது. ஆதலின் லௌகிகத்திலேனும் வைதிகத்திலேனும் பகுத்தறிவுக்கு மாறானவற்றை ஏற்றுக்கொள்ளுதல் மனித புத்திக்கு ஒவ்வாததாய்க் காணப்படுகிறது. ஆகவே பகுத்தறிவுக்குப் பொருத்தமுள்ள கருமங்களே இகபர சாதகங்களுக்குரிய சுகத்தையும் மேன்மையையும் தரத்தக்கனவாம்.

இத்தகைய பகுத்தறிவுடன் ஆராயப்புகின், "மதம் (மார்க்கம்) என்றாலென்ன?" என்னும் கேள்வி உதிக்கின்றது. மதமாவது, மனிதர்கள் இகலோகத்தில் சர்வ சுகத்தையும் நாகரீகத்தையும் அடைந்து தங்களுடைய சக்தியை முற்றிலும் முதிர்ச்சிபெறும்படி செய்து இதன் தொடர்ச்சியாகப் பரலோகத்தில் நித்தியானந்தத்தையும் முத்தி இன்பத்தையும் சதா சான்னித்தியமாக அடைதற்குவேண்டிய அனுஷ்டான முறைகளைக் காட்டிக் கொடுக்கும் சன்மார்க்கமாகும். "சன்மார்க்கம்" என்றால் அதில் நம்புதற்குரிய சில கோட்பாடுகள் இருந்தே தீர வேண்டும்; ஆயினும் இவ்வாறு நம்பப்படும் கோட்பாடுகள் வெறும் நம்பிக்கையளவில் மட்டும் நில்லாமல் அனுஷ்டானத்துக்கு வாத்தக்கவையா யிருத்தல் அவசியம்; அனுஷ்டிக்க முடியாத நம்பிக்கைகள் ஒரு மதத்தில் இருந்தும் அவற்றால் ஒன்றும் பயனில்லை. தாழ்ந்த நிலைமையிலிருப்பவனொருவன் மேன்மை பெற விரும்புவானாயின் அவன் தன் நம்பிக்கைக்குத் தக்க அனுஷ்டானங்களையும் அனுஷ்டித்தல்வேண்டும். "அரசனாக ஆதல்வேண்டும், அரசனாக ஆதல்வேண்டும்," என்று மட்டும் ஒருவன் அநேக கோடிமுறை மனஸால் நம்பினபோதிலும் வாயால் ஜபித்தபோதிலும் அவனுக்கு அப்பதவி எட்டாது; ஆனால் அனுஷ்டானத்துக்கு வாத்தக்க நம்பிக்கைவைத்து அந் நம்பிக்கைக்குத் தக்க அனுஷ்டானமும் (ஏற்பாடும்) செய்தால் மட்டுமே கோரியகாரியம் சித்திக்கும். ஆதலின் அனுஷ்டானத்துக்கு வாத்தக்க நம்பிக்கையும் நம்பிக்கைக்குத்தக்க அனுஷ்டானமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருத்தல்வேண்டும்; நம்பிக்கை இல்லாத அனுஷ்ட

னமும் பயன் தராது. அனுஷ்டிக்க முடியாத நம்பிக்கை இருந்தும் பயனுண்டாக மாட்டாது. ஆதலின் சத்திய சன்மார்க்கத்துக்கு அழகாவது, அனுஷ்டானத்துக்கு வாத்தக்க நம்பிக்கையான கோட்பாடுகள் அதில் பொருந்தியிருப்பதுதான். "ஆண்டவனாக ஆய்விடவேண்டும்," என்று ஒருவன் நம்புவானாயின் அஃது அனுஷ்டானத்துக்கு வருதல் கடினம்; ஆதலின் அந்நம்பிக்கை வெறும் நம்பிக்கையேயாம். அனுஷ்டானத்துக்கு வாத்தக்க நம்பிக்கையான கொள்கைகளையுடைய மார்க்கம்தான் சத்திய சன்மார்க்கமாகும்; அதைத்தான் நாம் நம்பிப் பின்பற்ற வேண்டும். இகலோகத்தில் அனுஷ்டிக்க முடியாத நம்பிக்கைகளையுடைய மதம் நம்மதத்தினருக்குச் சம்மதமாகாது. ஆகவே அனுஷ்டானத்துக்குரிய கொள்கைகளையுடைய மார்க்கம் "இஸ்லாம்" என்பது ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட தன்மையையுடைய மார்க்கம் இஃது ஒன்றேயாகும்; இம்மார்க்கத்துக்குரிய பரிசுத்த வேதத்தைப் படிக்கப் புகின் இகலோகத்தில் சுகமடைதற்கு வேண்டிய இலேசான விதிகளையும், மனித சக்தியை அபார விருத்திசெய்து பரலோகத்திலும் சுவர்க்கத்தை அடைந்து மேன்மை பெறுதற்குரிய சுலபமான அனுஷ்டானங்களையும் சிரமமின்றி யாவரும் தெரிந்துகொள்ளலாம்.

## இஸ்லாமென்றாலென்ன?

இஸ்லாமார்க்கத்துக் குரிய சுத்தசத்திய சம்பூர்ண வேதமாகிய பரிசுத்தமான திருக் குர்ஆனில் சொல்லப்படும் பொருளின்படி இஸ்லாம் என்னும் பதத்துக்கு, "சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்படுதல்" என்பது சரியான

வியாக்கியானமாகும். உலகத்தில் ஸயன்ஸ் என்னும் சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் (Scientists) கண்டுபிடித்திருக்கும் உண்மைகளை உற்று நோக்கின், இயற்கையில் காணப்படும் ஒரு சிறு பரமாணு (atom) முதல் பெரிய சூரியன் வரையில் ஒவ்வொன்றும் இயற்கையின் சட்டங்களுக்குக் (Laws of Nature) கட்டுப்பட்டே இருக்கிறதென்பது செவ்வனே விளங்குகின்றது. ஆதலின் அசேதனமென்று நாம் எண்ணும் வஸ்துக்களெல்லாம் சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டே (இஸ்லாத்தில்) நடக்கின்றன: சாஸ்திர ஆராய்ச்சியில்லாத சாதாரண மனிதனொருவன் இயற்கைப் பொருள்களைச் சிறிது நிதானத்துடன் உற்று நோக்குவானாயின், அவை ஒவ்வொன்றும் இயற்கையான சில விதிகளுக்குக் கட்டுப் பட்டே சிறிதும் விலகாமல் நடக்கின்றன வென்பது தெள்ளிதில் விளங்கும்; இயற்கைப் பொருள்கள் இப்படிப்பட்ட சட்டக் கட்டுப்பாட்டை (இஸ்லாத்தை) ஒரு விநாடியேனும் கைவிடுமாயின் இவ்வண்டங்களெல்லாம் என்ன கதியாம்? ஆகாயத்திலுள்ள சூரிய சந்திர நட்சத்திர கிரகங்கள் ஒரிமைப்பொழுது நேரம் தமக்கேற்பட்ட சட்டத்தினின்றும் விலகி நடக்கப்புகுந்தால் நம் கதி என்னும்? நாம் இருக்குமிடம் தெரியாமற் பறந்துபோவோம். மேற்சொன்ன கோளங்களையும் இவ்வுலகில் காணப்படும் பகல் இரவு பருவம் நதி மலை கடல் முதலியவற்றையும் கவனித்துப் பாருங்கள்; இவைகளெல்லாம் தத்தமக்குரிய வழியில் நிற்கவில்லையா? இவ்வண்டகோளம் உற்பத்தியானது முதல் ஒரு நாளேனும் இயற்கைப் பொருள்கள் தம் வரம்புகடந்து நடந்ததில்லை. இரவும் பகலும் சேர்ந்து 24-மணி என்றால் உல

கம் தோன்றியது முதலே இப்படியிருந்துவருகிறது, இரவும் பகலை விழுங்குவதில்லை, பகலும் இரவை விழுங்குவதில்லை. இப்படியே வருஷம் ஒன்றுக்கு *365¼ நாளென்பதும், வருஷம் ஒன்றுக்கு 6 பருவம் உண்டென்பதும் மாறுமல் தொன்றுதொட்டு இஸ்லா மார்க்கத்தில் இருந்து வருகின்றன. இதுதான் இஸ்லா மென்பது. ஆகவே இஸ்லா மார்க்கத்தின் அவசியத்தைத் தெரிவிக்குமிடத்திலெல்லாம் திருக் குர்ஆன் வேதம் இயற்கைப் பொருள்களிலிருந்தே உதாரணம் காட்டு கின்றது.

## குர்ஆன் ஆயத்துக்கள்

"உறுதியாக இறைவனிடத்தில் தீன் (மார்க்கம்) என்பது இஸ்லாமேயாம்; (இறைவனது சட்டத்துக்குக் கட்டுப்படுவதேயாம்.)"

"இறைவனுடைய மார்க்கத்தை யன்றி (இதரமார்க்கத்தை) அவர்கள் ஏற்கப் பார்க்கிறூர்களோ? (வேண்டுகிறூர்களோ?) வானங்களிலும் பூமியிலுமுள்ள ஒவ்வொன்றும் தன் இச்சையாகவோ பலவந்தமாகவோ அவனுக்கே (அல்லாஹ்வுக்கே) தாழ்ந்து கீழ்ப்படிகின்றது; அவனிடத்திற்கே அவை திரும்பக் கொண்டுவரப்படும்."

"இன்னும் சூரியன் (தனக்கு ஏற்படுத்தப்பட்ட) தனது நிலைக்களத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது; இஃது எல்லாம் வல்லசர்வக்ஞன் விதித்த விதியாகும். இன்னும் சந்திரனே, (அதன் நடையில்) அதற்குப் பல ஸ்தானங்களை வகுத்தோம்; எம்மட்டு மென்றால், (கடைசி

---

* சூரியன் கணக்குப்படி வருஷம் 1 க்கு 365-தேகால் நாளாகும்.

ஸ்தானத்தில் காய்ந்து மெலிந்து வளைந்து மஞ்சள்நிறமடைந்து போன) பழய ஈச்சங்குலையின் காம்பைப்போல் (தோன்று மட்டும்) அது திரும்ப மாறுகின்றது. சந்திரனிடம் நெருங்கிச்சேர்வது சூரியனுக்கு (இலகுவும்) சாத்தியமுமன்று. பகல் கழிவதற்குள் இரா முந்துவதுமில்லை. சர்வமும் (தன் தனக்குரிய) ஒவ்வொரு வான (மண்டல)த்தில் சுற்றிக்கொண்டிருக்கின்றன."

இதுதான் இஸ்லாம். இனி, தன் தனக்கு ஏற்பட்ட வழியை எந்த வஸ்துவேனும் கடக்குமாயின் உடனே அதற்கு அழிவுநேரிடும். இயற்கைப் பொருள்களில் மட்டுமன்று இப்படிப்பட்ட சட்டக் கட்டுப்பாட்டை நாம் பார்ப்பது; நம்முடைய இகலோக வாழ்க்கையில் மனித கோஷ்டியாரும் கூட்டமாகச் சேர்ந்து வாழவேண்டுமாயின் தமக்குள் சட்டதிட்டங்களை ஏற்படுத்திக்கொண்டு அவற்றின்படி கட்டுப்பட்டு நடத்தல் அத்தியாவசியமாகும்; இஃதேபோல் பரலோகத்துக்கேகி அங்கும் சுகம் பெற நாடுவோர் வைதிக சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்தலே அவர்கட்குரிய கடமையாம்.

## இயற்கையான மதம்

திருக் குர்ஆனில் சொல்லி யருளியபடி இயற்கையில் காணப்படும் ஒவ்வொரு வஸ்துவும் தன் தனக்குரிய வழியில் நின்று ஒன்றுக்கொன்று பரஸ்பரம் உதவி புரிந்துகொண்டு ஆண்டவனுடைய சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டு இஸ்லா மார்க்கத்தில் இருந்துவருகின்றது. பரமாணுக்களெல்லாம் தனித்தனியே இறைவன் சட்டத்துக்குக் கட்டுப்படும்போது பல் கோடி கோடி பரமாணுக்

களின் சேர்க்கையால் அமைக்கப்பட்ட மனிதனும் இறைவன் சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட வேண்டியவனாகவே இருக்கிறான்; பரமாணுக்கள் கட்டுப்படும்போது அவற்றின் சேர்க்கையா லுண்டான தேகத்தையுடைய மனிதன்மட்டும் கட்டுப் பாட்டினின்றும் விலகிக்கொள்ள முடியுமோ? உற்றுநோக்கின் மனிதனுடைய பல்வேறு அவயவங்களும் தம் தம்முடைய சட்டத்துக்குக் கட்டுப் பட்டே நடக்கின்றன; அந்த அந்த அவயவமும் தன் தன் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நம்முடைய இஷ்டத்தின் கீழ் தன்னுடைய காரியத்தைச் செய்யவில்லையா? நம்முடைய இஷ்டம் என்றால் நாம் நாடியபடியெல்லாம் ஓர் அவயவம் செய்பு மென்பது கருத்தன்று; "நமக்கு இஷ்டமான போது," என்பதே தாத்பரியமாகும். ஏனெனின், நம்முடைய இஷ்டம் போனபடியெல்லாம் அவயவம் தொழில் செய்யமாட்டாது. அது அதற்குரிய வழியில் நாம் இஷ்டத்தைச் செலுத்தவேண்டும்; ஓர் அவயவம் செய்யவேண்டிய தொழிலை மற்றோர் அவயவத்தைச் செய்யும்படி செய்தால் அந்த அவயவத்துக்குத் தீங்குநேரும்; பார்க்கவிரும்பினால் கண்கள் தொழில் செய்கின்றன; கேட்க விரும்பினால் செவிகள் தொழில் செய்கின்றன; கண்ணால் கேட்கமுடியாது; காதால் பார்க்கமுடியாது; மிளகாயின் ருசி எப்படியிருக்கிறதென்றறியக் கண்ணில் அதை வைத்தாலும் தாக சாந்தி செய்வதற்காகச் செவிக்குள் தண்ணீரை வார்த்தாலும் அவயவம் கெட்டுப் போவதுடன் நாம் கோரிய எண்ணமும் நிறைவேறாமற்போம். ஆகவே நம் இந்திரியங்க ளெல்லாம் இஸ்லாத்தில் நடக்கின்றன; இவை நல்ல

முஸ்லிம்களாக (இஸ்லாத்தில் நடப்பவன் முஸ்லிம்) இருக்கின்றன; இதனுல் ஒவ்வொரு மனிதனும் இயற்கையில் முஸ்லிம் (சட்டத்துக்குக் கட்டுப்பட்டவன்) என்றே சொல்லவேண்டும்; இக்காரணத்தால்தான், "ஒவ்வொரு குழந்தையும் முஸ்லிமாகவே (சட்டத்துக்குக் கட்டுப்பட்டே) பிறக்கின்றது," என்று எம்பெருமானுர் நாயகம் நபி முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்கட்கு இறைவனருளும் நன் மாசாயமும் உண்டாகுக) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்ருர்கள். இதனுல்தான் திருக்குர் ஆனில்

"இஸ்லாத்தையன்றி (இனியொன்றை) மார்க்கமாக ஏற்கப்பார்ப்பவன் பாவனே அவனிடத்திலிருந்து அஃது அங்கீகரிக்கப்படமாட்டாது; அவனே மறுமையில் நஷ்டமடைந்தவர்களுள் ஒருவனுவான்," என்று ஒரு வாக்கியம் வருகிறது.

நாம் இயற்கையாகவே சட்டத்துக்குக் கட்டுப்பட்டவராய்ப் படைக்கப்பட் டிருக்கிறேம். இயற்கையாய்க் கொடுக்கப்பட் டிருக்கும் தன்மையைக் கைவிடாமல் சட்டப்படியே நம்முடைய சக்தியை விருத்திசெய்தால் அஃது அளவுகடந்த நன்மையைத்தரும். இதுதான் திருக்குர் ஆனில் மறுபடியும் கீழ்க்காணுமாறு சொல்லப்படுகிறது:

## எல்லோரும் முஸ்லிம்களே

இயற்கையாகவே சட்டத்தின்படி நடப்பது நம்முடன் பிறந்திருக்கிறது; அப்படி நடப்பவரெல்லாரும் முஸ்லிம்களே. மனிதனுடைய இத்தகைய தன்மையை அனுசரித்தே இஸ்லாமார்க்கத்தின் கோட்பாடுகள் அமைக்

கப்பட்டிருக்கின்றன. உலகத்தில் காணப்படும் மதங்களுள் இஸ்லா மார்க்கத்தில்தான் மனிதனுடைய இயற்கைக்குத் தக்க விதிகளாகவே அமைந்திருக்கின்றன. மேலும், நாம் இஸ்லா மார்க்கத்தால் அறியும் உண்மை யாதெனின்:- நம்மிடத்தில் மகா உன்னத பதவிக்கு ஏகக்கூடிய சர்வ சிலாக்கியமான அபார சக்திகளெல்லாம் அமைந்திருக்கின்றன; அச்சக்திகளை இஸ்லாம் முறைப்படி பழக்கிவரின் பேரின்பச் சுவர்க்கத்தை எளிதில் அடையலாம் என்பதே.

## மனிதனுடைய குறை

"அல்லாஹ்வுடைய படைப்பான இயற்கை எத்தன்மையுடைய தென்றால், அதன் மீதிலேயே மனிதரைப் படைத்தான். அல்லாஹ்வுடைய படைப்புக்கு மாறுதல் இல்லை. இதுவே (இந்த இயற்கையே) நேரான மார்க்கமாயிருக்கிறது."

மேற்கூறியவாறு இயற்கையாகவே மனிதனிடத்தில் இஸ்லாத்தின் தன்மை இருந்த போதிலும் அவனிடத்தில் எப்போதும் சட்டத்தை முறிக்கும்படியான கெட்ட ஸ்வபாவமும் கூடவே இருந்து கொண்டிருக்கிறது. எம்பெருமானார் அருளியபடி எல்லாக்குழந்தைகளும் இஸ்லாத்தில் பிறந்த போதிலும் பிறகு வயது முதிர முதிர இடம் பொருள் ஏவல்களின் சேர்க்கையால் சட்டத்தை முறிக்கும் ஸ்வபாவத்தை யடைகிறார்கள். இப்படிச் சட்டத்தை முறிக்கும் ஸ்வபாவம் ஒருவனிடம் காணப்பட்டால் அதை மாற்ற ஒரு வழியுண்டா? மாற்றினால் மறுபடியும் அம்மனிதன் சட்டத்தின் வழியில் வந்து சேர்வானா? மனிதனிடத்தில் தவறக்கூடிய தன்மையிருந்தபோதிலும் திரும்

பவும் சட்டத்தின் வழியில் வரக்கூடிய யோக்கியதையும் அவனிடத்தில் உண்டென்றே மனித ஸ்வபாவம் இன்ன தென்றறிந்த ஒவ்வொருவரும் துணிவு செய்திருக்கின்றனர். இதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

## மதத்தின் தொழிலென்ன?

சத்திய சன்மார்க்கமென்று சொல்லத்தக்க மதத்தில் இரண்டு வகைப் பெருமைகள் காணப்படுதல் வேண்டும். 1 மனிதன் தன்னுடைய இயற்கையான இஸ்லாத்தில் நின்றும் தவறாமல் அவனைக்காப்பாற்றுவதற்கும், 2 ஒருகால் ஒருவன் தவறிய போதிலும் அவனை மறுபடியும் இஸ்லாத்தில் திருப்புவதற்கும் விதிகள் ஏற்பட்டிருத்தல் வேண்டும். இவ்விரண்டு பெருமையும், அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரத்தக்க கொள்கைகளையுடைய மார்க்கத்தில் தானுண்டு. இப்படிப்பட்ட மார்க்கம் இஸ்லாமார்க்கமே யானதால் இதில்தான் அனுஷ்டானத்துக்கு வரத்தக்க கொள்கைகளுண்டு. இஸ்லாமார்க்கத்தில் உறுதி அல்லது நம்பிக்கை (இதை ஈமான் என்று சொல்வர்) என்றும், அனுஷ்டானம் (இதை இஸ்லாம் என்பர்) என்றும் இரண்டு பெரும் பிரிவுகளுண்டு. இங்கே நாம் எடுத்துக்கொண்ட விஷயம் ஈமான் அல்லது உறுதியாகும்.

## இல்வாழ்க்கையில் ஏழு கொள்கைகள்

மனிதர்கள் காட்டுமிருகங்களைப் போல் தனித் தனியே வசிப்பது முடியாது; நகரங்களிலேனும் கிராமங்களிலேனும் ஜனங்கள் சமூகங்களாகவே வாழ்தல் முடியும். ஜன சமூகங்களில் எல்லோரும் அனுஷ்டிக்கத் தக்க சில

விதிகள் இருந்தே தீரவேண்டும். சட்டதிட்டமில்லாமல் நாம் சமூகமாக வாழ்தல் அறவே முடியாத காரியமாகும். இரண்டு மனிதர்கள் கூடிவாழ்வதாயின் ஒருவருடைய சொத்தையும் உயிரையும் மற்றொருவர் அபகரிப்பதில்லையென்றும், இருவரும் பரஸ்பரம் தங்கள் ஸ்வதந்தரங்களையும் பாத்தியதைகளையும் ஒருவருக்கொருவர் கெடுப்பதில்லையென்றும் தம்முள் இணங்கினாலொழிய இருவரும் சேர்ந்து வாழ்தல் முடியாமற்போம். இப்படி ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்யும் உணர்ச்சியிருந்தாலொழிய ஜனசமூகத்தாரின் உயிருக்கும் பொருளுக்கும் பாதுகாப்பில்லை. உடற்பொருளாவிக்குப் பாதுகாப்பின்றேல் ஜனசமூகத்தார் இவ்வுலகில் ஒத்து வாழ்தல் முடியாது. ஆனால் சட்டதிட்டங்கள் மட்டுமிருந்தால் போதாது; இவற்றை மனிதவர்க்கத்தாரிடத்தில் புகுத்தி அவர்கள் அச்சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி செய்தற்குத் தக்கவழியோன்றிருத்தல் வேண்டும். சட்டத்தைப் பிறப்பிப்பவரிடத்தில் ஜனங்களுக்கொரு மரியாதையும் பயபக்தி விசுவாசமும் இருந்தால் மட்டுமே அச்சட்டத்துக்கு மதிப்புண்டாகும். மனிதர்கள் நாகரீகம் இல்லாமலிருந்த ஆதிகாலமுதல் இன்றளவும் யாரிடத்தில் அவர்களுக்குப் பயபக்தி விசுவாசம் இருக்கிறதோ அவருடைய வாக்கினின்றும் பிறக்கும் சட்டமே ஜனசமூகத்தில் மதிப்படைந்திருக்கிறது; ஆதலின் இத்தகைய யோக்கியதை உள்ளவர் ஒருவர் இருத்தல் அவசியம்; அவர்தான் சட்டத்தைப் பிறப்பித்தல் வேண்டும். இவரை அரசரென்றேனும், பார்லியமெண்ட் சபையென்றேனும், லெஜிஸ்லேட்டிவ் கௌன்ஸிலென்றேனும்,

வேறெவ்வகைப் பெயராலேனும் அழையுங்கள். எப்பெயருடையவராயினும் உயர் பதவியையுடைய ஒருவர் இருந்தே சட்ட நிரூபணம் செய்தல்வேண்டும். அரசர்கள் முதலில் தங்களுடைய சட்டங்களைத் தபால்மூலமாகவோ தந்தி மூலமாகவோ தமக்கு அத்தியந்த விசுவாசிகளான மந்திரி பிரதானிகட்குத் தெரிவிப்பார்கள். இப்படித் தெரிவிக்கப்படும் சட்டங்கள் எழுத்துமூலமான லிகிதங்களாலோ வேறு பிரசுரங்களாலோ வெளிப்படுத்தப்படும். அச்சட்டங்களை மந்திரிபிரதானியர் பெற்று மனிதர்கட்கு அறிவிப்பார்கள். இவ்வாறுபகிரங்கப்படுத்தப்பட்ட சட்டங்கள் மனிதவர்க்கத்தாரால் மதிக்கப்பட்டாலொழிய அச்சட்டம் இருந்தும் இல்லாததுபோலவேயாம். ஆதலின் சட்டத்துக்கு மனிதர் கட்டுப்பட வேண்டுமாயின் சட்டத்தைமீறினவர்கட்கு இன்னதண்டனையென்று ஒருவிதியிருத்தல் வேண்டும். தண்டனையின்றேல் சட்டத்துக்கும் மதிப்பில்லை. சட்டத்தின்படி நடப்பவர்கட்கு இன்னபெருமையென்றும் அதை மீறினவர்கட்கு இன்ன சிறுமையென்றும் மனத்தில் பதிந்திருப்பதால்தான் நம்மில் அனேகர் சட்டத்தின்படியே நடக்கிறோம். விசாரணை காலத்தில் நாம்செய்த காரியங்களையெல்லாம் நியாயாதிபதி சீர்தூக்கிப்பார்த்துக் குற்றத்துக்குத் தக்க தண்டனை விதிப்பாரென்பது நமக்கு நன்றாகத் தெரிகின்றது. சட்டத்தை மீறும்பட்சத்தில் அதை விசாரிப்பதற்கு ஓரிடம் உண்டென்பதும் அதற்கு ஒருநாள் உண்டென்பதும் அந்நாளில் விசாரணைக்காகக் குற்றவாளிகள் நியாயாதிபதிமுன் ஆஜர் செய்யப்படுவார்களென்பதும் உங்களில் ஒவ்வொருவருக்கும் செவ்வனே தெரியும். "வினையிட்டவன் வினை

யறுப்பான், தினையிட்டவன் தினையறுப்பான்," என்னும் பழமொழிபோல் தன் தன் கருமத்துக்குத் தக்க வெகுமதியோ தண்டனையோ கிடைக்குமென்பது நிச்சயம். ஆகவே எப்படிப்பட்ட ஜனசமூகத்திலும் மேற்கூறிய ஏழும் காணப்படும்; இவ்வேழுக்கும் குறைந்தேனும் அதிகப்பட்டேனும் இருத்தல் முடியாது. 1-அரசன், 2-வேவுகாரர், 3-அரச ஆக்ஞை, 4-மந்திரி பிரதானிகள், 5-நியாய விசாரணை, 6-விசாரணைக்கு ஆஜராகுதல் ஆகிய இவற்றோடு "வினையிட்டவன் வினையறுப்பான், தினையிட்டவன் தினையறுப்பான்," என்பதற்கு இணங்க நாம் செய்யும் காரியம் ஒவ்வொன்றின் லாப நஷ்டத்துக்கும் நாமே உத்தரவாதியென்னும் 7-வது அம்சத்தையும் சேர்த்துக்கொண்டால் மொத்தம் 7 அம்சங்களாகின்றன. சட்டத்தின்படி நடக்க வேண்டுமாயின் நாம் ஒவ்வொருவரும் அதி ஜாக்கிரதையுடன் நடத்தல் அத்தியாவசியம். நாம் சிறிது பராமுகமாயிருந்தால் நம்மை யறியாமல் நம்முடைய செய்கை தியவழியில் நம்மை இறக்கிவிடும். நம்முடைய செய்கை ஒவ்வொன்றின் முடிவும் லாபமாய் முடியுமா அல்லது நஷ்டமாய் முடியுமா வென்று நாம் கண்ணுங் கருத்துமாயிருந்தாலொழியச் சட்டத்தின்படி நடத்தல் நம்மால் இயலாத காரியமாகும். காரணகாரிய சம்பந்தத்தை நன்குணர்ந்து 'நன்மையின் பயன் நன்மையை விளைக்கும், தீமையின் பயன் தீமையையே தரும்,' என்னும் தத்துவத்தை யுணர்ந்து ஒழுகுவதே சட்டத்துக்குக் கீழ் எவ்விதக் குற்றமுமின்றி நம்மை நடப்பிக்கும். ஆதலின் ஜனசமூகம் சுகமடைவதாயின் அதில் இவ்வேழு அம்சமும் இருத்தல் வேண்டும்; இவ்வேழு அம்சங்களும் இன்ன இன்னவெ

ன்று இங்கொருமுறை சொல்வோம்; அவையாவன :—

1 அரசன், 2 அவனது வேவுகாரர்கள், 3 அரச ஆக்ஞை, 4 அவனுடைய மந்திரி பிரதானிகள், 5 நியாய விசாரணை, 6 விசாரணையில் நன்மையின் பயன் நன்மையாயும் தீமையின் பயன் தீமையாயும் விளைதல், 7 விசாரணைக்கு ஆஜராய் நன்மை தீமையின் பலாபலனை அனுபவித்தல்.

## ஈமானில் ஏழு அம்சங்கள்

மேற்சொன்ன 7 அம்சங்கள் மட்டும் இருந்தால் இவ்வுலகம் முன்னேற்ற மடையமாட்டாது; இவ்வேழுடன் கடவுளிடத்தில் நம்பிக்கை யிருந்தால் மட்டுமே மனிதர்கள் ஈடேற்றமடைதல் முடியும். மனிதனுடைய ஒவ்வொரு செய்கைக்கும் அவனுடைய மனமல்லவா மூலஸ்தானமாயிருப்பது? நாம் வெளிப்படையாய்ச் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் அது அதற்குவேண்டிய காரணம் நம் மனத்தில் குடிகொண்டிருப்பதில்லையா? ஆதலின் ஒருவனுடைய வெளிச் செய்கையைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமாயின் அவனுடைய உள்ளத்தையும் பக்குவப்படுத்த வேண்டுவது அத்தியாவசியமன்றோ? மனப் பரிசுத்தமிருந்தால் மட்டுமே செய்கைகளும பரிசுத்தமடையும்; தீய எண்ணமானது தீய வழியிலேயே பிரவர்த்திக்கச் செய்யும்; உலகத்தார்கண்ட உண்மை இது. ஜனசமூகத்திலுள்ள உலக சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பகிரங்கப் பொலீஸ் மிலிட்டெரிப் பொலீஸ் ரகஸ்யப்பொலீஸ் தண்டப்பொலீஸ் முதலிய சட்டப் பாதுகாப்புக்காரர்களெல்லாம் மனிதனுடைய உள்ளத்தில் உதிக்கும் எண்ணம் தொழில் முகத்தால் வெளியான பின்ன

சே குற்றம் நடந்ததைத் தெரிந்துகொள்ளுவார்கள். செய்கைக்கு வாராமல் எண்ணத்தோடு மட்டும் நிற்கும் தீமைகளை இப்பொலீஸாரும் இங்குள்ள நியாயாதிபதிகளாலும் கண்டு பிடித்துத் தண்டித்தல் முடியாது. உலக சட்டங்களில் மனிதனுடைய மனத்தின்கண் நிகழும் தீய எண்ணங்களைத் தண்டிக்க யாதொரு வழியுமில்லை. உலகப் பொலீஸார் எவ்வளவு ஜாக்ரதையுட னிருந்தபோதிலும் மனிதனுடைய உள்ளத்தை யறிதல் அவர்களால் முடியக்கூடிய காரியமில்லை. நம்முடைய மனத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை வேறொரு மனிதனால் அறிதல்கூடுமோ? தீய எண்ணங்களே தீயசெய்கைக்குக் காரணமானதால் அத்தீய எண்ணங்களைப்போக்குவதற்கு ஒரு தண்டனையிருந்தாலொழிய மனிதனுக்கு என்றென்றைக்கும் முன்னேற்றமில்லை. உள்ளத்தில் நிகழும் தீய எண்ணங்களைக் கண்டுபிடிக்கத்தக்க யோக்கியதையுடைய ஒருவன் இருந்தால் மட்டுமே அவ்வெண்ணங்களைத் தண்டித்தல் முடியும். இப்படிப்பட்ட பொலீஸ் உத்தியோகஸ்தன் ஒருவன் உண்டா? உண்டு: அவன் தான் திருக் குர்ஆனில் "அலீமுன் பிதாத்திஸ் ஸுதூர்" என்று சொல்லப்படு பவன். இவன்தான் உங்களுடைய உள்ளத்தை யறியக்கூடியவன்; இவன் தான் சர்வ வியாபி; இவன்தான் சர்வக்ஞன்; இவன் தான் உள்ளும் புறமும் ஒருங்கே யுணரக்கூடியவன்; இவன்தான் மனிதரின் தீய எண்ணங்களைக் கண்டுபிடித்து அவற்றிற்குத்தக்க தண்டனை விதிக்கக்கூடியவன்; இவனால்தான் நெஞ்சம் பக்குவ மடைதல் கூடும். அரசனால் மனிதனுடைய உள்ளத்தைச் சீர்திருத்தம் செய்தல் சிறிதும் இயலாது. இதுபோகட்டும். புறத்திலேனும் அரசன்

குறையில்லாச் சீர்திருத்தத்தைச் செய்தல் முடியுமோ வென்று பார்த்தால் அதுவும் அரசனால் முடிவதில்லை. எத்தனை மனிதர் குற்றம் செய்துவிட்டுப் பிறகு மறைந்திருந்து தப்பிக்கொள்ளுகின்றனர்? இன்னும் எத்தனை குற்றவாளிகள் சந்தேகத்தின் கீழ் விடுதலை யடைகின்றனர்? எத்தனையோ குற்றவாளிகள் நியாயாதிபதியின் சாமர்த்தியக் குறைவால் விடுதலை யடைகின்றனர். இவர்களுடைய செய்கை என்னவாகிறது? தப்பிக் கொள்ளுதல் மிகுதமா யிருப்பதனா லல்லவா குற்றம் செய்வதும் ஓயாமல் நிகழ்ந்துகொண்டே வருகின்றது? குற்றம் செய்த எவனும் தப்புவதில்லை என்றிருந்தால் கெட்ட செய்கைகள் குறையத்தலைப்படு மன்றோ? இன்னும், ஒரு தேசத்தில் குற்றமாகக் கருதப்படும் ஒரு செயல் மற்றொரு தேசத்தில் சாதாரணமாய் எண்ணப்படுகிறது. இப்படிப்பட்ட மனிதர்களையெல்லாம் கண்டுபிடித்துச் சிக்ஷை செய்ய நம்முடைய பொலீஸால் முடியுமோ? முடியாவிடின் அவர்களைத் தண்டிக்க ஓர் "அலீமுன் பிதாத்திஸ் ஸுதூர்" அவசியம் வேண்டாமா? சர்வ வியாபியாய் அரசன் இல்லாமையால்தான் எல்லாக் குற்றங்களையும் கண்டு பிடித்துத் தண்டித்தல் அவனால் கிஞ்சித்தும் முடிவதில்லை.

மேலே சொன்னபடி வெளிப்படையில் குறைவில்லாச் சீர்திருத்தம் செய்தற்கும், உள்ளத்தின் நிகழ்ச்சிகளை நல்வழிப்படுத்தற்கும் அவசியமாக ஓர் ஆண்டகை வேண்டும். இன்னும், குற்றம் செய்தவுடன் இறந்து போகிறார்களே அவர்களையும் அரசனால் தண்டித்தல் முடியுமோ? மரணத்தால் தப்பிப்போனவர்களையும், உள்ளத்தில் மட்டும் தீய சிந்தனையுள்ளவர்களையும் தண்டித்தல் உல

கத்து அரசனால் முடிவதில்லை. ஆகவே மனிதருடைய முன்னேற்றம் சம்பூர்ணமடைய வேண்டுமாயின் எல்லாக் குற்றங்களும்—அகக்குற்றம் புறக்குற்றம் ஆகிய இருவகைக் குற்றங்களும்—நீக்கப்படவேண்டும். ஆதலின் இவ்வுலகில் *தண்டனை யடைந்தவர்களும் தப்பிக்கொண்டவர்களும் ஒருங்கே மரணத்துக்குப்பின் மஹாபெரிய அப்பீல் கோர்ட்டில் (அல்லாஹ்வின் முன்னிலையில்) விசாரிக்கப்பட வேண்டுமென்பது அவசியமாகக் காணப்படுகிறது.

"அந்நாளில் நிறுக்கும் நிறை எதார்த்தமேயாம்."—அல்குர்ஆன், 7:8†

மேலே சொன்னபடி உள்ளும் புறமும் ஒருங்கே திருத்தம் செய்தற்கு ஏற்பட்ட மார்க்கம்தான் இஸ்லா மார்க்கம். நாம் ஆரம்பத்தில் சொன்னபடி அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர முடியாத நம்பிக்கைகளை உபதேசிப்பதன்று இஸ்லாம். அனுஷ்டிக்க முடியாத நம்பிக்கைகளைக் கைக்கொள்ளுவதால் யாருக்கென்ன பயன்? வெறும் நம்பிக்கைகளைப் போதிப்பதற்கு ஒரு மதம் தேவையில்லை. இஸ்லாத்தில் அப்படியில்லை; எல்லாம் அனுஷ்டிக்கத்தக்க நம்பிக்கைகளே. இவற்றை உறுதியாக நம்புவதற்குச் சடங்குகள் ஒன்றும் தேவையில்லை.

---

* உலக தண்டனை சரியான தண்டனையென்று சொல்ல முடியாதாதலால் எல்லோரும் புனர் விசாரணைக்கு இறைவன் முன் செல்லவேண்டும்.

† திருக் குர்ஆன், அத்தியாயம் 7, வாக்கியம் 8; இப்படி இரண்டு இலக்கம் வரும் இடங்களிலெல்லாம் முதல் இலக்கம் அத்தியாயத்தையும் இரண்டாவது இலக்கம் வாக்கியத்தையும் குறிக்கும்.

உலகத்தில் செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்காகச் செய்யவும் ஆத்ம பக்குவத்தால் மரணத்துக்குப்பின் மேன்மையடையவும் வேண்டிய அவசியமுள்ள இலேசான விதிகளை மட்டும் இஸ்லாம் நமக்குப் போதிக்கின்றது ; சில விதிகளை நமக்குப் போதித்து அவற்றின்படி இலேசாக நடக்கச் சொல்லுகிறது இம்மார்க்கம் ; கஷ்ட சாத்தியமான கருமங்களும் சிரம சாத்தியமான தொழில்களும் இம்மார்க்கத்தில் இல்லை. இகத்தை வெறுத்துப் பரத்துக்காக மட்டும் பாடுபடுதல்வேண்டுமென்றும் இம்மார்க்கம் சொல்வதில்லை. இகபரம் இரண்டிலும் ஒழுங்காக இன்பபேரின்பங்களை அடைதற்குரிய மார்க்கம் இஸ்லாம் ஒன்று தான். இகத்தை வெறுத்தால்தான் பரம் சித்திக்குமென்பது இதன் கொள்கையன்று ; ஆனால் இகத்தின் தொடர்ச்சியே பரம் என்பது எமது மார்க்கத்தின் கொள்கை? ஆத்மாவானது இங்கிருந்தே பக்குவ முதிர்ச்சியை அடைந்துகொண்டு போகிறதென்பது எம் மார்க்கத்தின் சித்தாந்தம். பரத்தின் சுகதுக்கங்கள் இகத்தின் நன்மை தீமைக்குத் தக்கவாறாகும் என்னும் கருத்தை எமது பரிசுத்த வேதமாகிய திருக் குர்ஆன், “ இவ்வுலகில் குருடாயிருப்பவன் வரப் போகின்ற அவ்வுலகிலும் அப்படியே இருப்பான்,” என்று மிக அழகாக உருவகப் படுத்திச் சொல்கின்றது ; இவ்வொரு வாக்கியமே ஒருவனை உள்ள நாள் உள்ளமட்டும் நல்வழியில் நடக்கச் செய்வதற்குப் போதுமானதாகக் காணப்படுகிறது.

இதுவரையில் சொல்லிவந்த கருத்தை மெய்ப்பிப்பதற்கு இஸ்லா மார்க்கத்தின் நம்பிக்கைகள் இப்படிப்பட்டவை யென்று இப்போது சொல்கின்றேன். நாம் முன்

சொன்னதுபோல் இம்மார்க்கத்தில் நம்புவதில் (ஈமானில்) ஏழு அம்சங்களுண்டு; முஸ்லிமாயிருக்க வேண்டியவர் ஒவ்வொருவரும் இவ்வேழையும் நம்புதல் அவசியம். இவற்றைச் சொல்லுமுன் மறுமுறையும் இல் வாழ்க்கையில் காணப்படும் ஏழு அம்சங்களையும் உங்களுடைய ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறேன்; அவையாவன:—

1. சட்டம் பிறப்பிக்கும் அரசன்.

2. அவனுடைய சட்டத்தை மந்திரி பிரதானிகளுக்குத் தெரிவிக்கும் ஏவற்காரர்கள்.

3. அரசனுடைய கட்டளைகள்.

4. அவனுடைய மந்திரி பிரதானிகள்.

5. நன்மை தீமைகளுக்கு நியாய விசாரணை.

6. விசாரணையில் நன்மையின் பயன் நன்மையாயும் தீமையின் பயன் தீமையாயும் விளைதல்.

7. விசாரணையின் தீர்ப்பை அனுபவிக்க ஆஜராகுதல்.

இனி ஈமான் விளக்க மந்திரத்தைப் படிப்போம்: "ஆமன்து பில்லாஹி, வமலாயிகத்திஹி, வகுதுபிஹி, வருஸுலிஹி, வல்யௌமில் ஆகிரி, வல்கத்ரி கைரிஹிவஷர்ரிஹி மினல்லாஹித் தஆலா, வல்பஅத பஅதில் மௌத்." இதன் பொருளாவது:—

1. அல்லாஹ் ஒருவன் உண்டென்று உறுதிகொண்டேன்; சட்டத்துக்குத் தலைவன் இவனே.

2. அவனுடைய அமரர்கள் (மலக்குகள்) உண்டென்று உறுதிகொண்டேன்; இவர்கள் ஆண்டவனுடைய ஏவற்காரர்கள்.

3. அவனுடைய வேதங்களும் ஆகமங்களும் உண்

மையென்று உறுதி கொண்டேன்; இவற்றில் அவனு டைய சட்டங்கள் வெளியாயிருக்கின்றன.

4. அவனுடைய அடியவரான தூதர்கள் (மனித தூதர்கள்) உண்டென்று உறுதி கொண்டேன்; இவர் கள் மூல்யமாகத்தான் ஆண்டவனுடைய சட்டங்கள் உல கில் வெளியாயின.

5. கடைசியில் நியாயத் தீர்ப்பு நாள் உண்டென்று உறுதி கொண்டேன்; அப்போது நம்முடைய நன்மை தீமைகள் இன்ன இன்னவையென்று விசாரிக்கப்படும்.

6. நன்மைக்குப் பயன் நன்மையும் தீமைக்குப் பயன் தீமையும் தாரதக்க நன்மை தீமையின் பாகு பாடு இறைவன் வசத்திலிருக்கிறதென்று உறுதி கொண்டேன்.

7. மரணத்துக்குப் பின், என் இகலோகச்செய்கை களின் பலாபலனைப் பெறுதற்கு நான் ஆஜராகுதல் உண்டென்றும் உறுதி கொண்டேன்; நியாயத்தீர்ப்புக் குப் பின் பேரானந்தமோ பெருந்துக்கமோ அடையும் நாள் இது.

இவைதாம் இஸ்லாமார்க்கத்தில் காணப்படும் நம்பிக் கையின் கொள்கைகள். இவற்றை நம்பி உறுதி கொண்ட வர்கள் முஸ்லிம்கள். இஸ்லா மார்க்கத்தை ஒருவர் நம் பினும் நம்பாவிட்டாலும் இவ்வேழு அம்சங்களையும் இவ் வுலகில் ஒவ்வொருவரும் ஒத்துக்கொண்டே தீரவேண் டும்; ஏனெனின், அவருடைய லௌகிக அனுஷ்டானத் தில் இவ்வேழும் காணப்படுகின்றன. இவ்வுலகில் இவ் வேழு அம்சங்களையும் எப்பொழுது கைவிட முடிய வில்லையோ அப்பொழுதே மாந்தரெல்லாரும் அவை இஸ் லாமென்று சொல்லக்கூடிய தன்மையி லிருக்கிறார்கள்;

இவர்கள் லௌகிகத்தில் அனுஷ்டிக்கும் இவ்வேழை யும் வைதிகத்திலும் ஒத்துக்கொண்டால் முழு இஸ் லாமாகி விடலாம். ஒரு காலத்தில் மனித வர்க்கத்தார் முழுதும் இவ்வுண்மையைக் கண்டறியாமற் போகப்போ கிறதில்லை. மேற்சொன்ன 7 அம்சங்களில் ஒன்றேனும் குறையின் முஸ்லிமுடைய நம்பிக்கைக்கு மோசம் நேரிடும். ஆனால் சிலர் 5-வது 7-வது அம்சங்களை ஒன்று படுத்தி மொத்தம் 6 அம்சமென்று சொல்வர். இந்த அம்சங் களில் ஒன்றேனும் அனுஷ்டானத்துக்கு வரமுடியாத கொள்கையன்று. இவ்வேழு அம்சங்களையும் உறுதியாக வைத்துக்கொண்டுதான் முஸ்லிம்கள் தங்கள் லௌகிக வைதிக காரியங்களைச் செய்ய எத்தனிக்கிறார்கள். ஆத லின் அவர்களுடைய செய்கை ஒவ்வொன்றையும் நல் வழிப்படுத்துவது இக்கொள்கைகளே. மேற் சொன்ன மந்திரத்தில் "ஆமன்து" என்னும் பதத்துக்கு, "நான் உறுதி கொண்டேன்," என்று பொருள் செய்திருக் கிறோம்; இப்பதம் "ஈமான்" என்னும் பதத்தடியாய்ப் பிறந்தது. "ஈமான்" என்பதற்கு நம்பிக்கை அல்லது உறுதி என்றுமட்டும் பொருள் சொல்லுவது போதாது; காரிய சித்திக்குக் கொண்டுவரத் தக்க நம்பிக்கை யென் பது "ஈமான்" என்பதன் தாத்பரியம்.

## 1. அல்லாஹ்வின் தன்மை

இனி, ஈமானுடைய அம்சங்களை ஒவ்வொன்றாய் ஆராய்வோம். முன்சொன்ன 7-ல் முதல் அம்சம் அல்லா ஹ்வின்மேல் நம்பிக்கை கொள்ளுதல். இறைவனைக் கண் ணால் காணமுடியா விடினும் மனிதனைக் காண மிகப்

பெரும் சக்தி யொன்றிருந்து இவ்வுலகை நடத்திவைக்கிற தென்னும் உண்மையை மனிதன் உலகில் தோன்றினது முதலே தெரிந்து கொண்டிருக்கிறான். ஆனால் காலங்கள் தோறும் தேசங்கள் தோறும் வேறு வேறு ஜாதியார் வேறு வேறு விதமாய் ஆண்டவனைப் பற்றி அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர்; ஒவ்வொரு ஜாதியாரும் தத்தமக் குமட்டும் உரிய தெய்வமென்று கடவுளைச் சொந்தம் பாராட்டி யிருக்கின்றனர். ஒரு தேசத்துக்கு மட்டும் கடவுளென்றும் ஒரு ஜாதியாருக்குமட்டும் கடவுளென் றும் உரிமை பாராட்டுகின்றனர். ஆனால் இஸ்லாமார்க் கத்தில் கடவுளைப்பற்றிச் சொல்லும் போது இப்படிப் பட்ட சொந்த மொன்றும் பாராட்டிச் சொல்லவில்லை. ஒரு தேசத்தினருக்குமட்டு மென்றாவது ஒரு காலத்தினரு க்கு மட்டுமென்றாவது ஒரு ஜாதியாருக்குமட்டு மென்றா வது ஆண்டவனை இஸ்லா மார்க்கத்தில் கட்டுப்படுத்திச் சொல்லவில்லை. திருக் குர்ஆனில் முதல் அத்தியாயத்தில் முதல் வாக்கியத்தில் ஆரம்பம் செய்யும்போதே, "ரப் பில் ஆலமீன்"—உலகங்களுக் கெல்லாம் தலைவன்—என்று ஆண்டவன் சிறப்பித்துச் சொல்லப்பட் டிருக்கிறான்; இறைவனுடைய குணத்தை இவ்வாக்கியம் விசாலப் படுத்துவ தல்லாமல் எல்லாமனிதர்களையும் அக்குணத் தின்கீழ் ஒன்று படுத்தி அவர்கட்குள் சகோதரத்து வத்தையும் உண்டு பண்ணுதற்கு இஃதொரு வழியா யிருக்கிறது. இன்னும் இஸ்லா மார்க்கம் இறைவன் ஒருவனென்றே சாதிக்கின்றது. இவனை ஒப்பாரும் மிக் காரும் யாருமில்லை; இவனுக்குத் துணையாகவும் யாரு மில்லை; இவனுக்கு மனைவியுமில்லை, மக்களுமில்லை; இவன்

புருஷனுமில்லை, பெண்டுமில்லை; ஆனால் *பேடியுமல்ல. ஆனால் இஸ்லாத்தின் பெருமையெல்லாம் கடவுள் ஒன்றே யென்று ஏண்பித்து அக்கொள்கையை ஸ்தாபித்திருப்பது தான். உலகங்களை எல்லாம் ஆட்சிசெய்வது அவனொரு வனுடைய தொழிலேயொழிய அவனுக்கு வேறு யாரும் உதவி வேண்டியதில்லை. இப்படிப்பட்ட கடவுளுக்கு எல் லாவிதமான சத்துவ குணங்களுமுண்டு; இக்குணங்களி லெல்லாம் கிருபை யென்பது மகா முக்கிய குணமாகக் காணப்படுகிறது; இக்கிருபா மூர்த்தியை "அர் ரஹ் மான்" என்றும் "அர் ரஹீம்" என்றும் அல்குர்ஆன் சிறப்பித்துச் சொல்கிறது. இவ்விரண்டு பதத்துக்கும் கிருபைசெய்பவன் என்று பொருள் செய்தாலும், அல் லது "அர் ரஹ்மான்" என்பதற்குக் கொடையாளி யென் றும் "அர் ரஹீம்" என்பதற்குத் தயையுடையவ னென் றும் பொருள் செய்தாலும் அரபு பாஷையில் இவ்விரண்டு பதத்தாலும் அல்லாஹ்வின் பெருமையை எவ்வளவு தெரி ந்து கொள்ளுகிறோமோ அதில் ஏக தேசத்தைத் தான் தமிழில் நாம் உணரமுடியும். உலகத்தில் காணப்படும் எல்லா மதங்களும் 'கடவுள் உண்டு' என்னும் உண்மையை மூலாதாரமாகவைத்துக்கொண்டு தம்தம் கொள்கைகளைப் பரவச் செய்திருந்த போதிலும் இஸ்லா மார்க்கம் ஒன்று தான் ஆண்டவன் ஏக நாயகனென்று ஸ்திரப்படுத்தி அவ னொருவனே எல்லா உலகங்களுக்கும் போதுமான தலைவ னென்றுமுடிவு கட்டியிருக்கிறது. இஸ்லா மார்க்கத்தை வேறு மதத்தோடு ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்தவர்க ளுக்கே இதன் உண்மை விளங்கும்.

---

* பேடி—ஆணும் பெண்ணு மல்லாத நபுஞ்சகன்.

மேலே சொன்னதுபோல் ஆண்டவன் ஒருவன் என்பதை நிலைப்படுத்தியிருப்பது திருக்குர்ஆனால் சாதிக்கப்பட்ட விஷயங்களுள் ஒன்று. இயற்கைப் பொருள்களை உற்று நோக்குவதாலும் தீர்க்கதரிசிகள் (நபிமார்கள்) முற்காலமுதல் சொல்லியிருப்பதன் உண்மைகளை உணர்வதாலும் ஆண்டவன் ஒருவனென்பது நன்கு விளங்கும். இயற்கைப்பொருள்கள் பல்வேறு வகையாய்க் காணப்படினும் அவற்றில் ஒரே விதமான சட்டம் காணப்படவில்லையா? பல தெய்வம் உண்டென்று வாதிப்பவருங்கூட முடிவில், "தெய்வம் ஒன்றே, வெவ்வேறு தெய்வமென்பது ஒரே தெய்வத்தின் வெவ்வேறு பெயரேயொழிய வேறில்லை," என்று ஒத்துக்கொள்ளுவது எதைக்காட்டுகின்றது? தெய்வம் இல்லையென்னும் நாஸ்திகரும் இவ்வண்டத்தை ஒரு வழிப்படுத்தி ஆள்வது ஓர் இயற்கையான சக்தியென்று ஒத்துக்கொள்ளவில்லையா? இன்னும், அநேக தெய்வம் உண்டென்று வாதிப் ப்வருடைய வேதத்தைப் புரட்டினால் அதன் ஒவ்வொரு பக்கத்திலும் தெய்வம் ஒன்றென்றே சொல்லப்பட்டிருப்பதை நாம் காணவில்லையா? ஆனால் இவ்வுண்மையானது வேறு மதங்களில் அனுஷ்டானத்துக்கு வராத வெறுங்கோள்கையா யிருக்கிறது. ஆனால் இஸ்லாத்தில் மட்டும் இந்த நம்பிக்கை அனுஷ்டானத்துக்கு வந்திருக்கிறது. இன்னும், பரிசுத்த வேதமாகிய எம்முடைய திருக்குர்ஆனால் சாதிக்கப்படும் மற்றோர் உண்மை யாதெனின், இறைவன் மனிதவுருவையோ அல்லது வேறெந்த வுருவையோ எடுத்துக்கொண்டு இவ்வுலகில் அவதாரம் செய்து வருதல் இல்லை யென்பதே. கடவுள் அவதாரமெடுப்பதுமில்லை, எடுக்கவும் சம்மதிப்ப

தில்லை, எடுக்க அவசியமுமில்லை, எடுத்த போதிலும் நமக்குப் பயனுமில்லை, என்னும் சித்தாந்தம் இவ்வேதத்தில் நன்கு நிலைநிறுத்தப் பட்டிருக்கிறது. *

## 2. தேவதூதர்கள்.

ஆண்டவன் இவ்வுலகில் அவதரிப்பது மில்லை, அவதரித்தபோதிலும் நமக்குப் பயனுமில்லை என்று ஆனபோது அவன் தன் சட்டங்களை மனிதர்களுக்கு மனிதர் முகமாகவே வெளியிடல் வேண்டும். ஆனால் தேவதூதர்கள் (மலக்குகள்) மூல்யமாய் அல்லாஹுத் தஆலா தன் கட்டளைகளை மன்பதைக்கு நேராக அறிவித்தல் தகாதோவெனின், அதுவும் முடியாதகாரியமாகும்; ஏனெனின், சட்டங்களுக்கெல்லாம் அதிபதியாகிய தலைவன் தன்சட்டங்களைத் தானே முறித்தல் அத்தனைச் சிறப்புடையதாயிராது; தேவதூதர்கள் நம்முடைய கண்களுக்குப் புலப்படும்படி உலகில் நடமாடுவதில்லை; இப்படி அவர்கள் மறைவாயிருக்க வேண்டுமென்பது கடவுளுடைய சட்டம். தேவதூதர் மனிதரிடம் நேரில் வருவதாயின் அதை அம்மனிதர்கள் தாங்குதல் முடியாமற்போம். இச்சட்டத்துக்கு மாறாக அத்தூதர்களை (மலக்குகளை) நம்முன் மனிதரோடு மனிதராய் அனுப்புதல் அச்சட்டத்துக்கு முரணாகுமன்றோ? இதனால்தான் திருக்குர்ஆனில், "இங்கே குடியிருப்பவர் போல் உலகின்கண் அமரர்கள் நடமாடுவார்களாயின், ஓர் அமரரை (மலக்கை) வானத்திலிருந்து நிச்சயமாக நாம் (இறைவன்) அவர்களுக்கு (மனிதர்களுக்கு)த் தூதாக இறக்கியிருப்போம்," என்று 17:95ல் ஒருவாக்கியம் வருகின்றது.

---

* இதைப்பற்றிப் பின்னொருமுறை விஸ்தாரமாகப் பேசுவோம்.

ஆதலின் மனித தூதர்களே உலகில் அவதரித்தல் வேண்டும். இத்தூதர்களுக்கு இறைவன் தன் அமரார்கள் மூலமாய்த் தன் சட்டங்களைத் தெரிவிப்பான். சாதாரண மனிதர்களுடன் அமரார்கள் நடமாட முடியாத போது ரஸூல் மார்கட்கு (மனிததூதர்கள், அஃதாவது தீர்க்கதரிசிகள்) மட்டும் அந்த அமரார்கள் எவ்வாறு கிட்டுதல் முடியுமென்று சந்தேகம் உண்டாகலாம். ஆனல் மனிதர் தம்முடைய மனித நிலைமையி லிருக்கும்போது மட்டும் அமரார்களுடன் சல்லாபம் செய்தல் இயலாதென்றும், அவர்கள் தம் மனிதத் தன்மையைக் கடந்து ஆத்ம சித்தியடைந்து இறைவ னருளால் தீர்க்க தரிசித்துவம் (நுபுவ்வத்து) அடைவரேல் அவர் அமரார்களுடன் கலத்தல் முடியுமென்றும் இறைவனுடைய சட்டம் அமைந்திருக்கிறது. தீர்க்க தரிசித்துவம் அடைந்தவுடன் அவர்களுடன் இறைவன் நேரில் சல்லாபம் செய்தல் கூடாதோவெனின், கூடும்; ஆனல் இறைவன் தன் சன்னிதானத்துக்கு நபிமார்களை அடிக்கடி அழைப்பதைக் காணத் தானே தன் அமரார்கள் மூல்யமாய்த் தன் கட்டளைகளைச் சொல்லியனுப்புவான். இஃது இறைவனுடைய திருவுள்ளச் சித்தம்.

மேலும், அமரார்கள் இருத்தற்கு இன்னும் ஓர் அவசியம் காணப்படுகிறது. மனிதன் தன்னுள் எவ்வளவு சக்தி வாய்ந்தவனு யிருப்பினும் வெளிப்பொருளின் உதவி இன்றேல் தன் சக்தியை உபயோகித்தல் ஒரு சிறிதும் முடியாது; உதாரணமாக, கண் காது முதலிய உறுப்புக்களைக் கவனிப்போம்; கண்ணுக்குப் பார்க்குந் தன்மை இயற்கையாயமைந்திருப்பினும் வெளியில் வெளிச்சமும் பார்க்கத்

தக்க ஒரு வஸ்துவும் இல்லாமற் போயின் கண் என்ன பயன் தரும்? இவ்வாறே சப்தம் என்பது ஒன்றும் அதை அலைகளாகக் கொண்டுவருவதற்கு வாயுவும் இல்லாவிடின் காதின் மகிமை என்னும்? இவ்விதமே மனிதன் தன் சக்திகளை உபயோகித்தற்கு வெளிப் பொருள்கள் அவசியம் வேண்டும். ஸ்தூல உலகில் (Material World) காணப்படும் அவசியமே ஸூக்ஷ்ம உலகிலும் (Spiritual World) காணப்படுவது; ஸ்தூல உலகில் நாம் செய்யும் ஒவ்வொரு செய்கைக்கும் நம்மிலும் வேறான வெளிப் பொருள் அவசியமாயிருப்பதுபோல் ஸூக்ஷ்ம உலகத்தில் மேன்மை அடைதற்கும் நம்மிலும் வேறான அமரர்களின் உதவிவேண்டும்; இதனாற்றான் ஒவ்வொரு மனிதனுக்கும் இத்தனை அமரர்கள் காவலிருந்து அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கவனிக்கிறார்கள் என்று எம்போன்ற முஸ்லிம் சகோதரர்கள் நம்புகின்றனர். உலகத்தில் நடைபெறும் ஒவ்வொரு தெய்வ சங்கல்பத்திலும் அமரர்களின் சம்பந்தம் உண்டென்றும் நம்புகின்றனர்.

## 3. வேதங்கள்

இது வரையில் சொல்லிவந்த காரணங்களால் தேவ கட்டளைகள் மனிதர்கட்கு அனுப்பப்படுதல் அவசியமெனத் தோன்றுகிறது. மனிதனுக்குப் பகுத்தறிவென்னும் மகாசிலாக்கியமான உணர்ச்சியைக் கொடுத்தருளிய அல்லாஹுத் தஆலாவே அப்பகுத்தறிவை உபயோகிக்கவும் வழிகாட்டுதல் வேண்டும். இன்னதைச் செய்தல் தகுதி, இன்னதைச் செய்தல் தகுதி யன்று என்று பகுத்துணர்தலன்றோ பகுத்தறிவின் தொழில்? இப்படியிருக்கும்

போது. தகுதியுள்ளது இன்னதென்றும் தகுதியற்றது இன்னதென்றும் இறைவன் காட்டிக்கொடுத்த பிறகு தானே நாம் நம்முடைய பகுத்தறிவை உபயோகித்தல் முடியும்? ஆதலின் அடிக்கடி ஏவல் விலக்கல் இன்ன இன்ன வென்று மனிதர்கட்குக் காட்டிக்கொடுப்பது கடவுளுடைய தயையா யிருக்கிறது. இதனாற்றான் ஆண்டவனுடைய வேதம் அவசியமாகிறது. இப்படிப்பட்ட வேதம் ஒன்றே என்று இஸ்லாமார்க்கம் சொல்லவில்லை. கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு மனிதர்களுக்கு அவசியமான போதெல்லாம் அல்லாஹ்வின் வேதங்களும் ஆகமங்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன வென்பது முஸ்லிம் கொள்கை. எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லா ஜாதியார்களுக்கும் வேதமும் ஆகமமும இறங்கியது உண்மை யென்று முஸ்லிம்கள் நம்புகிறோம் (திருக் குர் ஆன், 2:4;35:24). ஆனால் மனிதசேஷ்டையாலோ அல்லது பிறகாரணங்க ளாலோ அந்த வேதங்களும் ஆகமங்களும் மாறுதலடைந்து போய்விட்டன. இப்படி வேறுபாடடைந்து வேதத்தின் பரிசுத்தத் தன்மை மாறுபட்ட போதும், மனிதர்களின் அறிவுமுதிர்ச்சிக்குத் தக்கவாறு புதிய சட்டங்கள் வேண்டிய போதும் வேறொரு புதிய வேதம் அனுப்பப்பட்டது. இப்படி 4 வேதங்களும் பல ஆகமங்களும் இது காறும் இறங்கி யிருக்கின்றன வென்றும், அப்படி இறங்கிய முதல் மூன்று வேதங்களும் எல்லா ஆகமங்களும் காலக்கிரமத்தில் மாறுதலடைந்து போனபடியாலும் எல்லாத் தேசத்துக்கும் எல்லாஜாதியாருக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான மாற்ற முடியாத ஒரே வேதம் அவசியமாக வேண்டியிருந்தபடி

யாலும் கடைசியாக எம்முடைய பரிசுத்த வேதமாகிய அல்புர்க்கான் அனுப்பப்பட்டிருக்கிறது என்றும் நம்புகின்றோம். இஃதொன்றே (திருக் குர்ஆன்) இவ்வுலகத்துக்கும் மறுவுலகத்துக்கும் எக்காலத்துக்கும் எச்சாதியாருக்கும் போதுமானதா யமைந்திருக்கிறது என்னும் உண்மை இவ்வேதத்தைப் படித்த எவருக்கும் நன்கு விளங்கும். இவ்வேதம் 1,300 வருடங்கட்கு முன் இருந்தது போலவே ஒரு சிறிதும் மாறுதலடையாமல் இன்றளவும் இருந்துவருகின்றது. இனியும் உலக முடியுமட்டும் மாறுதலடையா தென்பதைப் பின் வருவார் கண்டுகொள்வர். ஆதலின் இஃதொன்றே போதும்; வேறுவேதம் அவசியமில்லை. இன்னும், திருக் குர்ஆன் வேதமே கடைசி வேதமென்பதற்குச் சரித்திரமே (History) சான்று பகரும். இவ்வேதம் வெளிப்பட்ட காலத்தை வேறுஜாதியாரின் வேதங்களின் தேதியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இதுதான் கடைசியாக 1,300 வருஷங்களுக்கு முன் வெளிப்பட்ட தென்பது தெளிவாகும். இந்த 1, 300 வருஷங்களுக்கு இடையில் வேறு வேதம் ஒன்றும் உலகில் தோன்றியதாகக் காணப்படாமலிருப்பதே எம்முடைய வேதம் கடைசி வேத மென்பதற்குப் போதிய சான்றாகும். இந்த 1,300 வருஷங்களுக் கிடையில் கால தேச வர்த்தமானங்களின் மாறு பாட்டால் அல்குர்ஆன் வேறுபடாதது போலவே இனியும் கால தேச வர்த்தமானங்களால் இவ்வேதம் தன் பரிசுத்தத்தை இழக்கமாட்டாது; அல்குர்ஆன் தன் பரிசுத்தத்தை இழக்காமலே யிருக்குமாதலின் வேறுவேதம் தேவையில்லை. இனி எக்காலத்திலும் வேறு வேதம் உதயமாகா தென்னும் உண்மையைப்

பின்வருவார் கண்டுணர்வர். எல்லாக்காலத்துக்கும், எல்லா ஜாதியாருக்கும், எல்லாத் தேசத்துக்கும் பொருத்தமான திருக் குர்ஆன் ஒன்றிருக்கும்போது இனியொரு வேதத்துக்கு அவசியமில்லை யென்று யாம்துணிகின்றோம். இஸ்லாமார்க்கத்தை ஒப்புக்கொள்ளாத இதர மதத்தினரும் மேற் கூறிய உண்மையை மறுத்தற்கு முடியாது.

## 4. ரஸூல் மார்கள்

(தீர்க்கதரிசிகள்)

அடிக்கடி வேதங்களும் ஆகமங்களும் அல்லாஹுத்தஆலாவால் வெளியாயிருப்பது உண்மையா யிருக்கும்போது அவற்றை மனிதர்கட்கு வாவழைத்துக்கொடுத்த தீர்க்கதரிசிகளும் அநேகரென்று இஸ்லாமார்க்கம் சொல்கின்றது. இவ்வுண்மையே; உலகில் தோன்றிய தீர்க்கதரிசிகள் 1,24,000 நபிமார்களென்றும் இத்தொகையைக் காண அதிகப்பட்டவர் களென்றும் பெரியார் சொல்கின்றனர். திருக் குர்ஆனில் 25 நபிமார்களின் பெயர் மட்டும் தான் காணப்படுகின்றது; ஆனால் பெருந்தொகையான நபிமார் உண்டென்பதை அவ்வேதம் விளக்கியிருக்கின்றது. எல்லா நபிகட்கும் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்கட்கு இறைவனருளும் நன்மாராயமும் உண்டாகுக) அவர்களே கடைசி நபியாவார்கள். இவர்கட்குப் பின் இது வரையில் வேறொரு தீர்க்கதரிசியும் அவதரிக்கவில்லை யென்பது சரித்திர உண்மை; இனியும் ஒருவரும் அவதரிக்கப் போகிறதில்லை; இது நிச்சயம். இனிமேல் வேறொரு வேதம் அவசியமில்லாத போது வேறொரு தீர்க்கதரிசியும் அவசியமில்லை. திருக் குர்ஆன்

சம் பூர்ண வேதமாயிருப்பது போல் அவ்வேதத்தைக் கொணர்ந்த திருநபி எம்பெருமானார் அவர்களும் சம் பூர்ண மனிதராயிருக்கின்றார்கள். இவ்வுலகில் வசிக்கும் எப்படிப்பட்ட மனிதரிடத்தில் காணக்கூடிய அரிய பெரிய செயல்களும், சுகதுக்கங்களும் எம்பெருமானாரிடம் காணப் படும். இவர்களிடத்தில் காணப் படாதது வேறொரு மனித னிடத்தில் காணப்படமாட்டாது. இது சத்தியம். எம்பெரு மானாரவர்க ளுடைய ஜீவியசரித்திர உண்மையையுணர்ந்த ஒவ்வொருவருக்கும் இவ்விஷயம் தெரியும். மனிதர்களுக் கெல்லாம் எம்பெருமானார் சிலாக்கிய மாயிருப்பது போல் தீர்க்கதரிசிகளுக்குள்ளும் இவர்களே சிலாக்கிய மானவர் கள் என்பது தீர்க்கதரிசிகளின் சரித்திரத்தை நன்குணர்ந் தார் தெரிந்து கொண்ட விஷயமாகும். ஆதலின் இனி யொரு நபி வேண்டுவது அவசியமோ?

## 5. கடைசி நாள்

இதன் சித்தாந்தத்தை இறுதியில் 7-வது அம்சத்துடன் சேர்த்து ஆராய்வோம்.

## 6. நன்மை தீமைகள்

### நாயனளவில்

'வினை யிட்டவன் வினை யறுப்பான், தினை யிட்டவன் தினை யறுப்பான்,' என்னும் நியதியின்படி நன்மைக்குப் பயன் நன்மையையும் தீமைக்குப்பயன் தீமையையும் தாத் தக்க நன்மைதீமையின் பாகுபாடு இறைவன் வசத்திலிருக் கிறதென்று சொல்வதோடு இன்னும் இருவகை விசே ஷம் "வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹித்

தலா ” என்பதில் பொதிந்திருக்கிறது: ஒன்றை நன்மையென்று முடிவு செய்வதும் தீமையென்று முடிவு செய்வதும் அவனுடைய தீர்மானமாயிருக்கும். இன்னும் இன்னது செய்தால் அது நன்மையென்றும் இன்னது செய்தால் அது தீமையென்றும் தீர்மானம் செய்து வைப்பது அவனுடைய இஷ்டம் போலிருக்கும். நம்முடைய சுயேச்சையாய் இன்னது நன்மை இன்னது தீமையென்று நாம் முடிவு செய்ய நமக்கு அதிகாரமில்லை. நமக்கு இந்த அதிகாரம் கொடுத்தால் அவரவரும் தம்தமக்கு இஷ்டமான கெட்ட செயல்களை யெல்லாம் நன்மை யென்றே முடிவு செய்வார். குடியர்கள் கட்குடித்தல் பாபமில்லை யென்றே தீர்மானம் செய்வர்; பிறர் மனைவியைப் பெண்டாள்பவர் அத்தொழில் தேனிலும் பாலிலும் சிறந்த இன்பத்தைத் தரத்தக்க நன்மையான தொழிலெனறே சாதிப்பர். ஆகவே உலகில் இன்னதுதான் நன்மை யென்றும் இன்னதுதான் தீமை யென்றும் ஒரு வரைதுறையில்லாமற் போம். ஆதலின் இன்ன இன்ன தொழில்கள் நன்மையென்றும் இன்ன இன்ன தொழில்கள் தீமையென்றும் இறைவனே முடிவு செய்தல் அவசியம்.

இன்னும், மேற்சொன்ன அரபு வாக்கியத்தின் கருத்து, நன்மை தீமைகளின் அளவும் நாயனிடத்திலிருக்குமென்பதாம். இவ்வுலகத்தின் இயற்கையைச் சிறிது கவனிப்போம். எல்லா வஸ்துக்களும் பரமாணுக்களின் கூட்டங்களின் சேர்க்கையால் அமைக்கப்பட் டிருக்கின்றன வென்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையே. இன்ன அணுக்களை இன்ன அணுக்களுடன் இன்னவிதமா யமைத்தால் அது நன்மை செய்யும், இன்ன அணுக்களை இன்ன

அணுக்களுடன் வேறுவிதமா யமைத்தால் அது தீமை செய்யும் என்பது ஆண்டவனுக்கே தெரியும். இத்தனை அணுக்கள் இருந்தால் அது நன்மையைத் தருமென்பதும் அந்த அளவுக்குக் குறைந்தேனும் மிகுந்தேனுமிருந்தால் தீமையைத் தருமென்பதும் ஆண்டவனுக்கே தெரியும். கழுகு என்னும் பறவையையும் ஆண்டவனே படைத்தான்; மனிதனையும் அவனே உற்பத்தி செய்தான். கழுகுக்கு ஆகாரமா யிருப்பது அழுகிப்போன சகிக்க முடியாத துர் நாற்றத்தையுடைய பிணங்களே. அப்பிணங்களை மனிதன் புசிக்கவு மாட்டான்; அந் நாற்றத்தைச் சகிக்கவுமாட்டான். கண்ணாலும் பாராமல் காத தூரத்தில் சென்று விடுவான். கழுகின் மூளையை இன்ன விதம் அமைத்தால் அது புழுத்துப்போன நாற்றப்பிணங்களை நல்ல உணவாகக் கொள்ளுமென்றும், மனிதனுடைய மூளையை இன்னவிதம் அமைத்தால் அப்பிணத்தை மனிதன் விரும்பான் என்றும், இன்ன வஸ்து இன்ன இன்ன நன்மையைத் தருமென்றும், இன்னவஸ்து இன்ன இன்ன தீமையைத் தருமென்றும் ஏற்பட்ட கணக்கு அல்லாஹுத் தஆலாவுக்கே தெரியும். கழுகைப்போல் மனிதனை மாற்றவும் மனிதனைப்போல் கழுகைச் செய்யவும் மனிதனால் முடியாது. இப்படியே வசனாவி என்னும் மூலிகையையும், சஞ்சீவி என்னும் மூலிகையையும் பார்ப்போம். இரண்டு செடிகளும் அணுக்களின் கூட்டத்தால் அமைந்திருந்தபோதிலும் அணுக்களின் அமைப்பின் தன்மையால் வசனாவி உயிரைக் கொல்லவும் சஞ்சீவி உயிரைக் கொடுக்கவும் யோக்கியதை யுடையவையாகின்றன. இது யார் செயல்? இக்கணக்கு யாருக்குத் தெரியும்? இன்னும்,

வெள்ளைப் பாஷாணம் என்னும் மருந்தின் தன்மையை ஆராய்வோம். இது மருந்துக்கும் உதவுகிறது, உயிரையும் கொல்கிறது. பாஷாணத்தின் இத்தனை அணுக்கள் வரையில் மனித தேகத்துக்கு அது நன்மையைச் செய்ய வேண்டுமென்றும் அந்த அளவுக்கு மேற்படின் அம் மருந்தே விஷமாய் முடிய வேண்டு மென்றும் ஏற்படுத்தியது யார்? இக் கணக்கு யார் வசத்தி லிருக்கிறது? இக்காரணங்களால்தான் நன்மை தீமைகளின் அளவு அல்லாஹுத்தஆலாவுக்கே தெரியு மென்று சொல்கிறோம். *

## 7. மறுமை

மறுமையென்பது மாணத்துக்குப் பின்னுள்ள மற்றொரு நிலைமை. இந் நிலைமையானது மறு பிறப்பாக இருக்குமென்பது சிலர் கொள்கை; இவ்வுலகில் ஒருவன் செய்யும் கருமங்களின் பலனை இவ்வுலகிலேயே அவன் மறு பிறப் பெடுத்து அனுபவிப்பானென்பது அம்மதத்தினர் கொள்கை. மரணத்துக்குப் பின் ஒன்றுமில்லை யென்று நம்பும் சில வம்பர்கள் ஒழிப ஏனையோ ரெல்லாம் இறந்த பின் ஒரு வாழ்க்கை யுண்டென்பதை நம்புகின்றனர். உலகில் மறு ஜன்மம் எடுத்தே தன் தன்னுடைய நன்மை தீமைகளின் பலனை அனுபவித்தல் வேண்டுமென்று சொல்பவரெல்லாரும் ஸ்தூல வுலகத் துக்கும் ஸூக்ஷ்ம உலகத்துக்கும் (Material World & Spiritual World) வேறுபாடு தெரிந்து கொள்ளா மலே அப்படிச் சொல்கின்ற

---

* நாயன் நாடினால் நல்வழியில் சேர்ப்பான், அவன் நாடினால் தீய வழியிலும் சேர்ப்பான், என்று சொல்லும் விஷயத்தைப் பின்னொரு முறை விஸ்தாரமாய்ச் சொல்வோம்.

னர். மறுமையைப் பற்றிய சித்தாந்தம் இஸ்லாமார்க்கத்தில் போல் வேறெங்கும் அவ்வளவு விசிதமாய்ச் சொல்லப்பட வில்லை. "இஸ்லா மார்க்கத்தார் இறந்தபின் சுவர்க்கம் போய்ச் சிற்றின்பத்தை மிதமிஞ்சி அநுபவிப்பார்களாம்," என்று தம்மிடத்திலுள்ள பொறுமைக்குணத்தால் தவறாக எண்ணும் சில மனிதர்களல்லாமல் இஸ்லாத்தின் கொள்கைகளை ஒழுங்காகத் தெரிந்து கொண்டவர்களெல்லோரும் மறுமையைப் பற்றி இம் மார்க்கத்தில் சொல்லியிருப்பதுபோல் ஏனைய மதங்களில் சொல்லப்படவில்லையென்று துணிவு கொள்வர்; இது பெரியார் கண்ட உண்மை. இகலோகத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் பரலோகத்தில் உத்தரவாதம் நாம் தான் என்று முன்னரே கூறி யுள்ளோம். இவ் வுண்மையை ஒருவன் கைக்கொள்வானாயின், இவ்வுலகில் அவன் தவறு செய்யவும் மனம் துணிவானா? இகலோகப்பொலீஸை ஏமாற்றி விடலாமென்னும் கபட எண்ணத்தாலல்லவா மனிதர்கள் தீயவழியில் நடக்கத் துணிகின்றனர்? திருக் குர்ஆனின் சித்தாந்தப்படி கீழ்க்கண்டவிஷயங்கள் மறுமைக் குரியவையாகும்:—

### இகலோக வாழ்க்கையின் தொடர்ச்சியே பரலோக வாழ்க்கை.

(1) மரணத்துக்கு முன்னுள்ள வாழ்க்கையையும் பின்னுள்ள வாழ்க்கையையும் அம் மரணமாகிய பெருங்கடல் பிரித்திருப்பதாக எண்ணுவதால்தான் மறுமையைப் பற்றிப் பிறமதத்தினர் எளிதில் தெரிந்து கொள்வது முடியாமற் போகிறது. ஆனால் இப்படிப்பட்ட பெருங்கடலொன்று இடையிலிருப்பதாக இஸ்லாம் ஒத்துக் கொள்ள

வில்லை. இம்மார்க்க சித்தாந்தப்படி மறுமையானது இம்மையின் தொடர்ச்சியே; இதைப்பற்றித் திருக் குர்ஆன் மிகத் தெளிவாகச் சொல்கின்றது :

"எல்லாமனிதருக்கும் (அவனவன் செய்கைகள் எழுதப்பட்டுள்ள) அவனவன் பத்திரத்தை அவனவன் கழுத்தில் மாட்டுவோம்; கடைசித்தீர்ப்பு நாளில் ஒரு புஸ்தகமாக வெளிப்படுத்துவோம்; அது விரித்து வைக்கப்பட்டிருப்பதாக அவன் அதைக் கண்டுகொள்வான்." (17 : 13). "இவ்வுலகில் எவன் குருடாயிருக்கிறானோ அவன் மறுவுலகிலும் குருடாகவேயிருப்பான்" (17 : 72). "ஏ! சாந்தியடைந்து கொண்டிருக்கிற ஆத்மாவே! உன் நாயனிடத்திற்குத் திரும்புவாயாக; அவனுக்குத் திருப்தி செய்து கொண்டு அவனிடத்தில் திருப்தியுடனிருப்பாயாக; ஆதலின் என் (இறைவனுடைய) வேலைக்காரர்களுடன் சேர்ந்து என் தோட்டத்துக்குள் புகுதுவாய்" (89: 27—30).

இவ்வாக்கியங்களுள் முந்தியது என்ன தெரிவிக்கின்றது? இவ்வுலகில் ஊனக்கண்ணுக்குத் தெரியாமல் ஒளித்து வைத்த செய்கைகளும் எண்ணங்களும் மறுமையில் பட்டம் பகல் போல் நம்முடைய பார்வைக்கெதிரில் திட்டமாக வந்து நிற்கும்; அங்கொன்றும் புதிதாயிராது; இச்செயல்களே அங்கும் தொடர்ந்துவரும்; ஆகவே, மறுமை வாழ்க்கையானது புதிதாக ஆரம்பிப்பதன்று. இகலோக வாழ்க்கையே ரகஸ்யமில்லாமல் ஸ்பஷ்டமாக அங்கே தொடர்ச்சியாய்க் காணப்படும். இது முதல் வாக்கியத்தால் தெளியப்படுகிறது. மற்ற இரண்டு வாக்கியங்களும் இகலோகத்திலேயே ஒருவனுடைய சுவர்க்க நரக

அனுபவங்கள் ஆரம்பமாகின்றன வென்று தெரிவிக்கின் றன. மறுமையில் குருடாயிருத்தல் என்பது நிச்சயமாக நரக வேதனைதான்; இகலோகத்தில் குருடாயிருப்பவன் பரலோகத்தில் நரகத்தை யடைவானென்று சொன்ன தன் கருத்து: இகத்தில் ஆத்மகுருடா யிருத்தல் இக லோக நரக வேதனை யென்றும், இந்நரகத்திலிருந்து பரத்தின் நரகத்துக்கு அக்குருடன் போய்ச் சேர்வா னென்றும் உணரவேண்டும், என்பதே. இஃதே போல் சுவர்க்கானந்தத்தை அனுபவிப்பதும் இறைவனுடைய தோட்டத்துக்குள் பிரவேசிப்பதும் ஸூக்ஷ்ம தேகமே; இகலோகத்தில் எவனொருவன் ஆத்மசுக மடைகிறானோ அவனே பரலோகத்திலும் பலனடைவான்; இம்மையின் தொடர்ச்சியே மறுமைக்குப் போகிறது. ஆகவே திருக் குர்ஆன் வேதத்தின்படி இம்மைதான் தொடர்ச்சியாக மறுமையாக மாறுவது; மரணமானது இப்பிறப்பையும் மறுபிறப்பையும் பிரிப்பதில்லை: ஆனால் அதுதான் இரண் டையும் ஒன்று சேர்க்கிறது; இப்படிச் சேர்ப்பதால் இகலோகத்தில் கட்புலனாகாத செய்கைகளும் எண்ணங் களும் பரலோகத்தில் ஆத்மாவின் ஞானக் கண்ணுக்குப் புலனாகின்றன.

இம்மையின் ஆத்மவாழ்க்கையின்
பிரதி பிம்பமே மறுமையாய் விளைவது

(2) இந்த உண்மையானது இஸ்லா மார்க்கத்தில் போல் வேறெந்த மதத்திலும் அவ்வளவு தெளிவா கச் சொல்லப்பட வில்லை. வேறு மதங்களில் ஸ்தூ லத்தையும் ஸூக்ஷ்மத்தையும் கலந்து கலக்கத்தை உண்டு பண்ணி யிருக்கின்றனர். ஆனால் இஸ்லா மார்க்கத்தில்

தான் மறுமையின் வாழ்க்கையானது இம்மையின் ஆத்ம வாழ்க்கையுடைய முழுப் பிரதிபிம்பமென்று செம்மையாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. உண்மையில் ஒவ்வொருவருடைய இம்மைச் செய்கை நன்மையை யுடையதா தீமையை யுடையதா வென்பதும் ஒவ்வொருவருடைய மனத்தில் உதிக்கும் எண்ணமும் எப்படிப்பட்டதென்பதும் இங்கே விளங்குவதில்லை; ஆனல் மறுமையில் எல்லா ரகஸ்யங்களும் பகிரங்கமாய்ப்போம்; நம்முடைய ஸூக்ஷ்மக் கண்களால் நம் செயல்களின் நன்மை தீமைகளை நன்குணர்வோம். அவ்வுணர்ச்சி இப்படிப் பட்டதென்று இகலோகத்திலிருக்கு மட்டும் ஒருவரும் தெரிந்து கொள்வது முடியாது. இதற்காகத்தான், "மறுமை வாழ்க்கையின் அனுபவங்கள் இப்படிப்பட்டனவென்று ஊனக் கண் கண்டதில்லை, இச்செவியும் கேட்டறிந்ததில்லை, இம் மனஸும் உணர்ந்தறிந்ததில்லை," என்று எம்பெருமானர் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

"பார்வைக்குப் புதுமையைத் தரத்தக்கவை பின்னல் என்ன இருக்கின்றன வென்பது ஒருவருக்கும் தெரியாது"—திருக் குர்ஆன் (32: 17).

இவ்வாக்கியத்துக்குப் பொருள் சொல்லும் போது எமது நபிகள் பெருமானர் மேற் சொன்னபடி அருளி யிருக்கின்றார்கள். சுவர்க்கானந்தம் இம்மையின் பிம்பமா யிருப்பது போல் நரக வேதனையும் இம்மையின் பிம்பமே. நரகமானது ஒருவன் பிழைக்கவு முடியாமல் சாகவு முடியாமல் இருக்கத்தக்க இடமென்று திருக் குர்ஆனில் (20: 74) ஒரு வாக்கியம் வருகின்றது.

## மறுமையில் அளவில்லா அபிவிருத்தி

(3) திருக் குர்ஆனில் சொல்லப்படும் ஆத்மார்த்த விஷயங்களை ஆராய்ந்து பார்க்கின் மறுமையில் நம்முடைய ஆத்மா அளவில்லா அபிவிருத்தியை யடையலாமென்பது தெளிவாகின்றது. இம்மையில் நிகழும் ஆத்மவிருத்தி மரணத்துடன் முடிவடைந்து விடுமென்று நம்ப இடமில்லை. மரணத்துக்குப் பின்னும் இந்த ஆத்மா விருத்தியடைந்து கொண்டே போக மார்க்க முண்டு.

"ஏ, எங்கள் தலைவனே, எங்களுக்காக எங்களுடைய பிரகாசத்தைப் பூர்த்தி செய்தருள் வாயாக".—(அல்குர் ஆன், 66: 8).

இகலோகத்தில் ஆத்ம சித்திக் குரிய வழியில் தேர்ச்சி யடையாமல் பாபிகளானவர்கள் தங்களுடைய பாபத்துக்குத் தக்க தண்டனையை நரகத்தி லனுபவித்துத் தீர்ந்த பிறகு அவர்களுடைய ஆவியும் மேன்மை பெறும் பொருட்டுப் பரலோகத்தில் விருத்தியடைதல் கூடும். இஸ்லா மார்க்கப்படி மனிதர்கட்குச் சதாசர்வ காலமும் நரகவேதனை யில்லை; (திருக் குர்ஆன், 6: 129; 11: 107) ஒருவன் செய்த பாபத்துக்கு அது கழியுமட்டுமே அவன் நரகத்தில் போடப்படுவான். பின்னர் இறைவனருளால் அவனுடைய ஆத்மாவும் விருத்தி யடைதற்குரிய தாகின்றது. சுவர்க்கலோகம் இகலோகத்தில் செய்த புண்ணியத்தின் பலனைமட்டும் அனுபவிக்கும் இடமன்று; சுவர்க்கத்திலுள்ளவர்கள் எப்போதும் அதற்கு மேற் பதவியை யடையப் பாடுபட்டுக்கொண்டே மேன் மேலும் உயர்ந்துகொண்டே போவார்கள்; இவர்கள் இவ்வாறு

அளவில்லாமல் உன்னதப் பதவியை யடைந்து கொண்டே மேன்மை பெறுவர் (66:8).

## முடிவுரை

நாம் இதுவரையில் சொல்லிவந்ததை யெல்லாம் நன்கு நோக்கு வீரேல் இஸ்லா மார்க்கத்தில் "ஈமான்" அல்லது "நம்பிக்கை" அல்லது "உறுதி" என்பது வெறும் நம்பிக்கை யன்றென்பது நுமக்குத் தெரியவரும்; இம்மதத்தில் நம்பிக்கை யென்பதெல்லாம் அனுஷ்டானத் துக்கு வாத்தக்க நம்பிக்கையே. திருக் குர்ஆனில் அமரர்களைப் பற்றியும் (மலக்குகள்) சொல்லி யிருக்கிறது; பைசாசங்களைப் பற்றியும் (தாஹூத்) சொல்லியிருக்கிறது. பைசாசங்களிடத்தில் நம்பிக்கையை விட்டு அல்லாஹ் விடத்தில் நம்பிக்கை வைத்தவன் சிலாக்கியனென்று திருவேதத்தில் வருகிறது (2: 256), இங்கே நம்பிக்கை யென்பது வெறும நம்பிக்கை யாயின் பிசாசுகளை உண்டென்று மனஸால் நம்பின மாத்திரத்தில் நாம் சிலாக்கியக் குறை வுள்ளவர்களாய்ப் போக வேண்டுமன்றோ? அப்படி யில்லை. இவ்வேதத்தில் எப்போதும் "நம்பிக்கை" என்பது "நம்பிக்கையும் அனுஷ்டானமும்" என்கிற பொருளில் வருவதால் பிசாசுகளை நம்பி அவற்றின் வழியில் செல்லாதீர் என்பது கருத்து.

ஆகவே மேற்கூறிய ஈமானின் அம்சம் ஏழும் அனுஷ்டானத்துக்கு வாத்தக்கவைகளே. இவை யன்றி அனுஷ்டானத்துக்கு வாத்தகாத ஒரு நம்பிக்கையும் இம்மார்க்கத் துக்குத் தெரியாது.

இவ்வேழு கொள்கைகளில் ஒன்றைக் குறைக்கவுமுடி

யாது; இன்னுமொன்றைச் சேர்க்கவும் இயலாது. 1, 2, 3, 4 இந்நான்கு அம்சங்களால் அல்லாஹுத் தஆலாவின் கட்டளைக்குத் தலைசாய்க்கவேண்டுமென்பதும், இன்றேல் 6-வது அம்சத்தின்படி நம்முடைய செய்கையின் பலனுக்கு நாமே ஜவாப்தாரி என்பதும், 5, 7-வது அம்சத்தின்படி விசாரணையும் தண்டனையும் உண்டென்பதும் ஏற்படுவதால் இந்தக் கொள்கைகளெல்லாம் நம்மை நல்வழிப் படுத்தற்குத் தக்க காரணங்களாக அமைந்திருக்கின்றன.

ஆதலின் நாம் செய்யும் அறியாத்தனமான பாபங்களை யெல்லாம் பொறுத்தருளி, மனதார ஒரு பாபத்தையும் செய்யாமல் தடுத்தாட்கொண்டு, சுத்த சத்திய இஸ்லாமார்க்கத்தில் நம்முடைய நம்பிக்கையும் அனுஷ்டானமும் என்றென்றும் நின்று நிலவும்படி அனுக்ரஹித்து, இகலோகத்தில் எல்லா மேன்மைகளையும் அடையும்படி செய்து, பரலோகத்திலும் அளவில்லா அபிவிருத்தியைக் கொடுத்தருளும்படி எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலாவை இறைஞ்சுவோமாக. ஆமீன். அஸ்ஸலாமு அலைக்கும்.

---

கமலம்—1 15-1-19 இதழ்—2

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.
நாம் இறைவனைப் புகழ்ந்து அவனது திருத்தூதர்
மீதும் வாழ்த்துக்கூறுகின்றோம்.

## நரகத்தின் முடிவு

"(அல்லாஹுத்தஆலாவுடைய இல்மாகிய அறிவில்) எவர்கள் துரதிருஷ்டசாலிகளாய் (காபிர்களாய்) இருக்

கிருர்களோ அவர்கள் நரகத்திலாவார்கள்; அதில் அவர்களுக்குக் கூச்சலும் முணக்கமுமாயிருக்கும். உம்முடைய நாயன் நாடின (து) (காலம்) தவிர வானங்களும் பூமியும் நிலைத்திருந்தமட்டும் அதில் அவர்கள் தரித்திருப்பவர்களாகும்."—திருக் குர்ஆன், 11:106,107.

"உம்முடைய நாயன் நாடின காலம்தவிர" என்னும் வாக்கிய பாகம் அல்குர்ஆன் 11-வது அத்தியாயம் 107-வது வாக்கியத்திலும், 6-வது அத்தியாயம் 129-வது வாக்கியத்திலும் ஆக இரண்டிடத்தில் காணப்படுகிறது; இதில் இஸ்லாமார்க்கப்படி நரகவேதனை சதா சர்வகாலமும் ஒருவருக்கு உண்டென்று சொல்வதற்கு இடமில்லை; நரகவேதனைக்கு ஒருகாலத்தில் நிச்சயமாக முடிவுண்டு. 11: 107-வது வாக்கியத்தை 11: 108-வது வாக்கியத்தோடு ஒப்பிட்டால் இவ்வுண்மை இன்னும தெளிவாக விளங்கும்; சுவர்க்க ஆனந்தமும் இறைவன் நாடினலொழிய வானமும் பூமியும் சகிக்குமட்டும் இருந்துகொண்டேயிருக்குமென்று சொல்லப்படுகிறது; ஆனல், சுவர்க்க ஆனந்தம் "ஒருகாலத்திலும் துண்டிக்கப்படமாட்டாது" என்று 108-ல் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட துண்டிக்கப்படமாட்டாத விஷயம் 107-வது வாக்கியத்தில் காணப்படவில்லை. இதனுல் 107-ல் சொன்ன நரகவேதனை துண்டிக்கப்படுமென்றும் 108-ல் சொன்ன சுவர்க்கபோக மட்டும் துண்டிக்கப்படமாட்டாதென்றும் நாம் விளக்கமாகத் தெரிந்துகொள்ளுகிறோம்.

எம்பெருமானுர் நபிகள் பிரானுடைய திருவாக்கியங்கள் பல மேற்சொன்ன கருத்தை உறுதிப்படுத்துகின்றன: "பிறகு அல்லாஹ் சொல்வான்: பாபிகளுக்காக

அமரர்களும் தீர்க்க தரிசிகளும் நம்பிக்கையுள்ளவர்களும் முறையே ஸிபாரிஷ்செய்தார்கள்; தயைசாலிகளுக்கெல்லாம் மக்காமேலான தயையாளனை (அல்லாஹ்வை) த்தவிர வேறொருவரும் அவர்களுக்காகப் பரிந்துபேசுபவர் இனியில்லை; ஆதலின், அவன் (இறைவன்) நெருப்பிலிருந்து சிலரை வெளியிலெடுத்து, ஒரு நன்மையும் செய்யாத ஒரு கூட்டத்தையும் கரைசேர்ப்பான்," என்று திருநபியவர்கள் அருளியதாக ஸஹீஹ் முஸ்லிம் என்னும் புத்தகத்தில் ஒரு திருவாக்கியம் வருகிறது. கன்ஸுல் உம்மால் என்னும் புத்தகத்தில் இதைப்போன்ற வேறு வாக்கியங்கள் காணப்படுகின்றன: "சிலநாள் தழைத்தோங்கியபின் காய்ந்துபோன தானியவயலைப்போல் ஆகக்கூடிய நாள் ஒன்று நிச்சயமாக நரகத்துக்கு வரும்," என்றும் "அதில் ஒரு மனிதப்பிராணியும் இல்லாமல் போகக்கூடிய நாளொன்று நரகத்துக்கு நிச்சயமாகவரும்," என்றும் கன்ஸுல் உம்மால் 7-வது புத்தகம் 245-வது பக்கத்தில் திருவாக்கியங்கள் காணப்படுகின்றன. "பாலைவனத்திலுள்ள மணலைப்போல் அத்தனை எண்ணமுடியாத வாசிகள் நரகத்திலிருந்தபோதிலும் அவர்களெல்லோரும் அந்நரகத்தை விட்டு எடுக்கப்படும் தினமொன்று நிச்சயமாகவரும்," என்று மகான் உமருப்னுல் கத்தாப் அவர்கள் சொல்லியிருப்பதாக ஒரு வாக்கியம் பத்ஹுல்பயான், பத்ஹுல்பாரி, துர்ரிமன்ஸுர், இப்னிகையூம் எழுதிய் ஹாதில் அர்வாஹ் என்னும் புத்தகங்களில் காணப்படுகின்றன. ஆகவே, 11: 107-ஆல் நரகவேதனைக்கு ஒருகாலத்தில் நிச்சயமாக முடிவுண்டென்று செவ்வனே தெரிந்துகொண்டோம். நரகவேதனைக்கு முடிவுண்டென்னும் கொள்கைதான் "ரப்

பில்ஆலமீன், " "அர்ரஹ்மான்," "அர்ரஹீம்" என்னும் இறைவனுடைய குணப்பெயருக்குப் பொருத்தமாயிருக்கின்றது. இஃது இஸ்லாத்தில் ஒரு சிறந்த கொள்கை. இஸ்லாத்தின் தாராளச் சிந்தையை இக்கொள்கை நன்கு நிலைநிறுத்துகின்றது.

---

கமலம்—1 1-2-19 இதழ்—3

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திரு நாமத்தால்.
நாம் இறைவனைப் புகழ்ந்து அவனது திருத்தூதர்
மீதும் வாழ்த்துக்கூறுகின்றேம்.

# சுவர்க்கானந்த விருத்தி

"அவர்களுடைய பிரகாசம் அவர்களுக்கு முன்னேயும் அவர்களுடைய வலப்புறமாகவும் ஓடும்; அவர்கள் சொல்வார்கள்: 'ஏ, எங்கள் தலைவனே! எங்களுக்காக எங்களுடைய பிரகாசத்தைப் பூர்த்தி செய்தருள்வாயாக, மேலும் எங்களுக்கு ரக்ஷிப்பைக் கொடுத் தருள்வாயாக; நிச்சயமாக எல்லா வஸ்துக்கள் மீதும் உனக்கு அதிகாரமுண்டு.'" (அல் குர்ஆன், 66: 8).

எம்முடைய சுத்த சத்திய வேதத்தில் 66-வது அத்தியாயம் 8-வது வாக்கியத்தில் மேற்சொன்ன விஷயம காணப்படுகின்றது. இதனுல், திருக் குர்ஆனின் கொள்கைப்படி சுவர்க்கமானது இகலோகத்தில் ஒருவர் செய்த நன்மைக்குத்தக்கபடி சன்மானமும் சர்வபோகமும் அனுபவிப்பதற்கு மட்டும் உரிய இடமல்ல வென்றும் ஆத்ம விருத்தியானது அளவில்லாமல் மேன்மேலும் ஓங்கி வளர்

தற்குரிய் ஆரம்ப ஸ்தலமாயும் அஃது இருக்கிறதென்றும் நாம் தெரிந்து கொள்கிறோம். பரலோகத்தில் ஆத்மா அள வில்லா அபிவிருத்தியை அடைதற்கு இடமிருப்பதால் தான் சுவர்க்கவாசிகள் தங்களுடைய பிரகாசத்தைப்பூர்த் திசெய்து வைக்கும்படி இறைவனிடம் மன்றாடுவார்கள்; பிரகாசத்தைப் பூர்த்திசெய்ய விரும்புதலாவது ஆத்ம அபி விருத்தியைச் சம்பூர்ணம் செய்து கொள்ள இச்சித்தல். மேன்மேலும் உள்ள பதவியை அடையும்போது அதற்கு மேலுள்ள பதவியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தாங்கள் அடைந்த பதவி தாழ்ந்ததாகவே காணப்படும்; இத ஞல் மேலே போகப்போக அதற்குமேல் போகும்படி அவா (ஷவுகு) உண்டாகும். மனித சக்தியானது இகலோ கத்தில் சிறிது விருத்தியடைந்ததோடு நின்று போகாமல் மரணத்துக்குப்பின் இங்குள்ள தேகத்தை ஒழித்துவிட்ட ஆத்மா பரலோகத்தில், தான் கீழே செய்திருந்த நன்மை தீமைக்குத் தக்க அனுபவங்களை அனுபவித்துக்கொண்டு அந்த உலகத்தில் மேன்மேலும் அளவும் அந்தமுமில்லா அபிவிருத்தியை அடைதல் கூடுமென்றும், இகலோக அபி விருத்தி குறைவா யிருப்பினும் பரலோகத்தில் அதிக சாவகாசமும் சாதனமும் கிட்டுவதால் அந்தமில்லாப் பேரின்பத்தைத் தரும் அபிவிருத்தியை யடைதல் சாலு மென்றும் எம்முடைய அல்குர்ஆன் வேதத்தால் தெரிந்து கொள்கிறோம். ஆதலின், இகலோகத்தில் முழுதும் நன்மை செய்தவர்கள் போக, பாபமும் நன்மையும் கலந்து செய்தவர்களும் முழுதும் பாபமே செய்தவர்களும் தங்கள் தங்களுடைய பாபத்துக் குரிய தண்டனை யை அனுபவிக்கவேண்டிய காலம் வரையில் நரகத்தில்

அனுபவித்து விட்டுத் தங்களுடைய ஆத்மா பரிசுத்த மடைந்தவுடன் இவர்களும் நரகத்தை விட்டு எடுக்கப்படுவார்கள் ;—(திருக்குர்ஆன் 6 : 129; 11 : 107) இகலோகத்தில் இவர்களைப் பிடித்த ஆத்மவியாதி நரகத்தில் போடப்பட்டுத் தெளிந்தவுடன் இவர்களுடைய ஆன்மாவும் மேலே சொல்லியபடி விருத்தியடைய மார்க்கமுண்டாகும். இதனால்தான் சுவர்க்கானந்தத்துக்கு எக்காலத்தும் முடிவில்லையென்று 11 : 108-வது வாக்கியத்தில் படிக்கிறோம். இன்னும் எம்முடைய நபிகள் பெருமானருடைய திருவாக்கியங்களால் நரகத்திலுள்ள எல்லா மனிதர்களும் ஒரு காலத்தில் அதை விட்டு அப்பால் கரை சேர்க்கப்படுவார் என்பதைச் சந்தேகமின்றிச் செவ்வனே தெரிந்து கொள்கிறோம். ஏனெனின், இஸ்லாமார்க்கக் கொள்கைப்படி ஒருவனுடைய அபரிசுத்தத்தை நீக்கி அவனைப் பரிசுத்தனாக்குவதே நரகத்தின் தொழிலாயிருப்பதனால் அப்பரிசுத்தம செய்யும் வேலை முடிந்த பின் நரகத்தின் தேவையில்லை.

---

கமலம்—1 15-2-19 இதழ்—4

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திரு நாமத்தால்.
நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்
மீதும் வாழ்த்துக்கூறுகின்றோம்.

# ஒரே மந்திரமும் உலகத் திருத்தமும்

“திராட்சைரசமும் (சாராயமும்) (பந்தயத்தின்மேல்)

பகடையாடலும் நட்டுவைத்தவை (விக்கிரகங்) களும் பாணங்களால் பிரிவினை செய்யும் (பந்தய) விளையாட்டும் (இவையாவும்) ஷைத்தானுடைய செய்கையிலுள்ள அசுத்தமான காரியங்களாயிருக்கின்றன. ஆகவே அவற்றை விட்டுத் தவிழ்ந்து அப்புறப்படுங்கள்? அப்போது நீங்கள் ஜயம் பெறக்கூடும்.''

இவ்விஷயம் எமது பரிசுத்தவேதத்தில் 5-வது அத்தியாயம் 90-வது வாக்கியத்தில் காணப்படுகின்றது. மேலே சொன்ன நான்கு விஷயங்களும் இதனுல் அறவே விலக்கப்பட்டிருக்கின்றன. "இவ்வாக்கியம் வெளிப்படுத்தப் பட்டவுடன் ஒரு சப்தம்செய்பவர் (மு அதின்) திருமதீனு நகரத்தின் தெருக்களில் 'சாராயம் மறக்கப் பட்டிருக்கின்றது' என்று அறிவித்தபோது அக்காரணத்தால் ஒவ்வொரு வீட்டிலுமிருந்த சாராயஜாடி ஒவ்வொன்றும் தெருவில் கவிழ்க்கப்பட்டது; இதனுல் வீதிகளில் சாராயம் வெள்ளமாகப் பெருகிற்று,'' என்று ஸஹீஹ்புகாரியில் ஸ்ரீமான் அபூ அப்துல்லா முஹம்மத் பின் இஸ்மாயீல் அவர்கள் வரைந்திருக்கிறார்கள். இஃதுண்மையே. இவ்வொரே வாக்கியத்தால் திருமதீனுவில் சாராயம் அடியோடே ஒழிந்தது. அன்றுமுதல் இன்றளவும் 1,300 வருஷங்களாகியும் ஒரு திவலையேனும் மதுவஸ்து அரபு நாட்டுக்குள் எங்கும் பிரவேசித்ததில்லை. இப்படிப்பட்ட அதிசய சீர் திருத்தம் உலக சரித்திரத்தில் வேறோரிடத்தில் காணக்கிடைக்காது. தேச சரித்திரங்களை நாம் புரட்டிப் புரட்டிப்பார்ப்போமாயின் ஓரிடத்திலும் இதைப்போன்ற அதிசயம் அகப்படுவதில்லை. மத சீர்திருத்தக் காரர்களாகட்டும், ஆசார சீர் திருத்தக் காரர்களாகட்டும், எமது

நபிகள் பெருமானாரவர்கள் மேலே சொன்ன ஒரே வாக்கியத்தால் எவ்வளவு முழு வெற்றியும் பெற்றார்களோ அதில் 100-ல் ஒன்றுகூட மற்றவர்கள் அடைந்ததில்லை. புராதன அரபிகளிடத்தில் காணப்பட்ட தீய ஒழுக்கங்களுள் "குடி" என்பது ஒன்று. அவர்களைப்போல் அக்காலத்தில் மிதமிஞ்சிய மதுவைக் குடித்தவர்கள் வேறு ஜாதியார் யாருமில்லை. ஆகாரம் 3 வேளையும் மதுபானம் 5 வேளையும் செய்துவந்தார்கள். இவர்களுடைய வீடுகளிலும் திண்ணைகளிலும் சாராய ஜாடிகளும் பிப்பாய்களும் நிறைத்து வைக்கப்பட்டிருக்கும். கடைசியில் "குடி" யை நிறுத்தும் வேளைவந்து ஷை அல்குர்ஆன் வாக்கியம் வெளிப்படுத்தப்பட்டுப் பகிரங்கமானவுடன் மதினமாநகரின் தெருக்களில் சாராயவெள்ளம் மடைதிறந்து ஓடிற்று. பாம்பரையாய் வேரூன்றி வந்த அக்கொடுந்தொழில் ஒரே மந்திரத்தால் அடியோடொழிந்தது. அம்மதுபானத்தை ஒழிக்கப் பார்லியமெண்ட் முதலிய சட்டசபைகளும், மதுவிலக்கு சங்கம் முதலிய இதர ஸ்தாபனங்களும் தேவையில்லை. அல்லாஹ் விடத்திலிருந்தும் அவனது ரஸூலிடத்திலிருந்தும் ஒரு வார்த்தை வெளிப்பட்டது; உடனே 5 வேளை மதுபானம் 5 வேளைத் தொழுகையாய் மாறிவிட்டது. என்ன ஆச்சரியம்! என்ன மகிமை!! என்ன மாறுதல்!!! இப்படிப்பட்ட அதிசயமாறுதலை உண்டுபண்ணுதற்கு ஆண்டவனுடைய உண்மையான வாக்கியமும் அதை வெளிப்படுத்துவதற்கு உண்மையான தூதரும் இருந்தால்தான் முடியும். இப்போது இவ்வுலகில் மதுவிலக்கு சங்கங்கள் எத்தனையோ ஆயிரக்கணக்காய்க் காணப்படுகின்றன. அவற்றின் முடிவென்ன? சுருங்கச்

சொல்லுமிடத்து அவை இருந்தும் இல்லாதது போலவே யாம். எவனொருவன் இஸ்லாத்தில் உண்மையாக இருக்கிறானோ அவனே மதுவை வெறுக்கிறான். அரபுநாட்டாரைப் போல் ஏனை நாடுகளிலுள்ள சகோதரர்களும் இந்த அல்குர்ஆன் வாக்கியத்தைச் சிறப்பாகக் கைக்கொள்ளாததால் தான் இப்பூவுலகம் இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்து விட்டது. மேல்நாடு முழுவதும் கெடுவது குடியால்தான். இஸ்லாத்தின் விதிகளெல்லாம் இகலோக வாழ்க்கையில் சுகமடைவதற்கும் பரலோகத்தில் சுவர்க்கமடைவதற்கும் வேண்டிய வண்ணமாக அதிலேசாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வுண்மையைக் கடைப்பிடித்தோர் இகத்திலும் பரத்திலும் இன்பம் எய்துவர். இது திண்ணம்; இது சத்தியம்.

---

கமலம்—1 1—3—19 இதழ்—5

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றேம்.

---

# லா இக்ராஹபித்தீன்

## அல்குர்ஆன்

(மத சம்பந்தமாகக் கட்டாயம் வேண்டாம்)

வாஷிங்டன் இர்விங் என்னும் ஓர் ஆங்கிலேயக் கிரிஸ்தவர், மகான் உமருப்னுல் கத்தாப் அவர்களுடைய சரித்திரத்தைச் சொல்லும்போது அலெப்போவின்

தேசாதிபதியான யௌக்கன்ஞ அவர்கள் முஸ்லிமான சந்தர்ப்பத்தில் "இஸ்லா மார்க்கத்துக்கு மஹா கொடிய விரோதிகளாயிருந்தவர்களும் ஒரு முறை அம்மதத்தைத் தழுவிவிடுவார்களாயின் பிறகு என்றென்றைக்கும் அவர்கள் அம்மார்க்கத்தை மிக நன்றியோடு காப்பாற்றி யிருக்கின்றனர் என்னும் உண்மையானது எம்பெருமானாரவர்களுடைய சரித்திரத்திலும் அவர்களுடைய பின்னடியார்களின் சரித்திரத்திலும் நன்கு காணப்படக்கூடிய ஒரு மெச்சத்தக்க சிலாக்கியமாகவே இருக்கிறது," என்று சொல்கிறார். இவர் சொல்வது உண்மையே; ஏனெனின் இஸ்லாத்தில் ஒருவர் வந்தால் அவர் அதிலுள்ள பெருமையைக் கண்டு பிறகு எப்போதும் தம் உடல்பொருள் ஆவியையெல்லாம் இம்மார்க்கத்தின் பொருட்டுச் செலவு செய்கிறார். இஃது இஸ்லாமார்க்கத்தின் பெருமை. இவ்வாறிருந்தும் இம்மதத்தில் சேரும்படி ஒருவரையும் கட்டாயம் யாரும் செய்வது கிடையாது. இதற்காக மிஷ்ஷனரிகள் பாடுபடுவதில்லை. ஆனால் இஸ்லாத்தின் உண்மையைப் பரப்புவதற்காக இம்மார்க்கப் பிரியர்கள் தம் உயிரையும் பொருட்படுத்தாது பாடுபட்டு வருகின்றனர். இன்றைக்கும் அரபிகள் வர்த்தக நிமித்தம் தாம் போகுமிடங்களிலெல்லாம் இஸ்லாத்தைப் பரப்புகின்றனர். ஆனால் இவர்கள் மிஷ்ஷனரிகள் அல்ல; தங்களுடைய மேன்மையான உண்மை அனுஷ்டானங்களால் பிறருக்கு நம்பிக்கை வரும்படி செய்கின்றனர்; நைஜீரியா முதலிய ஆபிரிக்காவின் பிராந்தியங்களில் இவர்கள் எண்ணிறந்த மனிதர்களை நேர்வழியில் திருப்புகின்றனர். இது தான் இஸ்லாத்தில் இயற்கையாய் அமைந்து கிடக்கும்

பெருமை. இம்மார்க்கம் மனிதரின் தயவை எதிர் பார்த்திருப்பதன்று; ஆயினும் தெரியாதவருக்கு இம்மார்க்கத்தின் உண்மையான பெருமைகளை யெடுத்துரைப்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும். ஆனால் இஸ்லாம் வாளாயுதத்தால் பரவச்செய்த மார்க்கமென்று அநேகர் பொறாமைக் குணத்தால் உண்மையறியாமல் உளறுகின்றனர். உண்மையான தேசசரித்திரங்களைப் படித்துப் பார்த்தால் இம்மதம் வாளால் பரவியதன்றென்பது செவ்வனே விளங்கும். திருமக்கா நகரம் எமது பிரானுடைய கைவசத்தில் வந்தபோது தோல்வியடைந்த எதிரிகளுள் ஒருவர்கூடக் கொலைசெய்யப்படவில்லை, எல்லோரும் மன்னிக்கப் பட்டார்கள். இப்படிப்பட்ட உதாரணம் இவ்வுலகில் வேறோரிடத்தில் நடந்ததில்லை; இனி நடக்கப் போவதுமில்லை. (பெல்ஜியத்தின்கதி உங்களுக்கு ஞாபகமிருக்குமே?) வெளிப்படையான பலவந்தத்தைக் காண ஆத்மார்த்த சம்பந்தமான நல்ல இலேசான வழிகளெல்லாம் இஸ்லாமார்க்கத்தில் காணப்படுவதால்தான் இதற்கு இவ்வளவுவெற்றி காணப்படுகிறது. இஸ்லாத்தில் சேர்ந்தவர்களுடைய உண்மையான சரித்திரத்தை உணரும் பக்ஷத்தில் அவர்கள் ஒவ்வொருவரும் இம்மார்க்கத்தின் பெருமையை யறிந்தே சந்தேகம் தெளிந்து உவந்து சேர்ந்தாரென்பது தெள்ளிதில் விளங்கும். இஸ்லாத்தைப் பரப்புவதற்கு எப்போதும் வாளாயுதம் உபயோகப்படுத்தப் படவில்லை; ஆனால் இஸ்லாத்தைத் தற்காப்புச் செய்வதற்காக வாளாயுதம் பயன்பட்டதுண்டு. அல்குர்ஆனை ஒரு கையிலும் வாளாயுதத்தை மற்றொரு கையிலும் வைத்துக்கொண்டு இஸ்லாத்தைப்

பாப்பினர்களென்று வீண்பிதற்றுச் சொரியும் விரோதிகளின் மதசம்பந்தமான சரித்திரத்தைப் பார்த்தால் இதர மதங்களில் மதத்தின்பேரை வைத்துக்கொண்டு அதம் செய்துவதைக்கப்பட்ட மனிதர்களின் கணக்குக்கு எம்முடைய இஸ்லா மார்க்கத்தில் வதையுண்டவரெனக் கருதப்படுபவர்களின் கணக்கு 1000-ல் ஒன்றுகூட ஆகாது. கழுவும் தொழுவும், கட்டையும் பட்டையும், வாளும் வேலும், எரியும் வெறியும், சுழல்கருவியும் தழற் குழம்பும் இஸ்லா மார்க்கத்தில் எக்காலத்திலும் இருந்ததில்லை. ஏனெனின், "லாஇக்ராஹபித்தீன்" என்பது எமது இறைவன் கட்டளை.

குறிப்பு.—தென்னாட்டில் மட்டும் இஸ்லாம் குடத்திலிட்ட விளக்கைப்போல் மங்கலாயிருக்கும் விஷயத்தை இப்பக்கத்து மௌலவிகள் கவனிப்பார்களாக.

---

கமலம்—1 15—3—19 இதழ்—6

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹ¬த் தஆலாவின் திரு நாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்
மீதும் வாழ்த்துக் கூறுகின்றோம்.

---

# உலகத்துக்கெல்லாம் ஒரேமதம்

"சொல்வீராக: 'ஏ, மனிதர்காள்! மண்ணுலகுக்கும் விண்ணுலகுக்கும் உரித்தாகிய ராஜ்யத்துக்கு அதிபதியாகிய அல்லாஹ¬த்தஆலாவுடைய தூதராய் நான் நிச்சயமாக இருக்கிறேன். அவனைத்தவிர வேறொரு கடவுளும்

இல்லை; அவன் உயிர்ப்பிக்கிறான், மரிக்கச்செய்கிறான்; ஆதலின் அல்லாஹுத்தஆலாவின் மேலும், அல்லாஹ்வையும் அவனுடைய வார்த்தைகளையும் நம்பும் நபிய்யுல்உம்மி (ஆசானிடம் கல்லாத அருள்வாக்குடைய நபி) அவர் மேலும் நம்பிக்கைவையுங்கள், நீங்கள் நேரானவழியில் நடக்கும்பொருட்டு அவரைப் பின்பற்றுங்கள்.'" அல்குர்ஆன் 7: 158.

இவ்வாக்கியத்தில் விண்ணுலகின் ராஜ்யத்தைப்பற்றி ஒரு குறிப்புச் சொல்லப்பட்டிருக்கிறது; அந்த ராஜ்யம் ஒரேராஜ்யம்தான்; அதற்குரிய சட்டமும் ஒன்றேதான்; இப்படி யிருந்தால் மட்டுமே எல்லாமனிதர்களும் பின்னொருகாலத்தில் அவ்விண்ணுலகில் ஒரேதன்மையை உடையவர்களா யிருத்தல் முடியும். எல்லா மனிதர்களுக்கும் எம்பெருமானார் நபிமுஹம்மது முஸ்தபா (இவர்கட்கு இறைவனருளும் நன்மாராயமும் உண்டாகுக) அவர்கள் பொதுவான தீர்க்கதரிசியென்று இறைவன் இவ்வாக்கியத்தில் அருளியிருக்கின்றான். எம்முடைய நபிகள் பெருமானார் எல்லாமனிதர்கட்கும் பொதுவாயிருப்பதுபோல் எமது இறைவனும் எல்லோருக்கும்பொதுவென்றே எமது திருவேதம் பன்முறையும் முறையிடுகின்றது. அல்குர்ஆனின் 114 அத்தியாயங்களுள் முதல் அத்தியாயமான நூன்முகப்பாடம் ஸூரத்துல் பாத்திஹாவில் ஆண்டவன் அரபிகளுக்குமட்டும் இறைவனென்றாவது அல்லது வேறொரு ஜாதியாருக்குமட்டும் தலைவனென்றாவது சொல்லப்படவில்லை. நபிகள் பெருமானாருக்கு ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட அத்தியாயங்களுள் ஸூரத்துல் பாத்திஹா ஒன்று; அதில் ரப்பில்ஆலமீன்—உலகங்களுக்கெல்லாம்

தலைவன்—என்று நமது இறைவன் வருணிக்கப்படுகின்றான். ஆதலின் எமது பெருமானார் மதாசாரியத் தொழிலை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தபோதே உலகங்களுக்கெல்லாம் அரசனாகிய இறைவனுடைய தூதராக நியமனம் பெற்றிருக்கிறார்கள். சர்வலோக கர்த்தாவாகிய இறைவனுடைய மதத்தை எல்லோருக்கும் பொதுவாக ஜாதிமத பேதமில்லாமல் பரவச்செய்தவர்கள் எமது நபிகள் பெருமானார் தாம்; இவர்களைப்போல் இவ்வுலகில் வேறொரு மதத்தலைவரும் உலகத்திலுள்ள எல்லாமனிதர் கட்கும் பொதுவான மதத்தை உபதேசிக்கவில்லை. பிறமதத்தினருடைய வேதங்களென்று சொல்லப்படுவனவற்றைப் புறட்டிப்புறட்டிப் படித்தபோதிலும் வேறெந்தமதமும் எல்லாத் தேசத்தினருக்கும் எல்லாக் காலத்தினருக்கும் பொதுவானதாகக் காணப்படவில்லை. சில மதத்தலைவர்கள் தங்கள் தங்கள் ஜாதியாருக்குமட்டும் மதபோதகம் செய்திருக்கின்றனர்; இன்னும் சிலர் தங்கள் தங்கள் காலத்தினருக்கு மட்டும் போதகம் செய்திருக்கின்றனர். ஆனால் எமது நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்கட்கு இறைவனருளும் நன்மாராயமும் உண்டாகுக) அவர்கள் மட்டும் இவ்வுலகத்திலுள்ள எல்லாத்தேசத்தினரையும் எல்லாஜாதியினரையும் எல்லாவருணத்தினரையும் ஒன்றுபடுத்தி அவர்களுக்குள் ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநிறுத்தி யிருக்கின்றார்கள். மேல்நாடுகளிலுள்ள வெள்ளை மனிதரும் ஆபிரிக்கா இந்தியா முதலிய இடங்களிலுள்ள கருநிற மனிதரும் இஸ்லாத்தில் சமம்தான்; இருவரும் சமபோஜனம் செய்வர், சமமாக நின்றுதொழுவர், கலப்பு விவாகம் விலக்கலின்றிச் செய்து

கொள்வர்; இப்படியே பிரபுவும் பிச்சைக்காரனும் இஸ்லாத்தில் சமம்தான். இஸ்லாமார்க்கம் வெளியானது முதல் இன்றளவும் சென்ற 1, 300 வருடங்களாக நடந்து வந்திருக்கும் எமது மார்க்கத்தின் சரித்திரமே மேற்கூறிய உண்மையை நன்குவிளக்கும். எல்லா மனிதர்களும் சமம் தான் என்னும் உண்மையை இப்போதுதான் இதரமதத்தினர் உணர ஆரம்பித்திருக்கின்றனர்; இதை அவர்கள் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதற்கு இன்னும் அநேக நூற்றாண்டுகள் செல்லும். இஸ்லாத்தில் ஒருவன் சேர்ந்தவுடன் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் ஒரே வர்க்கமென்று நினைக்க ஆரம்பிக்கிறானேயொழியத் தான் ஒருஜாதிக்குச் சொந்தமென்றும் அந்த ஜாதி தான் சிலாக்கியமானதென்றும் அவன் நினைப்பதில்லை. ஆகவே மனித வர்க்கத்தாரெல்லாரும் ஒரே ஜாதியென்றும் அவர்களுக்குரிய மார்க்கமும் ஒன்றேயென்றும் இஸ்லாம் நமக்குப் போதிக்கின்றது. இப்பெரிய தாராளமான எண்ணம் சாதாரணமான மனிதனுடைய மனத்தில் உதயமாக நியாயமில்லை. ஆனால் எம்பெருமானார் நபிய்யுல் உம்மிய்யாக இருந்த போதிலும் இறைவனுடைய அருளும் அன்பும் கிருபாகடாக்ஷமும் அவர்களுக்குச் சம்பூர்ணமாயிருந்ததனால் அவர்களால் பரவச் செய்யப்பட்ட இஸ்லாமார்க்கத்தில் மேற்கூறிய தாராளமான எண்ணம் மலிந்து கிடக்கின்றது. இதனால்தான் "ரப்பில் ஆலமீன்" என்னும் சர்வலோகரக்ஷகன் மேற்கூறிய அல்குர்ஆன் வாக்கியத்தில் எல்லா மனிதர்களுக்கும் நபியாயிருக்கும்படி முஹம்மது நபி (இவர்கட்கு இறைவனருளும் நன்மாராயமும் உண்டாகுக) அவர்களுக்குக் கட்டளையிடுகின்றான்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

# பஞ்ச மந்திரங்கள்

## (ஐந்து கலிமாக்கள்)

1. அல்லாஹுத் தஆலாவைத் தவிர வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லை; முஹம்மது நபியவர்கள் (இவர்களுக்கு இறைவனருளும் அவன் நன் மாராயமு முண்டாகுக) அல்லாஹ்வின் திருத்தூதராவார்கள்.

2. அல்லாஹுத் தஆலாவைத் தவிர மெய்யாக வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லையென அறுதியிட்டு உறுதிகூறுகிறேன்; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை யாருமில்லை; மெய்யாக முஹம்மது நபியவர்கள் (இவர்கட்கு இறைவனருளும் அவன் நன் மாராயமுமுண்டாகுக) அவனுடைய அடியாரும் திருத்தூதருமாவார்களென்றும் அறுதியிட்டு உறுதி கூறுகின்றேன்.

3. அல்லாஹுத் தஆலா தூய்மையானவன்; புகழடங்கலும் அவனுக்கே தகும்; அல்லாஹுத் தஆலாவைத் தவிர் வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லை; அல்லாஹ்வே மிகப் பெரியவன்; வன்மை பொருந்திய உயரிய அல்லாஹ்வைக் கொண்டன்றிப் பாபத்தை விட்டு மீளவும் நன்மையைச் செய்யவும் நமக்குச் சக்தியுண்டாகமாட்டாது.

4. அல்லாஹுத் தஆலாவைத் தவிர வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை யாருமில்லை; ராஜ்யாதிபத்தியம் அவனுக்கே தகும்; எல்லாப்புகழும் அவனுக்கு உரித்தாயிருக்கும்; இறந்தோரை உயிர்ப்பிப்பவன்; உயிர்த்தோரை இறப்பிப்பவன்; நலமெல்லாம் அவன் வயமாயிருக்கும்; எல்லாப் பொருள்கள்மீதும் அவன் ஆண்மை பெற்றவனாயிருக்கிறான்.

5. ஆண்டவனே, என்மனதார உனக்கொரு பொருளை இணைவைப்பதைவிட்டு நீங்கும் பொருட்டு நான் உறுதியாக உன்பால் பாதுகாப்பைத் தேடுகின்றேன்; யான் அறியாமல் செய்ததற்குப் பிழைபொறுக்கும்படி உன்னைக் கோருகிறேன்; மெய்யாகவே நீ மறை பொருள்களை நன்கறிந்தவன்; இணைவைப்பதை விட்டும் தவிழ்கின்றேன். இஸ்லா மார்க்கமல்லாத ஏனை மார்க்கங்களை விட்டும் நீங்கிவிட்டேன்; மேலும் நான் இஸ்லாத்திலாகிவிட்டேன்; அதனால் நான் சொல்கிறதாவது: அல்லாஹுத் தஆலாவைத் தவிர வணக்கத்துக்குப் பாத்திரவான் வேறு யாருமில்லை, முஹம்மது நபியவர்கள் (இவர்கட்கு இறைவனருளும் அவன் நன் மாராயமுமுண்டாகுக) அல்லாஹ்வின் திருத்தூதராவார்கள், என்பதே.

இஸ்லாமார்க்கத்தின் அனுஷ்டானத்திற்குரிய ஐந்து கடமைகளுள் முதல் கடமை ஷஹாதத்துக் கலிமாவை மனதார அறிந்து வாயாரச் சொல்லுதலாகும். ஷஹாதத்துக் கலிமாவென்பது மேலே சொன்ன இரண்டாவது மந்திரம். மற்றை நான்கு மந்திரங்களும் இரண்டாவது மந்திரத்தின் விளக்கமாயிருக்கும்.

இஸ்லாத்தின் கடமைகள் ஐந்தாவன ; 1 ஷஹாதத்துக் கலிமாவை அறிந்து சொல்லுதல், 2 ஐங்காலமும் ஆண்டவனைத் தொழுதல், 3 ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டிய கடமையை 100-க்கு 2½-வீதம் கொடுத்தல், 4 வருஷமொருமுறை ரமலான் மாதத்தில் நோன்புவைத்தல், 5 ஹஜ்ஜு என்னும் புண்ணிய ஸ்தலயாத்திரை செய்யத் திருமக்காஷரீபுக்குப் போதல் ; (ஹஜ்ஜு செய்தல் போதிய திரவிய சகாயமும் தேகாரோக்கியமும் உள்ளவர்களுக்குத்தான் கடமை.)

---

கமலம்—1 1—5—19 இதழ்—8

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திரு நாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றேம்.

---

(ஜக்காத்)

# ஏழை வரி

அருமைச் சகோதரர்காள்,

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபாக்காத்துஹு.

நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கம் இஸ்லாத்துக்காகச் செய்துவரும் காரியம் உங்களுக்குத் தெரியாததன்று. தமிழ் நாட்டு முஸ்லிம்களுக்குச் செந்தமிழில் மார்க்கவிஷய உண்மைகளை இச்சங்கம் நன்றாக எடுத்துக் காட்டி இலவசப் பிரசுரங்களைப் பரப்பி வருகின்றது.

அநேக நூற்றூண்டுகளாக மறந்துகிடக்கும் நம் தாய் பாஷையாகிய தமிழ் மொழியில் இனிய நடையில் இலவசமாய் இஸ்லாத்தின் தத்துவங்கள் இச்சங்கத்தால் வெளியாவது உங்களுக்குத்தெரிந்த விஷயமே; இஸ்லாத்தின் முக்கிய கடமைகள் ஐந்தில் "ஜக்காத்" என்னும் ஏழை வரி தொழுகைக்கும் நோன்புக்கும் அடுத்ததாயிருக்கிறது. குர்ஆன் ஷரீபில் ஏழை வரியைப்பற்றி அநேக வாக்கியங்கள் வருகின்றன. நபிகள் பெருமானூரவர்களின் ஒரு திருவாக்கியத்தின்படி, "ஜக்காத்" என்பது ஏழைகளின் நன்மைக்காகப் பணக்காரர்களால் கொடுக்கப்படும் தர்மமாகும். இத்திருவாக்கியத்தின் லக்ஷணப்படிநோக்கின் சுமார் ரூ. 50 பெறுமான வெள்ளி நகையாகவாவது ரொக்கமாகவாவது வைத்திருப்பவரும் பவுஞக 12 பவுன் நாணயமாகவேனும் நகையாகவேனும் வைத்திருப்பவரும் "ஜக்காத்" கொடுக்க அருகர்களாகின்றனர். இக்கணக்குப்படி கடன் உடுபுடைவை முதலிய சாமான்களின் செலவு போக ஒரு வருஷம் வரையில் தன்னிடத்திலிருக்கும் சொத்துக்கு 100-க்கு 2½ வீதம் சேரும் "ஜக்காத்"தை ஒவ்வொருவரும் அல்குர்ஆனில் சொல்லப்பட்டவர்களிடம் கொடுத்தல்வேண்டும்.

ஸ்தாவர சொத்துக்களுக்கு அவற்றினின்றும் உற்பத்தியாகும் வரும்படிமேல் "ஜக்காத்" கொடுத்தல்வேண்டும். "ஜக்காத்" வரும்படியைச் செலவு செய்யும் விதத்தைப்பற்றி அல்குர்ஆனில் 8 வகைகள் சொல்லப்படுகின்றன:—(1) ஏழைகள், (2) பண உதவி வேண்டுவோர், (3) "ஜக்காத்" வரவு செலவு விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள், (4) உண்மை வழியில் நாடும்

படியான மனமுடையவர்கள், (5) முறி எழுதிக்கொடுத்த அடிமைகள், (6) கடன்பட்டார், (7) அல்லாஹுத் தஆலாவின் பாதையில் உழைப்போர், (8) வழிப்போக்கர்கள், (அல்குர்ஆன் 9:60). மேற்கூறிய 8 அம்சங்களுள் 3-வது அம்சத்தை நோக்கின் ஏழை வரியானது பொது உத்தியோகஸ்தர்களால் வசூலிக்கப்பட்டுப் பொது கஜானவில் (பைத்துல்மாலில்) வைக்கப்பட்டுப் பொதுவில் செலவு செய்யப்பட்டதென்பது தெளிவாகின்றது.

மேலே சொன்ன 4-வது, 7-வது அம்சங்களை நோக்கின் அவ்விரண்டும் இஸ்லாத்தின் தத்துவத்தைப் பரவச் செய்கிறவர்களையும் இஸ்லாத்தில் புதிதாய்ச் சேர்கிறவர்களையும் குறிக்கின்றன வென்பது தெள்ளிதில் விளங்கும். இஸ்லாத்தின் தன்மையை நோக்கின் அதன் கொள்கைகளையும் தத்துவங்களையும் தமிழ் நாட்டு முஸ்லிம்களும் இதரர்களும் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவராயிருக்கின்றார்கள். இஸ்லாத்தின் தத்துவத்தை விளக்கிக்காட்ட முன்வந்தால் அதை ஆவலுடன் கேட்கத்தக்கவர்கள் எண்ணிறந்தோர் இத்தென்னாட்டிலிருக்கின்றனர். இவ்வாறு விளக்கம் செய்வதற்குப் பண உதவிவேண்டும். "உண்மை வழியில் நாடும்படியான மனமுடையவர்கள்" என்பவர்கள் இஸ்லாத்தைப் பரவச் செய்பவர்களாயும் இஸ்லாத்தில் புதிதாய்ச் சேர்பவர்களாயும் இருக்கின்றதனால் முஸ்லிம்களுக்கும் மற்றவர்களுக்கும் இஸ்லாத்தின் தத்துவத்தை விளக்கிக்காட்டி அவர்களை மெய்யான முஸ்லிம்களாகச் செய்யும் விஷயத்தில் செலவு செய்யும் "ஜக்காத்"தே இக்காலத்துக்கு அவசியமாயிருக்கிறது.

அல்லாஹுத் தஆலாவின் உண்மையான வழியில்

உழைத்து இஸ்லாத்தின் தத்துவத்தை உள்ளது உள்ள படியே வெளிப்படுத்தி முஸ்லிம்களையும் ஏனையோரையும் நல்வழியில் கொண்டுவர விரும்பும் இம்முஸ்லிம்சங்கத்துக்குத் தங்களுடைய "ஜக்காத்" துப்பணத்தைக் கொடுத்து உதவுவீர்களேல் அது மெத்த நன்மை பயக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. உள்ளொன்று எண்ணிப் புறமொன்று பேசுதல் இச்சங்கத்தில் இல்லை. தங்களுடைய "ஜக்காத்" தாலும் வேறு நன்கொடையாலும் இச்சங்கத்துக்கு உதவி செய்வீர்களேல் இஸ்லாத்தின் தத்துவங்களை உள்ளது உள்ளபடியே காட்டும் துண்டுப்பிரசுரங்கள் அநேகம் வெளியாவதுடன் (ஹகீகத்துல் இஸ்லாம்) *தத்துவ இஸ்லாம் (Islam As It Is) என்னும் ஒரு மாதாந்தப் பத்திரிகையும் சீக்கிரம் செந்தமிழில் இனிய நடையில் வெளிவரும். எல்லாம் இஸ்லாத்தின் பெருமையே; இதற்கெல்லாம் வேண்டுவது உங்கள் அருமை உதவியே.

---

* சென்னையில் அஞ்சுமனே இஷா அத்தே இஸ்லாம் என்றொரு சங்கம் ஏற்பட்டுவிட்டது. லாஹூர் இஷா அத்தே இஸ்லாம் சங்கத்தின் கிளைச்சங்கம் மதராஸ் அஞ்சுமன்.. இதன் பிரஸிடெண்ட் மலங்கு அஹ்மது பாஷா சாகிப், பி. ஏ. "அஞ்சுமனே இஷா அத்தே இஸ்லாம் மதராஸ்" என்னும் சங்கத்தார் இங்கிலீஷ் இஸ்லாமிக் ரெவியூவை இனிய தமிழில் வெளியிடப்போகின்றனர். இவர்களுடன் எமது முஸ்லிம் சங்கமும் ஒத்துழைக்கப்போவதால் யாம் வேறு தமிழ்ப்பத்திரிகை வெளியிட அவசியமில்லையென்று அவ்வேலையை நிறுத்திக்கொண்டோம்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர் மீதும்
வாழ்த்துக் கூறுகின்றேம்.

ரமலான் மாதத்தின்

# நோன்பும் வணக்கமும்

"ஏ, நம்புகின்றவர்காள்! நீங்கள் (தீமையினின்றும்) தப்பித்துக்கொள்ளும்பொருட்டு, உங்களுக்கு முன்னுள்ளோருக்கு விதித்திருந்ததுபோல் உங்களுக்கும் நோன்பு விதிக்கப்பட்டிருக்கிறது"—(அல்குர்ஆன் 2:183)

"குர்ஆன்ஷரீபு வெளியாக்கப்பட்ட மாதமாகும் ரமலான் மாதம்........ஆதலின் யாத்திரையில் போகாமல் சொந்த ஊரிலிருக்கும் ஒவ்வொருவரும் அம்மாதத்தில் நோன்பு வைத்தல் வேண்டும்...."—(2: 185)

இஸ்லா மார்க்கப்படி நோன்பென்பது மனிதன் தன்னை நிக்கிரகம் செய்துகொள்ளும் பொருட்டாவது பசிப்பிணியால் துன்பப்படுவதற்காகவாவது ஏற்படுத்தப்பட்ட விரதமன்று. ஆனால் மாந்தர்கள் தம்முடைய பஞ்ச இந்திரியங்களையும் கணக்குப்படி ஒடுக்கி நற்குணங்களை முதிரச்செய்து ஆத்மசித்தியை அடையும் பொருட்டே எம்முடைய மார்க்கத்தில் நோன்பு ஒரு கடமையாக விதிக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தின் முக்கிய கடமைகள் 5 ல் 3-வது கடமை நோன்பாகும். மனிதர்கள் தீமையினின்றும் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு வைப்பதே

இஸ்லா மார்க்கத்தின் நோன்பானதால், உண்ணுமலும் குடிக்காமலும் போகிக்காமலும் இருப்பது மட்டும் போதாது; ஆனால் பஞ்ச இந்திரியங்கள் சம்பந்தமான எல்லாக் கெடுதல்களையும் விலக்கிவைப்பதோடு மனமும் பரிசுத்தமாயிருத்தல்வேண்டும். புறப்பரிசுத்தம் செய்வதெல்லாம் அகப்பரிசுத்தம் ஆகும்பொருட்டே. இறைவனால் சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கும் பஞ்ச இந்திரியங்களையும் கணக்குப்படி ஒடுக்கினால் சட்டவிரோதமான காரியங்களை விலக்குவதற்கும் நமக்குப் பழக்கமுண்டாகும்; இன்னும் புற உறுப்புக்களை ஒடுக்கினால் அகத்துறுப்பும் பரிசுத்தமடையும். இதனால்தான் இஸ்லாத்தின் கொள்கைகளெல்லாம் அனுஷ்டானத்துக்கு வாத்தக்க கொள்கைகளென்கிறோம். இதர மதத்தினர் சொல்வதுபோல் பஞ்ச இந்திரியங்களை அடியோடு ஒழிப்பதன்று இஸ்லாத்தின் நோக்கம். வெளி உறுப்புக்களைக் கணக்குப்படி அடக்கினால் ஆத்மார்த்தமான பிரயோசனம் அதிகப்படும். புறப்பரிசுத்தத்தால் அகப்பரிசுத்தம் முதிர்ச்சியடைவதல்லாமல் இஸ்லாத்தின் நன்மைக்காக உழைப்பவர்களுக்கு நோன்பானது, அவர்களுக்குப் பசிவந்தபோது அதைப்பொறுத்துக்கொண்டு அல்லாஹ்வின் பாதையில் அவர்கள் ஊக்கமாய் உழைப்பதற்குப் பழக்கத்தையும் உண்டு பண்ணுகிறது.

அகப்பரிசுத்தத்துக்குப் புறப்பரிசுத்தமே முதல் காரணமென்று ஏற்படுவதால் புறத்துக்கும் அகத்துக்கும் தூய்மையைத் தரத்தக்க நோன்பானது இஸ்லாத்தில் தொழுகைக்கு அடுத்த கடமையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அகப்பரிசுத்தம் அவசியமென்று சொல்வதோடு

நில்லாமல் எம்முடைய மார்க்கம் அப்படிப்பட்ட பரிசுத்தத்தை அடையும்படியான மார்க்கத்தையும் காண்பிக்கின்றது. "நோன்பிருத்தல் அரைப்பொறுமை" என்பது எமது நபிகள் பிரானின் திருவாக்கியம். ரமலான் மாதத்தின் நோன்பின்போது தீமைகளை விலக்கிக்கொள்வதோடு நில்லாமல் மேன்மேலும் நன்மைகளைச் செய்தல் அவசியமாகும். இதர மாதங்களில் சாதாரணமாய்க் காணப்படும் ஒற்றுமையும் சகோதரத்துவமும் ஜீவகாருண்யமும் இந்த ரமலானில் அதிகமாகக் காணப்படும். இயற்கையாகவே இம்மாதத்தில் முஸ்லிம்களின் மனத்தில் அதிக பக்தியும் உருக்கமும் இரக்கமும் உதிக்கின்றன. நேசமும் விசுவாசமும் நன்னம்பிக்கையும் அதிகமாய்க் காணப்படுகின்றன.

பருவமடைந்து முஸ்லிமான ஆண் பெண் இருபாலாரும் காலை மணி 4-30 முதல் மாலையில் அஸ்தமன வேளை மட்டும் உண்ணாமலும் பருகாமலும் போகிக்காமலும் பரிசுத்தமாயும் நல்ல எண்ணத்துடனும் இருத்தலே நோன்பின் லக்ஷணமாகும். நோன்பு வைப்பதற்கு ஒவ்வொரு தினமும் இரவில் அல்லது பகல் மணி 11-க்குள் நோன்பு வைப்பதைக் குறித்து எண்ணம் (நிய்யத்துச்) செய்துகொள்ளல் வேண்டும். "ஆண்டவனே உனக்காக நாளைத் தினம் நோன்பு இருக்கிறேன்," என்று மனஸால் எண்ணி வாயால் சொல்லல்வேண்டும். பிறகு மாலையில் நோன்பை முடிக்கும்போது, "ஆண்டவனே இன்று உனக்காக நோன்பிருந்தேன்; உன்னுடைய இரணத்தால் நோன்பை முடித்தேன்," என்று சொல்லி ஏதேனும் உணவு உட்கொள்ளல் வேண்டும்.

இன்னும் ரமலானில் ஒவ்வோர் இராவிலும் கடைசித் தொழுகையாகிய இஷாத் தொழுகையில் வித்ருவாஜியைத் தவிரப் பாக்கியைத் தொழுதபின் தராவீஹ் 20 ரக்அத்து இரண்டிரண்டாய்த் தொழுதல் வேண்டும். பிறகு வித்ருவாஜிப் தொழுதல் வேண்டும். தர்ாவீஹ் தொழுகை அத்தியாவசியமான (ஸுன்னத் முஅக்கதாவாக) இருக்கிறது.

---

கமலம்—1 15—6—19 இதழ்—10

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர் மீதும்
வாழ்த்துக் கூறுகின்றேம்.

---

(லைலத்துல் கத்ர்)

# மாட்சிமையான இரவு

" அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.

1 உறுதியாக நாம் (அல்லாஹ்) அதை (அல்குர்ஆனை) மாட்சிமை பொருந்திய இரவில் இறக்கினேம்.

2 அந்த மாட்சிமைதங்கிய இரவு இன்னதென்று எது நமக்கு அறிவிக்கக்கூடும்?

3 மாட்சிமைதங்கின இரவு ஓராயிரம் மாதங்களைக் காண நன்மையுற்றதாகும்.

4 அந்த இரவில் அமரர்களும் ஜிப்ராஈலும் தங்கள் இறைவனது ஆக்ஞைப்படி (அவ்வாண்டில், அடுத்த ஆண்டு

வரையில் நிகழவேண்டியனவாக இறைவன் விதித்த) எல்லாக்காரியத்துடனும் இறங்குகிறார்கள்.

5 அது காலைப்பொழுது உதிக்குமளவும் ஓர் கருணைமயமாகும்"—அல்குர்ஆன், 97, ஸூரத் அல்கத்ர்.

"ரமலான் மாதத்துக் கடைசிப்பத்து இரவுகளுள் ஒற்றைப்படையான இராக்களில் லைலத்துல்கத்ரைக் கண்டு கொள்ளுங்கள்"—நாயகவாக்கியம்.

நாம் இங்கே மாட்சிமைதங்கிய இரவு என்று மொழிபெயர்த்திருக்கும் லைலத்துல்கத்ர் இரவானது ரமலான் மாதத்தில் ஒரு மகிமைபொருந்திய இரவாக இருக்கின்றது. 21-வது இரவு அல்லது 23-வது அல்லது 25-வது அல்லது 27-வது அல்லது 29-வது இரவாக இருக்கும் அந்த மாட்சிமை பொருந்திய இரவு; ஆனால் பெரும்பான்மையான முஸ்லிம் மகான்கள் லைலத்துல்கத்ர் என்பது 27-வது இரவென்றே நிச்சயப்படுத்தி யிருக்கின்றனர். அல்குர்ஆன் 44:3-ல் இது முபாரக்கான இரவு என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்றது. அல்குர்ஆன் 2: 185-ல் ரமலான் மாதத்தில் திருவேதம் (குர்ஆன்ஷரீபு) இறக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. மேலே தலையங்கத்தில் சொன்ன 97-வது அத்தியாயத்தால் அவ்வேதம் ரமலானில் மாட்சிமைபொருந்திய இரவில் வெளியானதென்று தெரிந்து கொள்ளுகிறோம். ஆனால் லைலத்துல்கத்ர் இரவில் குர்ஆன்ஷரீபு முழுதும் வெளிப்படுத்தப்பட்டதாக எண்ண வேண்டாம். அல்குர்ஆன் கொஞ்சம் கொஞ்சமாக 23 வருஷகாலத்தில் வெளியாக்கப்பட்டுப் பூர்த்திசெய்யப்பட்டது. ஆனால் லைலத்துல்கத்ர் இரவில் எம்முடைய திருவேதம் முதன் முதல் ஆரம்பமாக வெளியிடப்பட்டது.

பல நாள் நோன்பிருந்த பின்னரே இறைவன் மாந்தர்மீது கருணைகூர்ந்து தன் நற்செய்திகளை அனுப்பிவைக்கிருனென்று நாம் உறுதியாக நம்ப இடமுண்டு. மூஸாநபி (இவர்களுக்கு இறைவன் கருணைபுரிவானாக) அவர்கள் 40 நாள் நோன்பிருந்த பின்னரே அவர்களுக்கு ஆண்டவனுடைய நற்செய்தி அனுப்பப்பட்டது ; ஈஸாநபி (இவர்களுக்கு இறைவன் கருணைபுரிவானாக) அவர்களும் அதே கணக்குப்படி நோன்பிருந்த பின்னரே அவர்களுக்கும் நுபுவ்வத்து வந்தது; எமது நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்களுக்கு இறைவனருளும் நன்மாராயமு முண்டாகுக) அவர்களும் ரமலானில் 27 தினம் நோன்புநோற்று இரவும் பகலும் அகோர தவம்புரிந்த பின்னரோ இறைவன் இவர்கள்மீது கருணைபாலித்து அல்குர்ஆனை இறக்கினன். இக்காரணத்தாலும் இதரகாரணங்களாலுமே ஆண்பெண் ஆகிய எல்லா முஸ்லிம்களும் ரமலான் முழுதும் நோன்பிருத்தல் வேண்டுமென்றும் அப்படிப்பட்ட ரமலானில் 27-வது இரவை மகாபுண்ணிய இரவென்று கருதவேண்டுமென்றும் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

லைலத்துல்கத்ர் என்பதில் இன்னும் ஓர் ஆழமான அந்தரங்கப்பொருளும் தொனிக்கின்றது: நபிமார்கள் திருவவதரிக்குமுன் உலகில் அக்ஞான அந்தகாரம் நிறைந்து மாந்தரெல்லாரும் மந்தாரத்தில் மழுங்கிக்கிடப்பது வழக்கம். அப்படிப்பட்ட அக்ஞான அந்தகாரத்தை ஓர் இருள் நிறைந்த இரவென்னலாம். அந்த இருளைப்போக்கி ஞான ஒளியைப்பரப்பு வதற்கே தீர்க்கதரிசிகள் அடிக்கடி அவதரித்திருக்கின்ருர். ஆதலின் ரமலான் பிறை 27-வது

இரவின் இருளில் திருவேதம் விளக்கமானதால் அதை லைலத்துல்கத்ர் என்று சொல்வதுபோல் அஞ்ஞான அந்தகாரம் நிறைந்திருக்கும்போது அதைப்போக்கும் பொருட்டுத் திருவவதாரம் செய்யும் நபிமார்களின் அவதாரகாலத்தையும் உவமையாக லைலத்துல்கத்ர் என்னலாம். அல்குர்ஆன் 44: 4-ல் "ஆழிய சகலகாரியமும் அந்த இரவில் பாகுபாடு செய்யப்படுகின்றது," என்று காண்கிறோம்; இவ்வாக்கியத்தால் விளக்கமாவது யாதெனின், நபிமார்கள் அவதாரம் செய்வதனால்தான் உண்மையான ஆத்ம ஞானத்தை நாம் பெறுகின்றோம், என்பதாகும். இக்காரணத்தால்தான் லைலத்துல்கத்ர் என்பது நபிமார்கள் அவதாரம் செய்யும் காலமென்று அகப்பொருள் செய்கின்றனர் அறிஞர்கள்.

இந்த அகப்பொருளின்படி நோக்கின் தலையங்கத்தில் குறிப்பிட்ட அல்கத்ர் ஸூரத் 3-வது வாக்கியத்தில் குறிப்பிடப்பட்ட 1,000 மாதங்களுக்கும் அருமையான வியாக்கியானம் உதிக்கின்றது: நாயகவாக்கின்படி ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒவ்வொரு முஜத்தித் (சீர்திருத்தக்காரர்) வெளியாவார்; இப்படி ஒருவர் வெளியாகும்பக்ஷத்தில் சாதாரணமாய் அவர் 20 வருஷகாலம் உழைப்பர். 100 வருஷத்துக்கு ஒரு முஜத்தித் தோன்றும்போது அவர் உயிருடனிருந்து சீர்திருத்தம் செய்யும் 20 வருஷகாலமும் அவருக்குப்பின் இருக்கும் 80 வருஷத்தைக்காண அதி சிலாக்கியமானதாகவே யிருக்குமென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அல்குர்ஆன் 97:3-ல் 1,000 மாதம் என்பது சுமார் 83 வருஷங்களாகின்றன; முஜத்தித் இருந்து சீர்திருத்தம் செய்யும் காலமாகிய 17 அல்லது

20 வருஷகாலமும் அவரில்லாத மிகுதி, 83 அல்லது 80 வருஷங்களைக் காணச் சிறந்ததென்றே சொல்லக்கூடியதாயிருக்கின்றது. இவ்விஷயம் அந்தரங்கமாகத் தொனிக்கும்படி மேலேசொன்ன 97:3-வது வாக்கியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனாலேயே லைலத்துல்கத்ர் என்பது நபிமார்கள் அவதரிக்கும் காலத்தைக் குறிப்பிடுகின்றதென்று நிச்சயமாகச்சொல்லலாம். இன்னும் அந்த இரவில் ஜிப்ரயீலும் இதர அமரர்களும் இறங்குகிறார்கள் என்பதும் கருணை (சலாம்) உண்டாகிறதென்பதும் இந்த இரகசியப் பொருளுக்கே பொருத்தமாகும். இஃதோர் அந்தரங்க அர்த்தம். இதுநிற்க.

வெளிப்பொருளாய் நோக்கும்போது ரமலான் 27-வது இரவென்பது கட்டுக்கதையான ஓர் இரவென்று எண்ணவேண்டாம். அந்த இரவில் ஆண்டவனுடைய அருளைப் பெறுகிறவர்கள் தங்கள் அனுபவத்தை நன்றாகச் சொல்லிக் காட்டியிருக்கின்றனர். லைலத்துல் கத்ர் இரவில் ஆண்டவனுடைய அருள் நிரம்ப உண்டாகிறது; நடு நிசி முதல் விடியுமட்டும் அவனருள் விசாலிக்கிறது; அஃதொரு பரிசுத்தமான இரவாயிருக்கின்றது. ஆண்டவனருள் உதிக்கும்போது அடியாரின் உள்ளத்தில் ஒரு ரம்மியமுண்டாகிப் புளகாங்கிதம் (மயிர்க்கூச்சல்) ஜனிக்கிறது; வாயில் ஒருவித இனிய உமிழ் நீர் சுரக்கின்றது; வெளியிலும் மந்தமாருதம் (இளங்காற்று) வீச ஆரம்பிக்கிறது. ஆண்டவனுடைய எண்ணத்தில் ஆழ்ந்திருப்பவருக்கு உள்ளக்கிளர்ச்சியும் ஒருவகை ஆனந்த உணர்ச்சியும் உண்டாகின்றன. அண்டத்திலுள்ள சராசரங்களெல்லாம் பரிசுத்த மடைந்தாற்போல் காணப்படுகின்றன. அடியாரின்

உள்ளத்திலுமுள்ள கெட்ட எண்ணங்களும் துராசைகளும் அடியோடு ஒழிந்தனபோல் தோன்றுகின்றன. அப்போது ஆண்டவனின் அருளைத் தாவிப்பற்ற மனம் ஆர்வம் (ஆசை) கொள்கிறது; அவனது சன்னிதானத்தில் அவனருள் அடியாரைத் தாவிப்பற்றுகின்றது; அவர்களுக்கு உத்சாகமும் ஆவேசமும் உண்டாகின்றன. ஆண்டவனுடைய எண்ணத்தில் ஆழ்ந்துபோய் இம்மனிதர் தம் நிலைமையை அடியோடு மறந்துபோகின்றனர்; நின்றால் நின்றபடியே, குனிந்தால் குனிந்தபடியே, இருந்தால் இருந்தபடியே, ஸஜ்தாவுக்குப்போனால் போனபடியே தம்மை மறந்து இருந்து விடுகிறார்கள். இறைவனுடைய குணநிசயங்களைத் தியானித்துத் தியானித்து மனம் நெக்கு நெக்கு உருகுகின்றனர். அப்போது அவரது நெஞ்சம் திறக்கிறது; எங்கே பார்த்தபோதிலும் புதுமையான பரிசுத்தத்தைக் காண்கிறார். அருகில் யாருமில்லாமற் போயினும் தம் மனமானது ஆண்டவனிடம் இழுக்கப்படுவதை நன்கு தெரிந்துகொள்ளுகிறார். லைலத்துல்கத்ர் இரவில் தியானத்திலிருக்கும் முஸ்லிமுக்கு உண்டாகக்கூடிய அனுபவத்தில் ஒரு சிறிதை இங்கு எடுத்துச் சொன்னோம். இவ்வளவு தானென்று எண்ணவேண்டாம். ஆண்டவனருள் கிடைப்பது சில நிமிஷங்களாயினும் ஒரு முஸ்லிம் இப்படிப்பட்ட உண்மையான சுகத்துக்காகத் தன் உயிரையும் கொடுக்கச் சம்மதிப்பார். இப்படிப்பட்ட அனுபவம் உண்மையான தியானம் செய்யும் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் லைலத்துல்கத்ர் இரவில் கிட்டலாம். இதை அடைய ஒவ்வொரு முஸ்லிமும் பாடுபடல்வேண்டும். "சுத்த பரிபூரணச் சுகவாரி தன்னிலோர் சொட்டாயி

னும் தொட்டபேர் நல்லவர்கள் நல்லவர்கள் நல்லவர்கள் என்றைக்கு நானும் நல்லவனுவனே" அறிகிலேன். அவனருள் பெற அவனே அருள் புரிதல்வேண்டும்.

மேற்கூறியபடி இறைவனருள் பெறுதற்கு இஸ்லாத்தில் ஒரு துறையுண்டு. இது இஃதிகாப் எனப்படும். இஃதிகாப் என்பது ஒருமுஸ்லிம் தன்னந்தனியே யிருந்து தன் தலைவனைக்குறித்து மௌனத்தியானம் செய்தலாகும். இத்தன்னந் தனியான தியான நிலைமைக்குப் போகவிரும்புவோர் ரமலானில் பிறை 21-வது இரவில் தங்கள் வீட்டைவிட்டுப் பள்ளிவாயிலுக்குச் சென்று அங்கே தங்கிவிடுவார். அவர்களுடைய உற்வினர் அவருக்கு ஆகாராதிகளைக் கொண்டுபோய்க் கொடுப்பார்கள். நோன்புடனிருந்து கொண்டு அவர்கள் பள்ளிவாயிலிலேயே ஷவ்வால் மாதம் பிறைகாணுமட்டும் தியானத்தில் மூழ்கியிருப்பார்கள்; ஆண்டவனுடைய குணுதிசயங்களைப்பற்றி மனனம் செய்துகொண்டே யிருப்பார். குர்ஆன் ஷரீபை ஓதி ஓதி அதன் உண்மையான கருத்துக்களை உணர்வார். தம்மிடத்திலிருக்கும் குறைகளைக் கண்டு அவற்றை நிவர்த்திசெய்து சம்பூர்ண ஞானமும் சன்மார்க்க யோக்கியதையும் பெறமுயல்வர். அல்லாஹுதஆலாவின் அருள் பிரசாதத்தை அடைந்து அதனுல் ஆத்மலாப சித்தியடைய எல்லா ஏற்பாடும் செய்வர்.

இத்தகைய யோக்கியதையும் சுவரவமும் பொருந்திய லைலத்துல்கத்ர் இரவில் ஆண்டவனை முழு இரவும் தியானம் செய்வதை விடுத்து அந்த இரவை ஒரு தமாஷாவான பொழுதுபோக்குக்குரிய வேளையென எண்ணி விளையாடுவதும் குதிப்பதும் ஆடுவதும் பாடுவதும் தேயிலை

காபி கோக்கோ ஷர்பத் பருகுவதும் லட்டு மிட்டாய்கள் பகிர்வதுமாய் வீண்காலம் கழிக்கின்றனர் சிலர். வெளிப் படையான சந்தோஷம் வேண்டாமென்று சொல்லவில்லை; புறக்களிப்போடு அகக்களிப்பும் உண்டாகும்படி ஆத்ம ஞான சித்தியடைந்தால் பொன்னால் செய்த தாமரை மல ரில் புதுவாசனையும் வந்து புகுந்தது போலாம்.

மேற்கூறிய விஷயம் லைலத்துல்கத்ர் இரவைப்பற்றிய ஒரு சுருக்கமான விளக்கமாகும். அதன் பெருமையை இன்னும் அதிகமாய்க்கற்க விரும்புவோர் தக்காரிடம் கேட்டு உணர்வார்களாக.

---

கமலம்—1 20—6—19 இதழ்—11

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.
நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்

---

# பித்ரா

“ஓ, ஈமான் கொண்டவர்களே! உங்களுக்கென்ன (சம்பவித்தது)? ‘அல்லாஹ்வின் பாதையில் விரைந்து செல்லுங்கள்,’ என்று நுமக்கு உத்தரவளிக்கப்பட்டால் நீங்கள் பூமியின்மீது பாரித்துக் கிடப்பானேன்? (தாமதித் துச் சோம்பிக் கிடப்பானேன்?) அவ்விண்ணுலக வாழ்க் கையினும் இம்மண்ணுலக வாழ்க்கையே போதுமென்று பொருந்திக்கொண்டீர்களோ? பின்னர் இவ்வுலக வாழ்க் கையில் பயன்படும் பொருள் அவ்வுலக (ப்பயனுடன் ஒத் துநோக்கின்) அற்பமே யொழிய வேறல்லவே.”

ரமலான் மாதத்தில் வைத்த நோன்பு பூர்த்திபெறும் பொருட்டு முஸ்லிம்கள் ஈதுல் பித்ர் நாளில் கொடுக்கும் ஒருவகை இலேசான தானத்துக்கு, பித்ரா என்றுபேர். அத்தியாவசியமான செலவுகள்போக மேல் மிச்சமாய்ச் சுமார் ரூபா 50 பெறுமான வெள்ளி நாணயமாகவாவது ஆபரணமாகவாவது வேறுவகைச்சொத்தாகவாவது வைத்திருக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் பித்ரா கொடுத்தல்வேண்டும். ரூபா 50-க்குச் சொத்துடையவர்கள் ஆள் ஒன்றுக்குப் பட்டணம்படி 1½ (ஒன்றரை)ப்படிக் கோதுமையையாவது அல்லது அதன் கிரயத்தையாவது கொடுத்தல் வேண்டும். ஜக்காத் வாங்கத்தக்கவர்களே பித்ராவும் பெறத்தக்கவராகின்றனர். (இவர்கள் இன்னாரென்று எமது ஜக்காத் விளம்பரத்தில் காண்க. அல்குர்ஆன், 9: 60). தன் மனைவிக்காகவும் பருவமடைந்த பிள்ளைக்காகவும் பெண்களுக்காகவும் ஒரு முஸ்லிம் பித்ராகொடுக்க வேண்டியதில்லை; ஏனெனின், அவர்கள் தாங்களே ஒவ்வொருவரும் பித்ராகொடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டவராகின்றனர்; ஆனால் தன் சிறுபிள்ளைகளுக்காகவும் வேலைக்காரர்களுக்காகவும் ஒருவர் பித்ராகொடுத்தல் வேண்டும். பித்ரா கொடுக்கவேண்டிய நேரம், நோன்புப்பெருநாள் தினத்தில் காலையில் கிழக்கு வெளுத்தபின் ஈதுல்பித்ர் தொழுகைக்கு முன்னாகும்.

அல்லாஹ்வின் பாதையில் இம்முஸ்லிம் சங்கத்தார் அதிகமாக உழைத்து வருகின்றனர். இச்சங்கத்துக்கு உங்களுடைய பித்ராப்பணத்தைக் கொடுத்து உதவுவீர்களேல் இஸ்லா மார்க்கத்தின் தத்துவங்களை உள்ளது உள்ளவண்ணமே எடுத்துக் காட்டக்கூடிய இன்னும் அநே

கம் பிரசுரங்களை இச்சங்கத்தார் பரப்புவார்கள். நம் தென் தேசத்து முஸ்லிம்கள் தாய் பாஷையாகிய தமிழைக் கை விட்டதனால்தான் இவ்வளவு தாழ்ந்த நிலைமையில் வந்து விட்டனர். உலகத்து முஸ்லிம்களுள் தமிழ்நாட்டு முஸ் லிம்களே மார்க்க உணர்ச்சியில் மிகக் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இது நம்மால் விளைந்த குறையே யொழிய வேறில்லை. இக்குறை நீங்கவேண்டுமாயின் மாதா ந்தப்பத்திரிகை யொன்று செந்தமிழில் இனிமையான எளிய நடையில் வெளியாதல் வேண்டும். முஸ்லிம்கள் தங்களுக்குத் தமிழ் தெரியுமென்று எண்ணுவதுமட்டுமா வது நடிப்பதுமட்டுமாவது போதாது; தமிழ் இலக்கண இலக்கிய முறைப்படி குற்றமில்லாமல் எழுதவும் பேசவும் கற்றுக்கொள்வதே தாய் பாஷையை அறிந்ததற்கு அடை யாளமாகும்.

இம்மாதிரித் துண்டுப் பிரசுரங்கள் அனேகம் வெளி வர வேண்டுமாயின் அதற்குப் பணம் வேண்டும். "அரு ளிலார்க்கு அவ்வுலகமில்லை, பொருளிலார்க்கு இவ்வுலக மில்லை."

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்,
எண்ணிய தேயத்துச் சென்று."

ஆதலின் பத்திரிகைக்குப் பணம் வேண்டும். கொடுங்கள், கொடுங்கள், குறைவின்றிக் கொடுங்கள்; கொடுங்கள், கொடுங்கள், கொடையால் கேடில்லை. லில்லாஹ்வுக் களிப் போர் எல்லா நலனும் எய்துவர்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு."

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திரு நாமத்தால்.

நாம் இறைவனைப் புகழ்ந்து அவனது திருத்தூதர்
மீதும் வாழ்த்துக்கூறுகின்றோம்.

# இணையற்ற ஏகபராபரன்

இருலோகத்துக்கும் வள்ளலாகிய இணையற்ற சர்தாராகிய காத்தமுந் நபிய்யீன் ஹபீபு ரப்பில் ஆலமீன் ஆகிய எமது காரணக்குருவாகிய பேரின்பக்கடலாகிய முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்பால் சிலர் வந்து, "நமது நாயகன் எத்தன்மையையுடையவன்?" என்று வினவியபோது, அதற்கு விடையளிக்கும் வண்ணம் அடியிற்காணுமாறு ஒரு ஸூரா இறங்கிற்று:—

"அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தால்.

1. நீர் சொல்வீராக: அவனே அல்லாஹ் (ஆகிய அத்துவைத) ஏகன்.

2. அல்லாஹ் (ஆகிய அவன், எல்லாச் சிருஷ்டிப் பொருள்களும் எல்லா வேண்டுதல்களிலும் தன்னிடம் தேவைப்படத் தான்) எத்தேவையும் அற்றிருப்பவன்.

3. அவன் பெறவுமில்லை, பெறப்படவுமில்லை.

4. அவனுக்கு நிகராய் ஒருவன் இருக்கவுமில்லை."
அல்குர்ஆன், 112.

இறைவனுக்கு இணை (ஷிர்க்கு) வைத்துப் பூஜிப்பவர்கள் நான்கு வகைப்படுவர்: 1 அவர்களுள் சிலர் பலதெய்

வம் உண்டென்கின்றனர். 2 வேறு சிலர் இறைவனுடைய பரிசுத்தகுணநிசயங்கள் வேறு வஸ்துக்களிலும் காணப்படுதல் கூடுமென்கின்றனர். 3 இன்னும் சிலர் இறைவனுக்கு வேறு வஸ்துக்கள் உறவின்முறையாக இருத்தல் முடியுமென்கின்றனர். 4 மற்றும் சிலர் இறைவனால் செய்யப்படக்கூடிய காரியங்களை இதரர்களும் செய்தல் முடியும் என்கின்றனர். இவ்வாறு வாதிக்கின்றனர் இணைவைத்துப் பூஜிக்கும் மனிதர்கள். இந்த 4 வகை இணை (ஷிர்க்கு) களையும் எம்முடைய திருவேதத்தின் 112-வது அத்தியாயம் நான்கு சிறுவாக்கியங்களால் கண்டித்து ஒழிக்கின்றது.

திருமக்கமாநகரில் ஆரம்ப காலத்தில் இறங்கிய மேற்கூறிய இந்த 112-வது அத்தியாயம் தன்னுடைய 4 சிறுவாக்கியங்களால் உலகத்தில் பரவியிருக்கும் அநேக மதங்களில் காணப்படும் மூலக்கொள்கைகளின் தவறுகளை நன்கு வெளிக்காட்டி யிருக்கின்றது. இவ்வத்தியாயம் இறைவனது தன்னந்தனியான இணையற்ற ஏகபராபர நிலைமையை 4 வகை (ஸிபத்து) லக்ஷணங்களால் வெளிப்படுத்தி அவனது சர்வ சிலாக்கியமான தன்மையை ஸ்தாபித்திருக்கின்றது. அவன் இணையின்றித் தனித்தவன்; சித்து அசித்து ஆகிய எல்லாவஸ்துக்களும் அவனைச் சார்ந்திருக்கின்றன; அவன் பிறரைப்பெறுமலும் பிறரால் பெறப்படாமலும் ஆதியந்தமில்லாச் சுயம்புவா யிருக்கிறான்; இன்னும் இதரர்களால் எட்டமுடியாத உன்னதப் பதவியில் அவன் ஏகபராபரனு யிருக்கிறான். இக்குணங்களெல்லாம் இறைவனது ஏகத்துவ நிலைமையை இனியில்லா வண்ணம் நிலைநிறுத்துகின்றன. 112-வது அத்தி

யாயத்தின் முதல் வாக்கியம் இவ்வண்டகோள சரசரங்களுக்கெல்லாம் தலைவன் ஒருவனே யென்று சாதிக்கின்றது; இதரமதத்தின ரெல்லாரும் இறைவன் ஒருவனே யென்று வாயால் மட்டும் ஒத்துக்கொண்டபோதிலும் செய்கையில் பலவித (4 வகை) ஷிர்க்குகளுடனே அனுஷ்டித்து வருகின்றனர். இவ்வுலகில் காணப்படும் எண்ணிறந்த மதங்களுள் இஸ்லா மார்க்கத்தில் மட்டுந்தான் இறைவன் ஒருவனேயென்று நம்பிக்கையிலும் அனுஷ்டானத்திலும் ஒரேவண்ணமாய் முஸ்லிம்கள் கொண்டாடி வருகின்றனர். உள்ளொன்று வாதித்துப் புறமொன்று பூஜித்தல் இஸ்லாத்தில் அறவேயில்லை. அகத்திலும் புறத்திலும் ஆண்டவன் ஒருவனே என்பது இஸ்லாத்தின் பெருமை.

ஒருவருக்கும் கிட்டக்கூடாத தன்னந்தனியான உயர் நிலைமை தனக்கு இருப்பதால் அல்லாஹுத் தஆலா தற்பெருமை மிகுதியாகக்கொண்டு வேறுயாரும் தன்னுடைய பதவிக்கு வருவதாயின் அதை அவன் தன்னுடைய பொறாமைக் குணத்தால் வெறுக்கிறான்போலும், என்று தவறாக நீங்கள் எண்ணி விடவேண்டாம்; ஏனெனின், ஆண்டவன் யாரிடத்தும் பொறாமை கொள்வதில்லை; தன்னைப்போல் வேறொருவரும் ஆகமுடியாமலிருக்கும்போது ஒருவரைக்குறித்து ஆண்டவன் அசிகை கொள்வானேன்? சிலர் தம் அறியாக்குணத்தால் உலகில் அவதரித்த நம்போன்ற சாமான்ய மனிதர்களைக் கடவுளே யென்றும் கடவுளின் அவதார புருஷர்களென்றும் பூஜிப்பதால் அல்லாஹுத் தஆலாவுக்குப் பொறாமையுண்டாக ஒன்றும் ஏதுவில்லை. ஒருமனிதன் மற்றொரு மனிதனைத்

தன் ஆண்டவனென்று பூஜிப்பதால் இந்தப்போலி ஆண்டவன் உண்மையான ஆண்டவனுக்கு இணையாகப் போவதுமில்லை; இறைவன் இப்பாமரனைக்கண்டு தன் விரோதியெனக்கருதிப் பொறுமைகொள்வதுமில்லை. பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட்டுடன் இவ்வண்டத்தில் காணப்படும் எந்தவஸ்துவும் இறைவனுக்கு ஈடாவதில்லை. இன்னொரு வஸ்துவை ஆக்கலும் காத்தலும் அழித்தலுமான இம்முத்தொழிலை இயற்றுவது இவ்வண்டத்தில் காணப்படும் எந்த வஸ்துவாலும் முடியாது. இங்கே காணப்படும் எல்லா சித்து அசித்துக்களும் வேறொரு வஸ்துவை ஆக்கவாவது காக்கவாது அழிக்கவாவது சக்தியைப் பெறாமலிருப்பதோடு தம்முடைய நிலைமையைப் பாதுகாத்துக் கொள்ளும்பொருட்டும் மற்றொரு பராபர வஸ்துவின் மேல் சார்ந்திருக்கவேண்டியிருக்கிறது.

இக்காரணத்தால்தான் எமது திருமறையின் 112-வது அத்தியாயம் 2-வது வாக்கியம் அல்லாஹுத் தஆலாவின் அஸ்ஸமதுத் தன்மையை வெளியாக்குகின்றது. எமது நபிகள் பெருமானாரவர்களிடத்தில் "அஸ்ஸமது" என்பதன் தாத்பரியம் என்னவென்று கேட்டபோது, "ஒவ்வோர் அவசியம் நேரிடும் போதும் யார்பால் உதவி தேடுகிறோமோ அவன் தான் அத்தலைவன்," என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். இதனால் தான் அஸ்ஸமது இடத்தில் எல்லோரும் சார்ந்திருக்க நேரிடுகின்றது. இவ்வண்டத்தில் காணப்படும் எல்லா வஸ்துக்களும் இறைவன்பால் சார்ந்திருக்கின்றன; எந்த வஸ்துவையும் அவன் சார்ந்தில்லை. எல்லோருக்கும் இறைவன் உதவிவேண்டும்; இறைவனுக்கு எவர் உதவியும் தேவையில்லை. உலகில் சில மனி

தர்களையும் மிருகங்களையும் பஞ்ச பூதங்களையும் மற்றுமுள்ள இயற்கைப் பொருள்களையும் தெய்வமென்று வணங்குகின்றனர் பலமதத்தினர்; இவர்கள் வணங்கும் தெய்வங்களெல்லாம் தாமே சுபமாகத் தம் காரியங்களைச் செய்து கொள்ளமுடியுமா அல்லது இவ்வயனைத்தும் வேறொரு மெய்யான தெய்வத்தினிடத்தில் சார்ந்திருக்கின்றனவா வென்று சற்று நிதானிப்பீர்களேல் இப்பல தெய்வங்களுள் ஒன்றேனும் அஸ்ஸமதாக இருத்தல் முடியாதென்றும் உண்மையான அஸ்ஸமதிடத்தில் இவையெல்லாம் அடிமைப்பட்டிருக்கின்றன வென்றும் நன்குணர்ந்து கொள்வீர்கள். இதனால் தான் நாமெல்லாம் அப்து (அடிமை) என்றும் ஆண்டவன் ஒருவன் மட்டும் ஸமது என்றும் எம்பெருமானாவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்; ஆகவே நாமெல்லாம் அப்துஸ்ஸமதாகின்றோம்.

இந்த 112 : 2-வது வாக்கியம் வேறொரு வர்க்கத்தாரின் தர்க்கத்தையும் மறுக்கின்றது. இறைவன் அனாதியாயிருப்பதுபோல் வஸ்துவும் ஞானமும் அனாதியென்று வாதிப்பவர் சிலருண்டு. வஸ்துவும் ஞானமும் அனாதியல்லவென்றும் இவை இரண்டும் அஸ்ஸமதிடத்தில் சார்ந்திருக்கின்றனவென்றும் எம் திருவேதத்தால் தெரிந்துகொள்ளுகிறோம். வஸ்துவும் ஞானமும் அனாதியாயில்லாவிடின் இறைவன் எவ்வாறு பல் கோடி கோடிச் சராசரங்களைப் படைத்தல் முடியுமென்பது அவர்களின் சந்தேகம். குயவன் பாண்டம் செய்யவேண்டுமாயின் மண்ணைவைத்துக் கொண்டு செய்ய எத்தனிப்பதுபோல் ஆண்டவன் தன்னைப்போல் அனாதியான வஸ்துவையும் ஞானத்தையும் வைத்துக்கொண்டு தான் சராசர வஸ்துக்களைச் சிருஷ்டித்

திருக்க முடியுமென்று நினைப்பது தவறாகும். குயவன் அப்து; இறைவன் ஸமது. அப்தின் தன்மையை ஸமதிடத்தில் ஏற்றுவது தகாது. ஒன்றன் உதவியைக்கொண்டு இன்னொன்றைச் செய்வது அப்தின் தன்மை; ஒன்றன் உதவியுமில்லாமல் ஒன்றைச் செய்வது ஸமதின் சாமார்த்தியம். சூனியத்திலிருந்து வஸ்துக்களைப் படைத்தல் அல்லாஹுத் தஆலாவின் அதிசாமர்த்தியமாகும். "ஆகு" (குன்) என்று இறைவன் சொன்னால் எல்லாம் அமைந்துவிடும். (குன்பயகூன்)

112:3-வது வாக்கியத்தால் ஆண்டவன் தானே அவதாரமெடுத்து வருவதில்லையென்றும் தன்னுடைய உறவினர் யாரையும் அவதாரமெடுக்கச் செய்வதில்லையென்றும் உணர்ந்து கொள்ளுகிறோம். வானுலகத்துப் பெண்களெல்லாம் இறைவனது குமாரிகளென்பதும், சில அரசர்களையும் வீரர்களையும் வேறு சாமான்ய மனிதர்களையும் கடவுளேயென்றும் கடவுளுடைய மக்களென்றும் தப்பாக எண்ணுவதும் தகாதென்பதும் தெளிவாகின்றது. தேவஆவியால் குமாரர்களாகவும் தேவ அம்சத்தால் கடவுள்களாகவும் மனிதர்கள் அவதரிப்பதுமில்லை; இக்காரணத்தால் இவர்கள் இறைவனுக்குப் பந்துக்களென்பதுமில்லை.

மேலே சொன்ன ஸூராவின் 4-வது வாக்கியத்தால் உலகின் கண்ணுள்ள எவ்வஸ்துவும் எம்மனிதனும் இறைவனுக்கு ஒப்பாகமுடியாதென்று உணர்ந்து கொள்ளுகிறோம். ஆகவே இறைவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் யாருமில்லையென்பது செவ்வனே விளங்குகின்றது.

நபிகள் பெருமானாரவர்களைச் சிலர் ஆண்டவனுடைய

நிலைமை எத்தன்மைத்து என்று வினவினபோது அதற்கு விடையளிக்கும் பான்மையாய் அல்லாஹுத் தஆலா தன்னுடைய சிறந்த குணங்களுள் நான்கை இங்கெடுத்துச் சொல்லக் காரணம் யாது என்று உங்களுக்குச் சந்தேகம் ஜனிக்கலாம். ஆண்டவன் இவ்வாறு தன் உண்மை நிலைமையை வெளிப்படுத்தியது நாமெல்லாம் அவனுடைய அழகிய சத்துவ குணங்களைக்கண்டு பக்தியிலாழ்ந்து நம்மையே நாம் மேன்மைப்படுத்திக் கொள்ளுதற்கேயாம். ஆண்டவன் தன் பெருமைகளைத் தற்பெருமையால் வெளிப்படுத்தவில்லை; தற்புகழ்ச்சிக் காரணமாய் வெளிப்படுத்தினனென்று சொல்வோமாயின் ஆண்டவன் விருப்பு வெறுப்பு அற்றவன் என்று சொல்லக்கூடிய பரிசுத்த குணத்துக்கொரு குறையுண்டாகும். தற்பெருமையால் இறைவன் தன் குணங்களை வெளிப்படுத்தவில்லை; நாமெல்லோரும் உண்மை யுணர்ந்து உஜ்ஜீவிக்கும் பொருட்டே அல்லாஹுத் தஆலா தன் பெருமையை வெளிக் காட்டுகிறான். அவனது பெருமையை யுணர்ந்து நாம் அவனைப் புகழ்ந்து வணங்கும் பக்ஷத்தில் அல்லாஹுத் தஆலாவின் பதவி உன்னதப்பதவியாகு மென்பதில்லை. நாம் இறைவனைப் புகழ்ந்து வணங்குவதால் அவனுக்கு மேன்மையுமில்லை; நாம் அவனைப் புகழாமல் இகழ்வோமாயின் அவனுக்குத் தாழ்மையுமில்லை. அவனைப்புகழ்ந்து வணங்கினால் நமக்குத்தான் மேன்மையுண்டு; புகழாமல் இகழ்வோமாயின் அப்போது வரும் தாழ்மையும் நமக்கே. ஆதலின் நாம் ஈடேறும் பொருட்டே நம் இறைவன் நம் மீது கருணை கூர்ந்து தன் (ஸிபத்துக்களை) தன்மைகளை வெளிப்படுத்தி யிருக்கிறான். ஆண்டவன் இந்த 112-வது

ஸூராவாலும் இதைப்போன்ற வேறு ஸூராக்களாலும் தன்னைப் புகழ்ந்துகொள்ளும் பொருட்டுத் தன்ஸிபத்துக்களைச் சொன்னதாய் எண்ணிவிடவேண்டாம்; எல்லாம் நம் ஈடேற்றத்தின் பொருட்டே.

ஸமதாகிய நாயனை அப்தாகிய அடிமைகள் (நாம்) வணங்கவேண்டுமாயின் அத்தலைவனுடைய உயர்ந்த சத்துவ குணங்களை மனம் வாக்குக் காயங்களால் ஒத்து உணர்ந்துகொண்டு அதற்குத் தக்கபடி வணக்கம் செய்தல்வேண்டும்; இன்றேல் நம்முடைய வணக்கம் போலி வணக்கமாகும். உலகில் இதுவரையில் அவதரித்த மதத் தலைவர்களான மனிதவர்க்கத்தாரில் எமது நபிகள் பெருமானாவர்கள் தவிர இதரர்களையெல்லாம் முழு முதற் கடவுளென்றோ, கடவுளின் பந்துவென்றோ, சற்றேறக் குறையக்கடவுளென்றோ எண்ணி அத்தலைவர்களைப் பூஜிக்கின்றனர் பலர். இவ்வாறு எமது மதத்தலைவரான முஹம்மது முஸ்தபாரஸூல் (இவர்கட்கு இறைவனருளும் நன்னீராயமுமுண்டாகுக) அவர்களை முஸ்லிம்கள் கடவுளென்றுவது கடவுளின் சொந்தக்காரனென்றுவது கடவுளைப் போன்றவரென்றுவது பூஜிப்பதுமில்லை; அவர்கள் பாதத்தில் முடி சாய்ப்பதுமில்லை. நபிகள் பெருமானாவர்களையும் எம்மைப்போன்ற ஒரு மனிதரென்றே முஸ்லிம்கள் கொள்ளுகின்றனர். திருநபியவர்களே, "நானும் உங்களைப்போன்ற ஒரு மனிதன் தான்," என்று உரைத்திருக்கின்றார்கள். திருமக்காஷரீப் புக்குப்போய் எமது நபிகள் பெருமானைப் பூஜிப்பதற்காகத்தான் முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்குப் போகின்றனர் என்று எண்ணும் எம் இதரமதச் சகோதரர்கள் இனியேனும் அப்படிப்பட்ட

கெட்ட அபிப்பிராயத்தை ஒழித்துவிடுவார்களாக. ஆக வே திருநபியவர்கள் முதல் எம்போன்ற சாமான்யர் வரையில் எல்லோரும் ஸமதுடைய, அப்துகளே. அப்துகளின் கடமை ஸமதின் பெருமையை உள்ளது உள்ளவண்ணமே உணர்தலாகும். ஆதலின் ஸமதால் படைக்கப்பட்ட மனிதர்களையும் மிருகங்களையும் வேறு இயற்கைப் பொருள்களையும் ஸமது என்று சொல்வது கடவுளின் உண்மையான தன்மையை நாம் உணராத குறையேயாகும். அடிமை ஒரு காலும் தலைவனாகமாட்டான்; அப்து ஸமதாக ஆவது இயலாத காரியம்; ஆதலின் இவ்வண்டத்திலுள்ள அப்து ஒன்றையும் ஸமதென்று எண்ணித் தடுமாற்றம் கொள்ள வேண்டாமென்று எமது திருமறை எச்சரிக்கின்றது. ஆகவே அப்தை அல்லாஹுத் தஆலாவாகப் பாவிக்காமல் அல்லாஹுத் தஆலாவையே அல்லாஹுத் தஆலாவாக நாம் அறிந்து வணங்குவதற்கே மேற்கூறிய 112-வது அத்தியாயம் ஆண்டவனுடைய ஏகத்துவத்தை 4 வகை லக்ஷணங்களால் நிலை நிறுத்துகின்றது.

இவ்வுலகில் நிலையில்லாதனவாகிய நமது உடல் பொருள் மனைவிமக்கள் உற்றார்பெற்றார் ஆகிய இவர்களிடத்தில் எவ்வளவோ நாம் ஈடுபட்டுக் கிடக்கின்றோம். சுருங்கச் சொல்லுமிடத்து அநேக மனிதர்களின் வாழ்நாளே இவ்வுலக இன்பங்களைத் தேடுவதாயிருக்கின்றது. இவ்வுலக இன்பம் அறவே வேண்டாமென்று இஸ்லாம் சொல்லவில்லை; ஆனால் இதையே சதமென்றெண்ணி வாணாளை வீணாக்கி ஆத்ம பக்குவமடையாமல் கைசேதமடைந்து போகவேண்டாமென்றே எமது திருக் குர்ஆன் அச்சமூட்டி எச்சரிக்கின்றது. அஹதாகிய ஏகபராபரத்தைத் தவிர

வேறொன்றும் சதமென்றெண்ண வேண்டாம் நண்பர்காள்! ஆதலின் அவனருள் பெறுவதில் முந்துங்கள்; அத்திருவருள் சித்தித்தபின் இவ்வுலக இன்பங்களையும் தாமரையிலை நீர்போல் நுகரலாம்; இதனால்தான்,

"தொண்டாளப் பணந்தேடுந் துறையாள
வுலகாளச் சூழ்ந்த காமப்
பெண்டாளத் திரிகின்ற பேய்மனத்தீர்
நும்முயிரைப் பிடிக்க நாளை
* * * கூற்றுவரி னென்புகல்வீர்
ஞான" இன்பத் "தலைவ னும்மைக்
கொண்டாளக் கருதுமினோ வாண்டபின்ன
ரிவ்வுலகிற் குலாவு வீரே,"

என்றார் ஒரு பெரியார். அஹதாகிய அவனை மறந்து அனித்தியமாகிய இவ்வுலகப் பொருள்களே கதியென்றிருந்தால் நாளைக்கடைசித் தீர்ப்புநாளில் அவனெதிரில் நின்று நாம் என்ன சமாதானம் சொல்லப் போகின்றோம்? பேய்மனத்தீர்! பிறவஸ்துக்களெல்லாம் அஸ்ஸமதால் படைக்கப்பட்டனவென்று உண்மை யுணர்ந்து, படைப்புண்ட வஸ்துக்களைப் பூஜித்தாலே அவற்றால் நமக்கு ஈடேற்றமுண்டாகுமென்னும் வீண் எண்ணத்தை விடுத்து, இவற்றையெல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் சர்வசக்தனாகிய, அகண்டாகாரமான இவ்வண்டத்துக்கெல்லாம் முதற்காரணமாகிய, ஆதியந்த மில்லாமல் சுயம்புவாயிருக்கும் அநாதித்தலைவனாகிய, அஸ்ஸமதாகிய, முழுமுதற் கடவுளாகிய, அஹதென்னும் இணையற்ற ஏக பராபரனாகிய, அல்லாஹ் ஸுப்ஹான ஹுவ தஆலாவாகிய, காருண்யக் கடலாகிய, பேரின்பப் பெருமலையைப் பின் பற்றுங்கள்; பின்பற்றுங்கள்; பின்பற்றுங்கள்.

இத்தகைய பெருமைவாய்ந்த உண்மையை உணர்த்துவதால் தான் எம் திருமறையின் 112-வது அத்தியாயத்தை எம்போன்ற முஸ்லிம்கள் ஒவ்வொருநாளும் அநேக முறை ஓதி ஓதி அஹதாகிய ஸமதின் பெருமையைப் புகழ்கின்றனர். ஆதலின், குல் ஹுவல்லா ஹுஅஹது, என்று,

"மட்டாருந்" திருமதினப் பெருநபியா
ரு"ரைத்த" ஸூரா "வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும்
பரிமளிக்கும் பரிந்"தெப் போதுந்
"தொட்டாலுங் கைம்மணக்குஞ் சொன்னாலும்
வாய்மணக்குந் தொய்யற் சேற்றில்
நட்டாலுந்" தீன் "பயிராய் விளைந்திடுமே"
ஸூரத்தின் "நளினந் தானே."

நாம் முன்னமே சொன்னதுபோல் அல்லாஹுத் தஆலாவின் பதவி உயரும் பொருட்டன்று நாம் அவனைப் புகழ்ந்து வணங்குவது; நம்முடைய ஈடேற்றத்தின் பொருட்டே நாம் அவனுடைய குண விசேஷங்களைப் புகழ்ந்து வணங்குவது அவசியமாகின்றது. இது செய்வதை ஒருவன் கடைப்பிடியானாயின் மனிதப்பிறவி யெடுத்ததன் பயனையே அவன் இழந்து விட்டவனாகிறான். ஆற்றைக் கடக்கும் பொருட்டுக் கொடுத்த தெப்பத்தைக்கொண்டு அவ்வாற்றைக் கடவாமல் தெப்பமும் தானும் அக்கரையன்றி ஆழ்கடலில் சென்று மூழ்கிவிடுவதேபோல் இவ்வுடம்பையும் ஆத்மாவையும் வீணாக்கி விடுகின்றனர் பலர். அந்தோ பரிதாபம்! ஸமதாகிய இறைவனே அப்தாகிய இவர்களுக்கு நல்லறிவுச்சுடரைக் கொளுத்தி ரக்ஷித்தருள்வானாக.

ஆதலின் நாம், "ஏ, அஸ்ஸமதாகிய சர்வலோக சர

ண்யா! உனது திருவருளால் உன்னுடைய (ஸிபத்து) லக்ஷணத்தையும், (தாத்து) லக்ஷியத்தையும் எம்போன்ற அடியவரான ஏழைகள் உள்ளது உள்ளவண்ணமே யுணர்ந்து உனை வணங்கி உன்பால் ஈடுபட்டு உன் கிருபாகடாக்ஷ வீக்ஷண்யத்தால் மோக்ஷப் பேரானந்தத்தையு மடைந்து கடைசித்தீர்ப்பு நாளில் உனது செவ்விய திவ்விய தரிசனமும் (லிக்கா) பெறும்படி கிருபைதந்து பாலித்தருள்வாயாக," என்று அஸ்ஸமதான அஹதின்பால் அடைக்கலம் தேடுவோமாக. ஆமீன் (அப்படியே ஆகக்கடவது, ததாஸ்து)

---

கமலம்-1] 15-8-19 [இதழ்-13

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.
நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர் மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

# ஈதுல் அல்ஹா

"எல்லாப் பிராணிகளுக்கும் தயாளமாகவே யன்றி உம்மை (திருநபியவர்களை) நாம் (அல்லாஹுத் தஆலா) அனுப்பவில்லை." அல் குர்ஆன்.

"யாரிடத்திலிருந்து மன்பதைக்கு மிகப் பெரும் நன்யுண்டாகின்றதோ அவர்தாம் உங்களுக்குள் சர்வ சிலாக்கியமானவர்"—பெருமானார் திருவாக்கியம்.

நபி இஸ்மாயீலின்*குர்பான்

பூவுலகும் அதன் கண்ணுள்ள மானிடரும் தோன்

---

* இவர்களுக்கு இறைவன் அருள்புரிவானாக.

றிய கால முதல் எமது இறைவனால் அறிவிக்கப்பட்ட ஏக தெய்வக்கோள்கையை மாந்தர்கள் கைவிட்டு விடாம லிருக்கும் பொருட்டு அவர்களுக்கு அடிக்கடி அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக அவ்விறைவன் அநேக நபிமார் களை அனுப்பியிருக்கிறான். மனிதர்கள் தமது சேர்க்கைத் துர்க்குணத்தால் அடிக்கடி ஏக தெய்வக்கொள்கையினின் றும் விலகிப் பல தெய்வக்கொள்கையிலும் விக்கிரக ஆரா தனையிலும் ஈடுபட்டு விடுவது வழக்கம். இவ்வாறு மாந்தர் தம் நல்லறிவை யிழந்து அக்ஞான அந்தகாரத்தில் மூழ் கும் தருணத்தில் இறைவன் தன்பாலுள்ள இயற்கை நற் குணத்தால் ஒரு தீர்க்க தரிசியை அனுப்பி வழி விலகிச் சென்றவர்களை நல்வழியில் திருப்புவதும் வழக்கம்.

இவ்வாறிருக்கும்போது பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் ஒரு காலத்தில் நல்வழியைவிட்டு அக்ஞான அந்தகா ரத்துள் மூழ்கி விக்கிரக ஆராதனையிலும் பல தெய்வக் கொள்கையிலும் ஈடுபட்டு உலகமெங்கும் மௌட்டீகர்கள் நிறைந்திருந்தனர். அக்காலத்தில் மணற் பிரதேசமாகிய பாலைவன நாட்டிற்கு (இக்காலத்திய அரபுதேசம்) இப்ரா ஹீம் நபி (இவர்களுக்குக் கருணை யுண்டாகுக) என்னொரு மஹா தீர்க்கதரிசி வந்து சேர்ந்தார்கள். கடவுளின் கட்ட ளைப்படி ஏக தெய்வக்கொள்கையில் ஈடுபட்டவர்களாய் எல்லாச்சிருஷ்டிப் பொருள்களிலும் நேசம் பாராட்டி வந் தார்கள். இவர்கள் இறைவன் கட்டளைக்கு இரண்டு சொல் லாமல் அவனுடைய சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டு (இஸ்லாத்தில்) நடந்து வந்தார்கள். நபியவர்கள் ஒரு நல்ல முஸ்லிமா யிருந்ததுபோல் அவர்கள் பாரியாள் ஹாஜராவு ஒரு தகுதிவாய்ந்த முஸ்லிமாவா யிருந்தார்கள். "மகன்

தந்தைக்(கு) ஆற்றும் உதவி இவன் தந்தை என் நோற்ருன் கொல் என்னும் சொல்,'' என்னும் குறளுக்கு இணங்க இப்ராஹீம் நபி (இவர்களுக்குக் கருணை யுண்டாகுக) அவர்களுக்கும்ஹாஜராபீபிக்கும் இஸ்மாயீல் (இவருக்குக் கடவுளின்கருணை யுண்டாகுக) என்ெருரு ஆண்மகவு இருந்தது. இப்ராஹீம் நபியவர்களும் அவர்களின் மனைவி மக்களுமே முஸ்லிம்களா யிருந்தனர். ஏனை அரபுஸ்தான் முழுதும் குபிர்ஸ்தானுக விருந்தது. அரபுதேச மட்டுமின்றி இதரநாடுகளிலும் பல தெய்வ விக்கிரக ஆராதனை புரிபவர்களே நிறைந்திருந்தனர். அப்போது தீர்க்கதரிசிகளுக்குள் ஒரு மகாநபியாகிய இந்த இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமும் இவர்களுடைய மனைவி மக்களுமே ஏகநாயகக்கொள்கையை நிலை நிறுத்தினுர்கள். உலகத்தார் முழுதும் ஒன்று சேர்ந்து எதிர்த்தபோதிலும் தங்களுடைய ஏகநாயக சித்தாந்தத்தை விடுவதில்லையென உறுதிகொண்டிருந்தார்கள். இவர்கள் தங்களுக்குத் தெரிந்த உண்மையை மற்றவர்களுக்கும் உபதேசித்து வந்தார்கள். ஆனுல் அக்காலத்திய விக்கிரக ஆராதனை புரிபவர்கள் இப்ராஹீம் நபியவர்களைப் பலவாருகவும் ஹிம்சிக்கத் தலைப்பட்டனர். எவ்வளவு துன்பம் நேரிட்டபோதிலும் இப்ராஹீம்நபி தங்களுடைய கொள்கையை மட்டும் விடாமல் நிலை நிறுத்துவ தற்குப் பிரயத்தனப்பட்டு வந்தார்கள். இவ்வாறு இருக்கும்போது இப்ராஹீம் நபியவர்களின் கொள்கையையும் உறுதியான நம்பிக்கையையும் அக்காலத்திய மனிதர்களுக்கும் பிற்காலத்திய மனிதர்களுக்கும் எண்பிக்கும் பொருட்டும் நபியவர்களின் பக்தியைப் பரிசோதித்துக் காட்டும் பொருட்டும் எமது இணையற்ற ஏகபராபரன் தனது நோக்கத்தில்

வைத்திருந்தபடி அவர்களுடைய கனவில் தாமே தம் புதல்வரை இறைவன்பொருட்டு அறுப்பதாக (பலியிடுவதாக)த் தோற்றச் செய்தான். நபிமார்களுக்கு நனுக்காட்சியைப் போல் கனுக்காட்சியும் மெய்யேயாதலால் அக்கனவை இப்ராஹீம் நபியவர்கள் இறைவனது ஏவலாகவே எண்ணினார்கள். அக்காலத்தில் இஸ்மாயீல் (இவருக்குக் கருணையுண்டாகுக) என்னும் பெயருடைய ஒரே ஆண்குழந்தைதான் இப்ராஹீம் நபியவர்களுக்கு இருந்தது. இது சரித்திர உண்மை. இப்ராஹீம் நபியின் இரண்டாவது குழந்தையான இஸ்ஹாக்குநபி (இவருக்கு இறைவன் அருள்புரிவானாக) அப்பொழுது பிறக்கவில்லை. ஆதலின் இப்ராஹீம் நபியவர்கள் தம்முடைய குழந்தை இஸ்ஹாக்கைக் குர்பான் கொடுக்கப்போனதாய்ச் சொல்வது சரித்திரமுரணாகும். மேலேசொன்ன கனவு இப்ராஹீம்நபியவர்களுக்குத் தோற்றியபோது அவர்களுக்கு இருந்த ஒரே குழந்தை நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தாம்.

அக்காலங்களில் காபிர்கள் தம் தெய்வங்களுக்கு (?) நரபலியிடுவது சர்வ சாதாரணமா யிருந்தது; கல்லாலும் கட்டையாலும் செய்யப்பட்டிருந்த விக்கிரகங்களுக்கும் காபிர்கள் நரபலியிட்டு வந்தனர். அக்காலத்திய மனிதர் தமக்கு அருமையான நெருங்கிய உறவின் முறையாளரையே பலியாகக் கொடுப்பது வழக்கம். விக்கிரகங்களுக்கும் சாதாரணமாய் நரபலி கொடுக்கும் அக்காலத்தில், "கல்லாலும் கட்டையாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு அறிவு ஆன்மா ஆண்மை அதிகாரம் முதலிய தெய்விகக் குறிகள் ஒன்றும் இல்லை," என்றும், "எல்லாப்புக

மும் வணக்கமும் ஏகபாராபரனுக்கே தகும்" என்றும் வாதித்து வற்புறுத்தி வந்த நபி இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மட்டும் தம்முடைய ஆண்டவனின் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டுத் தங்களுடைய கனத்தோற்றத்தில் கண்ட வண்ணம் தங்களுடைய ஏகபுத்திரனை ஏகநாயகனுக்காகப் பலிகொடாம லிருந்திருந்தால் அவர்களுடைய பக்திதான் என்னபக்தியா யிருந்திருக்கும்? கல்லுக்கும் கட்டைக்கும் நரபலியிடும் மற்ற விக்கிரக ஆராதனைக்காரர்கள் தாம் நபியவர்களைப்பற்றி என்ன எண்ணி யிருப்பார்கள்? நம்பிக்கையற்ற விக்கிரக ஆராதனை புரிவோர் தம் தெய்வங்களுக்கு (?) நரபலி சர்வசாதாரணமா யிடுங் காலத்தில் உண்மையான இறைவனிடத்தில் உள்ளன்பு வைத்திருந்த இப்றாஹீம் நபி (இவர்களுக்குக் கருணையுண்டாகுக) அவர்கள் மட்டும் நரபலியிடுவதைப்பற்றிப் பின்னிடைவார்களோ? ஒருபோதும் பின்னிடையார். கனவில் கண்டதைச் செய்யப் பின்னிடைய மனமில்லாதவர்களாய்த் தாங்கள் கண்ட கனத்தோற்றத்தைத் தங்களுடைய ஏகபுத்திரரான இஸ்மாயீலிடம் தெரிவித்தார்கள். பிதாவுக்கேனும் புத்திரருக்கேனும் தங்களுடைய ஆண்டவன்மேல் வைத்த நம்பிக்கையில் எள்ளளவும் சந்தேகமின்மையால் இருவரும் பலிக்குச் சம்மதித்தார்கள். கடைசியாய்ப் புத்திரர் தம்முடைய அரிய பிதாவின் திருக்காதத்தால் சேதனமடைய ஆயத்தமாகி மினு என்னும் பெயருடைய வட்டப்பாறையின்மீது குப்புறக் கிடத்தப்பட்டார். நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தங்களுடைய செல்வப் புதல்வரைத் தங்கள் திருக்காதத்தால் பலி செய்யும்போது புத்திரவாத்ஸல்யத்தால் மனம் குழையு

மென்றெண்ணிப் புதல்வர் சொற்போல் தங்களுடைய கண்களை வஸ்திரத்தால் கட்டிக்கொண்டு நபியவர்கள் தங்கள் கையிலிருந்த கத்தியைப் பிள்ளையின் கழுத்திற்பொருத்தி அழுத்தி அறுத்தார்கள். ஒருதலை அறுப்புண்டது! ஆனால் இஸ்மாயீலின் தலையன்று (இவருக்கு இறைவன் கருணையுண்டாகுக)!! வேறு யார் தலை? நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் தப்பிக்கொண்டார். அப்போது நிகழ்ந்த ஒரு தெய்விக அற்புதத்தால் ஒரு செம்மறியாட்டின் தலை அறுப்புண்டிருந்தது.

இதனால் நாம் உணர்ந்து கொள்வதென்ன? இந்த அடையாளத்தால் ஆண்டவன் மனிதர்களுக்கு நல்லறிவை ஊட்டினான். கல்லாலும் கட்டையாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு நரபலியிடுதல் தெய்வ சம்மதமில்லையென்பது அப்போது வெளியாயிற்று. ஏகநாயகனாகிய 'அர்ரஹ்மான் அர்ரஹீம்' என்னப்பட்ட அல்லாஹுத் தஆலா எல்லாப்பிராணிகளிடத்தும் கிருபைவைக்கும்போது நரமாம்சத்திலும் நரபலி யிரத்தத்திலும் அவனுக்குப் பிரியமுண்டென்று நினைப்பது தவறாகும்.

பேரிருளில் தடுமாறித் திரிபவருக்குப் பொருள் விளக்கம் உண்டாகும்படி கைவிளக்குக் கொடுத்தாற்போல அஞ்ஞான அந்தகாரத்தில் அகப்பட்டுத்திரிந்தவருக்கு 'ஆண்டவனை அறியும் மார்க்கம் இதுதான்,' என்று ஏகபராபரன் இப்ராஹீம் நபியவர்களுக்குக் காட்டிக் கொடுத்திருந்தும் விழியிலார்க்கு விளக்குப் பயன்படாதவாறுபோல் மனிதர்களுள் சிலவர்க்கத்தாருக்கு இவ்வுண்மை முழுப்பயன் படாதாயிற்று. இவர்கள் இவ்வுண்மையின் இரகசியம் இன்னதெனத் தீரத்தெளிய ஆய்ந்தோய்ந்து பாராமல்

நுனிப்புல் மேய்வதுபோல் மேல் நோக்காய் விஷயத்தை நழுவ விட்டு விட்டனர். முஸ்லிம்கள் மட்டும் இவ்விஷயத்தின் உண்மை இன்னதெனக்கடைப்பிடித்து இன்று வரையில் அவ்வைபவத்தைக் கொண்டாடி வருகின்றனர். ஏக நாயகக் கொள்கையின் எல்லைக்கல்லாகிய இச்சிறந்த செய்கையால் (அஃதாவது, இஸ்மாயீலைக் குர்பான் கொடுக்கப் போய் அறுக்கப்பட்டது ஆட்டுத்தலை என்னும் செய்கை) நாம் உணர்ந்துகொள்ளும் உண்மை யாதெனின், இறைவன் இஷ்டத்துக்கு எல்லோரும் கீழ்ப்படியவேண்டுமென்பதே. இது தான் இஸ்லாம். இப்றாஹீம் நபியவர்கள் இறைவனுடைய இஷ்டத்துக்குக் கீழ்ப்படிந்து தங்களுடைய இஸ்லாமியக் கொள்கையை நிலைநிறுத்தினார்கள். இறைவனுக்கு இணங்கி நடத்தல் என்னும் இஸ்லா மார்க்கத்தை இப்றாஹீம் நபியவர்கள் (இவர்களுக்கு இறைவன் கருணைபுரிவானாக) நன்கு நிலைநிறுத்திப் பன்னெடுங்காலத்துக்குப் பின்னர் மன்பதைக் கெல்லாம் மஹா சிரேஷ்டராகிய எமது நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மக்கமாநகரின்கண் திருவவதாரம் புரிந்து இவ்வுலகத்தார் ஈடேறும்படி அந்த இஸ்லாமார்க்கத்தை என்றென்றைக்கும் அழியாமல் நின்று நிலவும்படி வெற்றிக்கொடி நாட்டினார்கள். இவ்வுலகில் இதுவரையில் இறைவனால் எழுப்பப்பட்ட எண்ணிறந்த கோடி மனிதர்களுள் மஹா தெய்வ பக்தியும் இறைவனுக்கு அடங்கி நடக்கும் பணிவும் சம்பூரணமாய் நிறையப்பெற்றுள்ள எம்மறைக்கும் தாயகம் எமது நாயகம் நபிகள் பெருமானாரவர்கள், இப்றாஹீம்நபியால் நிலை நிறுத்தப்பட்ட எல்லைக்கல்லாகிய "இறைவ

னுக்கு இணங்கி நடத்தல்'' என்னும் இஸ்லாமியக்கொள் கையை நன்கு விசாலிக்கச் செய்து சர்வலகுவாகவும் சர்வ சாதாரணமாகவும் யுக்திக்கும் சாஸ்திரங்களுக்கும் (Science) பொருத்தமாகவும் அழகும் வன்மையும் கம்பீரமும் அமையப்பண்ணி என்றென்றைக்கும் அழியாத வண்ண மாய் நிலைநிறுத்திய இஸ்லா மார்க்கந்தான் இன்றைக்கும் இவ்வுலகின் ஐந்து கண்டங்களிலும் 40 கோடிக்குமேற் பட்ட முஸ்லிம்களிடத்தில் நின்று நிலவுகின்றது.

அக்காலத்தில் இப்ராஹீம் நபியவர்கள் செய்துகாட் டிய வைபவத்தை இக்காலத்திலும் ஒரு வைதிகச்சடங் காக எம் முஸ்லிம் சகோதரர்கள் ஹஜ்ஜு மாதத்தில் கொ ண்டாடி வருகின்றனர். இது தான் பக்ரீத் என்றும் ஈதுல் அல்ஹா என்றும் சொல்லப்படுவது. ஏகநாயகக்கோள்கை யை நிலைநிறுத்துவதற்கு முதன் முதல் மனிதனால் செய்து காட்டப்பட்ட அறிகுறி நபிஇப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்து காட்டியதுதான். இதைத்தான் ஒரு பெரிய அடையாளமாக எல்லோரும் கொண்டாடவேண் டும்; இதனால்தான் இஸ்லா மார்க்கத்தில் இவ்விஷயம் மிகப்பெருமையோடு பாராட்டப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி அல்குர் ஆனில் பின்வருமாறு காண்கிறோம்:

"99 (இப்ராஹீம் நபி அலைஹிஸ்ஸலாம் அக்கினியி னின்றும் ஆரோக்கியத்துடன் வெளிப்பட்டு அந்தக் குபிர் நாட்டை விட்டு இறைவன் தமக்கிட்ட கட்டளைப்படி ஷா முக்கு (சீரியா நாட்டுக்கு) ப்பிரயாணம் செய்ய ஆயத்த மாகி), 'உறுதியாக நான் என் இறைவன் பால் போகிற வனாயிருக்கிறேன்; அவன் எனக்கு வழி காட்டுவான்,' என்றார்.

100 (பின்னர் அவர் பாதையைக்கடந்து பரிசுத்த பூமியை யடைந்தபோது), 'எனது இறைவனே, எனக்குச் சாதுவான ஒரு (புதல்) வனைத்தரல்வேண்டும்,' (என்றார்).

101 ஆதலின் (ஹாஜராவின் உதரத்தில் இஸ்மாயீல் என்ற) சாந்தகுணசீலரான ஓர் ஆண் குழந்தையை (அளிப்பதாக) அவருக்கு நாம் (அல்லாஹ்) நல்வாக்குச் சொன்னோம்.

102 பின்பு அவர் (இஸ்மாயீல், பிறந்து வளர்ந்து தம் தந்தையாகிய) அவரோடு விரைந்து செல்லத்தக்க (அல்லது முயற்சியில் அவருக்கு உதவத்தக்க) பருவத்தை அடைந்தபோது, (தந்தை மைந்தரை நோக்கி), 'எனதருமை மகனே, உறுதியாக என் சொர்ப்பனத்தில் நான் உன்னை அறுக்க(பலியிட)க்கண்டேன்; (உனது அபிப்பிராயத்தில்) நீ காண்பதென்ன? கண்டறி.;' என்றார். (அதற்கு மைந்தர்) 'என் தந்தையே, உமக்கு ஆக்ஞாபித்ததை நீர் செய்வீராக. இறைவனுக்கு இஷ்டமானால் என்னைப் பொறுமையுள்ளவர்களுள் ஒருவனைக் காண்பீர்,' என்றார்.

103 பின்பு இருவரும் (இறைவனது ஆக்ஞைக்கு) இணங்கி (ப்பலிகொடுப்பதற்காக) அவரை (மைந்தரை அவர் (பிதா) குப்புறக்கிடத்தின போது,

104 நாம் அவரை, 'ஓ இப்ராஹீமே!' என்று கூப்பிட்டுச் சொன்னதாவது:

105 'நீர்கண்ட சொர்ப்பனத்தை உறுதியாக உண்மையாக்கினீர்; நன்மை செய்பவருக்கு நிச்சயமாய் நாம் இவ்வாறு பலனைத்தருகிறோம்.'

106 உறுதியாக இது வெளிப்படையான ஒரு சோதனையாயிருக்கிறது.

107 இன்னும் நாம் அவருக்கு ஒருபெரிய பலியைப் பதிலாக்கினோம்.

108 இன்னும் பின்னவர்களில் (அவருக்கு நல்ல புகழாக) அதை நிலை நிறுத்தினோம்.

109 இப்ராஹீமுக்கு (நம்) கருணையுண்டாகுக.

110 நன்மை செய்பவருக்கு நாம் இவ்வாறு பலனளிக்கிறோம்.

111 அவர் (நம்பால்) நம்பிக்கைவைத்த நமதடியார்களுள் ஒருவராயிருக்கின்றார்.

112 இன்னும் சாதுக்களுள் ஒருவராய்த் தீர்க்கதரிசியாகும் இஸ்ஹாக்கை (ப்புத்திரனை யளிப்பதாக) அவருக்கு நாம் நல்வாக்குச் சொன்னோம்.

113 இன்னும் நாம் அவருக்கும் இஸ்ஹாக்குக்கும் வாழ்வு விருத்தியைக் கொடுத்தோம்; இன்னும் அவ்விருவரின் சந்ததிகளில் நன்மை செய்பவரும் (நம்புகிற விசுவாசியும்) உண்டு; தனக்குத்தானே பிரத்தியக்ஷமாய்க் கொடுமை புரியும் கொடியவனும் நம்பிக்கையற்ற (விசுவாசகாதகனும்) உண்டு"—அல் குர்ஆன் 37 : 99—113.

### உல்ஹிய்யாவின் விவரம்

ஹஜ்ஜுப் பெருநாளின் போது குர்பான் கொடுத்தற்கு வேண்டிய சட்டமாவது:—ஹஜ்ஜுமாதம் பிறை 10-வது தினத்தில் கிழக்கு வெளுத்தபின் ஜக்காத், பித்ராக் கொடுக்கத்தக்கவர்கள் மட்டும் உல்ஹிய்யா (அஃதாவது கிடாய் அறுத்து)க் கொடுக்கக் கடமைப் பட்டவரா

கின்றனர். தனக்காகவும் தன் சிறு பிள்ளைகளுக்காகவும் ஆளுக்கொரு கிடாய் விகிதம் கொடுத்தல் வேண்டும். ஆனல் ஒருவன் தனக்காக மட்டும் ஒரு கிடாய் அறுத்துக் கொடுத்து விடுவதுபோதும். பிறை 10-வது தினமாகிய பெருநாளன்று உல்ஹிய்யாகக் கொடுக்கத் தவறியவர்கள் அடுத்த இரண்டு தினங்களிலும் கொடுக்கலாம். முந்தின தினத்தில் கொடுப்பதே அதி சிலாக்கியம். 3-வது தினத்திலும் கொடுக்கத் தவறினல் ஆட்டின் கிரயத்தையாவது வாங்கியிருந்த ஆட்டையாவது தானம் செய்துவிடல் வேண்டும். சிறு பிள்ளை சீமானயிருந்தால் அவன் ஆரம்பத்திலிருந்து உல்ஹிய்யாக் கொடுத்தல்வேண்டும். பட்டணங்களில் உள்ளவர்கள் உல்ஹிய்யாவைப் பெருநாள் தொழுகைக்கு முன் அறுப்பது கூடாது; பட்டிக்காட்டிலுள்ளவர்கள் 10-ஆம் நாள் கிழக்கு வெளுத்தபின் அறுத்துக் கொடுக்கலாம். உல்ஹிய்யாக் கொடுக்கும் கிடாய் பெருங் கொம்புள்ளதாகவும் உறுப்புக்களில் குற்றம்குறையில்லாததாகவும் கண் பார்வையுள்ளதாகவும் அழகியதாகவும் பெரியதாகவும் கொழுத்ததாகவும் இருக்கும்படி தெரிந்தெடுத்துக் கொடுத்தல் வேண்டும். ஒரு கண் குருடானது இரு கண் குருடானது சொறிபிடித்தது மெலிந்தது நடக்க இயலாதது நொண்டியானது காது கண் கால் இவற்றில் மிகுதம் எடுபட்டுப்போனது பல்லில்லாதது இப்படிப்பட்ட கிடாயைக் குர்பான் கொடுப்பது கூடாது; ஆனல் மோழை விதையடித்தது பயித்தியம் பிடித்தது இப்படிப் பட்ட கிடாய்களைக் கொடுக்கலாம். குர்பான் கொடுக்கும் கிடாய் ஒருவருஷம் சென்றதா யிருத்தல் வேண்டும். உல்ஹிய்யா இறைச்சியைத் தானும் தின்னலாம்; சீமான்களு

க்கும் கொடுக்கலாம் ; ஆனால் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஏழைகளுக்குக் கொடுப்பது (முஸ்தஹப்பு) நன்மையே. கிடாயின் தோலைத் தானம் செய்து விடல் வேண்டும் ; அல்லது தனக்கு உபயோகமான பொருள்களாகச் செய்து உபயோகப்படுத்திக் கொள்ளலாம்; ஆனால் அத்தோலைக் கிரயத்துக்கு விற்பது கூடாது. அறுக்கத் தெரிந்தவரா யிருந்தால் உல்ஹிய்யாவைத் தன்கையாலறுப்பது மெத்த நலம் ; அறுக்கத்தெரியாதவர் பிறருக்கு அறுக்கும்படி உத்தரவு கொடுக்கலாம். அறுக்கும்போது தனக்காக ஆண்டவனுக்கு மனமாரக் கொடுப்பதை மனத்தில் நினைத்தல் வேண்டும். ஹஜ்ஜுப் பெருநாளன்று ஒரு வஸ்துவும் தின்னுமுன் உல்ஹிய்யாவின் இறைச்சியைத் தின்னுவது நலம். முதன் முதல் அதன் ஈரலிலிருந்து தின்னுவது ஸுன்னத்து.

இந்த முறை தெரிந்து எம் முஸ்லிம் சகோதரர்கள் தங்களுடைய குர்பானை முடித்துக் கொள்வார்களாக.

---

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.
நாம் இறைவனைப் புகழ்ந்து அவனது திருத்தூதர் மீதும்
வாழ்த்துக் கூறுகின்றேம்.

---

# குர்பானும் சற்குணமும்

## குர்ஆன் ஆயத்து

“34. (உங்களுக்கு முன் இவ்வுலகில் விசுவாசிகளாயிருந்து சென்றுபோன) ஒவ்வொரு ஜாதியாருக்கும் மிருக ஜாதியினின்றும் அவர்களுக்கு உணவாயளித்த பிராணியின் மீது அல்லாஹ்வுடைய திருநாமத்தை அவர்கள் ஓதுவதற்கே பலியிடுதலை ஆக்கினேம். பின்னர் உங்களிறைவனும் (அவர்களிறைவனும்) ஒரே இறைவனயிருக்கிறன்; ஆதலால் அவனுக்கே நீங்கள் கீழ்ப்படியுங்கள்.

35. இன்னும் அல்லாஹ் என்று (இறைவனை ஞாபகப்படுத்திச்) சொல்லும்போது எவர்களுடைய ஹிருதயங்கள் அச்சத்தையடையுமோ அந்தத் தாழ்ச்சியுள்ள வழிபடுவோருக்கும், இன்னும் தம்மை அணுகிய துன்பங்களின் மீது பொறுமை செய்தவர்களுக்கும், தொழுகையை (அந்த அந்த நேரத்தில்) நிலைப்படுத்தினவர்களுக்கும், இன்னும் நாம் அவர்களுக்குத் தந்ததில் (தான தர்மம் முதலிய) செலவு செய்பவருக்கும் நல்வாக்குச் சொல்வீராக.

36. இன்னும் ஒட்டகங்களை உங்களுக்கு அல்லாஹ்வுடைய (மார்க்கத்தின்) அடையாளங்களுள் ஒன்ருக

அமைத்தோம். அவற்றில் உங்களுக்கு (இகபாரத்துக்குரிய) நன்மை (ஆகியலாபம்) இருக்கின்றது. ஆகவே அதன் இடது முன்தாள் தளையப்பட்டு முத்தாள் மீது அது நிற்கும் சமயம் (அதைப் பலியிட ஆயுதப் பிரயோகம் செய்யும்போது) அதன்மேல் அல்லாஹ்வின் திருநாமத்தை ஓதுங்கள். பின்னர் அதன் பாரிசம் (தரையிற் சாய்ந்து) விழுந்தால் (விழுந்த) பின்னர், (உங்களுக்கு இஷ்டமானால்) அதனின்றும் நீங்கள் புசியுங்கள்; இன்னும் (பிறரிடம் யாசகம் செய்யாமல் தன்பால் உள்ளது போதுமென்று) திருப்தியடைந்திருப்பவனுக்கும் யாசகனுக்கும் புசிக்கக்கொடுங்கள். நீங்கள் நன்றி யறிந்தவர்களாயிருக்கக் கூடுமென்று (நீங்கள் ஏறுவதற்கும் வேறு பயன்களை அடைவதற்கும்) இப்படியே அவற்றை உங்களுக்கு வசப்படுத்தினோம்.

37. அவற்றின் மாம்சங்களும் அவற்றின் இரத்தங்களும் அல்லாஹ்வைப் பெற்றுக் கொள்ளவே மாட்டா; ஆனால் உங்களுடைய பயபக்தியே (சன்மார்க்க நடையே) அவனைச் சேரும். உங்களுக்கு வழிகாட்டியது பற்றி அல்லாஹ்வை நீங்கள் மகிமைப் படுத்தும் பொருட்டே அவற்றை உங்களுக்கு இப்படி வசப்படுத்தினான். நன்மை செய்பவருக்கு நல்வாக்குச் சொல்வீராக.

38. (இறைவனுக்கு இணைவைத்துப் பூஜிப்பவர் செய்யும் இம்சையான துன்பங்களை) அல்லாஹ் (தன்பால்) நம்பிக்கை வைத்தவர் (விசுவாசி) களினின்றும் நிச்சயமாக நிவர்த்தி செய்வான். (அவனது) நன்றி மறந்த எந்த வஞ்சகரையும் அல்லாஹ் நேசிப்பதேயில்லை"—அல் குர்ஆன், 22: 34 முதல் 38 வரையில்.

170241

## நபி இஸ்மாயீலின் *குர்பான்

ஒவ்வொரு வருஷத்திலும் ஹஜ்ஜு மாதம் பிறை 10 முதல் 12உ வரையில் உல்ஹிய்யாவுக் குரிய காலமாகின்றது. அப்பொழுது இஸ்லா மார்க்கப்படி பலி கொடுத்தல் வேண்டும். பலி கொடுத்தலென்பது ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு ஜாதியாரிடத்திலும் அதிபக்தியோடு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. திருமக்கமா நகரத்திலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலிருக்கும் மினா என்னும் பேர்போன வட்டப்பாறையில்தான் சுமார் 5000 வருஷங்களுக்கு முன் ஆண்டவனின் அடியவரான நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் ஏக புதல்வரான இஸ்மாயீல்* என்பவரைப் பலிகொடுக்கப் போனார்கள். உலகப் பற்றுக்கும் தெய்வபக்திக்கும் குறுக்காயிருந்த தங்கள் புதல்வரை இறைவனுக்குப் பலிகொடுத்துவிட்டால் அதன் பின் தெய்வபக்திக்கு ஒன்றும் இடையூறு விளையாதென்று கருதினார்கள். இப்ராஹீம் நபியவர்களின் †உலகப்பற்றுக்குக் காரணமாகிய ஒரே ஆண் மகவை ஆண்டவனுக்குப் பலிகொடுத்து விட்டால் அதன் பின் உலகப்பற்றுக்கு இடமில்லாமலே தங்கள் தெய்வபக்தி நடைபெறுமென்று கருதினார்கள். தெய்வத்தினிடத்தில் கொண்ட பக்தியால் இவ்வாறு எண்ணினார்கள். பக்தி என்பதென்ன? பக்தியென்பது பக்தனுடைய மனம் வாக்குக் காயங்களெல்

---

* இவர்களுக்கு இறைவனது கருணை தழைத்தோங்குக.

† உலகப்பற்று என்பது இஸ்லாமார்க்கத்தில் ஒரு பாபமான காரியமன்று. ஆதலின் இப்ராஹீம் நபியவர்களுக்கு மைந்தர்பால் இருந்த பற்று ஒரு சிறுபாபமென்றாவது பெரும்பாபமென்றாவது மயங்கி விடாதீர்கள்

லாம் ஒரே வண்ணமாய் இறைவனிடம் வழி படுதலாகும். எல்லாரிடத்திலும் இப்படிப்பட்டஉண்மையானபக்தியைக் காண்பது அரிதாகும் ; ஒவ்வொருவருடைய மனமும் இத ற்கு வேண்டிய பக்குவமாயிராது. நம்மிடத்தில் உண்மை யான பக்தி இருக்கும் பக்ஷத்தில் நம்மால் நன்கு மதிக்கத் தக்க நமக்கு அத்தியந்த பிரியமான அரிய வஸ்துக் களை யும் அப்பக்தியின் காரணமாகக் கொடுத்துவிட நாம் ஆய த்த மாயிருத்தல்வேண்டும். பக்தியில் லக்ஷியம் வந்தபின் பிறகு ஒன்றிலும் லக்ஷியம் இருத்தல் கூடாது. இவ்வுல கில் நம்முடைய உயிரையும் நம் புதல்வர்களின் உயிரை யும் மிகவிலையுயர்ந்ததாகக் கொண்டாடுகிறோம். அநேகர் தம் உயிரைக்காணத் தம் மக்களுயிரைச் சிலாக்கியமா யெண்ணுகின்றனர். இக்காரணத்தால் தான் ஆதிகாலத் தில் பக்தியில் சிறந்தவர்கள் தங்களுடைய சொந்த உயி ரையும் தம் மக்களின் உயிரையும் பக்தியின் காரணமாகத் தெய்வங்களுக்குப் (?) பலியிட்டுவந்தனர். தெய்வத்தினி டத்தில் வைத்த பக்தி மேலீட்டால் தமக்கு அருமையா யிருந்த தம் உயிரையும் தம் புதல்வர் உயிரையும் திரணமா யெண்ணினார்கள். நம்முயிரையும் நம் புதல்வர் உயிரையும் ஒப்பிடும் பக்ஷத்தில் நம்முயிரைக் காண நம் புதல்வர் உயி ரே சிறந்ததென்னலாம். ஏனெனின், இவ்வுலகில் நமக்குத் தள்ளாமை வரும்போது ஊன்றுகோல் போலிருப்பதனா லும் நமக்குப்பின் நம்முடைய குடும்பம் விளங்கும்படி சந்ததியாய் முளைப்பதாலும் புதல்வரே நம்மினும் சிறந்த வராகின்றனர். இப்படிப்பட்ட அருமைவாய்ந்த ஏக புதல் வரைப் பலி கொடுக்கத்தான் இப்ராஹீம் நபி இணங்கி னார்கள். தங்களுக்கும் தம் இறைவனுக்கும் இடையில்

அருமையான அந்த ஆண் குழந்தை கூட இருக்கத்தே வையில்லை யென்று கருதினார்கள். நபியவர்கள் தங்களுடைய இணையற்ற ஏக நாயகனிடம் கொண்ட பக்தி மேலீட்டுக்கு இடையூறாக இருந்த சிறிது உலகப்பற்றிற்குக் காரணம் தங்களுடைய இஸ்மாயீ லெனக்கண்டார்கள். இதனால் ஆண்டவனருளியது போல் அக்குழந்தையை அவனுக்குக் குர்பான் கொடுத்துவிட்டால் தங்களுடைய பக்தி ஒரு சிறிதும் உலகப்பற்றில்லாமல் எல்லாம் சம்பூரணமாய் விடுமென்று இறைவன்பால் முழு நம்பிக்கையும் வைத்தார்கள். இப்ராஹீம் நபியவர்கள் தங்களின் ஒரே செல்வப் புதல்வரின் தலையைத் துணிக்க மனந்துணிந்தபோது புத்திரவாத்ஸல்யத்தால் உண்டாகக் கூடிய எல்லாவித உருக்கத்தையும் அபிமானத்தையும் அனுதாபத்தையும் நபியவர்கள் முதன் முதல் ஒழித்திருத்தல் வேண்டும். தங்களுக்கும் புதல் வருக்குமுள்ள எல்லாவகைப் பற்றுக்களையும் நீக்கியபின்தான் பலிமேடைக்கு இருவரும் போயிருப்பார்கள். தான் தந்தையென்றும் இஸ்மாயீல் (அலை) மைந்தரென்றும் இருந்த கரிசனத்தை அடியோடு ஒழித்திருப்பார்கள். அவர்களுடைய மனம் ஆண்டவனிடம் ஈடுபட்டுச் சுத்த சூனியமாயிருந்திருக்கும். ஆண்டவன்பால் அடைக்கலம் செய்யப்போகும் குழந்தையைத் தங்களுடையதென்று சொந்தம் பாராட்டி யிருக்கமாட்டார்கள். ஆண்டவன் விரும்பிக்கேட்ட குழந்தையை அவனுடைய பொருளென்றே யெண்ணினார்கள். உலகப்பற்றை அடியோடொழித்து இத்தகைய பக்தி பரிபூரணமான மனத்துடன் இப்ராஹீம் நபியவர்கள், "நீ உன் இறைவனுடைய நாமத்தை நினைப்பாயாக;

இன்னும் பற்றெழித்து அவன் பக்கல் வருவாயாக," என்று குர்ஆன் ஷரீபில் வருவதற்கிணங்கவும், "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு," என்றொரு பொய்யில் புலவர் சொல்வதற்கிணங்கவும் தங்களுடைய அருமைப் புதல்வரைப் பலிபீடத்தில் குப்புறக் கிடத்தினார்கள். ஆ, ஹா, என்ன ஆச்சரியம்! இப்ராஹீம் நபியவர்கள் (இவர்களுக்கு இறைவனே கருணையைப் பெருக்குவானாக) சோதிக்கப்பட்டார்கள்; அச்சோதனையில் அவர்கள் குறைந்த பக்தராய்க் காணப்படவில்லை; நிறைந்த பக்தராகவே காணப்பட்டார்கள். அவர்கள் இறைவனுடைய பாதையில் முழு மனமுடையவர்களென்பது வெளியாயிற்று. அவர்களடைந்திருந்த பரிபக்குவம் சம்பூரணமானதாய்க் காணப்பட்டது. உலகப்பற்றென்பது ஒரு சிறிதும் அவர்களுக்கில்லையென்பது உலகறிய நன்கு நிரூபிக்கப்பட்டது. இனி அவர்களுடைய செல்வப் புதல்வரை ஏன் வீணே கொல்லவேண்டும்? இப்ராஹீம் நபியின் ஏகநாயகக் கொள்கையையும் அவர்களுடைய பக்தி மேலீட்டையும் உலகத்தவருக்கு எண்பிக்கவேண்டு மென்பதே எம் இறைவனது நோக்கமாதலின் நபியவர்கள் இவ்வளவு உன்னதப் பரிபக்குவமடைந்தபின் நரபலியும் அவசியமோ? நாம் இல்லையென்றே சொல்வோம். இறைவனது நோக்கம் பூர்த்தியாயிற்று; உலகப் பற்றை யெல்லாம் விட்டு நபியவர்கள் உன்னதமடைந்து விட்டார்கள். அவர்களுடைய மனத்தில் இவ்வுலகப் பற்றுச் சிறிதும் இல்லையென எமது இறைவன் நமக்குத்தெரிவித்து விட்டான். பிறகு எதற்காக ஒருயிரைக் கொல்ல வேண்டும்? அதற்காகத்தான் ஆண்டவனுடைய ஓர் அத்

புதம் நிகழ்ந்தது ; அதனால் நபி இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தலை தப்பிற்று. அன்று முதல்தான் நரபலிக்கு ஈடாக மிருகபலி ஏற்பட்டது.

---

## பலியின் தாத்பரியமென்ன ?

இத்தகைய அருமையான பலியை மனிதருள் சிலவர்க்கத்தார் தங்களுடைய அறியாமையாலும் மூடபக்தியாலும் கௌரவஹானியடையும்படி செய்து விட்டனர். பலியின் காரணம் இன்னதென்பதையும் ஏன் அதை நாம் கொண்டாடவேண்டுமென்பதையும் அவர்கள் தப்பாக எண்ணுகின்றனர். மூடபக்தி வந்து பலியின் உண்மையை மூடிவிட்டது. பக்தியின் பரிபக்குவத்தை அளப்பதற்கொரு கருவியாயிருந்த பலியை அக்கிரமத்தையும் அநீதியையும் பாபத்தையும் போக்கடிக்கத்தக்க பிராயச்சித்தமெனக்கொள்ள ஆரம்பித்து விட்டனர். என்ன அநியாயம்! என்ன கொள்ளை !! பக்தியின் முதிர்ச்சியைக் காட்டிய பலி பாபத்தைப் போக்கும் பரிகாரமென எண்ணப்பட்டுவிட்டதே! இதுவுமோர் விந்தைதான்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹுத்தஆலாவுக்கு நரபலியாலுண்டாகும் உயிர்வதையிலும் இரத்தக்கவுலிலும் அதிகப் பிரியமுண்டாகின்றதென்று எண்ணுகிறீர்களோ? அஃது ஒருபோதும் இல்லை. அன்புக்கோர் உறைவிடமும் அருளுக்கோர் தாயகமுமாகிய கிருபாமூர்த்திக்குப் பலியுண்ட பிராணிகளின் இரத்தமும் மாம்சமும் அதிருசியாயிருக்குமென்று சொல்ல முடியுமோ? அறியாமையின் காரணமாயுண்டான மூடபக்தியின் விசேஷத்தால் தான் பலியுண்ட பிராணிகளும் மனி

தர்களும் மனிதருடைய பாபத்தைப்போக்கி இறைவனி டம் மகிழ்ச்சியை யுண்டுபண்ணுகின்றன வென்று தவறாக மாந்தருள் சிலர் எண்ண ஆரம்பித்து விட்டனர். "இரத் தப்பழி யில்லாமல் இறைவனுடைய கோபத்தை மட்டுப் படுத்துவது முடியாது; இரத்தத்தைச் சிந்தினால்தான் இறைவனுடைய கோபம் தணியும்; நம்முடைய பாபச் செயல்களால் இறைவனுக்கு நாம் அதிகம் கோபத்தை விளைவித்திருக்கிறோம்; நம்முடைய பாபத்தாலும் நம் முன்னோர்களின் பாபத்தாலும் ஆண்டவன் அளவில்லாக் கோபத்தைக் கொண்டிருக்கிறான்; இப்படிப்பட்ட கோ பத்தைத் தணிப்பதெப்படி? இதைத்தணிக்க நாம் பலி கொடுத்தல் வேண்டும்; இன்றேல் தண்டனை யடைந்தே தீரவேண்டும்." இவ்வாறு சிலமனிதர் தர்க்கம் செய்கின்ற னர். இப்படித்தான் பலியின் உண்மையான தன்மையை இழிவுசெய்து விட்டனர். தெய்வத்தின் கோபத்தைத் தணிப்பதற்கென்றே அடிக்கடி சிலர் ஆடு கோழி மாடு முத லியவற்றைப் பலிகொடுக்கின்றனர். பாபத்துக்குப் பழி வாங்காமல் இறைவன் மனிதர்களை மன்னிப்பதில்லையென் றே அவர்கள் தப்பாக எண்ணுகின்றனர்.

ஆ! என்னமடமை!! இப்படிப்பட்ட எண்ணத்துடன் பலியிடுபவர்கள் கடவுளைப்பற்றி எவ்வளவு இழிவாக எண்ணுகின்றனர்? மனிதர்களுக்குள் ஒருவன் செய்த குற்றத்தை மற்றொருவன் ஈடில்லாமல் மன்னிக்க மாட்டே னென்பானாயின் அம்மனிதனைப்பற்றி எவ்வளவோ கேவல மாய் எண்ணுகிறோம். ஈடில்லாமல் மன்னிக்கும் பக்ஷத் தில் அப்படிப்பட்ட மனிதனை உத்தமன் என்கின்றோம். பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்றும் கொலைக்குக்கொலை

செய்தே தீரவேண்டு மென்றும் இரத்தப்பழி யில்லாமல் சமாதானம் அடையமாட்டே னென்றும் ஒரு மனிதன் சொல்வானுயின் அவனை என்னென்று மதிப்பீர்கள்? அவன் மிருகத்தினும் தாழ்ந்தவனென்றே சொல்லத் துணி வீர்கள். மனிதனைப்பற்றி இவ்வாறு நாம் தீர்மானம் செய்யத் தயாரா யிருக்கும்போது தெய்வத்தைப்பற்றி மட்டும் சிலர் சொல்வதென்ன? உயிருக்குயிர் கூடப் பழி கேளாமல் கேவலம் பாபத்துக்கு உயிரைப் பலிகேட்பது தெய்வ நியாயத்துக்குப் பொருத்தமா யிருக்குமென் கின்றனர், அக்கொள்கைக்காரர்! இது நம்முடைய சா தாரண அறிவுக்கும் எவ்வளவோ முரண்பாடா யிருக் கிறது! ஆனால் ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு ஜாதியினரும் தம் தம் தெய்வம் மட்டும் கிருபாமூர்த்தி யென்றும் காருண்யக் கடலென்றும் இதரர்களின் தெய் வம் அப்படியல்லவென்றும் வாதிக்கின்றனர்; இப்படிப் பட்ட தெய்வத்துக்குத் தான் இரத்தபலி யில்லாமல் கோபசாந்தி யுண்டாவதில்லை யென்கின்றனர். இப்படி யெல்லாம் மனோராஜ்யம் செய்வதால் தெய்வத்தின் பெரு மையை நாம் சிறுமைசெய்தவ ராகவே ஆகின்றோம். ஆண்டவனுக்கு அபசாரம் செய்தவராக ஆகின்றோமே யொழிய அவனுக்கு நம்முடைய எண்ணத்தால் ஒருபோ தும் பெருமையேயில்லை. இறைவனுடைய தன்மையைப் பற்றி வேதம் முறையிடுகின்றதற்கு நேர் முரணுகின்றது நாம் பலியின் தாத்பரியத்தை யுணராதிருப்பது; மனிதரு டைய பாபத்தைப் போக்குவதற்காக ஏற்பட்டதன்று பலி; ஒருபோதும் இரத்தபலியில் இறைவனுக்குச் சந்து ஷ்டி யிருந்ததில்லை.

ஆனால் இஸ்லா மார்க்கத்தில் எமது திருமறையான அல் குர்ஆன் பலி கொடுப்பதை ஆமோதித்திருக்கிறது; நாம் முன்னர் சொன்னபடி "அவற்றின் மாம்சங்களும் அவற்றின் இரத்தங்களும் அல்லாஹ்வைப் பெற்றுக்கொள்ளவே மாட்டா; ஆனால் உங்களுடைய பயபக்தியே (சன்மார்க்க நடையே) அவனைச் சேரும்," என்று அவ்வேதம் அறைகின்றதை நோக்குங்கால் நம்முடைய நன்னெறித்தன்மையும் பாபத்தினின்றுந் தப்புவதுமேஆண்டவனுக்குப் பிரியமுள்ள செயல்களென்றும் பிராணிகளின் இரத்தமும் மாம்சமுமல்ல அவனுக்கு விருப்பத்தைத் தரத்தக்கவையென்றும் நன்கறிந்து கொள்ளுகிறோம். மாம்சத்தாலும் இரத்தத்தாலும் இறைவன் திருப்தியடைந்து நமக்கு நன்மையைச் செய்கிறானென்று எண்ணுவதே பலியின் தாத்பரியத்தை முரண்படச் செய்துவிடுகின்றது. "இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன பிராணியைப் பலி கொடு; உனக்கு இன்ன இன்ன காரியம் சித்திக்கும்; இன்ன இன்ன பிணியும் பாபமும் தொலையும்," என்று அறியாதார் சொல்வதுதான் குர்பானின் உண்மையை மாற்றி விடுகின்றது. இப்படி எண்ணுவதால் இறைவனுடைய தன்மையைச் சிறிதும் உணராத பேதைகளாகின்றோம். என்ன அறியாமை! என்ன கேவலம்!! குர்பானின் கருத்து எவ்வளவு உன்னதப் பதவியிலிருந்து தாழ்மையடையும்படி யாய்விட்டது சிலரின் அறிவின்மையால்!!! சுய நலமில்லாமல் எல்லாம் சுத்த பரிபூரணக்கடவுளுக்கென்று நம்பி அவனது கட்டளைக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடந்து சன்மார்க்க சாகரத்தை யடைவதற்காக ஏற்பட்ட குர்பானை அவர்கள், பாபத்துக்கொரு பிராயச்

சித்தமாகவும் இறைவனது கோபத்தைத் தணிக்குமொரு ஈடாகவும் மாற்றி விட்டனர்.

---

## ஜீவகாருண்யம்!

திருக் குர்ஆனில் சொல்வது போல் சன்மார்க்கத்துக்கும் குர்பானுக்கும் ஏற்பட்டிருக்கும் காரண காரியப் பொருத்தம் இன்னதென்பதை ஆராயப்புகுமுன் "ஜீவகாருண்யம்" என்னும் பேரை வைத்துக்கொண்டு சில தத்துவிகள் பலியிடுவதைக் குறித்துச் செய்யும் ஆக்ஷேபத்தைச் சிறிது ஆராய்வோம்.

"மனிதனைப்போல் ஆடும், மாடும், ஒட்டகமும் ஜீவப்பிராணிகளல்லவா? கடவுளால் படைக்கப்பட்ட பிராணிகளைக் கொல்வது பாபத்தொழில் அல்லவா? ஜீவகாருண்யமுள்ளவரென்று சொல்லும் கடவுளுக்காக அவர் படைத்த ஜீவன்களையே பலி கொடுக்கலாமா? ஜீவவதை மஹா கொடிய செய்கையல்லவா? உலகத்திலுள்ள அநேக உயிர்களைக் கொல்வதால் பிராணிகளின் தொகை குறைந்துகொண்டே போகின்றதல்லவா? இஃதோர் அநீதியல்லவா? குர்பான் கொடுக்கும் தினத்தில் வருஷமொன்றுக்கு எண்ணிறந்த உயிர்ப்பிராணிகள் உலகமுழுதும் கொல்லப்படுகின்றனவே; இது பாபத்துக்கெல்லாம் மிகப்பெரிய பாபமல்லவா? எத்தனை உயிர்ச் சேதம்! எத்தனை நஷ்டம்!! எத்தனை பாபம்!!!" என்று "ஜீவகாருண்ய" கோஷ்டியார் பெருங்கோஷ்டம் செய்கின்றனர். நேர்த்தியான தர்க்கம் தான் அவர்கள் செய்வது! ஆனால் தாத்பரிய பாகத்தில் அவர்கள் தவறி விட்டனர் என்றே நாம் சொல்ல

நேரிடுகின்றது. "ஜீவன் என்பதென்ன?" என்னும் வினுவுக்கே முதலில் அவர்கள் சமாதானம் சொல்லமுடியாது. "ஜீவன்" என்பது இன்னதென்று தீர்மானம் செய்வது முடியாதபோது "ஜீவகாருண்யம்" என்பதும் அப்படியே அர்த்த புஷ்டியில்லாமல் வற்றிப்போகின்றது. மனிதவர்க்கத்தினின்றும் ஏனைய பிராணிவர்க்கத்தைப் பிரிக்கப் புகுந்தால் இடையில் சில பிராணிகள் காணப்படுகின்றன; இவை மனிதவர்க்கமா அல்லது வேறு பிராணிவர்க்கமா வென்று தீர்மானிக்க முடியாமலிருக்கின்றன. இவ்வாறே பிராணிவர்க்கத்தையும் தாவர வர்க்கத்தையும் பிரிக்கப் புகுந்தால் இடையில் சில வஸ்துக்கள் பிராணிகள் தாமென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாமலும், அல்லது தாவர வஸ்துக்கள் தாமென்று சொல்லமுடியாமலுமிருக்கின்றன. இன்னும் இப்படியே தாவர வர்க்கத்தையும் தாதுவர்க்கத்தையும் பாகு பாடு செய்ய எத்தனித்தால் இடையில் சில பொருள்கள் இன்ன வர்க்கத்தைச் சேர்ந்தனவென்று சொல்ல முடியாமலிருக்கின்றன. ஆகவே இன்னவஸ்துவில் தான்ஜீவன் இருக்கிறது, இன்ன வஸ்துவில் இல்லை என்று தீர்மானம் செய்வது முடியாத காரியமாயிருக்கிறது. இது சாஸ்திரக்காரர்கள் (Scientists) கண்டு பிடித்திருக்கும் உண்மையாகும். "ஆடும் கோழியும் தாஞ ஜீவன்கள்? அல்லது வழுதுணங்காயிலும் வாழைக்காயிலும் ஜீவனுண்டா?" என்று கேட்கப்புகின் "ஜீவகாருண்ய" கக்ஷிக்காரர் தக்க சமாதானம் சொல்வதில்லை. அவரைக்காயிலும் ஆவியிருக்கும்போது ஆட்டை யறுப்பதுதான் ஜீவவதை என்கின்றனர் அக்கக்ஷிக்காரர்கள். இப்படியே நோக்குங்கால் கொதிக்கவைத்த உருளைக்கிழங்குக்கும் கோழி முட்

டைக்கும் என்ன வித்தியாசம் அவர்களுக்குப் புலப்படுகின்றதென்று எமக்குப் புலப்படவில்லை. "ஜீவன்" என்பது இன்னதென வரையறுத்து லக்ஷணிக்க அவர்களுக்கு முடியாதபோது "ஜீவகாருண்யம்" இன்னதென்று உணர்ந்துகொள்ள எம்மால் முடியவில்லை. இன்னும், பசுவின் பால் அதன் இரத்தத்தினின்றும் மாறிய பொருளன்றோ? ஆட்டின் ஸூப்பைக்காண மாட்டின்பால் எப்படி ஜீவகாருண்யப் பொருளாகின்றது? மாம்சபோஜனம் செய்யாத மனிதர்கள் முஸ்லிம்களைப் பரிகசம் செய்வது ஒரு பக்கல் இருக்கட்டும். இறைவன் பேரைச்சொல்லாமல் உயிரைப் போக்கிய பிராணிகளின் மாம்சத்தையும் தாமே இறந்துபோன பிராணிகளின் மாம்சத்தையும் தாராளமாய்த் தின்பவரும் முஸ்லிம்களை மாம்சபக்ஷணிகளென்று பரிகசம் செய்கின்றனரே! இதுதான் விந்தையிலும் விந்தை!! "அவன் கெட்டான் குடியன்; எனக்கு மட்டும் ஒரு டிராம்போடு" என்று சொல்வதைப்போ லிருக்கிறது. இது நிற்க.

"கொடுமை," "கொலை," "பாதகம்," "காருண்யம்," "இரக்கம்," "தயை" முதலிய பதங்களைத் தனியே வைத்துக்கொண்டு முஸ்லிம்கள் ஆடு மாடு பலிகொடுத்தல் ஜீவவதை யாகுமென்று சொல்வது பொருந்தாது. செய்பவருடைய மனோபாவத்துக்குத் தக்கபடி செய்தொழிலின் பலாபலனும் சித்திக்கும். ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யும்போது அவன் செய்கையை மட்டும் எடுத்துப் பரிசீலனை செய்து அவனைக் குற்றவாளியென்று தீர்மானம் செய்வது தர்க்க விரோதமாகும்; செய்தவனுடைய மனோபாவத்தையும் கண்டறிந்து அவனது செய்கை தீயதென்

றும் நல்லதென்றும் முடிவுகட்டவேண்டும். இப்போது நவீன கால சாஸ்திரிகள் (Modern Scientists) மனித வுடம்புக்கு மாம்சபோஜனம் அவசியமென்று கண்டு பிடித்து முடிவு கட்டிவிட்டனர். மனிதர்கள் இப்பூவுலகின் ஐந்து கண்டங்களிலும் வசிக்கவேண்டுமாயின் மாம்ச போஜனமில்லாமல் ஜீவிக்கமுடியாது; சில தேசங்களில் ஒரு நாழிகைகூட உயிர் வாழ்வது முடியாமற்போகும், மாம்ச போஜனம் இல்லாவிடின். மனிதர்களின் வாயில் "நாய்ப் பல்" (அஃதாவது சிங்கப்பல் அல்லது முடிப்பல்) என்று 4 பற்களுண்டு. மாம்ச போஜனம் செய்யும் எல்லா மிருகங்களின் வாயிலும் இந்த "நாய்ப்பல்" உண்டு. சாக பதார்த்தங்களைத் தின்று ஜீவிக்கும் மிருகங்களுக்கு முடிப் பல் கிடையாது; மாம்சத்தை நன்றாகக் கிழித்து நையமென்று தின்பதற்கென்றே "நாய்ப்பல்" அமைக்கப்பட்டிருக்கிறது; இப்பல் மனிதனுக்கும் அமைந்திருக்கிறது; இதன் காரணம் நாமும் மாம்சம் தின்னக்கூடியவரென்பது தான். உலகில் மாம்சம் தின்னாத ஜாதியார் எப்போதுமிருந்ததில்லை. இப்போது சாக பதார்த்தத்தை மட்டும் தின்றுவரும் "சைவச்சாப்பாட்டுக்கார"ரின் வேதங்களையும் அவர்களுடைய மூதாதையரின் சரித்திரங்களையும் படிக்கப்புகின் அவர்கள் செத்த நாயின் இறைச்சியையும் தேவர்களுக்கு ஆவாகனம் செய்ததாய்க் காண்கின்றோம். தங்களுடைய வேதங்களையும் மூதாதையரின் கொள்கைகளையும் மறந்து விட்டு "ஒரு தலைமுறைச் சைவம், இரு தலைமுறைச் சைவம், முத்தலைமுறைச் சைவத்தால்" முஸ்லிம்களை மட்டும் மாம்ச பக்ஷணிகளென்று உதாசினம் செய்கின்றனர். வேண்டுமாயின் ஒருவர், இருவர், 10 பேர்,

100 பேர், 1000 பேர், 10000 பேர், லக்ஷம்பேர், ஒரு கோடிப்பேர் "சைவச்சாப்பாட்டு"டன் இந்தியாவின் சில பாகங்களில் வாழலாம். இத்தகைய "சைவச்சாப்பாட்டு" டன் போலண்டிலும் ஹாலண்டிலும் தென்பூ முனையிலும் வடபூ முனையிலும் மனிதர்கள் ஜீவித்தல் முடியுமோ வென்று அவர்கள் நன்கு நோக்குவார்களாக. இவ்வுலகில் எக்காலத்துக்கும் எத்தேசத்துக்கும் பொருந்தும்படி "மரக்கறிச் சாப்பாட்டை" அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர முடியுமோவென்று யோசியுங்கள். சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள சில ஜில்லாக்களில் வேண்டுமாயின் "சைவபோஜனம்" செய்வது எளிதாயிருக்கலாம்; இதனால் உலகமே இதுதான் என்று எண்ணி விடவேண்டாம். "ஐஸ்லாந்து" என்னும் பனிக்கட்டிப் பிரதேசத்திலும் மனிதர்களுண்டு; அங்கே பச்சைமீனன்றி வேறொன்றும் அவர்களுக்குக் கிட்டாது; அவர்கள் எப்படி, "சைவபோஜனம்" செய்வது? நண்பர்காள்! உங்களுடைய சித்தாந்தம் உலகத்துக் கெல்லாம் பொருந்துமோ வென்று சற்று நிதானித்து அதன்பின் யான் சொல்வது முரணுயின் முஸ்லிம்களை நீங்கள் ஏளனம் செய்யலாம்.

---

## குர் ஆனும் குர் பானும்

சகோதரர்காள்! மனிதனுடைய தேகத்துக்கு இன்றியமையாதது மாம்சபோஜன மாயின், அது சாதாரண "மரக்கறி"களைக் காணச் சிலாக்கியமான உணவாயின், சாதாரண உணவுகளைக்காண அம்மாம்சபோஜனம் விலையுயர்ந்த தாயின் ஏனையவற்றைக்காண அது நேர்த்தியான தாயின், அப்படிப்பட்ட ஆகாரத்தை நாமெல்லாம் உண்

பதுபோல் நம்முடைய சகோதரர்களான ஏழை மனிதர்களையும் ஒருமுறை உண்ணச்செய்வது தருமத்துள் சிறந்த தருமமன்றோ? நாமெல்லாம் ஒவ்வொருநாளும் விலையுயர்ந்த மாம்சபோஜனம் செய்யும்போது ஆண்டுக் கொருமுறையேனும் நம் ஏழைச் சகோதரர்களை அப்படிப்பட்ட ஆகாரம் செய்யும்படி உதவிபுரிய வேண்டாமா? "என் வீட்டுக்கு நீ வந்தால் என்ன கொண்டுவருகிறை? உன் வீட்டுக்கு நான் வந்தால் என்ன தருகிறை?" என்று ஏழைகளுடன் வாதிக்கலாமா? நாம் தினந்தினம் தின்னும் ருசியுள்ள பதார்த்தத்தை நம் ஏழைச் சகோதரரும் தின்னும்படி செய்வதன்றோ தர்மத்தின் லக்ஷணம்? இதைத்தான் அல்லாஹுத் தஆலா குர்ஆன் ஷரீபில், "ஆகவே அதன் இடது முன்தாள் தளையப்பட்டு முத்தாள் மீது அது நிற்கும் சமயம் (அதைப் பலியிட ஆயுதப் பிரயோகம் செய்யும்போது) அதன் மேல் அல்லாஹ்வின் திருநாமத்தை ஓதுங்கள். பின்னர் அதன் பாரிசம் (தரையிற் சாய்ந்து) விழுந்தால் (விழுந்த) பின்னர் (உங்களுக்கு இஷ்டமானால்) அதினின்றும் நீங்கள் புசியுங்கள்; இன்னும் (பிறரிடம் யாசகம் செய்யாமல் தன்பாலுள்ளது போதுமென்று) திருப்தியடைந் திருப்பவனுக்கும், யாசகனுக்கும் புசிக்கக்கொடுங்கள்," என்றிப்படிச் சொல்லியிருக்கிறுன். ஏழைகளுக்கும் யாசகர்களுக்கும் உதவி செய்வதை நஷ்டம் செய்வதாய்ச் சொல்லலாமா? தினந்தினம் நீங்கள் ஷட்ரஸத்தோடு உண்டு உல்லாசமாயிருப்பது போல் உம்முடைய ஏழைச் சகோதரர்களையும் ஆண்டுக் கொருமுறை உம்முடைய சொந்தச் செலவில் உல்லாசமடையும்படி செய்வதை அகிருத்தியம் என்னலாமா? அநியாயம் என்னலாமா?

ஆனால் "பிராணிகளைக் குர்பான் கொடுக்கும்போது அவற்றின் ஆவியைப் போக்குவது மஹா கொடுந்தொழிலல்லவா?" என்று நீங்கள் கேட்கலாம்; இப்படிப்பட்ட கொடுமையும் துன்பமும் உயிர்ப் பிராணிகளுக்குக் கொடுக்கலாமா? உண்மைதான். பலிகொடுக்கும்போது அவற்றிற்கு அதிக துன்பந்தான் உண்டாகின்றது. அறுக்கும்போதும் துன்பந்தான், அதிக துன்பந்தான். ஆனால் இவ்வுலகில் கீழ்வகுப்பு வஸ்துக்களெல்லாம் மேல்வகுப்பு வஸ்துக்களுக்கு உணவாவது உலகமறியக் கிடக்கும் உண்மையே. தாதுப் பொருளிலிருந்து தாவரமும், தாவரத்தைத் தின்று பிராணிகளும் ஜீவிக்கின்றன. இது சாஸ்திர உண்மை (Scientific truth); இதுமட்டுமன்று; இன்னும், தாழ்ந்த இனத்திலுள்ள வஸ்துக்கள் மேன்மைக்கு வரவேண்டுமாயின் துன்பப்பட்டுத் தம்மையே நிக்கிரகம் செய்தே தீரவேண்டும். "நிக்கிரகத்தால் நிர்வாணம் சித்திக்கும்" என்று கௌதம புத்தர் சொன்னதன்கருத்து இஃதே. மேன்மைக்கு வரவேண்டுமாயின் தாழ்மையிலிருந்த தன்மையை அடியோடே ஒழிக்கவேண்டும். மகா சிறு வஸ்துவாகிய பரமாணு ஒன்று மனித தேகத்தில் சம்பந்தப்பட்டு அவனுடன் மேன்மையடைய விரும்புமாயின் அது பல துறைகளின் வழியே செல்லவேண்டும். மனித தேகத்துக்குரிய ஓர் அணு மண்ணிலிருப்பதாய் வைத்துக் கொள்வோம். மண்ணை மனிதன் தின்று ஜீரணித்தல் முடியாது. ஆதலின் மண்ணிலிருக்கும் அணு மனிதனுடம்பில் சேர்தல் முடியாது. அப்படிச் சேரவேண்டுமாயின் மண்ணிலிருக்கும் அந்த அணு தன்னை நிக்கிரகம் செய்து புல்லில் நுழையவேண்டும். புல்லிலிருந்து அப்பரமாணு ஆட்

டின் தேகத்தில் சம்பந்தப்பட்டுப் பின்னர்தான் மனித தேகத்தில் நுழைதல் முடியும். ஆகவே அந்த ஒரணு தன்னைப் பலமுறை நிக்கிரகம் செய்துகொண்டு மண்ணிலிருந்து மனித உடம்பில் ஏறவேண்டும். ஆதலின் ஒரு வஸ்துதானிருக்கும் நிலைமையை நிக்கிரகம் பண்ணித்தான் அதற்கு மேற்பதவியை யெட்டல் வேண்டும். ("No new arrangements but through derangement of existing composition. Annihilation is the rule of evolution, and that is what Buddah meant when he said, 'Salvation is annihilation'.") இவ்வாறே ஆகாயத்தில் காணப்படும் காளமேகம் தன்னையே நிக்கிரகம் செய்து மழையாகப் பெய்து அழகிய நந்தவனமாக மாறுகின்றது. தாதுப் பொருளிலிருந்து தாவரம் உண்டாகித் தாவரத்திலிருந்து பிராணிகள் ஜீவிக்கின்றன. தாதுப்பொருளி லிருக்கும் அசையாத அணு அசையவேண்டுமாயின் தாவரப்பொருளில் அது நுழைதல் வேண்டும்; அதோடு திருப்தியடையாமல் அந்த அணு நடக்கவும் விரும்புமாயின் பிராணியின் உடம்பில் தாவவேண்டும்; மனிதனுடன் சம்பந்தப்பட்டு ஆறறிவுடனிருக்க விரும்புமாயின் பிராணியின் தன்மையை விட்டு மனித உடம்பில் ஏறுவது அவசியம். இந்த உண்மையைத்தான் மேலே சொன்ன அல்குர்ஆன் ஆயத்து வெளிப்படுத்துகின்றது; அவ்வுண்மையாவது; "உன்னுடைய இறைவனுக்கு நீ பணிந்து தலைசாய், அவனுடைய பாதையில் உன்னை நிக்கிரகம் செய்துகொள், உனக்கு இப்பதவியினும் மெத்தமேன்மை யுண்டாகும்."

இனி இஸ்லாத்தின் குர்பானைப்பற்றிக் கவனிப்போம். மேலேசொன்ன அல்குர்ஆன் வாக்கியத்தால் இர

ண்டு விஷயம் தெரிந்து கொள்கிரும்: 1 இரத்தமும் மாம் சமும் இறைவனுக்கு இன்பத்தை யுண்டாக்குவதில்லை; 2 ஆனால் குர்பானால் நமக்கு மேன்மையான சன்மார்க்க மும் பக்தியும் விளைகின்றன. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் என்ன கருத்துடன் குழந்தை இஸ்மாயீலைக் குர்பான் கொடுக்கப்போனார்கள், அல்லாஹுத் தஆலா கடைசியில் ஏன் அந்த நரபலிவேண்டாமென்று தடுத்துவிட்டான் என்பதன் கருத்தைச் சிறிது சிந்தையில் நிறுத்துவீர்க ளேல் நம்முடைய குர்பானுக்கும் சன்மார்க்கத்துக்கும் என்ன சம்பந்த முண்டென்பது உங்களெல்லோருக்கும் செவ்வனே விளங்கும். அல்லாஹுத் தஆலாவின் திரு மறை மற்ருரிடத்தில் இதைப்பற்றிச் சொல்வதாவது: "உங்களுக்குப் பிரியமான வஸ்துவை நீங்கள் கொடுக்கிற வரையில் நன்மையைப்பெற்றுக் கொள்ளவே மாட்டீர் கள்," என்று தெரிவிக்கின்றது. ஆகவே நமக்குச் சட்டப் படி சொந்தமாயிருக்கும் நமது அருமையான பொருளை ஆண்டவனுடைய பாதையில் செலவு செய்வதென்பது தான் குர்பானின் உண்மையான தாத்பரியம். சட்டப்படி எனக்கு உரித்தான பொருளை ஆண்டவனுடைய பாதை யில் நான் செலவுசெய்ய வேண்டியது உண்மையான சன் மார்க்க மாகும்போது சட்ட விரோதமான பொருள்களை நான் ஆசிப்பது துன்மார்க்கமாகும். இவ்விருவகைச் செய் கையும் ஒரே மனிதனிடத்தில் இருத்தல் முடியுமோ? தன் னுடைய பொருளை மனமார இறைவனுக்காகச் செலவு செய்பவன் பிறர் பொருளை இச்சிப்பானே? தான் சட்டப் படி தேடியபொருளைச் சன்மார்க்கத்தில் செலவு செய்யும் போது துன்மார்க்கமான சாமர்த்தியத்தால் பொருள்

தேட விரும்புவாருமுண்டோ? ஆகவே குர்பானின் உண்மை யுணர்ந்தவனிடத்தில் பிறர் பொருளை யெல்லாம் எப்படியேனும் தன் பொருளாகச் செய்துவிடவேண்டுமென்று கெட்ட எண்ணம் உதிக்குமோ? பிறர் பொருளைத் தம்முடைய தாக்கிக்கொள்ளச் சிலர் விரும்புவதால்தான் உலகில் வீண் சண்டையும் சச்சரவும் மாச்சரியமும் உண்டாகின்றன. அகிலமெலாம் ஆண்டிடினும் அதன்பின் கடல் மீதிலே ஆசை செல்வதால் தான் அயோக்கியதையும் அக்கிரமமும் உலகில் அதிகரிக்கின்றன. ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் குர்பானின் உண்மையை யுணர்ந்து நடக்கப் புகுவரேல் எவ்வளவு எளிதில் எல்லோரும் சன்மார்க்கத்திலாகி விடலாம்? சட்டப்படி தான் சம்பாதித்த பொருளைப் பிறருக்கு உதவக்கூடியவரே பிறர் பொருளை அக்கிரமமாய் அபகரிக்க மனந்துணியார். தினமொன்றுக்கு ரூபாய் 5 நான் தானம் செய்யக்கூடியவனாயின் பிறருடைய ஓர் ஐந்து ரூபாயைக் கொள்ளைசெய்ய என்மனம் துணியுமோ? உலகப்பற்று அதிகரித்து அதன் பொருள்களில் நம்முடைய ஆசையை அதிகப்படுத்துவதாலல்லவா நாம் எல்லாவித அக்கிரமமும் செய்ய உடன் படுகிறோம். "நாய் விற்ற காசு குலைத்துக் காட்டுமோ?" என்றும் "கூனற்கிழவன் கொடுக்கும் பணையமதில், நானக்குழலே நரையுண்டோ," என்றும் சொல்லத் துணிந்து விட்டோம். குர்பானின் உண்மை யுணர்ந்து நம்முடைய உடைமையை அல்லாஹுத் தஆலாவின் பாதையில் செலவுசெய்ய முன் வருவோமாயின் நாம் உடனே சன்மார்க்கத்தில் வந்து இப்போதுள்ள நிலையிலிருந்து மிக்க மேன்மைக்குச் செல்வோம். "இந்த ஹஜ்ஜுமாதத்தில் குர்பான்கொடுத்து

விட்டால் அடுத்த ஹஜ்ஜுவரையில் அல்லாஹ்வின் பாதையைத் தேடவேண்டியதில்லை; இனி அடுத்த வருஷத்துக்கோர் ஆட்டுக்கடாக் கொடுத்துக் கொள்வோம்; அதுவரையில் செய்யவேண்டிய அக்கிரமங்களை யெல்லாம் செய்து தீர்த்துவிடுவோம்,'' என்று எண்ணிவிடவேண்டாம் எம் முஸ்லிம் சகோதரர்காள். ஒவ்வொருவரும் தம்மாலியன்ற மட்டும் வாயுதவி, கையுதவி, தேகசகாயம், இன்னும் வஸ்திரம் கொடுத்தல், ஆகாரம் செய்வித்தல், தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்தல் முதலிய சாதாரண உபகாரங்களைச் செய்துவரப் பிரயத்தனப்படல் வேண்டும். வேலை ஒழிந்த வேளைகளில் அல்லாஹ்வின் பாதையில் உம்முடைய பேனாவையும் செலவுசெய்து ஏதேனும் மன்பதைக்கு உதவி புரியுங்கள்; இக்காலத்தில் ஜிஹாத் என்பது பேனாவினாலேயே ஆகவேண்டும். கத்தியெடுத்து ஜிஹாத் செய்த காலம் பழங்காலமாய் விட்டது. இனி ஜிஹாத் என்பது நம் பேனாவினாலே தான் வெற்றி பெறல்வேண்டும். உலக சம்பந்தமான மனைவி, மக்கள், உற்றார், பெற்றார், மண், பொன் முதலியவற்றில் நம்முடைய சிந்தையை அதிகம் செலுத்துவதால்தான் அதிக அக்கிரமம் செய்யப் பிரமயம் நேரிடுகிறது. இவ்வுலகப் பற்றில் தாமரையிலை நீர்போல் இருக்கவேண்டு மென்பது தான் இஸ்லாத்தின் கொள்கை. இதனால்தான் உலகத் தொழிலின் இடை யிடையே தினமொன்றுக்கு ஐந்து வேளைத் தொழுகையும், 12 மாதத்துக் கொருமுறை ரமலானில் நோன்பும், 100-க்கு 2½ வீதம் வருஷமொருமுறை ஜக்காத்தும், சொந்த ஊரைவிட்டு ஹஜ்ஜுக்குப் போவதும் இஸ்லாத்தின் 4 முக்கிய கடமையா யமைந்திருக்கின்

றன. கலிமாவைச் சேர்த்து 5 கடமையாகும். உம்மால் கூடியவரையில் தானமும் தியாகமும் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; சன்மார்க்கத்தில் சேர்ந்து துன்மார்க்கத்தைக் கைவிடுங்கள்; பின்னர் உங்களுடைய போலீஸையும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டையும் மூடிவிடுங்கள்.

---

## சன்மார்க்கமே சத்திய இஸ்லாம்

இதுவரையில் நாம் தெரிந்துகொண்ட விஷயத்தால் அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஆலாவின் சன்னிதானத்தில் நாம் செய்யவேண்டிய குர்பானின் தாத்பரியம் யாது? குர்பான் என்பது பக்திக்குரிய ஓர் அம்சமாகின்றது. நாம் ஆதியில் விளக்கியதுபோல் அஃது இறைவன்பால் நாம் வைக்கும் அத்தியந்த விசுவாசமாகும். அது நம்முடைய மனப் பரிபக்குவத்தைக் காட்டுகின்றது. எனக்கு அத்தியந்த பக்தியுள்ள இறைவன் பொருட்டு யான் என்ன காரியம்தான் செய்யமாட்டேன்? உண்மையான பக்தியின் உண்மையான அடையாளம் யாதெனின், என்னுடைய இறைவனுக்காக எனக்கு அதிகப்பிரியமுள்ள பொருள்களை யெல்லாம் செலவு செய்தலாகும். அவன் பொருட்டு எவ்வளவு செலவு செய்தபோதிலும் மனம் திருப்தியாகவே யிருக்கும். பலியிடுதலென்பது அல்லாஹுத் தஆலாவின் கோபத்தைச் சாந்திசெய்து நம்முடைய பாபத்தைப் போக்கிக்கொள்ளுதற்காக ஏற்படுத்தப்படவில்லை; ஆனால் நமக்குப் பிரியமுள்ள பொருளை இறைவனுக்காகத் தத்தம் செய்து நம்முடைய பரிபக்குவ பக்தியைக் காட்டுவதற்காகவே குர்பான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கா

ணத்தால்தான் ஆதிகாலங்களில் மனிதர்கள் தம்முடைய உயிரையும் அல்லாஹ்வுக்காகத் தத்தம் செய்து வந்தனர். அவ்வாறிருந்த நரபலி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் காலத்தில் மிருகபலியாக மாறிற்று. ஆண்டவன் நம்முடைய உயிரையும் மிருகங்களின் உயிரையும் பலி வாங்குவதாலும் பிராணிகளின் இரத்தம் தோய்ந்த மாமசத்தை மோப்பம் பிடிப்பதாலும் அவனுக்கு நம்மீது அதிக திருப்தியுண்டாகுமென்று வீணாக எண்ண வேண்டாம். இதையெல்லாம் காண நாம் இறைவனுக்குச் சமர்ப்பிக்கக்கூடிய வேறோர் அரிய பொருளுண்டு; அதை நாம் அவனுக்கு அளிக்கவேண்டும். இறைவன் நம்முயிரைத் தனக்காக அர்ப்பணம் செய்யச்சொல்லி நம்மை இறந்துபோம்படி கட்டளை யிடவில்லை. கடைசி மரணத்துக்கு முன் உண்டாகும் மரணத்தை அவன் அதிகம் விரும்புகிறான்; நம்முயிராலாவது நமது இரத்தம் தோய்ந்த இறைச்சியாலாவது மிருகங்களின் உயிராலாவது அவற்றின் மாம்சத்தாலாவது ஆவதொன்றுமில்லை. இவ்விஷயத்தில் நமக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமில்லை. நமக்கும் ஐம்புலன்களின் அறிவுண்டு; மிருகங்களுக்கும் அவ்வகை ஐயறிவுண்டு; நமக்கும் தசையும் இரத்தமுமுண்டு; இப்படியே மிருகங்களுக்கு முண்டு. ஆதலின் இவ்விஷயத்தில் மிருகங்களின் உயிரைக்காண நம்முயிர் சிறந்ததெனச் சொல்ல முடியாது; ஆகவே நம்முயிரைக் கொடுத்தால் ஆண்டவன் திருப்தியடைவா னென்பதில்லை. இதனாலெல்லாம் அவனுக்குத் திருப்தியுண்டாகமாட்டாது. ஆனால் "மரணமாகுமுன் மரணமானால்" ஆண்டவனுக்கு அது மட்டிலடங்கா மகிழ்ச்சியைக் கொடுக்கும். அஃதாவது, மிரு

கங்களினின்றும் மனிதனைப் பகுத்துக் காட்டக்கூடியதும், ஏவலும் விலக்கலும் இன்ன இன்னவென்று பாகுபாடு செய்யக்கூடியதும், ஏனைப்பிராணிகளுக் கெல்லாம் இல்லாமல் மனிதனுக்கு மட்டும் இறைவன் பிரத்தியேகமாகக் கொடுத்திருப்பதுமான நம் பகுத்தறிவை (நாட்டத்தை, விருப்பத்தை, தீர்மானத்தை) அல்லாஹுத் தஆலாவின் பால் தத்தம் செய்துவிடல்வேண்டும். நம்முடைய விருப்பத்தைத்தான் (Will) குர்பான் கொடுத்தல் அத்தியாவசியம். ஏற்கனவே அல்குர்ஆன் ஆயத்தில் சொன்னதுபோல் ஆண்டவனுடைய நாட்டத்துக்கு நம்முடைய நாட்டத்தை இணங்கிப் பணியச்செய்தல் அவசியமென்பதனால் நம்முடைய உயிரைமட்டும் அவனுக்குக் கொடுப்பதென்பது போதாது; பகுத்தறிவில்லாப் பிராணிகளும் தம் உயிரைக் கொடுக்கும்; இதில் சிலாக்கியமொன்றும் அதிகமில்லை. உயிரைக்காணச் சிறந்த பகுத்தறிவைக் கொடுப்பதே அதி சிலாக்கியமாகும். ஆண்டவனுடைய நாட்டத்துக்கு நம்முடைய நாட்டத்தை முற்றிலும் கட்டுப்படும்படி இணக்கி வைப்பதைத்தான் இறைவன் வேண்டுகிறான். "என் செயலாலாவதொன்றுமில்லை, எல்லாம் உன் செயலே," என்பது தான் இஸ்லாத்தின் முக்கிய தாத்பரியம்; இதுதான் குர்பானின் இரகசியப் பொருளும். இறைவனுடைய சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டு அவனது ஆக்ஞைக்கு அடியோடு தலைசாய்ப்பதுதான் உண்மையான குர்பான். இப்ராஹீம் நபியவர்கள் உலகத்தவர்களுக்கு அறிவித்த அறிவிப்பும் இஃதே. நம்முடைய உயிரைக் கொடுப்பதால் ஆவதொன்றுமில்லை; வேண்டுமாயின் ஒரு பிராணியின் உயிரைக்கொடுத்து அக்கடமையை நீக்கலாம். நம்முடைய

பகுத்தறிவைப் பேணச்செய்து இறைவனது நாட்டத்தின் கீழ் அதை முற்றிலும் அடங்கி நடக்கும்படி செய்வதே வேண்டத்தக்கது. நம்முடைய அகங்கார மமகாரங்களை ஒழித்து இறைவனுடைய உடைமையாக நம்மை ஆக்கிக் கொள்ளல்வேண்டும். இதுதான் உண்மையான குர்பான்; இதுதான் இஸ்லாம்; இதுதான் ஒவ்வொருவரும் செய்யத்தக்கது. இறைவனுடைய சட்டத்துக்குக் கட்டுப்படுதல் தான் இஸ்லாம் என்று சொல்வோமாயின் அந்த இறைவன் சொல்வதுபோல் நாம் கேட்கவேண்டும். அவன் முதன் முதல் சொல்வது: "லாயிலாஹ இல்லல்லாஹு," என்பதாகும்; இதன் பொருள்: "வணக்கத்துக்குரியவன் ஒரே ஆண்டவன்; அவனைத்தவிர வேறொரு கடவுளுமில்லை," என்பதாகும். இது இஸ்லாத்தின் முதற் கடமையாகும். இதற்குத் தலைசாய்ப்பதே உண்மையான பலியாகும்.

ஆகவே இஸ்லாம் என்பதன் தாத்பரியமும் குர்பானின் தாத்பரியமும் ஒன்றுகின்றன. உங்கள்பாலுள்ளதை இறைவன் வழியில் செலவு செய்து அவன் நாட்டம்போல் நடவாமல் போவீர்களேல் நீங்கள் முஸ்லிமாயிருத்தல் முடியாது. உம்முடைய நாட்டத்தை அவனுடைய நாட்டப்படி செலுத்தினாலொழிய ஈடேற்றமில்லை. ஈடேற்றமில்லாமற் போவதோடு இவ்வுலக காரியங்களிலேனும் அவனது விருப்பத்துக்கு விரோதமாய் வெற்றிபெற முடியுமோ? இகபரம் இரண்டிலும் சித்திபெற வேண்டுவோர் இஸ்லாத்தின்படி (இறைவனுடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு) நடத்தல் அத்தியாவசியம். உங்களைச் சுற்றியுள்ள இயற்கையைக் கவனியுங்கள்; அதில் ஒரு பரமாணுவே

னும் இஸ்லாத்துக்கு முரணாக நடத்தல் முடியுமோ? உண்மை இவ்வாறிருக்க நீங்கள் மட்டும் இறைவனது கட்டளைக்கு முரண்செய்யப் பார்க்கிறீர்களே! இது தகுதியாமோ? ஒருபோதும் ஆகாது.

"பொருளும் புத்திரர்களும் இக்வாழ்க்கைக் குரிய அலங்காரமாகும்; இன்னும், நிலைத்திருக்கும் நற்கிரியைகள் உமது இறைவனிடத்தில் பிரதிப்பிரயோசனத்தால் நன்மை யுற்றவையாயும் எதிர் நோக்கத்தால் நன்மையுற்றவையாயு மிருக்கின்றன"—அல்குர் ஆன், 18:46.

ஆதலின் நாமெல்லோரும் இறைவனுடைய கட்டளையின் உண்மையை யுணர்ந்து அவ்வண்ணம் (இஸ்லாத்தில்) நடக்க முயல்வோமாக. இம்முயற்சி நமக்குச் சித்திக்கும் பொருட்டு இறைவனைப் பின்வருமாறு ஸ்தோத்திரிப்போமாக:

"அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லா (ஹூத் தஆலா) வின் (திரு) நாமத்தால்,

1. உலகங்களுக்கெல்லாம் நாயனாகிய அல்லா (ஹூத் தஆலா)வுக்கு எல்லாப் புகழும்.

2. அருளாளன், அன்புடையோன்.

3. நியாயத் தீர்ப்பு நாளின் அதிகாரி.

4. உன்னையே வணங்குகிறோம்; உன்னிடத்திலேயே உதவி தேடுகிறோம்.

5. நேரான வழியில் எங்களை நடத்து.

6. எவர்மீது அருள் புரிந்தையோ அவர்கள் வழியில்.

7. கோபத்துக் குள்ளானவர்களின் வழியிலன்று; வழி விலகிப் போனார்களுடைய வழியிலுமன்று"—அல்குர் ஆன், 1.

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக்கூறுகின்றேம்

# அழுக்காறும் அவதூறும்

"34 இன்னும், நன்மையும் தீமையும் சமமாகமாட்டா. மிக்க அழகுற்ற தெதுவோ அதைக்கொண்டு (தீமைக்கு) மாறுசெய், (அல்லது அழகிய நன்மையைக் கொண்டு தீமையையகற்று); (அப்படிச் செய்வையாயின்) பின்னர் எந்த மனிதனுக்கும் உனக்கும் இடையில் பகை (ஏற்பட்டு) இருக்கிறதோ அந்த மனிதன் (உனக்கு) பந்துத்துவமுள்ள நண்பன்போலிருப்பான்.

35 ஆனால் பொறுமை செய்தவர்களுக்கேயொழிய அது (அக்குணம்) அளிக்கப்படமாட்டாது (வாய்க்காது); இன்னும் பெரும்பேறுள்ளவர்களுக்கேயன்றி அது அனுக்கிரகிக்கப் படமாட்டாது.

36 ஷைத்தானால் (கொடியபேயால்) யாதொரு கலைப்பு (உண்டாகி அக்குணத்திலிருந்தும் மற்றவைகளை விட்டும் நீ மாறும்படி) உன்னை அவன் கலைத்தால், பின்னர் நீ அல்லாஹ்வினிடத்தில் காவலைத் தேடு; உறுதியாக அவன் (அல்லாஹ்) கேட்பவனுயும் அறிபவனுயு மிருக்கிறுன்." அல்குர்ஆன், 41: 34, 35, 36.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்,"—குறள்

"அவதூறு பேசுகிறவர்களும் (பிறருடைய) குற்றத்தையே ஆராய்பவர்களுமாகிய அனைவருக்குமே கேடு" என்று எமது இறைவன் குர்ஆன்ஷரீபு 104-வது ஸூரா முதல் வாக்கியத்தில் விளக்கி யிருக்கின்றான். அவதூறும் அழுக்காறும் நாம் பிறரிடத்தில் கொள்ளும் அசிகையின் காரணமாகத்தான் உண்டாகின்றன. நம்மைக்காண வேறொருவரிடத்தில் அதிக ஐசுவரியமாவது நிறைந்த கல்வியாவது உயர்ந்த பதவியாவது இருக்கக்கண்டால் உடனே நம்முடைய மனத்தில் பொறாமையென்னும் கொடிய பகைவன்குடிகொள்ளுகிறான். தம்மைக்காணப் பெரியாரைக்கண்டு அழுக்காறு அடைவதை விடுத்துத் தம்மினும் சிறியாரை நோக்கி அவரைக்காணத் தம்மை மேன்மைப் பதவியில் வைத்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதே நல்லவர்களிடத்தில் காணத்தக்க செயலாகும். இதைத்தான் எமது திருநபியவர்கள், "ஐசுவரியத்திலும் அழகிலும் உம்மைக்காணச் சிறந்த மனிதனைக்கண்டால் உம்மிலும் தாழ்ந்தவர்களைக்கண்டு திருப்தி கொள்வீராக," என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க," என்றார் ஒரு புலவர்.

உற்று நோக்குங்கால் நமக்கு ஒருதீங்கும் செய்யாத அன்னியர்களிடத்தில் நாம் எத்தனைமுறை அசிகைகொண்டிருக்கிறோம்! ஆண்டவனால் அருளப்பட்ட சகலபாக்கியங்களையும் அவர்கள் அனுபவிக்கும்போது நாம் வீணே பொறாமையால் சாகின்றோம். அடுத்தவீடு வாழப்பொறாமல் ஐந்துநாள் நாம் பட்டினி கிடக்கின்றோமே, இது என்ன

மடமை! ஆன்டவனருளால் அண்டைவீட்டுக்காரனுக்கு ஐசுவரியம் பெருகினல் நமக்குவரும் நஷ்டமென்ன? அதனல் நமக்கொன்றும் நஷ்டம் இல்லாவிடினும் அவனுக்கு ஏன் அவ்வளவு ஐசுவரியம் உண்டாக வேண்டும் என்று நாம் நம்முடைய மனத்தில் கஷ்டப்பட்டுக் கொதிப்பு அடைகின்றோம். மனப்புழுக்கம் நமக்கே தாளாமல் கடைசியில் அவனையும் அவனுடைய ஐசுவரியத்தையும் நம்முடைய பொறாமையால் தூஷிக்க ஆரம்பித்து இல்லாததையும் பொல்லாததையும் பிணைத்துகின்றோம். நம்முடைய அழுக்காற்றால் எவ்வளவு அவதூறு தூற்ற இயலுமோ அவ்வளவும் தூற்றுகின்றோம். ஒரு மனிதன் உண்மையில் மகா பரிசுத்தனா யிருக்கலாம்; அவனுடைய பகைவன் ஒருவன் அந்த நல்லவனைக்குறித்துப் பொய்யான அவதூறுகளைப் பரப்பினல் அவற்றை மெய்யென்று நம்பிப் பலபேர் பல விதமாய் அவனை நிந்தனைசெய்ய ஆரம்பித்து விடுகின்றனர். முதலில் சொன்னவன் கொஞ்சம் சொன்னபோதிலும் அது பலபேர்களின் காதில் நுழையும்போது,' காறியுமிழ்ந்தது காக்கைக்குஞ்சாய்விட்டது' என்பதுபோல் மிகப்பெரும்பழியாக மாறிவிடுகின்றது. அந்தோ அனியாயம்! நிரபாதியாகிய நல்ல மனிதன் ஒருவன் மகா பாபியென்றும் கொடியவனென்றும் பலராலும் எள்ளப்படுகின்றான். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்தான் எமது பெருமானின் திருவாக்கை நினைந்து நம்மினும் தாழ்ந்தவரைக்கண்டு நமக்கு இருப்பது போதுமென்று திருப்தியடைதல் வேண்டும். நாம் இயற்கையில் நல்லவரா யிருந்தபோதிலும் அநேகமாய் நம்முடைய அருகில் நம்மைச் சூழ்ந்திருப்பவர்களின் துர்க்குணத்தால் தான் நம்முடைய கல்வியும் ஒழுக்

கமும் குறைவுபட ஏது வுண்டாகிறது. ஆதலின் நல்லோரிடத்திலேயே சார்ந்து நம்முடைய கல்வி கேள்வி ஒழுக்கங்களைச் செம்மைசெய்து கொள்ளவேண்டும். ஆண்டவன் தன் இயற்கை நற்குணத்தால் எல்லோருக்கும் உதவும்படி எல்லாவஸ்துக்களையும் பக்ஷபாதமின்றிப் படைத்திருக்கிறான். வலியாரும் எளியாரும், மேலோரும் கீழோரும், வேதியரும் ஊழியரும், பெரியாரும் சிறியாரும், வெள்ளையரும் அல்லாரும் எல்லோரும் ஒரே சமமாய் அநுபவிக்கும் பொருட்டே எமது இறைவன் காற்றையும் மழையையும் வெயிலையும் நிழலையும் வானத்தையும் பூமியையும் சூரியனையும் சந்திரனையும் நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும் அமைத்திருக்கின்றான். ஆண்டவன் எல்லாருக்கும் எல்லாவற்றையும் பக்ஷபாதமில்லாமல் செய்திருந்தும் மனிதன் தன் பொறாமைக் குணத்தால் தனக்கு மட்டும் சில பொருள்கள் இருத்தல் வேண்டும், மற்றவர்களுக்கு அவை இருத்தல் கூடாதென்று ஆசிகை கொள்ளுகிறான். இதுதான் ஷைத்தானின் (கெட்டபேய்) குணம். வேற்றுமையில்லாத இவ்வுலகத்தை வேற்றுமை செய்வது ஷைத்தான்கள்தான். மனிதனுடைய மனத்தில் இப்படிப்பட்ட ஷைத்தானின் தன்மை புகுதும்போது தான் அவன் அழுக்காற்றால் அவதூறுசெய்ய எத்தனிக்கின்றான். இப்படிப்பட்ட தன்மை நமக்குண்டாகும்போது அதை நீக்கியருளும்படி ஆண்டவன்பால் அடைக்கலம் தேடவேண்டும். இதுதான் மேலேசொன்ன 41 : 36-வது வாக்கியத்தின் கருத்து; மனிதர்களெல்லாம் ஆண்டவனால் ஒரேவிதமாகவே அமைக்கப் படுகிறார்கள் ; ஆனால் சிலர் அவனருளால் மேன்மையிலும் வேறு சிலர் தாழ்மையிலும் அமர்கின்றனர். இதற்

காக ஒருவன் பொறாமை கொள்வானேன்? இகலோகத்தில் இப்படிப்பட்ட மேன்மை தாழ்மைகள் காணப்படினும் எல்லாரும் ஒரே சமம் தான் என்பது இஸ்லாத்தின் கொள்கை. இஸ்லாத்தில் அரசனென்றும் குடிகளென்றும், எஜமானென்றும் அடிமையென்றும், வேதியரென்றும் ஊழியரென்றும் வித்தியாசமில்லை. இதனால் தான் வேறு மதங்களில் காணப்படுவதுபோல் இஸ்லாமார்க்கத்தில் புரோகிதர்கள் (குருமார்) என்று ஒருவர்க்கத்தார் இல்லை. புரோகிதர் மக்கள் புரோகிதரல்ல; ஆனால் வேதக் கல்வி படித்தவரெல்லாம் புரோகிதம் செய்யலாம். இஸ்லாமிய உலகமெல்லாம் ஒரே குடியரசே (Democracy) யொழிய வேறில்லை.

எமது பள்ளிவாயில்களில் இமாமுடைய (முன்னின்று நடத்துபவர்) தொழில் செய்வதற்குக் குருமார் என்று ஒரு ஜாதியார் ஏற்பட்டில்லை. எமக்குள் அதிகம் படித்தவர் ஒருவரை எவ்வகைச் சடங்குமின்றி இமாமாக நியமித்துக் கொள்கிறோம். எந்த வைதிகத்தொழிலையும் எந்தப் படித்த முஸ்லிமும் எப்போதும் செய்யலாம். உண்மை இவ்வாறு இருக்கும்போது ஒருவர் மட்டும் தான் தான் புரோகிதரென்றும் படித்தவரென்றும் உபதேசம் செய்தற்கு உரியவரென்றும் தன்னுள் இறுமாப்பும் தற்பெருமையும் பிறரிடத்தில் பொறாமையும் புழுக்கமும் கொள்வானேன்? இதர மதத்தினர் செய்வதுபோல் தேவசன்னிதானத்தில் எம்முஸ்லிம் சகோதரர்கள் வித்தியாசம் செய்வதில்லை. ஒருவர் பஞ்சணைமீதும், இன்னுமொருவர் சாதாரண நாற்காலியிலும், வேறொருவர் பாயிலும், மற்றொருவர் மான்தோல்மீதும், பின்னுமொருவர் பீதாம்பரத்திலும் உட்

கார்ந்து பூஜிப்பதில்லை. எத்தேசத்தினராயினும், எச்சாதியினராயினும், எந்நிறத்தவராயினும், எப்பெயருடையவராயினும், எந்நிலைமையி லிருப்பவராயினும், எவ்வித வேறுபாடு மில்லாமல் அல்லாஹ்வின் பள்ளியில் படித்த ஓர் இமாமின்பின்னே எல்லாரும் ஒரே சமமான ஒழுங்கில் தோளோடுதோள் இணையும்படி நிற்கின்றோம். இதுதான் இஸ்லாத்தின் பெருமை ; இதுதான் இஸ்லாத்தின் இணையில்லாத குடியாசுத் தன்மை (Complete Democracy). இவ்வருஷம் சென்ற ரமலான் பெருநாளாகிய ஈதுல் பித்ரின்போது லண்டன் மாநகருக்கு அடுத்த வோக்கிங் மஸ்ஜிதில் இவ்வுலகத்தின் ஐந்து கண்டங்களிலுமுள்ள அநேக தேசத்து அநேகவிதமான ஜாதிநிறபாஷை பேதமுள்ள முஸ்லிம்கள் ஆயிரக்கணக்காய்க் கூடியிருந்தபோது மிஸ்டர் மார்மடியூக் பிக்ட்ஹால் (Mr. Marmaduke Pickthall) என்னும் இங்கிலீஷ் முஸ்லிம் பேஷ்இமாமாக (தொழுகையை முன்னின்று நடத்துபவராக) இருந்து தொழுகையை நடத்தினர். இதில் யாரும் அசிகைகொள்ள வேண்டியதில்லை. இவர் கல்விமானதால் நவ்முஸ்லிமாயிருந்தும் பரம்பரை முஸ்லிம்களைவிட முதன்மை பெற்றார்.

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றாரை வருக என்பார்."

புரோகிதர் பிள்ளை புரோகிதர், பேஷ் இமாம் பிள்ளை பேஷ் இமாம், மௌலவியின் பிள்ளை மௌலவி என்று எண்ணி ஏமாந்து போகாமல் இருப்பார்களாக எம் முஸ்லிம் சகோதரர்கள். மெய்யன்பர்காள்! படித்தவரைப் பழிக்காதீர்கள் ; ஆனால் படியாதார் இன்னாரென்று பகுத்துணருங்கள். இஸ்லாத்தில் குருமார் என்று ஒரு ஜாதியா

யில்லை என்பதைமட்டும் என்றென்றைக்கும் மறந்து விடாதீர்கள். மௌலவிகளின் மக்களெல்லாம் மௌலவியல்ல; ஆனால் எவராயிருப்பினும் உண்மையில் படித்தவர்கள்பால் பொறாமை கொள்ளாதீர்கள். படித்தவர்களைக்கண்டு பொறாமை கொள்வதைக் காட்டினும் அவர்களைப்போல் நாமும் படிக்க முயல்வதே நல்லோர் மெச்சத்தக்க செய்கை. ஆண்டவன் எல்லோருக்கும் அறிவைக் கொடுத்திருக்கும் போது மேன்மேலும் படிப்பதை விருத்தி செய்யுங்கள்; படித்தவரைக்கண்டு பொறாமை கொள்ளவேண்டாம்.

"தம்மினும், கற்றாரை நோக்கிக் கருத்து அழிக,
எற்றே இவர்க்குநாம் என்று" என்பதே இஸ்லாத்தில்
[வேண்டத்தக்கது.

பிறருடைய மேன்மையைக் கண்டு பொறாமை கொள்பவர் நினைக்க வேண்டுவது ஒன்றுண்டு; பிறருடைய ஐசுவரியமும், மேன்மையும், கல்வியறிவும் நமக்குக் கிடைத்து விடுவதுமட்டும் போதுமென்று எண்ணிவிட வேண்டாம். 'பதவி உயர்ந்தால் அதற்கேற்ற பாடும் அதிகமாகும்,' என்னும் பழமொழிபோல் மகதைசுவரியம், மிகப் பெருங் கல்வி, பிறரினும் உன்னதப் பதவி இவற்றை யுடையவர்கள் செய்யவேண்டிய கடமைகள் அதிகமாயுண்டு. நல்ல வசதியை உடையவர்கள் தமக்குக் கிடைத்த பொருளையும் கல்வியையும் மேன்மையையும் நல்வழியில் செலவுசெய்தல் வேண்டும்; இன்றேல் துன்பமும் துக்கமும் பாபமும் வந்தடையும். ஒன்றுமில்லாதவருக்கு வரும் தண்டனையைக் காண எல்லாமிருந்து அதை நல்வழியில் செய்யாதவருக்கு வரும் தண்டனை மிகக் கொடியதாயிருக்கும். இல்லார்க்கு ஒன்றுமில்லை; உள்ளார்க்கு எல்லாம் (பாபமும் பழியும்)

உண்டாகும். பொருள்தேடத் தகாதவழியில் ஒருவன் பொருள்தேடி அதைச் செலவு செய்யத் தகாதவழியில் செலவு செய்வானாயின் அவன் மனம் என்ன பாடு படமாட்டாது! அப்படிப்பட்ட ஐசுவரியவானுடைய மனத்துன்பத்தைக்காண ஏழையாயிருப்பது சுகமன்றோ? எத்தனை மனிதர்கள் கோடீசுவரர்களா யிருந்தும் இவ்வுலக வாழ்க்கையை ஒரு பெருந் துக்கசாகரமாய் நினைக்கின்றார்கள்! பெரியவர்களென்று நாம் தவறாக எண்ணும் இன்னும் எத்தனை மனிதர்கள் இவ்வுலகத்திலேயே நரகவேதனை போன்ற மனத்துன்பத்தை யெல்லாம் அனுபவிக்கின்றனர்! இப்படிப்பட்டவர்களுடைய நிலைமை நமக்கு வேண்டுமென்று எந்தப் பேதையும் இச்சிப்பானோ? இவர்களைக்கண்டு யாரும் பொறாமை கொள்வாருண்டோ? அவர்களுடைய வீண் பெருமையும் நமக்கு வேண்டாம்; அவர்களைப்போல் நாம் மனப்பிணியால் துன்பப்படவும் தேவையில்லை. அதிக உயரத்திலிருந்து விழுபவருக்குத் தான் அடியும் பலமாய் விழும். நம்மைப்போல் சாதாரண நிலைமையிலிருந்தால் அதினின்றும் விழுபவருக்கு அபாயமும் இலேசாகவே யிருக்கும்; பதவி உயர உயரப் பாடும் அதிகமாவதுடன் அபாயமும் அதிகரித்துக் கொண்டேபோகும். பிறருடைய பாட்டையும் அபாயத்தையும் பார்த்து நாம் அச்சங்கொள்ளாமல் அவர்களுடைய மேன்மைமட்டும் நமக்கு வந்துவிடவேண்டுமென்று ஆசைகொள்கிறோம். இது நீதியாகுமோ?

நாம் இவ்வுலகில் வாழுமட்டும் நமக்குச் சில நண்பர்களும் உறவினர்களும் இருந்துகொண்டே யிருக்கிறார்கள். இவர்களுடன் நாம் கலந்து அளவளாவுவதால் நம்முடைய

மனக்கவலை நீங்கிச் சந்தோஷமுண்டாகிறது. ஒவ்வொரு நாளும் நமக்குப் புது நண்பர்கள் சேர்ந்துகொண்டே போகின்றனர். ஒவ்வொரு நண்பரும் நமக்கும் சுகம் கொடுத்து நம்மால் தாமும் சுகமடைய விரும்புகின்றனர். இவ்வாறு ஒருவருக்கொருவர் பரஸ்பரம் சுகமடையும்போது பொறாமை யென்னும் கொடிய கள்வனுக்கு மட்டும் சிறிது இடம் கொடுத்து அந்த ஷைத்தானை நம்முடைய மனத்தில் நுழையும்படி செய்துவிட்டால் உடனே நம்முடைய மன நிலைமை தடுமாறிப் போகின்றது. நம்முடைய பழய நண்பரைக்கண்டால் அவரிடத்தில் அசிகை உண்டாகிறது; அவரிடத்தில் குற்றமில்லாத போதும் அவர் பெருங்குற்றமெல்லாம் செய்வதுபோல் நம்முடைய மனத்தில் பொறாமையென்னும் அக்கொடிய ஷைத்தான் தோற்றச் செய்கிறன். நண்பர் செய்யும் ஒவ்வொரு காரியமும் நமக்கு விகல்பமாயும் விரோதமாயும் தோன்றுகிறது. அவருடைய சிறுசிறு தவறுகளையெல்லாம் பெரிது பெரிதாக நாம் எடுத்து அவதூறுசெய்ய ஆரம்பிக்கின்றோம். நண்பர் நமக்கு நன்மையே செய்யினும் அது தீமையாகவே காணப்படும். அவரைப்பற்றி இல்லாத அபவாதங்களை யெல்லாம் பரப்பி நம்முடைய மனப் பரிசுத்தத்தை யிழப்பதல்லாமல் நண்பருடைய முகத்தில் விழிக்கவும் வெட்கப்பட்டு நம்முடைய முகத்தை மறைத்துக்கொண்டு திரியும்படி நேரிடுகின்றது. ஏன் இத்தனை பொறாமை! ஏன் இப்படி ஒளிய வேண்டும்! பொறாமைக்கு மட்டும் இடம் கொடுத்துவிட்டால் அது நமக்கே செய்யும் துன்பத்துக்கு அளவில்லை. எவ்வளவு பரிசுத்தமானவர்மீதும் பழிச்சொல் சுமத்துவதற்கே நம்முடைய மனம் நாடும். பொறாமைக்காரரின்

தோற்றத்தில் காற்றைப்போன்ற இலேசான சிறு விஷயங்களும் வேதவாக்கியங்கள் போல் கனமாய்க் காணப்படும் என்று ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலேய மகாகவி கூறுகின்றார். இப்பெரும் புலவரே வேறோரிடத்தில், "நீ பனிக்கட்டியைப்போல் அவ்வளவு மாசுபடியாமலிருந்த போதிலும் பனியைப்போல் அவ்வளவு பரிசுத்தமா யிருந்தபோதிலும் அவதூறினின்றும் தப்பமாட்டாய்," என்று அழகாகக்கூறியிருக்கின்றார். இதனால் தெரியவருவது யாதெனின்: இப் பொறாமை நிறைந்த உலகத்தில் நாம் எவ்வளவு ஜாக்ரதையுடன் பரிசுத்தமாயிருந்தபோதிலும் நம்மை யாரேனும் ஒருவர் பழிசொல்லாமல் இரார், என்பதாகும்.

நாம் பிறரைப்பற்றிப் புறங்கூறுமுன் நம்மிடத்தில் அப்படிப் பட்ட குற்றங்குறை ஒன்றுமில்லையா வென்று நிதானித்தல் வேண்டும். இதுதான் இஸ்லாத்தின் கொள்கை. "பிறரிடத்தில் காணப்படக்கூடிய குற்றங்குறைகள் உம்மிடத்திலும் காணப்பட்டால் அவர்களைக் குறித்து நீர் அவதூறு தூற்றாதிருப்பீராக," என்று எமது நபிகள் பெருமானார் கூறியுள்ளார். நம்மிடத்தில் குறை யிருக்கும்போது பிறருடைய குறைகளை யெடுத்துத் தூற்றுவோமாயின் அவர் நம்முடைய குறைகளில் மிகக்கெட்டதை எடுத்துப்பரப்பி நம்மைச் சாகும்படி வெட்கத்துக்குள்ளாக்கிவிடுவர். இதைத்தான் குறளில்,

"பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்," என்றார்.

"ஒரே கடவுளிடத்திலும் மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையிலும் நம்பிக்கை வைத்தவர்கள் (முஸ்லிம்கள்)

நல்ல பேச்சை மட்டும் பேசட்டும்; இன்றேல் மௌனமா யிருக்கட்டும்,'' என்று எம்முஸ்லிம் சகோதரர்களுக்குக் கட்டளை வந்துள்ளது; இன்னும் "ஒரே கடவுளிடத்திலும் மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையிலும் நம்பிக்கை வைத்தவர்கள் (முஸ்லிம்கள்) அயலாரைக்குறித்து அவதூறு பேசாதிருப்பார்களாக," என்று பெருமானார் திருவாக்கியமும் பிறந்திருக்கின்றது. ஆகவே வீண் பிதற்றுக்களைச் சொரிவதைக்காணச் சும்மா இருப்பது சுகமெனச் சொல்லப்படுகிறது.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பது திருக்குறள்.

அல்லாஹுத் தஆலாவின் சன்னிதானத்தில் கடைசித் தீர்ப்புநாளில் கொண்டுபோய் நிறுத்தப்படும்போது ஆண்டவனுடைய மன்னிப்பை நாம் பெறுமுன் நம்மால் புறங்கூறப்பட்ட மனிதர்களிடத்திலும் அவதூறு தூற்றப்பட்ட மனிதர்களிடத்திலும் நாம் மன்னிப்புக் கேட்கும்படி நேரிடும். நாம் செய்யும் பாபத்தை யெல்லாம் செய்துவிட்டு ஆண்டவனிடம் எளிதில் மன்னிப்பு வாங்குவது இயலாது. அவன் நம்மை மன்னிக்குமுன் நம்முடைய எதிரிகளிடத்தில் மன்னிப்புப் பெறல் வேண்டும். இரும்புப் பாளத்தைத் தின்றுவிட்டுச் சுக்குக் கஷாயம் சாப்பிட்டால் அந்த இரும்புப்பாளம் ஜீரணமாகுமோ? முதலில் நம்முடைய எதிரிகள் நம்மை மன்னிக்கவேண்டும். பின்னர் ஆண்டவனிடத்தில் நாம் பிழை பொறுக்கும்படி வேண்டுதல் புரியவேண்டும். இப்படி யிருப்பதனால் தான் நம்மால் பிறருக்குண்டான தீமையை நாமே தீர்க்கவேண்டுமென்

னும் நியதி உண்டாயிருக்கிறது. இதனுல்தான் மனிதர் திருந்தவேண்டும். இல்லாவிடின் பிழை செய்யவேண்டிய தெல்லாம் மனிதன் தொழிலாகவும் அதை யெல்லாம் செப்பம் செய்வதுமட்டும் தெய்வத்தின் தொழிலாகவும் ஆய்விடும். இப்படி யாய்விட்டால் மனிதர்கள் தம்முடைய முயற்சியால் நல்வழியடைய முடியாமற்போம். நம்மு டைய குற்றங் குறைகளை நாமே நீக்கிக்கொண்டு இனி அம்மாதிரி தவறிப்போகாமல் காக்கும்படி ஆண்டவனி டம் வேண்டுதல் புரிந்து நல்வழிக்குவந்து மேன்மேலும் அபிவிருத்தி யடைதல் வேண்டும். இதுதான் இஸ்லாத் தின் கொள்கை.

பொறாமை யென்னும் ஷைத்தானுக்கு இடங்கொடு த்து நம்முடைய நண்பரை யெல்லாம் பழி தூற்றுவோ மாயின் கடைசியில் நாம் சுயநலமும் பேராசையும் அசிகை யும் அநாசாரமும் நிறைந்து எல்லாருக்கும் பொல்லாதவ ராய்த் தன்னந் தனியாய் ஆய்விடுவோம். ஆனுல் நாம் பிற ரைக்குறித்து நல்ல விதமாய் எண்ணுவோமாயின் எல்லா நலனும் விளையும்.

"பிறர்பிறர், சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்,"

மிக வேண்டத்தக்கது; பிறர்பாலுள்ள சிறு சிறு குறை களை யெல்லாம் பாராட்டாமல் அவர்களிடத்திலுள்ள பெருமைகளை மட்டும் எடுத்துப் பாராட்டல் வேண்டும். இது இஸ்லாத்தின் பெருமை. இப்படியே மனிதவர்க்கத் தார் பிறருடைய பெருமைகளை யெடுத்துப் பேசி அவர் களுடைய சிறுமைகளை மறைப்பார்களாயின் எல்லோரும் எவ்வளவு அன்னியோன்னியமான சகோதரத்துவத்துடன்

வாழலாம்! இஸ்லாத்தின் சகோதரத்துவம் அப்போது உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் சித்திக்குமன்றோ? எல்லோரும் ஏக சகோதரத்துவமா யிருப்போமாயின் கடைசித் தீர்ப்பு நாளில் நாம் யாரையும் கண்டு தலை மறையவேண்டியதில்லை. நாம் யாரைப்பற்றியும் புறங்கூறாமலும் அவதூறு செய்யாமலும் இருப்போமாயின் யாருக்கும் நாம் அஞ்சவேண்டியதில்லை. அல்லாஹுத் தஆலாவின் முன்னிலையில் நம்முடைய செய்கைகளும் வார்த்தைகளும் எண்ணங்களும் நிதரிசனமாய் விரித்து வைக்கப்படும்போது நாம் வெட்கப்பட வேண்டியதில்லை; பயப்படவும் தேவையில்லை. பிறந்ததுமுதல் இறக்குமட்டும் ஒருவித குற்றமும் செய்யாத ஒருவன் தன்னுடைய ஜீவதிசையின் இரகசியங்களை வேறொருவன் புத்தகரூபமாக எழுத முன்வந்தால் அதற்காக அச்சப்பட்டு நாணமடைவனோ? அஃதேபோல்தான் அல்லாஹுத் தஆலாவின் சன்னிதானத்திலும் அவன் தைரியமாயிருப்பான். அச்சன்னிதானத்தில் நம்முடைய எல்லாச் செய்கைகளும் பேச்சுக்களும் எண்ணங்களும் நம்முன் நிதரிசனமாய் நிற்கும்; அப்போது நம்மால் ஒன்றும் மறுப்பதற்கு முடியாது. நம்முடைய செய்கைகளும் பேச்சுக்களும் எண்ணங்களும் நிதரிசனமாய்ச் சாக்ஷியம் சொல்லும்போது எதை நாம் மறுப்பதற்கு ஆகும்? நல்ல செய்கைகளைச் செய்து நல்ல பேச்சுக்களைப் பேசி, நல்ல எண்ணங்களை எண்ணி இவ்வுலகத்தில் உயிர் வாழ்ந்தவர்கள் அந்தக் கடைசித்தீர்ப்பு நாளை எவ்வளவு மகிழ்ச்சியுடன் எதிர்பார்ப்பார்கள்! அப்படியல்லாத பாபிகளுக்கு அந்தக் கடைசிநாள் எவ்வளவு பயங்கரமுள்ளதா யிருக்கும்! தாங்கள் யாரைக்குறித்துப் புறங்

கூறி அவதூறு செய்தார்களோ அப்படிப்பட்ட எதிரி களும், தங்களுடைய கெட்ட செய்கைகளும், பேச்சுக் களும், எண்ணங்களும், அல்லாஹ்வின் முன்னிலையில் தம க்கு விரோதமாய்ச் சாக்ஷியம் சொல்ல முன் வருவார்களே யென்று நினைத்த மாத்திரத்தில் பாபிகளின் மனம் என்ன பாடு படமாட்டாது! அவர்கள் இவ்வுலகைவிட்டுப் பிரி வதற்கு என்னவிதமான துன்பந்தான் படமாட்டார்கள்!! அவர்கள் உயிர் இவ்வுலகை விட்டுப்போக மனமில்லா மலே அதிக கஷ்டப்படும். மரணமென்பது அப்பாபிகளுக் குப் பெரும்பயமா யிருக்கும். நல்ல மனிதர்கள் எல்லாரும் தங்களுடைய நற்கிரியைகளுக்கு நற்பயன் வரப்போகிற தென்று கடைசித் தீர்ப்பு நாளை ஆவலுடன் எதிர்பார்ப் பார்கள். நியாயமான அரசனிடத்தில் பரிசுபெறப் போ வதுபோ லிருக்கும் நல்லோர்போகும் சந்தோஷம். அதே அரசனிடத்தில் தண்டனை யடையப் போவது போலா கும் பாபிகளின் கஷ்டம்.

ஆதலின், முஸ்லிம் சகோதரர்காள்! நாம் நல்லதை யே செய்வோம், நல்லதையே பேசுவோம், நல்லதையே எண்ணுவோமாக. பொய், புறம், கோள், அவதூறு, அசி கை முதலியவற்றை அறவே விட்டு விடுவோமாக. அழுக் காறு கொள்வதாலும் அவதூறு பேசுவதாலும் நமக்கு மேன்மையுமில்லை, எதிரிகளுக்குத் தாழ்மையு மில்லை.

"அழுக்கற்(று) அகன்றாரும் இல்லையஃ தில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்"—குறள்.

உண்மை இவ்வாறு இருக்கும்போது ஒருவகைப் பிர யோசனமு மில்லாமல் நாம் என் வீண்பாபத்துக் குள்ளா தல் வேண்டும்? அழுக்காற்றாலும் அவதூறாலும் அல்லாஹ்

விடத்தில் நாம் பாபிகளாகப் போவதல்லாமல் வேறு பிரயோசனத்தை யாம் கண்டதில்லை. ஏன் நல்லவழியில் காலங் கழித்து நாம் நல்லவராக ஆதல் கூடாது? நம்மாலேயே ஏன் நாம் கேட்டையடைகின்றோம்? மேன்மைக்குப் போக வழியிருந்தும் நாமே தாழ்மையை வருந்தி யழைக்கின்றோம். என்ன இது மதியீனம்!

"10 * ஈமானுள்ளவர்கள் (ஒருவருக் கொருவர்) சகோதரர்களாயிருக்கிறார்கள்; ஆதலின் உங்கள் சகோதரர்களுக்குள் சமாதானத்தை உண்டாக்குங்கள்; இன்னும் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள், நீங்கள் கிருபை செய்யப்படுகிறவர்களா யிருக்கும் பொருட்டு.

11 ஏ, ஈமான் கொண்டவர்களே! (உங்களுள்) ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை ஏளனம் செய்யாதிருக்கக்கடவர்; (ஏளனம் செய்கிற) அவர்களைக்காண (ஏளனம் செய்யப்படுகிற) அவர்கள் நல்லவர்களா யிருத்தல் கூடும்; இன்னும் ஸ்திரீகளும் மற்ற ஸ்திரீகளை ஏளனம் செய்யாதிருக்கக் கடவர்; அவர்களைக்காண இவர்கள் நல்லவர்களா யிருத்தல் கூடும்; இன்னும் ஒருவர் மற்றவரைப் பழித்துக் குறை கூறவும் வேண்டாம், அருவருப்பான பேர்களைக்கொண்டு அழைக்கவும் வேண்டாம்; ஈமான் கொண்ட பின்னர் பாதகச்செயலைக் குறிக்கும் பெயர் கெட்டது; (அந்தப் பெயரால் அழைப்பதை) விட்டு நீங்காதவர்கள் எவரோ அவர்கள் அக்கிரமக்காரரா யிருக்கிறார்கள்.

12 ஏ, ஈமான் கொண்டவர்களே! எண்ணங்களில் (சந்தேகமான) அநேகத்தைவிட்டு நீங்கள் தப்பிக்கொள்

* உறுதியான நம்பிக்கை யுள்ளவர்கள்.

ளுங்கள்; ஏனெனின், நிச்சயமாக எண்ணங்களுள் சில பாவமானவையா யிருக்கின்றன; இன்னும், குற்றங்களைத் தேடித் திரியவும் வேண்டாம்; இன்னும், உங்களுள் சிலரைச் சிலர் புறங்கூறவும் வேண்டாம்..."

அல்குர்ஆன், 49: 10, 11, 12.

இவ்வாறு அல்லாஹுத் தஆலா தன் திருவேதத்தில் பிறரைப்பற்றி நாம் குறைகூறக் கூடாதென்று கண்டித்திருக்கின்ருன். இவ்வுலகத்தார் மேற்கூறிய குர்ஆன் வாக்கியங்களைக் கைக்கொண்டு நடந்திருப்பார்களேல் இவ்வுலகம் எத்தனை காலத்துக்கு முன்னமேயே ஆனந்த மயமான ஆலமாக மாறியிருக்கும்! மனஸ்தாபங்களும் மாச்சரியங்களும் பலகாலத்துக்கு முன்னமே ஒழிந்துபோயிருக்குமன்ருே? அவ்வாருயின் மன்பதையெல்லாம் மிக ஒற்றுமையுடன் இறைவன் கட்டளைக்குக் கீழ்ப்பட்டு (இஸ்லாத்தில்) நடந்து வருமன்ருே? அஃது எவ்வளவு சிலாக்கியமான நிலைமையாகும்! எவ்வளவு எல்லாராலும் அது வேண்டத் தக்கதாகும்!

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு"—குறள்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.
நாம் இறைவனைப்புகழ்ந்து அவனது திருத்தூதர்மீதும்
வாழ்த்துக் கூறுகின்றோம்.

# இஸ்லாமும் விக்கிரக ஆராதனையும்

"1 நீர் சொல்வீராக. 'ஏ காபிர்களே! (சன்மார்க்கத்தை மறைப்பவர்களே! அல்லது சன்மார்க்கத்துக்கு மாறாக நடப்பவர்களே!) 2 நீங்கள் வணங்குவதை (விக்கிரகங்களை) நான் வணங்கேன். 3 நான் வணங்குவதை (இணையற்ற பரம்பொருளை) நீங்கள் வணங்க மாட்டீர்கள். 4 இன்னும், நீங்கள் வணங்குவதை நான் வணங்குகிறவன் அல்லன். 5 நான் வணங்குவதை நீங்கள் வணங்குகிறவர்களும் அல்லர்.'"—அல்குர்ஆன் 109: 1—5.

"நீர் சொல்வீராக, '(நீங்கள்) அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள்; (அவனுடைய) தூதருக்கும் வழிபடுங்கள்; (அவருக்கு வழிபடாமல்) புறக்கணிப்பீர்களேல் பின்னர் அவர்மீது சுமத்தப்பட்டது மாத்திரமே (அதாவது இறைவனது கட்டளையைச் செலுத்திவிடுவது மாத்திரமே) அவர் பொறுப்பாகும்; உங்கள்மீது சுமத்தப்பட்டது (அதாவது வழிபடுதல்) உங்கள் பொறுப்பாகும். ஆகவே, நீங்கள் அவருக்கு வழிபடுவீர்களேல் சன்மார்க்கத்தை யடைவீர்கள். (கட்டளையைப்) பரிஷ்காரமாகச் செலுத்திவிட

வேண்டுவதே தவிரத் தூதர்மீது (வேறு பொறுப்பு) இல்லை.' "— அல்குர்ஆன், 24: 54.

எம்முடைய திருமறையும் பெருநபியும் ஏகோபித்து உரைத்திருக்கும் இஸ்லாத்தின் நுட்பம் யாதெனின் லா இலாஹ இல்லல்லாஹு என்னும் ஒரு தனிச் சிறந்த மந்திரமேயாகும். இம்மகாமந்திரத்தின் பொருள் யாதெனின், "வணக்கத்துக்கு உரியவன் ஒரே இறைவனன்றி வேறொரு தெய்வமுமில்லை," என்பதாகும். இம்முக்கியமான மூலாதாரக் கொள்கைக்கு இணங்க எம்முஸ்லிம் சகோதரர்கள் அனைவரும் இணையற்ற ஏகபராபரனாகிய ஒரு தனிப்பரம்பொருளையே வணங்குதல் அத்தியாவசியமாகின்றது. இத்தகைய அத்துவைதக் கடவுளைக்காண வேறொரு தெய்வம் உண்டென்று சொல்லுதல் இஸ்லாத்தின் மூலக்கொள்கைக்கு முரணாகும். ஆகவே இவ்வண்டகோளச் சராசரங்களையும் படைத்துக்காத்து அழிப்பதற்குப் பலதெய்வங்கள் வேண்டுமென்று எம்முஸ்லிம் சகோதரர்கள் நம்புவதில்லை. பலதெய்வங்கள் இல்லையென்று சொல்வது மட்டுமன்று; ஒரே இறைவன்தான் உண்டென்று சொல்லும்போதும் அக்கடவுளை இணையற்ற பரம்பொருளென்று எண்ணிப் பூஜித்தல் வேண்டும். தனிமுதல்தெய்வத்துக்கு இணையாக வேறொருவஸ்துவை வைத்துப் பூஜிப்பது இஸ்லாமியக்கொள்கைக்கு முற்றிலும் முரணாகும். பலதெய்வங்கள் இல்லையென்று யாம் நம்புவதேபோல் ஒரே தெய்வமாகிய அப்பரம்பொருளுக்கும் இணைவைத்துப் பூஜிப்பது கூடாது. இதனால்தான் இஸ்லாத்தில் விக்கிரக ஆராதனை அறவே கூடாதென்று எமது திருமறையும் பெருநபியும் கூறியுள்ளார்கள். எமது நபிகள் பெரு

மானரின் திருநாவின் வழியே இறைவனல் வெளிப்படுத் தப்பட்ட அல் குர் ஆனேயும், அதனைக் கருணையுடன் வெ ளிப்படுத்தித்தந்த இணையற்ற வள்ளலாகிய அம்மகானவர் களின் திருவாக்கியங்களையும் உய்த்துணர்ந்தவர்கள் இணை வைத்துப் பூஜிக்கும் எவ்வகைவிக்கிரக ஆராதனையையும் அறவே ஒழித்திருக்கின்றார்கள்.

விக்கிரக ஆராதனை யென்பது உருவங்களைச் செய்து வைத்து அவற்றைத் தெய்வங்களென்று கொண்டாடுவது மட்டுமன்று. விக்கிரகம் மனித உருவாகவேனும் வேறு பிராணிகளின் உருவாக வேனுந்தான் இருக்கவேண்டு மென்பதில்லை. ஒரு கல்லையேனும் கட்டையையேனும் அல் லது வேறொரு வஸ்துவையேனும் தெய்வத்துக்கு இணை யாகவைத்தால் அதுவும் விக்கிரக ஆராதனையே. உருவங் களையாவது அல்லது வேறு வஸ்துக்களையாவது செய்து வைத்துக்கொண்டு அவற்றையே தெய்வமென்றாவது அல் லது அவற்றில் தெய்வம்கிமை பிரவர்த்தித்திருக்கின்ற தென்றாவது நினைத்து அவ்வுருவங்களைப் பூஜிப்பதும் விக் கிரக ஆராதனைதான். இன்னும் மனிதர்களையேனும் மிரு கங்களையேனும், வேறெந்த உயிருள்ள பிராணிகளையேனும் உயிரில்லாப் பொருள்களையேனும் தெய்வமென்றாவது தெய்வத்துக்கு இணையென்றாவது நினைத்துப் பூஜிப்பதும் விக்கிரக ஆராதனையென்றே சொல்லப்படும். இணையற்ற பராபரவஸ்துவுக்கு வேறொன்றை இணைவைத்துப் பூஜிப் பதேகூடாதென்பது எமது இஸ்லாமியக் கொள்கை. விக் கிரக ஆராதனை புரியும் சிலர், "நாங்கள் இந்த விக்கிரகங் களையும், இதரவஸ்துக்களையும் தெய்வமாகப் பாவித்துப் பூஜிக்கவில்லை; ஆனல் தெய்வத்தின் ஞாபகம் மனஸில் தங்

குவதற்கு இவ்விக்கிரகங்களும் இதரவஸ்துக்களும், ஆதாரமா யிருக்கின்றன ; எல்லாவஸ்துக்களிலும் தெய்வத்தின் சம்பந்த மிருப்பதால் அப்படிப்பட்ட ஒருவஸ்துவை வைதது அதன் காரணமாகப் பரம்பொருளைச் சிந்திப்பதால் என்ன தவறு?" என்று தர்க்கிக்கின்றனர். இவ்வகண்டாகாரமான வெட்டவெளியில் காணப்படும் ஒவ்வொரு வஸ்துவிலும் இறைவனது மகிமை நிறைந்துமலிந்து கிடக்கும்போது இணைவையாமல் அவனை மனனம்பண்ணுவது கடினமாயிருக்கிறதென்றும் அப்படிப்பட்ட இறைவனை மனனம் செய்ய வேண்டுமாயின் அவனால் படைக்கப்பட்ட ஒரு வஸ்துவைக் கண்ணெதிரில் வைத்துக் கொண்டால் தான் அப்பரம்பொருளின் ஞாபகம் மனத்தில் வருமென்றும் அவர் சொல்லும் வாதம் பிடிவாதமாகவே காணப்படுகின்றது. உலகத்தில் எங்கே கண் திறந்து பார்த்தபோதிலும் அங்கெல்லாம் அந்தப் பராபரவஸ்துவின் ஞாபகமே நம்மனத்தில் வந்து குடிகொள்ளும்போது இறைவனுக்காக ஓர் இணைவைத்தால் தான் மனம் தெய்வத்தினிடத்தில் குவியும் என்றும் இன்றேல் அம்மனம் ஒன்றுபடாதென்றும் சொல்வது புத்திக்குப் பொருத்தமாயில்லை. எல்லாப் பொருள்களிலும் தெய்வசம்பந்தமிருக்கும்போது சில வஸ்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு அவற்றையே தெய்வம்போல் பாவித்துப் பூஜைசெய்வானேன்? உலகத்தில் கண்விழித்துப் பார்க்குமிடமெல்லாம் கடவுளின் கருணைப்பிரகாசம் வீசும்போது கண்களைமூடி மௌனியாயிருந்து அப்பரம் பொருளைச் சிந்திப்பதற்கு ஓர் இணை வேண்டுமென்பது அவசியமோ? விக்கிரக ஆராதனை புரிபவர்கள் தாம்பூஜிக்கும் வஸ்துக்கள் கடவுளைக் காட்டக்

கூடிய ஒரு சின்னமென்று சொல்லும்போது, ஏன் அவர்கள் அந்த விக்கிரகங்களுக்கு மந்திரபூர்வமாய் மகிமையேற்றுவதுபோல் சில செய்கைகளைச் செய்கின்றனர்? தெய்வத்தின் ஞாபகச்சின்னமான விக்கிரகங்களுக்கு ஏன் அவர்கள் கல்யாண முதலிய உத்ஸவங்களைச்செய்து நம்ம னிதரைப்போல் அந்த விக்கிரகங்களையும் சுகதுக்கம் கொண்டாடும்படி செய்கின்றனர்?

நாம் முன்சொன்னதுபோல் சிலர் கடவுளுக்கு இணையாக வேறு வஸ்துக்களை வைத்துப் பூஜிக்கின்றனர்; இன்னும் சிலர் மனிதர்களுக்கே இணைவைத்துப் பூஜிக்கின்றனர். கண்ணுக்குப் புலப்படாத கடவுளுக்கு இணையாகவேனும் காலஞ் சென்றுபோன மனிதர்களுக்கு இணையாகவேனும் ஒருவஸ்துவை நிறுத்தி அவ்வஸ்துவின் காரணமாகக் கடவுளையேனும் காலஞ் சென்ற மனிதர்களையேனும் பூஜித்தால் அதுதான் இஸ்லாத்தில் ஷிர்க்கு என்பது; அதுதான் இம்மார்க்கத்தில் அறவே கூடாதென்பது. எம்து திருவேதமும் பெரு நபியும் முறையிடுவதன் சாரத்தைக் கிரகித்தவர்கள் எவ்வகை இணையையும் வைத்துப் பூஜிக்கும் ஷிர்க்கையே விட்டொழித்து விடுவார்கள்.

ஒன்றுக்கு மற்றொன்று இணையென்று நினைத்துப் பூஜிப்பதில் ஒன்றைப்போல் மற்றொன்று இருந்தால்தான் ஷிர்க்கு ஆகும், இன்றேல் தோஷமில்லை, என்று நினைப்பது தவறாகும். என்னுடைய பாட்டனை நினைக்க வேண்டுமாயின் அவருடைய போட்டோப்படம் ஒன்று இருந்து அதைப் பூஜித்தால்தான் ஷிர்க்கு என்றும் அவருடைய வஸ்திரமேனும் வாளாயுதமேனும் ஒன்று இருந்து அதை வைத்துப் பாட்டனை நினைத்துப் பூஜித்தால்

அது ஷிர்க் ஆகமாட்டாது என்றும் தவறு எண்ணவே ண்டாம். என் பாட்டனுடைய உருவப்படமா யில்லா விடினும் வேறெந்த வஸ்துவையாவது வைத்து அது என் பாட்டனுக்கு இணையென்று நினைப்பேனுயின் அது உட னே ஷிர்க்காகும். அவருடைய கையைப்போல் வெள்ளி யாலேனும் பொன்னினுலேனும் பித்தளையாலேனும் தக ரத் தகட்டாலேனும் சந்தனத்தாலேனும் வேறெந்த வஸ் துவாலேனும் ஒரு கை செய்து வைத்துக்கொண்டு அக் கையைப் பார்த்தவுடன் எனக்கு என் பாட்டனுடைய ஞாபகம் வருகின்றது, அதனுல் அக்கைக்குத் தூபதீப ஆராதனை செய்யவேண்டுமென்று சொல்வேனுயின் நான் விக்கிரக ஆராதனையில் மூழ்கினவனுகின்றேன். அஃதே போல் சில கைகளை (பஞ்சாவை)ச் செய்து வைத்துக்கொ ண்டு நபிகள் பிரானின்பேரர்களாகிய ஹஸன், ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமாவையும் இவர்கள் பிதா அலி ரலி யல்லாஹு அன்ஹுவையும். இன்னும் சிலரையும் அக் கைகள் குறிப்பிடுவதாய்ச் சிலர் சொல்வாராயின் அவர் கள் விக்கிரக ஆராதனையில் சம்பந்தப்படுகின்றுர்களா இல் லையாவென்று நீங்களே உய்த்துணர்ந்து நோக்குங்கள்; முஸ்லிம் சகோதரர்காள்! நமது பஞ்சா வைக்கும் வைப வத்தை யான் தூஷிப்பதாய் எண்ணி இவ்வேழை மதி யேன்மீது முன்கோபம் கொள்ளாது யான் கூறுவதின் உண்மையைமட்டும் புத்திமான்களாகிய நீங்கள் உற்று நோக்குவீர்களாக. பஞ்சாவை வைத்து ஹஸன், ஹு ஸைன் முதலியோரை மனனம் செய்கின்றுமென்று சொல்வது விக்கிரக ஆராதனை யாகாதா? இது இஸ்லாத் துக்குப் பொருத்தமாகுமா? இது நமது யுக்திக்கும் புத்தி

க்கும்தான் பொருத்தமான தாகுமா? எனது நண்பர்காள்! என்மீது கோபியாது நிதானத்துடன் சிந்தனைசெய்து பாருங்கள். இப்படி நாம் பஞ்சா வைத்துக் கொண்டாடுவது இதன் தலைப்பில் கண்ட குர்ஆன் ஆயத்துக்குப் (24: 54) பொருத்தமுள்ள காரியமாகுமோ? அந்தோ பரிதாபம்! நமது அறிவு இப்படியும் மழுங்கிக் கழுந்தாகி விடுமோ!! சில கைகளைச் செய்து வைத்துக்கொண்டு அவை ஹஸன் என்றும், ஹுஸைன் என்றும், அலி யென்றும் நினைத்து அக்கைகளுக்குப் பானகம் முதலிய வஸ்துக்களைக்கொண்டு ஆராதனை புரிவதும், அக்கைகளுக்குத் தூப தீபம் காட்டுவதும் அவற்றைத் தூக்கிக்கொண்டு ஊர் வலம் சுற்றுவதும் தீயிலிறங்குவதும் விக்கிரக ஆராதனையல்லவென்று பகுத்தறிவுள்ள எந்த முஸ்லிமும் சொல்லத் துணிவரோ?

பாத்திமா எமது நாயகம் நபிகள் பெருமானாரவர்களின் செல்வப் புதல்வி என்பதும் இவர்களின் உயிர்த்தோழராகிய கணவர் அலி ரலி யல்லாஹு அன்ஹு என்பதும் இவ்விருவரின் செல்வப் புதல்வர்களே ஹஸன், ஹுஸைன் என்பதும் உங்களெல்லோருக்கும் நன்றாகத் தெரிந்தவிஷயமே. எமது திரு நபி யவர்கள் மரணமாகும்போது மதத் தலைமையாவது ராஜ்யத் தலைமையாவது தங்களுடைய குடும்பத்தில் இருக்க வேண்டுமென்று ஒருவித ஏற்பாடும் செய்யவில்லை யென்பது உலகமறியக் கிடக்கும் உண்மையன்றோ? இஸ்லாமார்க்கமும் இஸ்லாம் ராஜ்யமும் குடியரசாய் (Democracy) வாவேண்டு மென்பது எம்பெருமானாரின் அபிப்பிராயமன்றோ? நபியவர்களின் வாரிஸிலேயே மதத்தலை

மையும் ராஜ்பத்தலைமையும் வரவேண்டுமென்று அவர்கள் எண்ணினார்களில்லை. நபியின் வாரிஸ் நபியல்ல, அரசன் மக்கள் அரசரல்ல, என்பதும் யார் எந்த ஸ்தானத்துக்கு அருகரோ அவரே அந்த ஸ்தானத்துக்கு வரட்டும் என்பதுமே எம்பெருமானின் கொள்கை. அக்கொள்கைக்கு இணங்கவே திரு நபியவர்கள் தங்களுக்குப் பின் இன்னார் தான் கலீபா என்று நியமனம் செய்யவில்லை. அவர்களுடைய ஜீவ திசைக்குப் பின்னரும் அவர்களின் மருகரான அலியும், வாரிஸ்களான ஹஸன், ஹுஸைனும் தலைமை வகிக்காமல் அபூ பக்கர்ஸித்தீக் அவர்கள் மதத் தலைமையையும் ராஜ்பத்தலைமையையும் வகித்து முதல் கலீபாவானார்கள். பின்னர் உமருப்னுல் கத்தாப் 2-வது கலீபாவாகவும் அதன்பிறகு உதுமானுப்னு அப்பான் 3-வது கலீபாவாகவும் நியமனம் பெற்றார்கள். திரு நபியின் தனி மருகரான அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கடைசியில் 4-வது கலீபாவாக அமர்ந்தார்கள். 3-வது கலீபா காலஞ்சென்று அதற்கடுத்த கலீபா ஏற்படவேண்டியிருந்த போதே உமையாவின் பரம்பரையிலுதித்த அபூஸுபியானுடைய குமாரரான மஆவியா ரலி யல்லாஹு அன்ஹு அவர்கள் சிரியாதேசத்தின் தலை நகரான திமிஷ்கில் சிற்றரசாக இருந்தவர்கள் 4-வது கலீபாவாக வர இச்சித்தார்கள். ஆனால் அலி ரலி யல்லாஹு அன்ஹு அவர்கள் 4-வது கலீபாவாக நியமனம் பெற்றபின் மஆவியாரலி யல்லாஹு அன்ஹு திமிஷ்கிலேயே சிற்றரசாக இருந்து விட்டார்கள். ஆயினும் 4-வது கலீபாவுக்கும் இந்த மஆவியாவுக்கும் இடையில் பகைமை மட்டும் முற்றிக்கொண்டே வந்தது. கடைசியில் அலியார் இறந்துபோன பின்னர்

அவர்களின் முதல் குமாரரான ஹஸனர் 5-வது கலீபாவாக நியமனம் பெற்ருர்கள். அப்போதும் திமிஷ்கிலிருந்த மஆவியா தமக்கு அப்பட்டம் கிடைக்கவேண்டுமென்று விரும்பினர். ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மகா சாந்தகுண சீலரானபடியால் மஆவியாவுடன் எதிர்த்து நின்று கலீபாப் பட்டத்தை வகிக்க மனமில்லாதவர்களாய்த் தங்கள் பட்டத்தை வேண்டாமென்று நீக்கிவிட்டு மஆவியாவே கலீபாவாக இருக்கட்டுமென்று இணங்கிவிட்டார்கள். ஆனல் மஆவியாவுக்குப் பின் தங்களுக்கு கலீபாப்பட்டம் கிடைக்குமென்று ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எண்ணியிருந்தார்கள். ஆனல் மஆவியாவின் மூத்தமகனன கொடிய எஜீது, ஹஸனர் உயிரோடிருக்குமட்டும் தனக்கு கலீபாப்பட்டம் கிடைக்ாதெனக் கண்டு ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தன் சூழ்ச்சியால் விஷமிட்டுக்கொன்றுவிட்டான். மஆவியா தமக்கு அந்திய திசைவந்தபோது தன்மகன் எஜீதை கலீபாவாக நியமித்துவிட்டுச் சென்ருர். எஜீது முஸ்லிம் உலகுக்கு கலீபாவாக வரத்தக்க யோக்கியதையைப் பெருதவன். ஆதலின் இஸ்லா மார்க்கத்தில் மதத்தலைமையும் ராஜ்யத்தலைமையும் வம்ச பரம்பரையாய் வருதல் கூடாதென்றும் யார் எந்தப்பதவிக்கு அருகராகின்ருரோ அவரே அப்பதவியை வகிக்கவேண்டுமென்றும் குடியரசுக்கொள்கை (Democratic' principle) நிலை நின்று விட்டபடியால் மஆவியாவின் பரம்பரையில் கலீபாப்பட்டம் வருதல் முஸ்லிம் கொள்கைக்கு விரோதமாயிருக்கிறதென்று ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எஜீதின் கிலாபத்தை ஒப்புக்கொள்ளவில்லை. கலீபாவின் மகன் கலீபாவல்ல,

அரசன் மகன் அரசனல்ல, மௌலவி மகன் மௌலவியல்ல, யார் எப்பதவிக்குரிய யோக்கியதையை யடைகிறார்களோ அவர்களே அப்பதவியை அடைதல் வேண்டும் என்னும் குடியரசுக் கொள்கையே இஸ்லாத்துக்குப் பொருத்த மானது, அதுதான் இஸ்லாத்தின் பெருமையை முன்னுக் குக் கொண்டுவரத்தக்கது. ஆதலின் அக்கொள்கை தான் நிலைநிற்கவேண்டும் என்று ஹுஸைன் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் வாதிக்கத் தலைப்பட்டார்கள். யோக் கியதையுள்ள அருகர்களே கலீபாவாக இருப்பது இஸ் லாத்துக்குப்பொருத்தமானதென்பதுஇவர்கள்கொள்கை; ஆனால் கலீபாவின் மகன் கலீபாவாகத் தமது பரம்பரையி லேயே அப்பட்டம் நிலைக்க வேண்டுமென்பது மஆவியா வின் எண்ணமென்று நாம் சொல்லத் துணியோம். இஸ் லாத்தின் மேற்கூறிய உண்மையான உயரிய இக்கொள் கைக்காகப் பாடுபட்டுத் தான் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதானது; (ஷஹீது—அல்லாஹ் வின் பாதையில் இரத்தச்சாக்ஷி மரணமாகக் கொலையுண்ட புண்ணிய ஆத்மா) இஸ்லாத்தில் எல்லோரும் சமம்; ஆனால் உத்தியோகத்துக்குத்தக்க யோக்கியமுள்ள புருஷரே அதைவகிக்க அருகராவர் என்னும் அருமையானகுடிய ரசுக்கொள்கைக்காகத்தான் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு கூபாவில் எஜீதின் சூழ்ச்சிக்குள்ளாகி ஷஹா தத்தை அடைந்தார்கள். எவ்வகை யோக்கியதையு மற்ற எஜீதை கலீபாவாக ஒப்புக்கொள்ள மாட்டேனென்ற குற்றத்துக்காகக் கூபாவின் தலைவனான உபைதுல்லாவால் (இவன் எஜீதின் கவர்னர்) அனுப்பப்பட்ட அம்ரு, ஷிம்ரு என்பவர்களின் அக்கிரமச்சண்டையில் ஹுஸைன்

ஈலியல்லாஹு அன்ஹு ஷஹீ தானார்கள். யூபுரத்தீஸ் (புராத்து) நதிக்கரையில் கூடாரம் போட்டிருந்தும் அந் நதியின் ஜலத்தைத் தாகத்துக்கு ஹுஸைனும் அவர்களின் குடும்பத்தாரும் அருந்தக் கூடாதென்று உபைதுல்லா வின் ஆள்களான அம்ரும் ஷிம்ரும் தடைசெய்து விட்டார்கள். தாகத்துக்குத் தண்ணீரில்லாமல் மகா அதர்ம யுத்தத்தில் அம்ரும் ஷிம்ரும் ஹுஸைனையும் அவருடைய வம்சத்தார் 17 பேரையும் அவருடன் வந்த இதா முஸ் லிம் 55 பேர்களையும் கொன்றார்கள். மகா கொடுமையான அதர்ம யுத்தம்! மிகப்பரிதாபமான கொடுங்கொலை!! என்ன அருமையான இஸ்லாத்தின் உண்மைக் கொள் கைக்காகப் பாடுபட்டு ஷஹீதானார்கள்!!!

இவ்வளவு துக்ககாமான செய்தியை வருஷமொரு முறை நாம் கொண்டாடுவதன் அழகு இப்பஞ்சாவை வைத்துக் குதித்துக் கூத்தாடுவதுதானா? இப்படிக் குதித் துக்குதித்துக்கொண்டாடுவதைக்காண ஹுஸைன் என்ன காரணத்துக்காக ஷஹீதானார்கள் என்று அதன் தாத்பரி யம் தெரிந்து அவர்களின் ஆவிக்கு அமைதியும் இறைவ னருளும் உண்டாகும்படி நாம் கடவுளிடத்தில் வேண்டு தல் புரிந்தால் அஃது எத்தனை பிலாக்கிய முள்ளதாகும்! இதைச்செய்யாமல் தங்களை ஸுன்னத்து ஜமா அத்தாக எண்ணுகிற சில முஸ்லிம்களும் ஒன்றுமே யுணராத முஸ் லிமல்லாத வேறு சில ஜாதியார்களும் பஞ்சா வைத்துக் கொண்டு விக்கிரக ஆராதனை புரிகின்றனரே, இது என்ன அறியாமை! இவ்வாறு சிலர் கொண்டாடும் வெறியாட் டுப் போன்ற இத்துஷ்ட விளையாட்டை யாரேனும் ஹு ஸைனுடைய ஷஹீதான செய்கையைக் காட்டுகிறதென்று

சொல்வரோ? எப்போதும் துக்கத்துடன் கொண்டாடத் தக்க அந்த ஷஹாதத்துத் தான் இப்படி முஹர்ரம் மாதத்தில் குடியாகவும் வெறியாகவும் துஷ்டத்தனத்துடன் துள்ளி விளையாடுகிறதென்றால் அறிவுள்ள எவரும் அதைச் சரியென்று ஒத்துக்கொள்ளுவாரோ! என்ன அனியாயம்! என்னகொள்ளை!! மகாதுக்ககரமான அந்த ஷஹாதத்து இப்படியும் மாறிவிடுமோ!!! இது யார் செய்த தீவினையோ அறிகிலேம். விக்கிரக ஆராதனையே கூடாதென்று திருமறையும் பெருநபியும் முறையிடும்போது பஞ்சாவை வைத்து ஹஸன் என்றும் ஹுஸைன் என்றும் இணைவைத்துப் பூஜிக்கும்படி செய்து விட்டனரே! அந்தோ பரிதாபம்!!

தங்களை ஸுன்னத்து ஜமா அத்தென்று சொல்லிக் கொண்டு பஞ்சா வைத்துப் பூஜிப்பவரை, "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று வினவினல், சிலர் தாங்கள் பஞ்சா வைப்பதை நிறுத்திவிட்டால் பழயகாலத்தில் நபாப்களால் விடப்பட்ட இனும் நிலங்களைக் காருண்ய கவர்ண்மெண்ட்டார் பிடுங்கிக் கொள்ளுவார்களென்கின்றனர்; வேறுசிலர், பெரியவர்கள்நாள்முதல் கொண்டாடிவந்த பஞ்சாவை நிறுத்திவிட்டால் தங்கள் குடும்பத்தை ஹஸன், ஹுஸைன் துன்பப்படுத்துவார்கள் என்கின்றனர்; மற்றும் சிலர், பாமரர்களைத் திருத்தவேண்டுமென்றால் அவர்கள் வழியில்போய்ப் பஞ்சா வைத்துப் பிறகு அவர்களைத் திருத்தவேண்டுமென்கின்றனர். இன்னும் பலர் பலவிதமாய்ப் பொய்ச்சாக்குச் சொல்கின்றனர். மேலேசொன்ன 3 வகை மனிதர்களுள் 2-வது 3-வது வகையாரின் தர்க்கம் புத்திக்குப் பொருத்தமுள்ளதாய்க் காணப்படவில்லை; அதனல் அவர்களைப்பற்றிக் கவனிக்கவேண்டியதில்லை.

கவர்ன்மெண்ட்டார் இனும் நிலங்களைப் பிடுங்கிவிடுவார்கள் என்று சமாதானம் சொல்பவரின் நிலைமையைச் சிறிது கவனிப்போம். தங்களுடைய இனும் பர்வானவில் பஞ்சா வைத்து இப்போது கொண்டாடுவதுபோல் ஆஷூராக் கொண்டாடவேண்டுமென்று எழுதியிருப்பதாய் அவர்கள் சொல்லுகிறார்கள். இது நம்பத்தக்கதாயில்லை. சரியான முஸ்லிமால் அப்பர்வான கொடுக்கப்பட்டிருந்தால் அப்படி அதில் எழுதியிராது. ஆனால் அப்படியே பர்வானவில் இருப்பதாய் வைத்துக்கொள்வோம்; இப்படி முஹர்ரம் பண்டிகை, கொண்டாடுவது ஸுன்னத்து ஜமா அத்தாருக்கு விரோதமாகிறது, ஆதலின் அதை நிறுத்திவிட்டு இனும் நிலத்தின் வரும்படியைக்கொண்டு வேறு நல்லவழியில் மார்க்க விதிக்கு ஒத்தவண்ணம் செலவுசெய்வதாய்ச் சொன்னால் நமதுகாருண்ய கவர்ண்மெண்ட்டார் ஒத்துக் கொள்ள மாட்டார்களென்று கருதுகிறீர்களோ? அப்படியில்லை. "உங்களுடைய ஸுன்னத்து ஜமா அத்தாரின் கொள்கைக்கு நேர் விரோதமாயிருப்பினும் பஞ்சாவைத்து இப்படித்தான் ஆஷூராக் கொண்டாடவேண்டும்; இன்றேல் உங்களுடையமான்யங்களைப் பிடுங்கிக்கொள்வோம்," என்று நமது கவர்ண்மெண்ட்டார் சொல்வார்களா? தங்களுடையதர்ம நீதியில் ஆங்கிலேய அரசாங்கத்தார் இப்படியும்செய்வார்களென்று கனவிலும் கருதுகின்றீர்களோ? பஞ்சா வைப்போர் சொல்லும் நொண்டிச் சமாதானமேயொழிய இது வேறில்லை. இஃதிருக்கட்டும். பஞ்சாவை நிறுத்திவிட்டால்கவர்ண்மெண்ட்டார் மான்யங்களைப்பிடுங்கிக்கொள்வதாய் வைத்துக் கொள்வோம். நம்முடைய மார்க்கக் கொள்கைக்கு விரோதமாய் நடக்கமாட்டோ

மென்று சொல்வதால் கவர்ண்மெண்ட்டார் மான்யங்களைப் பிடுங்கிக்கொண்டால் கொள்ளட்டுமே. பஞ்சா நிறுத்தும் ஸுன்னத்து ஜமா அத்தின் மனிதர் தங்களுடைய மனச்சாக்ஷிக்கும் ஈமானுக்கும் விரோதமான காரியமாயிருந்தாலும் பஞ்சாவைவைத்து மான்யத்தைக்காப்பாற்றுவதையே பெரிதாக அவர்கள் எண்ணுகிறார்களேயொழிய ஈமானையும் இஸ்லாத்தையும் பெரிதென்று எண்ணமாட்டார்கள் போலும். பஞ்சாவைக்கும் ஸுன்னத்து ஜமா அத்தார் பணம் வருவதாயிருந்தால் தங்கள் மனச்சாக்ஷியையும் ஈமானையும் விற்று விடுவார்கள் போலும். அவ்வாறாயின் இவர்களை முனாபிக்கீன்கள் (உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்வோர் அல்லது கள்ள முஸ்லிம்கள்) என்றே யாம் சொல்லத்துணிவோம். மான்யம்போய் விடுமென்றும், பெரியோர்கள் காலமுதல் கொண்டாடப்பட்டு வருகிறதென்றும், பாமரர்களைத் திருத்துவதற்கு அவர்கள் வழியில்போய்ப் பஞ்சாவைத் துத்தான் அவர்களைத் திருத்தவேண்டுமென்றும் நொண்டிச் சமாதானம் சொல்லும் ஏ, முஸ்லிம் நண்பர்காள்! நீங்கள் சொல்லும் சமாதானம் புத்திக்கும் யுக்திக்கும் பொருந்து கிறதாவென்று சற்று நிதானியுங்கள். இச்சமாதானம் இஸ்லாத்துக்குப் பொருத்தமுள்ளதா என்பதையும் ஆராய்ந்துபாருங்கள். இதன் தலைப்பில் குறிப்பிட்டிருக்கும் குர்ஆன் ஆயத்தின் (109 : 1-5; 24 : 54) கருத்துக்கு நமது சமாதானம் பொருந்துமோ வென்று சிந்தியுங்கள்.

வெறியாட்டு ஆடுவதைப்போன்ற இந்த வீண் விளையாட்டை யெல்லாம் விட்டொழித்து எம் முஸ்லிம் சகோ

தார்களாகிய நீங்களனைவரும் உண்மையான இஸ்லாமார்க்கத்தில் ஊன்றி உழைத்து உன்னதப்பதவிக்கு ஏகுவீராக. ஆண்டவன் நமக்கு அருமையாயமைத்திருக்கும் பகுத்தறிவை நல்லவழியில் செலுத்திச் செய்யத்தக்கது இன்னதென்றும் செய்யத்தகாதது இன்னதென்றும் ஏவல் விலக்கல்களைப் பாகுபடு செய்து கொண்டு ஏவலைக்கைக்கொண்டு இஸ்லாத்தில் ஈடேற்றம் பெறுவீர்களாக. மெய்யன்பர்காள்! ஹுஸைனுடைய மகா துக்ககரமான இரத்தச்சாக்ஷி மரணத்தை நினைத்து நினைத்து நைந்துருகி அவர்களின் ஆவிக்காக இறைவனிடம் வேண்டுதல் புரிய வேண்டாமென்று யான் சொல்லவில்லை. இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைக் காக அவர்கள் ஷஹீதானதை நாம் துக்கம் பாராட்டி இறைவனிடம் வேண்டுதல் புரிய வேண்டுவது அத்தியாவசியமே. ஆனால் பஞ்சாவைத்து ஷிர்க்கான விக்கிரக ஆராதனை புரிய வேண்டாமென்பதே எமதுவேண்டுகோள். இப்போது வெளிப்படையாய்க் கொண்டாடும் பஞ்சா வைபவத்தால் யாருக்கேனும் பக்தி அதிகப்பட வழியுண்டோ? பக்திக்குத் தடையாயிருக்கும் செய்கையை அறவே கைவிட்டு நேரான இஸ்லாமார்க்கத்தில் செல்வது எத்தனை மேன்மையைப் பயக்கும்! உலகத்தோர் மெச்சத் தக்க காரியமாயும் அஃது அமையுமன்றோ? இகபரம் இரண்டிலும் உண்மையான பக்தியன்றோ உயர்வைத்தருவது? நல்லது இன்னதென்றும் கெட்டது இன்னதென்றும் பகுத்துணரும்படி நமக்கு இறைவன் பகுத்தறிவைக் கொடுத்திருக்கும்போது விக்கிரக ஆராதனை கூடாதென்று நம்முடைய அறிவில் பட்டபின்னரும் அதைக்கைவிடமாட்டோமென்று சொல்வோமாயின் நமக்கு இறைவன் மிகக்

கொடிய தண்டனையை விதிக்காமலிருக்க மாட்டானென் பதில் ஏதேனும் சந்தேக முண்டோ? முஸ்லிம் சகோதரர் காள்! நமது நபிகள் பெருமானார் தங்கள் அந்தியதிசையில் சொன்னதுபோல் குர்ஆன் ஷரீபையும் ஹதீது ஷரீபையும் நாயகத்தின் நடத்தையையும் வைத்துக்கொண்டு உங்களு டைய மனச்சாக்ஷியென்னும் ஆசானும் பகுத்தறிவென்னும் வழிகாட்டியும் விளக்கிச்சொல்வதுபோல் நல்வழியில் செல் வீர்களேல் அல்லாஹ்வின் உதவியால் நீங்கள் சன்மார்க்க த்திலாகிச் சாயுச்சிய (லிக்கா) பதவியும் எய்துவீர்கள். இணைவைத்துப் பூஜிக்குமட்டும் நமக்கு ஈடேற்றமில்லை; குர்ஆன் ஷரீபின் 112-வது ஸூராவில் குறிப்பிட்ட 4வகை ஷிர்க்கையும் நாம் விட்டொழித்தல் வேண்டும். அவ்வாறு விட்டொழித்த பின்னர் எல்லாம் வல்ல இறைவன் நம்மை நல்லவழியில் நடத்திவைப்பானாக. ஆமீன்.

---

கமலம்-1 18—4—19 இதழ்-17

## அனுபந்தம்—1

# ஸ்திரீ புருஷ வாழ்க்கை

" அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்."

" ஏ, மனிதர்காள்! ஓரே பிராணியினின்றும் உங்க ளைப்படைத்து அதினின்றுமே அதன் துணையையும் படை த்து அவ்விரண்டினின்றும் அநேக ஆடவரையும் பெண் டிரையும் பரவச்செய்த உங்களுடைய தலைவனுக்கு (ச்செ ய்யவேண்டிய கடமையில்) பயந்துகொண்டிருங்கள்; யாரி டத்தில் நீங்கள் ஒருவருக்கொருவர் (உங்களுடைய ஸ்வ

தந்தரங்களேயும்) பாந்தவ்ய சம்பந்தங்களேயும் வேண்டுமென்று கேட்கிறீர்களோ அப்படிப்பட்ட அல்லாஹுத்தஆலாவுக்குச் செய்யவேண்டிய கடமையில் பயந்துகொண்டிருங்கள்; நிச்சயமாக அல்லாஹுத்தஆலா உங்களே எப்போதும் கவனித்துக் கொண்டிருக்கிறுன்"—அல்குர் ஆன், அன் னிஸா. 4:1.

திருமண மென்பது மகாபரிசுத்தமும் கவரவமும் பொருந்திய ஒரு சம்பந்தம். "இல்லற மல்லது நல்லற மன்று." விவாகத்தால் ஸ்திரீ புருஷர் செய்யவேண்டிய இல்லற தர்மம் அநேகமுண்டு. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள," என்றபடி ஐவகை இன்பமும் அனுபவிப்பதல்லாமல் இகபாசாதகங்களுக்குரிய லௌகிகவைதிககாரியங்களில்அவர்கள் இருவரும் அனுஷ்டிக்க வேண்டிய முறைகள் அனேகமுண்டு. அம்முறைகள் இன்னவையென் றுணர்ந்துகொள்ள அநேக தலீல் ஆதாரங்களும் ஹதீதுகளு மிருக்கும்போது அவற்றை அறவே மறந்து சில முஸ்லிம்கள் அல்லல் குறைந்த நல்லறத்தைத் தொல்லே நிறைந்த புல்லறமாகச் செய்துகொள்ளுகின்றனர். இஸ்லாமார்க்கப்படி விவாகத்தால் அதிக சுகம் அடைவதைத் தவிர்த்துச் சிலர் துரதிருஷ்டசாலிகளாய்த் துன்பத்துக்குள் ளாகின்றனர். அந்தோ, பரிதாபம்! விவாகத்தால் சங்கடம் நேரும்போதெல்லாம் பெரும்பாலும் பெண்களே துன்பத்துக்குள்ளாகின்றனர். "பெண்களுக்குப் பேயுமன மிரங்கிடுமென் றெவ்வுலகும் பேசக்கேட்டேன், (ஆனல் அப்)பெண்களுக்குப் பேயுமன மிரங்கியொரு பேச்சேனும் பேசக்கேளேன்," என்று குணங்குடியார் சொல்வதுபோல் 'பெண்

பாவம் பொல்லாது, பெண்பாவம் பொல்லாது,' என்று ஆண்பிள்ளைகள் சொல்லிக்கொண்டே அப்பெண்களைப் பேயாட்டம் ஆட்டி வைக்கின்றனர். பெண்களுக்கு நல்ல கல்வி அறிவு ஒழுக்கங்களைப் பயிற்சிசெய்து வையாமல் அவர்களைப் பிள்ளை பண்ணும் கருவியாகவும் சமையல் செய்யும் மடைச்சியாகவும் தொண்டு செய்யும் ஊழியக் காரியாகவும் செய்து விடுகிறோம். அந்தோ, என்ன நம்முடைய அறிவீனம்! இன்றேல் மண்ணால் செய்து வர்ணம் கொடுத்த பதுமைபோல் வைத்து அழகு பார்க்கின்றோம். பெண்களைச் செம்மையாய் நடத்தும்படி இஸ்லாம் நமக்குப் போதித்தும் போதித்தும் அதன்படி நடத்தாமல் இடம் பொருள் ஏவல்களின் சார்பால் இதாமதஸ்தரைப் பின்பற்றி நம்முஸ்லிம்களுள் சிலர் உயிருள்ள பெண்டுகளை உயிரில்லாப் பிண்டங்களாகச் செய்து விடுகின்றனர். மேற்கூறிய குர்ஆன் வாக்கியத்தைக் கவனிப்பீரேல் அதில் ஆடவரும் பெண்டிரும் சமயோக்கியதையும் சமஸ்வதந்தரமும் உள்ளவரென்பது தெளிவாகும். இதனால்தான் எமது நபிகள் பெருமானார் முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்கட்கு இறைவனருளும் அவன் நன்மாராயமு முண்டாகுக) அவர்கள் முஸ்லிம்களுடைய விவாககாலங்களில் அன் னிஸாவின் சில ஆரம்பவாக்கியங்களை ஓதுவார்களாம். மணமகனுக்கும் மணமகளுக்கும் தங்கள் கடமைகளை ஞாபகப்படுத்தும் பொருட்டு இப்படிச் செய்வார்கள். இஸ்லாத்தில் ஆணுக்குள்ள ஸ்வதந்தரம் பெண்ணுக்கு முண்டு. “அல்லாஹுத் தஆலா உங்கள் மனைவிகளிடத்திலிருந்து உங்களுக்குப் புத்திரர்களையும், பவுத்திரர்களையும் உண்டாக்கினான்.”—அல் குர்ஆன், 16: 72. இவ்வாக்கியம்

மேற்சொன்ன உண்மையை இன்னும் செம்மையாக விளக்கிக்காட்டுகின்றது. "அவர்களுடன் (நம் மனைவியருடன்) நீங்கள் சுகமடையும் பொருட்டு உங்களுடைய சொந்த இனத்துக்காகவே உங்கள் மனைவிகளை அவன் (ஆண்டவன்) படைத்து உங்களுக்குள் ஆசாபாசங்களையும் உண்டு பண்ணியிருப்பது அவனுடைய (இறைவனுடைய) அடையாளங்களுள் ஒன்று;" இஃதொரு வேதவாக்கியம். ஸ்திரீ புருஷர்களுக்கிடையிலுள்ள உன்னத உணர்ச்சிகள் இவ்வளவு அழகாகச் சொல்லப்படுவதை நாம் வேறோரிடத்தில் காண்பதரிது. புருஷரும் பெண்டிரும் ஒருவருக்கொருவர் அன்யோன்யமானவர்கள், ஒருவருடைய மர்மத்தை மற்றவர் மறைக்க வேண்டியவர் என்னும் உண்மை வேறொரு வாக்கியத்தால் நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றது. "உங்கள் மனைவியருக்கு நீங்கள் ஆடையாயிருப்பதுபோல் அவர்கள் உங்களுக்கு ஆடையாயிருக்கிறார்கள்." இஃது எத்தனை அருமை வாய்ந்த வாக்கியம்! (உங்கள்) மனைவியருடன் பக்ஷமாகக் கலந்து வசியுங்கள்," என்பது மற்றொரு வேதவாக்கியம். "அவர்கள் மீது (ஸ்திரீகள் மீது) சில பாத்தியதைகள் புருஷர்களாகிய உங்களுக்கிருக்குமாயின் நியாய முறைப்படி அப்படிப்பட்ட பாத்தியதைகள் உங்கள் மீதும் அவர்களுக்குண்டு"—அல் குர்ஆன். இன்னும் இப்படிப்பட்ட தலீல்கள் அநேகமுண்டு.

## ஹதீதுகள்

1 ஆணும் பெண்ணும் ஈருடல் ஓருயிர். 2 சற்குணசீலியான மனைவியைத் தேடிக்கொள். 3 இவ்வுலகும் அதிலுள்ள எல்லா வஸ்துக்களும் விலை உயர்ந்தவைகளே; ஆனால் எல்லாவற்றிலும் மகா விலை உயர்ந்தது சற்குண

சீலியான பெண். 4 உங்கள் மனைவியருக்கு அன்புடன் அறிவுபோதியுங்கள். 5 ஒரு முஸ்லிம் தன் மனைவியை வெறுத்தல் கூடாது. 6 அடிமைகளை அடிப்பதைப்போல் உம்முடைய சொந்த மனைவியை அடிப்பீரோ? 7 தங்களுடைய மனைவியரிடத்தில் அதி திருப்திகரமாய் நடப்பவரே உங்களில் அதி சிலாக்கியமானவர். 8 பெண்களின் பாத்தியதை அதி பரிசுத்தமானவை. 9 உங்களுடைய பெண்டுகள் பள்ளிவாயிலுக்கு வருவதைத் தடுக்காதீர்; ஆனால் வீட்டிலிருப்பது அவர்களுக்கு மெத்த நலம். 10- புருஷன் வீட்டுக்குப் பெண்சாதி அதிகாரி. 11 உங்கள் மனைவியருக்கு நல்லறிவைப் புகட்டுங்கள். 12 நீ உண்ணும் போது மனைவியையும் உண்ணச்செய்; அவளைக் கன்னத்தில் அடிக்கவும் வேண்டாம், ஏசவும் வேண்டாம்; வீட்டிலிருந்தாலொழிய மனைவியை விட்டுப்பிரிந்து போகவேண்டாம். 13 நற்குணமுள்ள மனைவி புருஷனுக்குப் பொக்கிஷம் போல்வாள். 14 அவளை நீர் கண்ணெடுத்துப் பார்க்கும்போது உமக்குத் திருப்தி செய்பவளும், அவளுக்குக் கட்டளையிட்டால் அதன்படி நடப்பவளும், நீர் இல்லாத போது தன்னுடைய கண்ணியத்தையும் உம்முடைய ஐசுவரியத்தையும் காப்பாற்றுகிறவளுமே சரியான மனைவியாவாள். "சிறைகாக்கும் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்கும் காப்பே தலை." 15 உங்கள் மனைவியரை நடத்தும் விஷயத்தில் இறைவனுக்கு அஞ்சுங்கள்; ஏனெனின் அவர்கள் உங்களுடைய உதவிக்காரர்கள்; ஆண்டவனுடைய ஜாமீன்மேல் அவர்களை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்; ஆண்டவனுடைய உத்தரவின்மேல் அவர்களைச் சட்டப்படி மனைவியாக்கிக் கொண்டீர்கள். 16 சட்

டப்படி செல்லத்தக்கதாயினும் ஆண்டவனுக்கு விரோத மாயிருப்பது விவாக விலக்குத்தான் (தலாக்)

எமது நபிகள் பிரான் அடிக்கடி தங்களுடைய பாரியாள் ஆயிஷா (இவர்கள் ஆவிக்கு அமைதியும் மேன்மையும் உண்டாகுக) அவர்களுடன் அதி உல்லாசமாய் விளையாடுவார்களாம்; ஒரு முறை இருவரும் பந்தய ஓட்டம் ஓடினார்களாம்.

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று."

ஆதலின் இக்காலத்தில் நம்தேசத்து முஸ்லிம்களிடத்தில் மலிந்து கிடக்கும் கெட்ட வழக்கங்களைப் பின்பற்றாமல் இஸ்லாத்தில் சொல்லிய வண்ணம் நம்மெல்லோரையும் நடத்திவைத்து ரக்ஷிக்கும்படி எல்லாம் வல்ல இறைவனைச் சிந்தித்து வந்திப்போமாக. ஆமீன்.

---

கமலம் 1 1—11—19 இதழ் 18

## அனுபந்தம்—2

# எமது ஆசிரியர்கள்

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்
உறவு கலவாமை வேண்டும்."

யாம் எமது சங்கத்தின் பேரால் வெளியிட்டிருக்கும் இதழ்களில் ஸுன்னத்து ஜமா அத்தின் கருத்துக்கு முரணான விஷயங்கள் காணப்படுவதாய்ச் சில முஸ்லிம் நண்பர்கள் கடிதமுகத்தானும் துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக

வும் தமது ஆக்ஷேபங்களை வெளியிட்டிருக்கின்றனர். மார்க்க விஷயங்களை யாம் வெளியிடுதற்குப் போதிய மூலக்கிரந்தங்களின் ஆராய்ச்சி எமக்கில்லை யென்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட எமது முஸ்லிம் நண்பரான சகோதரர்கட்கு யாம் விக்ஞாபித்துக் கொள்ள வேண்டுவது ஒன்றுண்டு; சன்மார்க்க உண்மைகளைப் பரப்புவதற்கு விஷயம்தான் பிரதானமேயொழிய ஒவ்வொருவருக்கும் அரபு பாஷையில் தேர்ச்சியிருக்கவேண்டுமென்பது அத்தியாவசியமில்லை. "கதையன்று கருத்தை யுணருங்கள், எழுத்தன்று சாரத்தைக் கிரகியுங்கள்," என்பதே எமது கடைப்பிடி. எமக்கு மூலக்கிரந்தங்களில் தேர்ச்சியில்லையோ என்பதைப்பற்றி வியவகரிக்கவேண்டிய இடம் இஃதன்று. ஆனால் எம்மால் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் ஒவ்வோர் இதழின் ஒவ்வொரு வாக்கியத்துக்கும் மஹா பெரிய மௌலவிகளின் மேற்கோளுண்டு.

வட இந்தியாவில் லாஹூர் முதலிய இடங்களிலுள்ள பல பெரிய மௌலவிகளும் அரபுஸ்தான், எகிப்து முதலிய இடங்களிலுள்ள மஹா மௌலவிகளும் இன்னும் அனேகரும் சேர்ந்து "லண்டன் முஸ்லிம் மிஷ்ஷன் ஸொஸைட்டி" என்றொரு சங்கம் ஏற்படுத்திச் சீமையிலிருந்து இஸ்லாத்தைப் பரப்புகின்றனர். இவர்கள் "இஸ்லாமிக் ரேவியூ" என்னும் ஆங்கில மாதாந்தப்பத்திரிகை ஒன்றும் 1913 முதல் வெளியிட்டுவருகின்றனர். இதுவரையில் இவர்கள் 500, 600 ஆங்கிலேயரையும் இதரநாட்டு ஐரோப்பியர்களையும் இஸ்லாத்தில் சேர்த்திருக்கின்றனர். "இஸ்லாமிக் ரெவியூ" வின் சாராம்சத்தை "இஷா அத்தே இஸ்லாம்" என்னும் உருது பத்திரிகை மூலமாய் இந்தியாவிலும்

வெளியிடுகின்றனர். இவர்களின் கொள்கை யனைத்தும் ஸுன்னத்து ஜமா அத்தின் கருத்துக்கு இணங்கினதே யென்பது எமது துணிபு. "இஸ்லாமிக் ரெவியூ" வில் ஸுன்னத்து ஜமா அத்துக்கு மாறான விஷயங்களை அவர்கள் எழுதுவதேயில்லை. இஃது உண்மைதானென்பதை இத் தென்னிந்தியமௌலவிகள் பலர் ஒத்துக்கொண்டிருக்கின்றனர். லண்டன் முஸ்லிம் ஸொஸைட்டிக்குச் சபாநாயகர் ஓர் ஆங்கிலேயமஹாப்பிரபு. இவர் தாம் ஸைபுர்ரஹ்மான் ஷெய்கு ரஹ்மத்துல்லா அல்பாரூக் என்னும் இஸலாமியப் பேருடன் சிலவருடங்களுக்கு முன் முஸ்லிமான லார்டு ஹெட்லி (Rt. Hon. Lord Headley) என்பவர். இச்சபையாரால் வெளிப்படுத்தப்படும் "இஸ்லாமிக்ரெவியூ" வெகு விமரிசையாகவும் யுக்திக்கும் புத்திக்கும் பொருத்த மாகவும் ஸுன்னத்து ஜமா அத்தின் கருத்துக்கு இணங்கவும் மிக்க அழகுடன் மாதமொரு முறைப் பதினாயிரக்கணக்காய் வெளிவந்து இப் பூவுலகமுழுதும் ஐந்து கண்டங்களிலும் உலாவித் திரிகின்றது. இப்பத்திரிகை தமிழில் வெளிவாராதது இத் தென்னாட்டினரின் தௌர்ப்பாக்யமென்றே சொல்லத் துணிவோம். எம்மைப்போல் இன்னும் பலமுஸ்லிம் சகோதரர்களும் இதர மதநண்பர்களும் இஃதொரு பெருங்குறை யென்றே கருதுகின்றனர். ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் "இஸ்லாமிக் ரெவியூ" என்றைக்குச் செந்தமிழில் வெளிவருமோவென்று பேராவலுடன் கூர்மையாய் எதிர் பார்க்கின்றனர். இறைவன் நாடினால் இவர்களின் எதிர்நோக்கம்போல் "இஸ்லாமிக் ரெவியூ" சீக்கிரம் செந்தமிழில் வெளியாகலாம். இஃதே எமது மனதார்ந்த கோரிக்கையும்.

லண்டன் முஸ்லிம் ஸொஸைட்டியில் சேர்ந்து உழைக்கும் மௌலவிகளுக்கு அரபு, பார்ஸி, உருது, ஆங்கிலம் இந்நான்கு பாஷைகளில் ஆழ்ந்தஞானமிருப்பதுடன்நவீன கால மேல்நாட்டு நாகரீகக் கல்வியிலும் மஹா மேதாவித்தனமுண்டு. இவர்களுடைய மார்க்க உணர்ச்சியும்ஆராய்ச்சியும் மிக மெச்சத்தக்கதே. தமக்குப் பிறர் ஒப்பாரும் மிக்காருமில்லாவண்ணம் அவ்வளவு நிபுணத்தனம் வாய்ந்தவர்கள். இவர்களின் "இஸ்லாமிக் ரெவியூ" வைப் படிக்குந்தோறும் எம்முடைய மனம் ஆனந்தபரவசத்தால் நைந்து நைந்து உருகி எமது அங்கமும் புளகாங்கிதமெய்தி அப்பத்திரிகையில் காணப்படும் சில அருமையான பெரிய விஷயங்களை மட்டும் இத் தென்னாட்டுத் தமிழ் முஸ்லிம்களின் நன்மையைக் கருதித் துண்டுப் பிரசுரங்களின் வாயிலாய் வெளிப்படுத்தக் கருதினோம். முஸ்லிம் நண்பர்காள்! இதுவரையில் யாம் வெளியிட்ட இதழ்களுக்கும் இனி வெளியிடப் போகும் இதழ்களுக்கும் லண்டன் ஸொஸைட்டியாரின் மேற்கோளே எமக்கு ஆதாரமாகும். அவர்கள் இஸ்லா மார்க்க நுட்பத்தை யுணராதவரென்றேனும் ஸுன்னத்து ஜமா அத்துக்கு விரோதமான கொள்கையை யுடையவரென்றேனும் யாம் சொல்லத்துணியோம். மார்க்க விஷயத்தில் அவர்களை எதிர்க்க உத்தேசிப்பவர் மலையைத் தகர்க்க எண்ணும் மசகம் போலாவர். இவர்களுடைய கருத்தையே தமிழறி மக்களின் நன்மையைக் கருதி வெளிப்படுத்துகின்றோமே யொழிய யாமே ஒன்றும் நூதனமாய்ச் சிருஷ்டிசெய்து விடவில்லை. எம்மை இன்னும் நம்பாத நண்பர்கள் இங்கிலீஷ் "இஸ்லாமிக் ரெவியூ" வை ஆதி

யோடந்தமாய்ப் படித்துத் தமக்குள்ள சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வார்களாக. எம்முடைய இதழ்களில் குற்றங் கற்பிக்கும் எனது கண்ணுண் மணியான சில முஸ்லிம் சகோதரர்கள் தாங்கள் சொல்வதே சரியென்றும் தாங்கள்தாம் இவ்வுலகத்திலுள்ள 35 கோடி ஸுன்னத்து ஜமா அத்தின் கொள்கைகளுக்கும் பிரதிநிதியென்றும் தமக்குள் தீர்மானம்செய்து கொள்ளுமுன் வட இந்திய ஸுன்னத்து ஜமா அத்து மௌலவிகளின் கொள்கையையும் நன்கு ஆராய்வார்களாக. அசிகையென்னும் அந்தரங்க ஷைத்தானை அப்பால் சற்று அகற்றிவைத்து ஆழ்ந்த கருத்துடன் ஆராயப்புகின் இமாம் கஜ்ஜாலியவர்கள் சொல்வதுபோல் ஸுன்னத்து ஜமா அத்தின் ஸூக்ஷ்மம் இன்னதுதான் என்பது நன்கு விளங்கும். ஜஸ்டிஸ் ஸர் அப்துர்ரஹீம் சாஹிபவர்களின் மார்க்கக் கருத்தையும் அவர்கள் நன்கு நோக்குவார்களாக.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

"இன்னும் சொல்வீராக, 'உண்மையானது உம்முடைய இறைவனிடத்திலிருந்து வந்திருக்கிறது ; பிரியமுள்ளவன் நம்பட்டும் ; பிரியமில்லாதவன் நம்பாமல் போகட்டும்.'"—அல்குர்ஆன்.

---

## அநுபந்தம்—3

# இஸ்லாமும் பகுத்தறிவும்

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"—குறள்.

இஸ்லாமார்க்கத்தில் காணப்படும் பெருமைகளுள் முதன்மையானது, இம்மார்க்கம் மனிதரின் பகுத்தறிவுக்கு ஒத்தவண்ணம் இறைவனால் அமைக்கப்பட்டிருக்கிறதென்பது தான். இஸ்லாமார்க்கத்தைத் தழுவியவர்கள் தமது பகுத்தறிவைத் தள்ளிவைத்து மூடபக்தியான கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதில்லை. இதர சில மதங்களில் சொல்வதுபோல் எமது இஸ்லாத்தில், "மனிதர்காள்! நீங்கள் உங்களுடைய பகுத்தறிவை அப்பால் ஒதுக்கிவைத்து நான் சொல்லும் மூடபத்தியான கொள்கைகளையே ஒப்புக்கொள்ளுங்கள்," என்று ஒருவரும் சொல்வதில்லை. ஆனால் இஸ்லாத்தில் சேர்ந்தவர்கள் தமது பகுத்தறிவைச் செவ்வனே உபயோகித்து ஒவ்வொரு கொள்கையையும் தீர ஆராய்ச்சிசெய்து அது புத்திக்கும் யுக்திக்கும் பொருத்தமுள்ளதா யிருக்கிறதோ வென்று தெளிந்துகொண்ட பின்னர் அதை ஒத்துக்கொள்ளலாம். மனிதரின் பகுத்தறிவுக்கு முரணாயிருந்த போதிலும் ஒரு மூடபக்தியான கொள்கையை ஒப்புக்கொண்டே தீரவேண்டு மென்பது இஸ்லாத்தின் சித்தாந்தமன்று.

"பகுத்தறிவைக்காண நல்லதான வேறொரு வஸ்துவையும் அல்லாஹுத் தஆலா படைக்கவில்லை; பகுத்தறி

வைக்காண அதிக அழுகையாவது அல்லது அதிக பூர்த்தியையாவது உடைய வேறொன்றையும் இறைவன் படைக்கவில்லை; பகுத்தறிவின் காரணமாகத்தான் ஆண்டவன் நமக்கு நன்மைகளைத் தருகிறான்; நல்லது இன்னதென்றும் கெட்டது இன்னதென்றும் பாகுபாடு செய்யும் அறிவின் உணர்ச்சி இப்பகுத்தறிவினின்றே பிறக்கின்றது," என்று எமது நபிகள் பெருமானாரவர்கள் கூறியுள்ளார்கள்; மற்றொரு வேளையில், "உறுதியாய் நான் சொல்கிறேன்: ஒரு மனிதன் தொழுகை நோன்பு ஜக்காத்து ஹஜ்ஜுக்குப் போதல் முதலிய சகல நல்ல காரியங்களையும் செய்திருக்கலாம்; ஆனால் அவன் தன் பகுத்தறிவை எவ்வளவுக் கெவ்வளவு உபயோகப் படுத்துகிறானோ அவ்வளவுக் கவ்வளவே அவனுக்குச் சன்மானம் கிடைக்கும்," என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

பகுத்தறிவை உபயோகித்துக் காரியாகாரியங்களின் கருத்தை யுணராமல் மௌட்டீகமாய் மூடபக்தியான கொள்கைகளைப் பின்பற்றுவோர் புஸ்தகமூட்டையைச் சுமக்கும் கழுதைக்கு ஒப்பாவர் என்னுங் கருத்தமைய அல்குர்ஆன் 52-வது ஸூராவில் (அல்ஜுமுஆவில்) ஒரு வாக்கியம் காண்கிறோம். பகுத்தறிவை நல்லவிதமாய் உபயோகிக்க வேண்டுமாயின் நல்லகல்வி யமைதல் வேண்டும். இதனால்தான் நல்ல கல்வியை யடையவேண்டுமாயின் ஆடவரும் பெண்டிரும் சீனதேசம் வரையிலாவது போய்க் கல்விகற்கலாம் என்று எமது பெருமானாரவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆதலின் பகுத்தறிவுக்கு ஒத்தவண்ணமே இஸ்லாமார்க்கம் அமைக்கப்பட்டிருக்கிற தென்பதில் எள்ளளவும் சந்

தேகமில்லை. இப்படிப்பட்ட பகுத்தறிவின் பெருமையை எமது நபிகள் பிரான் நன்குணர்ந்திருந்தார்கள். எம்பெருமானார் தங்களுடைய அந்திய திசையில் படுக்கையி லிருக்கும்போது அங்கே கூடியிருந்த தோழர்களில் ஒருவர் அதிகமாய் மனக்கிலேசங்கொண்டு, "யாரஸூலல்லாஹ்! தாங்கள் வியாதியடைந்திருக்கிறீர்கள்; ஒருகால் தாங்கள் எங்களைவிட்டுப் பிரியும்படி நேரிடினும் நேரிடலாம்; அப்படியாயின் எங்கள் கதி என்ன?" என்று அதிக ஆவலுடன் விண்ணப்பம் செய்து கொண்டார். "உங்களுக்கு அல்குர்ஆன் இருக்கிறது," என்றார்கள் திருநபியவர்கள். "ஆம், யாரஸூலல்லாஹ், அஃதுண்மையே; ஆனால் மனிதரின் புத்தியை விசாலிக்கச்செய்து தவறாமல் நல்வழியில் சேர்ப்பிக்கக்கூடிய அவ்வேத மிருக்கும்போதும் அநேக சமயங்களில் தங்களிடம் பரியாலோசனையும் புத்திமதியும் கேட்டு வந்தோமே; தாங்கள் இப்போது எங்களை விட்டுப் பிரிய நேரிடின், யாரஸூலல்லாஹ்' யார் எங்களுக்கு இனி வழிகாட்டுவார்?" என்று அத்தோழர் மறுபடியும் கேட்டார். "நான் செய்ததுபோலும் சொன்னதுபோலும் செய்யுங்கள்," என்றார்கள் எமது பெருமானார். "ஆனால் தாங்கள் சென்றபின் தங்களுடைய வாழ்நாளில் உண்டாகாத புதிய காலதேச வர்த்தமானங்களெல்லாம் நிகழ நேர்ந்தால் அப்போது நாங்களும் எங்களைப் பின்பற்றுவோரும் என் செய்வோம்?" என்றார் அத்தோழர். அப்போது நபிகள் நாயகமவர்கள் தங்களுடைய மகிமைபொருந்திய தலையைச் சிறிது உயர்த்திக் கடவுளின் கருணைப் பிரகாசம் நிறைந்துள்ள தங்கள் கண்களை விழித்துப்பார்த்து, "அல்லாஹுத் தஆலா ஒவ்வொரு மனிதனுக்கும்

மனச்சாக்ஷியென்னும் ஆசானையும் பகுத்தறி வென்னும் வழிகாட்டியையும் அமைத்துள்ளான்; ஆதலின் எல்லாக் காரியங்களிலும் நமது பகுத்தறிவை உபயோகப்படுத்து வீர்களேல் ஆண்டவனருளால் அஃது உங்களை எப்போ தும் நல்வழியில் சேர்ப்பிக்கும்," என்று தங்கள் கருத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஆகவே இஸ்லாத்துக்கு அடிப்படை பகுத்தறிவென் பது நன்கு விளங்குகின்றது. கால தேச வர்த்தமானங் களின் மாறுதல் களுக்குத் தக்கபடி நமது பகுத்தறிவை உபயோகிக்காவிடின் நமது புத்தி மழுங்கிக் கழுந்தாவ துடன் இஸ்லாத்தின் பெருமையும் குன்றிப்போகும். இப் படி நம்முஸ்லிம்கள் தமது பகுத்தறிவின் ஆராய்ச்சியைச் சென்ற 300 வருஷங்களாய் விட்டுவிட்டபடியால்தான் இஸ்லாம் இப்போது இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்து விட்டதென்றும் பகுத்தறிவைச் செவ்வனே செலவு செய்து ஆராய்ச்சி செய்யாமலிருப்போமாயின் இன்னும் அதிகம் தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிடுவோமென்றும் கனம் ஜஸ்டிஸ் ஸர் அப்துர்ரஹீம சாஹிப் அவர்கள் அபிப்பிராயப்பட் டிருக்கின்றார்கள். இதனால்தான் ஸர் அப்துர் ரஹீம் அவர்கள் 7-4-17-ல் சென்னையில் கூடிய நத்வத்துல்உலமாவின் 16-வது வருஷக் கூட்டத்தில் பின் வருமாறு கூறியுள்ளார்கள்:—

"இத்தேசத்தி லிருக்கும் முஸ்லிம்களிடத்திலுள்ள மதஊக்கத்தை விருத்திசெய்ய வேண்டியது இச்சபை யாரின் பெரிய நோக்கம். அராபியர், துருக்கியர், பார ஸீகர், முகலாயர் முதலிய ஜாதியார் அநாகரீகத்தன்மையி லிருந்து (பகுத்தறிவுடன்) இஸ்லாமார்க்கத்தைத் தழுவின

பின்னர் நாகரீகத்துக்குத் தலைவர்களானது சரித்திரமறிந்தவர்க்குத் தெரிந்த விஷயமே. இன்று மொராக்கோ முதல் சீனதேச மட்டுமுள்ள முஸ்லிம்கள் தூங்கும் நிலைமையிலிருந்து வருவதும் நாமறிந்த விஷயமே. மதஊக்கம் மிகுந்திருந்தது முதல்சொன்ன விஷயத்துக்கு (நாகரீகத் தலைமைக்கு)க்காரணமென்றும் இஸ்லாத்தின் கட்டுத்தளர்ந்துபோனது இப்போதுள்ள (தூங்கும்) நிலைமைக்குக் காரணமென்றும் உலமாக்கள் சொல்வர்.

இஸ்லாத்தின் உண்மையான கொள்கை இன்னதென்பதைத்தெரிந்து கொள்ளவேண்டியது அத்தியாவசியமாகும்; அரூபியும் கிருபை நிறைந்தவனுமான ஒரே இறைவன்தான் உண்டென்று நம்புவதே இஸ்லாமார்க்கம். இம்மார்க்கம் (பகுத்தறிவின் காரணமாக) ஜனங்களுடைய மூடநம்பிக்கைகளை ஒழித்து மனிதஜாதிக்குள் சகோதர உணர்ச்சியையும் சமத்துவ உணர்ச்சியையும் உண்டு பண்ணி யிருக்கிறது.

இஸ்லாத்துக்கு அடிப்படை புத்தி. புத்திக்கு ஓர் எல்லைகட்டிவிடின் அதன் (இஸ்லாத்தின்) யோக்கியதையில் பூதியைக்குறைத்து விடுகிறோம். சென்ற 300 வருஷ காலமாய் விசாரணை புத்தியே நமக்கில்லை. தற்கால நிலைமைகளைக் கவனியாது ஆயிரம் வருஷங்களுக்குமுன் ஜீவித்திருந்தவர்களும் இக்கால நிலைமைகள் எப்படியிருக்குமென்று ஊகித்திருக்கக் கூடாதவர்களுமாகிய அவர்கள் சொன்ன வார்த்தைகளில் நமக்கு ஆதாரம் இருக்கிறதோவென்று பார்த்து நடப்பதானால் நாம் முன்னேறவே முடியாது; (ஏனெனின், அவர்கள் தங்கள் காலத்திய கால தேசவர்த்தமானங்களையும் அதற்கு முற்பட்ட அனுவ்

டானங்களையும் அனுசரித்தே தங்களுடைய கிரந்தங்களில் எழுதியிருப்பார்கள்;) ஆனால் பூர்வகால ஞானிகளிடத்தில் எனக்குள்ள மதிப்புக் குறைந்ததல்ல. (ஏனெனின் அவர் களெல்லாரும் படித்த மகான்களாகவே யிருந்தார்கள்.) அல்லாஹுத் தஆலாவும் நபிகள் நாயகமும் தவிர மற்ற வர்கள் தவறே செய்யக்கூடாதவர்கள் என்பதே தவறல்ல வா? (ஏனெனின், இறைவனும் அவனருளால் திருநபியும் திரிகாலக்ஞானம் வாய்ந்தவர்களாதலாலும், ஆண்டவன் சர்வசக்திவாய்ந்தவனையும் எமது நபிகள் பிரான் அவனு டைய அருள் நிறைந்த தூதாயும் இருக்கின்றார்களாத லாலும் இவ்விருவரும் தவறே செய்யமாட்டார்கள்; ஆனால் ஏனையோரெல்லாரும் நபிமாரைப்போல் தீர்க்கதரிசித்தவ மில்லாத மானிடர்களாதலாலும், மானிடர்களுக்குத் தவறுசெய்வது சகஜமாதலாலும் தவறுசெய்தே யிருப் பார்கள். எம்பெருமானார் தவிர அவர்களின் பின்வந்தவர் களுள் ஒருவர்கூடப் பிழை செய்திருக்கவே மாட்டார் என்பது நமது சாதாரண அறிவுக்கும் (Common sense) பொருத்தமாயில்லை.) அப்படி யிருக்கும்போது நாம் இப் போது செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் 1000-வரு ஷங்களுக்கு முன்னிருந்த ஒரு மகானின் வாக்கு வேண்டு மென்பது எதற்காக? (கால தேச வர்த்தமானங்களின் மாறுதல்களுக்குத் தக்கபடி நம்முடைய பகுத்தறிவை உபயோகித்துக் கொள்ளலாமென்று நமது நபிகள் பிரா னே சொல்லி யிருக்கும்போது நம் பகுத்தறிவை அவ் வாறு செலுத்தாது இக்காலத்திய கால தேசவர்த்த மானங்களை யுணர்ந்திராத முற்காலத்திய மகான்களின் வார்த்தைகளில் நமது இக்காலத்திய செயல்களுக்கு ஆதா

ரம் தேடுவதால் யாதுபயன்?) பண்டைக்காலத்தில் சகல நற்குணங்களும் நிறைந்திருந்ததாகவும் ஆதலின் இக்காலத்திய அறிவே பிரயோசனமற்றிருப்பதாகவும் நினைப்போமாயின் பிற்காலத்தில் இந்த ஜனசமூகம் (நம் மூஸ்லிம் கோஷ்டி) முன்னுக்கு வாராதென்றே தீர்மானம் செய்யலாம். (ஆனால் இவ்வுலகம் நாளுக்குநாள் அறிவிலும் கல்வியிலும் நாகரீகத்திலும் முன்னேயைக்காண முன்னேறி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம்.) மதப்படிப்பு, சாஸ்திர அறிவு (Scientific knowledge), சாகித்தியம், உடை உடுத்தல் முதலிய எல்லாவிஷயங்களிலும் 1000 வருஷங்களுக்கு முன்னமேயே (இவ்வுலக முடியுமட்டும்) சொல்ல வேண்டியவற்றை யெல்லாம் சொல்லி முடித்து விட்டனர் என்று சிலர் நினைக்கின்றார்கள். (இது தவறாகும்.) ஒரு ஜாதியாரின் புத்தி இவ்வாறு கட்டுப்பட்டுப் போய்விடுமாயின் அச்சாதியார் கீழே நழுவவேண்டியதுதான்.* எந்த மகான்களை நாம் பின்பற்றுகிறதாகச் சொல்லிக்கொள்ளுகிறோமோ அவர்களே கிரேக்கர், ரோமர், பாரஸீகர், சீனர் முதலிய ஜாதியாரைப் பின்பற்றி அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டதாலல்லவோ அவர்கள் பிரதம ஆசாரியர்களானார்கள்."

கனம ஜஸ்டிஸ் அவர்கள் விளக்கி யிருப்பதுபோல் நாம் எத்தனைகாலம் வரையில் நம் பகுத்தறிவைச்செலுத்தி ஆராய்ச்சி செய்யாமலும், இவ்வுலகம் முடியுமட்டும் வேண்டிய எல்லாவிஷயங்களுக்கும் இப்போதைக்கு 1000-வருஷங்களுக்கு முன்னமேயே ஆதாரம் செய்து வைத்து

* இனி எம்மால் வெளியாகும் ஜிஹாதேகபீரில் இவ்விஷயம் மிகவிரிவாய்க் காணப்படும்.

விட்டனர் என்றும் நம்புகிறோமோ அத்தனை காலம்வரை யில் நாம் முன்னுக்கு வரவே முடியாது. இது திண்ணம். நம் பகுத்தறிவைக்கொண்டு சென்ற 300-வருஷங்களாய் ஆராய்ச்சிசெய்யாததால் முஸ்லிம் உலகம் இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது. இப்போதேனும் தக்க விதமாய் ஆராய்ச்சிசெய்து இஸ்லாத்தை நிலை நிறுத்தாமற் போவோமாயின் இனி நம்முடைய தீனுல் இஸ்லாம் இன்னும் * தாழ்ந்த நிலைமைக்கே சென்றுவிடும். இது நிச்சயம். அந்தோ பரிதாபம்! முஸ்லிம் சகோதரர்காள்! இனியேனும் கண்விழித்துப் பாருங்கள். கண்மூடி மௌனம் சாதிப்பீரேல் இஸ்லாத்துக்கு வரும் தீங்கைப் பின்னால் உங்களால் விலக்கிக்கொள்ள முடியாது. அல்லாஹ்வையும் ரஸூலையும் தவிர ஏனையோர் தவறு செய்துமிருக்கக்கூடும். அவர்கள் ஒருபோதும் தவறே செய்திருக்க மாட்டார்கள் என்று மனோபாவம் செய்துகொண்டு பகுத்தறிவை யிழந்து விடாதீர்கள். ஆண்டவனுடைய கலாமு ஷரீபிலும் (அல் குர்ஆனிலும்) அவனது திரு நபியவர்களின் ஹதீது ஷரீபிலும் (பெருமானார் திருவாக்கியங்கள்) அல்லாமல் இதரர்களின் கிரந்தங்களில் தவறு இருக்கவே முடியாதென்று சாதிக்காதீர்கள். நமது பகுத்தறிவைச் செலவுசெய்து ஆராய்ந்துபார்த்து 1000-வருஷங்களுக்கு முற்பட்டவர்களுடைய கிரந்தங்களில் பிழை ஏதேனும்

* இஸ்லாத்துக்கு வந்திருக்கும் அபாயம் மிகக் கொடியதென்றும் அந்த அபாயத்தை நாம் நம் பகுத்தறிவால் விலக்காவிடின் நம் சன்மார்க்கத்துக்கு அழிவு நேரிடுமென்றும் ஜிஹாதேகபீரில் காண்பீர்கள். இஸ்லாம் பிழைக்க வேண்டுமா சாக வேண்டுமா என்று ஜிஹாதேகபீர் விளக்கிக்காட்டும்.

னும் காணப்படின் அப்படிக் காணப்படும் பிழைகளைப் பிழைகளென ஒத்துக்கொண்டு அவற்றை நீக்கி நமது நாயகத்தின் உத்தரவுபோல் பகுத்தறிவால் கால தேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடி நல்வழியில் ஒழுகுவோமாக. பழய கிரந்தங்களில் காணப்படும் சில விஷயம் நமது பகுத்தறிவுக்கு முரணாயிருந்தபோதிலும் அப்பகுத்தறிவை அப்பால் ஒதுக்கி வைத்துப் பழய நூல்களில் காணப்படுவதே சரியென்று ஒத்துக்கொள்ளும்படி நம் இஸ்லாம் சொல்லவில்லை. மூட பக்தியையும் மூட நம்பிக்கைகளையும் நீக்கி நல்லறிவுச் சுடரைக் கொளுத்துவதே இஸ்லாத்தின் நோக்கம். இப்படியே இஸ்லாம் முற்காலத்தில் நாகரீகத்திலும் நல்லறிவிலும் ஜொலித்துவந்தது. பகுத்தறிவு குறையக் குறைய மூட பக்தி நம்மார்க்கத்தை மூடி நம்மையும் அந்தகாரத்துள் ஆழ்த்திவிடும். இப்போதே 300-வருஷமாய் ஆழ்ந்துவிட்டோம்.

உலகில் ஆகமப்பிரமாணம் பிரத்தியக்ஷப் பிரமாணம் அனுமானப்பிரமாணம் என்று முவ்வகைப் பிரமாணங்களுண்டு. ஆகமப்பிரமாணம் நாம் ஆகமங்களில் காண்பது. பிரத்தியக்ஷப் பிரமாணம் நாம் கண்ணால் ஸயன்ஸ் என்னும் சாஸ்திரப்படி நிதரிசனமாய்க்காண்பது. அனுமானப் பிரமாணம் என்பது பிறகு நம்முடைய பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்து ஒரு முடிவை யடைவது. பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்கும் அனுமானப் பிரமாணத்துக்கும் ஆகமப் பிரமாணம் ஒத்திருந்தால்தான் அந்த ஆகமம் சரியானதாகும். இம்மூன்றும் ஒத்திருந்தால்தான் சன்மார்க்கம் செவ்வனே நடைபெறும். பிரத்தியக்ஷத்துக்கும் அனுமானத்துக்கும் அந்த ஆகமம் ஒத்தில்லாத

பக்ஷத்தில் அதில் நம்பிக்கை செல்லாது. ஆகமக்காரர்கள் கோபித்துக் கொள்வரே யென்று அவர் தாக்ஷண்யத்துக்காக அந்த *ஆகமத்தை வாயால் ஒத்துக்கொண்டபோதிலும் அதில் மனம் நம்பிக்கை கொள்ளாது. மனம் நம்பாமல் போகும்போது அந்த ஆகமம் இருந்தும் இல்லாதது போலவேயாம். பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்கும் (Scientific knowledge) அனுமானப் பிரமாணத்துக்கும் (Logical inference) விரோதமான ஆகமப்பிரமாணம் (Religious authority) ஒன்று காணப்படின் நமக்கு அதில் 2 வகையான சந்தேகம் ஜனிக்கலாம்: 1 பழய கிரந்தக்காரர்கள் தவறியிருக்கலாம்; 2 அல்லது இக்காலத்திய கால தேச வர்த்தமானங்கள் எப்படி யிருக்குமென்று யூகித்திருக்க முடியாத பழயகாலத்து மகான்கள் தங்களுக்கு முன்னுள்ள விஷயங்களையும் தங்களுடைய காலத்துக் கால தேச வர்த்தமானங்களையும் மட்டும் கருத்தில் அமைத்துக்கொண்டு தங்களுடைய கிரந்தங்களில் எழுதியிருக்கலாம். ஆகவே பழைய நூலாசிரியர்கள் உள்ளபடியே தவறியு மிருக்கலாம்; ஏனெனின், மனிதர் தவறு செய்வதுசகஜமே. அல்லது அவர்கள் தவறு செய்யா விடினும் இக்காலத்திலும் இனி நமக்குப் பிற்காலத்திலும் வரப்போகிறகால தேச வர்த்தமானங்கள் இப்படி யிருக்குமென்று அவர்களால் யூகித்தறியமுடியாமலிருந்ததனுல் தங்களுக்கு அக்காலத்தில் தெரிந்தவரையில் விளக்கியிருப்பார்கள். ஆனல் அவர்களுடைய வார்த்தை உலக முடிவுவரையில் செல்லதத

* நாம் ஆகமம் என்று சொல்லும் இடங்களிலெல்லாம் திருக்குர்ஆனையும் ஹதீது ஷரீபையும் தவிர இதரர்களின் கிரந்தமென்று வைத்துக்கொள்ளுவீராக.

க்கதென்று சொல்வது பகுத்தறிவுக்கு முரணாகும். ஏனெனின், நாளுக்கு நாள் சாஸ்திர ஞானமும் (Scientific knowledge) காலதேசவர்த்தமானங்களும் மாறிக்கொண்டே விருத்தியடைவதைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். இப்போதுள்ள அவ்வளவு ஞானமும் அக்காலத்தில் இருந்ததென்று சொல்வோமாயின் அது புத்திக்கு முரணாகும். விதண்டாவாதத்துக்கு வேண்டுமாயின் இக்காலத்திய சாஸ்திர (ஸயன்ஸ்) அறிவெல்லாம் 1000 வருஷங்களுக்கு முன் இருந்ததாய்ச் சொல்லலாம். உண்மையில் அப்படியில்லை. நம்முடைய ஜீவதிசையிலேயே இவ்வுலகம் நாளுக்குநாள் முன்னுக்கு வருவதைக் காண்கிறோம்.

ஆகவே மேற்சொன்ன காரணங்களால் நம் பகுத்தறிவை நன்கு செலவுசெய்து ஆராய்ச்சிபுத்தியைக் கொண்டு நன்கு ஆராய்ந்து பழையநூல்களில் பிழையா யிருப்பதைக களைந்துவிட்டுக் குறையா யிருப்பதை யெல்லாம் நிறைவாக்கவேண்டும். அல்லாஹ்வும் ரஸூலும் சொன்னவை தவிர வேறு பழய நூல்களில் பிழைகண்டுழி அதை மனத்துணிவுடன் பிழையென்றே ஒத்துக்கொண்டு நீக்கவேண்டும். "பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே". பிழைகளை நீக்குவது மட்டும் போதாது. முற்காலத்திய மகான்கள் தங்கள் காலத்துக்குத் தக்கபடி எழுதி வைத்திருப்பதை இப்போதைய நிலைமைக்குத் தக்கபடி திருவேதத்தின் ஆழ்ந்த கருத்தைக் கண்டுபிடித்து அபிவிருத்தி செய்து அர்த்தபுஷ்டியுடன் எழுதவேண்டும். தப்பானதைக் கண்டிப்பதிலும் குறைவாயிருப்பதை நிறைப்பதிலும் நம்பகுத்தறிவை நன்கு செலுத்தவேண்டும். இஃதின்றேல் பிறமதத்தினர் இஸ்லாத்தைத் தாக்கும் கேள்வி

களுக்கு விடையளிக்க முடியாமல் போவதோடு முஸ்லிம்களுக்குள்ளேயே நம்பிக்கையென்பது ஆட்டங்கண்டுபோகும். வேண்டுமாயின் வெளித்தோற்றத்தில் முஸ்லிம்கள் போல் நடையுடை பாவனைகளில் நடிப்பார்கள்; ஆனால் ஈமான்மட்டும் பலஹீனமாய் நம்பிக்கையற்றுப்போம். நம்முடைய பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்கு மாறாகப் பழைய எழுத்து ஒன்றை ஒத்துக்கொள்ள வேண்டுவதாயின் பகுத்தறிவுள்ள யார்தான் அதை ஏற்றுக்கொள்வார்? பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்கும் மனச்சாக்ஷிக்கும் பகுத்தறிவுக்கும் முரணான வார்த்தையை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டுமென்னும் கட்டாயத்தின்கீழ் ஒத்துக்கொண்டால் அந்த நம்பிக்கை மெய்ந் நம்பிக்கையாகுமா? இப்படிப்பட்ட போலி நம்பிக்கையை யுடையவர்கள் கோடிக்கணக்காய்ச் சேரினும் பகுத்தறிவின்முன் ஒரு விநாடியேனும் எதிர்வாதம் பண்ணி ஜயம்பெறுவரோ? "ஆயிரங்காக்கைக்கோர் கல்" என்பதுபோல் அவர்கள் இருந்த விடம் தெரியாமல் பறந்துவிடுவார்கள். பகுத்தறிவைச் செம்மையாய் உபயோகிக்கும்படி நமக்கு அனுமதி யிருக்கும்போது ஏன் நாம் நம் அறிவை அப்பால் ஒதுக்கிவைத்து அந்தகாரத்தில் நின்று அபாயத்துக் குள்ளாகவேண்டும்?

முஸ்லிம் சகோதரர்காள்! அல்லாஹ்வையும் ரஸூலையும் தவிர ஏனையோ ரெல்லாரும் தவறே செய்யாம லிருந்திருக்கிறார்கள் என்று சொல்வது முடியாது. சிலர்மட்டும் சில இடங்களில் மட்டும் தெரியாமல் தவறியிருத்தல்கூடும். இப்படிப் பட்ட தவறுகளை நம் பகுத்தறிவையும் ஸயன்ஸ் ஞானத்தையும் இக்காலத்திய கால தேசவர்த்தமானங்களையும் கொண்டு கண்டுபிடித்து நீக்கவேண்டும். இவ்வாறு

நீக்கிய பின்னரும் முற்காலத்திய சில வாக்கியங்கள் இக் காலத்துக்குப் பொருத்தமில்லாதவை போல் காணப்படும். அப்படிப்பட்ட விஷயங்களைத் தப்பென்று உடனே கண்டித்துவிடக்கூடாது. அக்காலத்திய நாகரீகத்துக்கும் ஸயன்ஸ் முதிர்ச்சிக்கும் காலதேச வர்த்தமானங்களுக்கும் தக்கபடி அப்போது கிரந்தங்கள் எழுதினார்கள். அவர்கள் இக்காலத்திய விஷயங்கள் எப்படியிருக்குமென்று யூகித்திருக்க முடியாது. ஆகலின் முற்காலத்திய விஷயங்கள் இக் காலத்துக்குப் பொருத்தமில்லாம லிருப்பதைக் கண்டவுடன் அப்பழய விஷயங்களெல்லாம் தப்பென்று நீக்கி விடாமல் பழய ஆசிரியர்கள் எழுதியதைக்காண இன்னும் செம்மையாக இக்காலத்துக்குப் பொருந்திய வண்ணம் திருவேதத்தில் புதைந்து கிடக்கும் புஷ்டியான அர்த்தங்களைத் தேடவேண்டும். பழய கிரந்தங்களுக்கு மாறாக ஒன்றும் இப்போது செய்துவிடச் சொல்லவில்லை; ஆனால் பழய வியாக்கியானங்களுக்குமேல் இன்னும் புஷ்டியான விசேஷ அர்த்தம் செய்தல் வேண்டும். அல்லாஹுத் தஆலாவின் குர்ஆன் ஷரீபும் நபிகள் நாயகத்தின் ஹதீது ஷரீபும் முக்காலத்துக்கும் ஒத்து நடக்கும் இயல்புடையனவா யிருக்கின்றன. ஆண்டவனும் அவன் ரஸுலும் பிழையே செய்யக்கூடாதவர்கள். ஆதலின் அவர்களின் வார்த்தையில் ஒன்றும் பிழையிருத்தற்கு முடியாது. இவ்வுலகம் முடியுமட்டும் உண்டாகும் கால தேச வர்த்தமான மாறுதல்களுக்குத் தக்கபடியும் ஸயன்ஸ் முதிர்ச்சிக்குத் தக்கபடியும் அர்த்தம் செய்வதற்கு இடமுண்டாகும்படி அவ்வளவு ஆழ்ந்த கருத்துடன் திருவேதத்திலும் நாயக வாக்கியங்களிலும் ஒவ்வொரு வார்த்தையும் அமைந்திருக்

கிறது.. அவ்வளவு ஆழ்ந்த கருத்து அவ்வார்த்தைகளில் அமையவில்லையென்று எந்த முஸ்லிமும் சொல்லத்துணி வாராயின் முக்காலத்துக்கும் ஒத்தவண்ணம் குர்ஆன் ஷரீ பும் ஹதீது ஷரீபும் அமையவில்லையென்றும், 1000 வருஷங்களுக்கு முன்னுள்ள நிலைமைகளுக்குப் பொருந்தும் படியாக மட்டும் அவை அமைந்துவிட்டனவென்றும் ஒப்புக்கொள்ள நேரிடும். அப்படி நாம் சொல்லவில்லை. ஆனால் குர்ஆன் ஷரீபும் ஹதீது ஷரீபும் முக்காலத்துக்கும் ஒத்த வண்ணமாகவே அமைந்திருக்கின்றனவென்று அறுதியிட்டு உறுதிகூறுகின்றோம். உலக முடிவுமட்டும் தோன்றக்கூடிய நாகரீக முதிர்ச்சிக்கும், ஸயன்ஸ் வளர்ச்சிக்கும், காலதேச வர்த்தமான மாறுதல்களுக்கும் ஒத்திருக்கும் படியே அவ்வளவு ஆழ்ந்தகருத்துடன் ஆண்டவனும் ரஸூலும் பதப்பிரயோகம் செய்திருப்பார்கள். இது திண்ணம். ஆதலின் அல்லாஹ்வையும் ரஸூலையும் தவிர மற்றவர்களுடைய பழய கிரந்தங்களில் நம் காலத்துக்குப் போதிய ஆதாரம் கிடைக்காவிடின் அவர்களையும் குறை கூறவேண்டாம்; நீங்களும் மனம் தளரவேண்டாம். ஆண்டவனுடைய புதையலும் ரஸூலின் பொக்கிஷமும் கையிலிருக்கும்போது நாம் ஒரு போதும் மயங்கவேண்டியதில்லை. ரஸூலுக்குப்பின் நாளிதுவரையில் தீனுல் இஸ்லாம் சம்பந்தமாக எழுதியிருக்கும் ஒவ்வொருவருடைய எழுத்தும் கியாமத்து நாள் (லோகமுடிவுகாலம்) மட்டும் நமக்குவேண்டிய எல்லா விஷயங்களையும் குறிப்பிட்டுவிட்டதென்றும், குர்ஆன் ஷரீபிலும் ஹதீது ஷரீபிலும் இனிமேல் ஆழமான கருத்தைக் கண்டுபிடிக்க முடியாதென்றும் நாம் சொல்ல ஆரம்பித்தால் அப்போதுதான் தியக்க

மும் மயக்கமும் உண்டாகின்றன. முற்காலத்திய மனிதர்கள் தங்கள் காலத்திலுள்ள சாஸ்திர அறிவின் (scientific knowledge) முதிர்ச்சிக்குத் தக்கபடியும் அப்போதுள்ள நாகரீக நடையுடை பாவனைக்குத் தக்கபடியுமட்டுமே தங்கள் கிரந்தங்களில் எழுதிவைத்தார்களென்றும், இக்காலத்திய தன்மையைப்பற்றி அவர்கள் உணர்ந்திருக்க முடியாதென்றும், அவர்கள் செய்த வியாக்கியானங்களைக்காண இக்கால ஸயன்ஸ் முதிர்ச்சிக்குத்தக்க வண்ணமும் கால தேசவர்த்தமானங்களுக்குத் தக்கவண்ணமும் அர்த்த புஷ்டியான வியாக்கியானம் செய்வதற்குக் குர்ஆன் ஷரீபிலும் ஹதீது ஷரீபிலும் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்து கிடப்பது உண்மையென்றும் நாம் நம்புவோமாயின் நமக்கொன்றும் மயக்கமாவது தியக்கமாவது உண்டாகாது; அப்படிப்பட்ட ஆழ்ந்த கருத்தையெல்லாம் கண்டுபிடித்து இக்காலத்திய பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்கு ஒத்தவண்ணம் சமாதானம் சொல்லப் பின்வாங்குவோமாயின் இதர மதத்தினர் நம் சன்மார்க்கத்தைத் தாக்கும் வினாக்களுக்கு விடையளிக்க முடியாமல் போவதோடு நமமுடைய ஈமானும் நீர்மேல் நட்ட ஆகாயப்பந்தல் போலாகும்.

மேலே சொல்லிவந்த காரணங்களால், மெய்யன்பர்காள்! குர்ஆன் ஷரீபுக்கு அவரவர் மனம்போனபடியெல்லாம் வியாக்கியானம் செய்யலாமென்று யாம் சொன்னதாகத் தாங்கள் தவறாக எண்ணிவிட வேண்டாம். அவரவர் மனம்போனபடி யெல்லாம் நம் தனிவேதத்துக்குப் பொருள்செய்வது தகாது. அல்குர்ஆன் வெளியாவதற்கு முன் கடவுளால் வெளிப்படுத்தப்பட் டிருந்த எல்லா வேதங்களின் கருத்தையும் சகல ஆகமங்களின் சாராம்சத்தை

யும் நம் திருவேதம் தன்னுள் அடக்கிக்கொண் டிருப்ப தாலும் கியாமத்து நாள் வரையில் வேறொரு வேதத்துக்கு அவசியமில்லாமல் எல்லாவிஷயங்களையும் அல்லாஹுத் தஆலா இதில் நிறைத்து வைத்திருப்பதாலும் இக்காலத் திய ஸயன்ஸால் கண்டுபிடித்து ஸ்திரப்படுத்தப்பட் டிருக் கும் பிரத்தியக்ஷப் பிரமாண உண்மைகளுக்குத்தக்க ஆழ் ந்த கருத்தமைந்த விசேஷ அர்த்தத்தைக் கண்டுபிடித்து வியாக்கியானம் செய்யவேண்டு மென்பதே எமது வேண்டு கோள். இயற்கை சாஸ்திரம் (Physics), ரஸாயனசாஸ் திரம் (Chemistry), கணித சாஸ்திரம (Mathematics), பிராணிசாஸ்திரம் (Biology), மனிததேக தத்துவசாஸ்தி ரம் (Physiology), மனோதத்துவசாஸ்திரம் (Psychology), தாவரசாஸ்திரம் (Botany), தாதுசாஸ்திரம் (Geology), வைத்திய சாஸ்திரம் (Medical Science), வானசாஸ் திரம் (Astronomy), பூமிசாஸ்திரம் (Geography) முத லிய சாஸ்திரங்களிலும் (அதாவது ஸயன்ஸ்களிலும) தேச சரித்திரம் (History), தர்க்கசாஸ்திரம் (Logic), தத்து வசாஸ்திரம் (பலாஸபா-Philosophy) ஆகிய இவற்றிலும் தேர்ச்சியடைந்து அதனாலுண்டாகும் பிரத்தியக்ஷப் பிர மாணத்தாலும் அனுமானப்பிரமாணத்தாலும் அல்குர் ஆனின் ஆழ்ந்த கருத்தை ஆராயப்புகின் அப்போது அல் லாஹுத் தஆலாவின் கலாமுஷரீபு எப்படிப்பட்ட ஆச்சரி யதன்மையுடைய தென்பது செவ்வனே விளங்கும். அப் போது அல்குர்ஆனின் ஆழ்ந்த கருத்தெல்லாம் உள்ளங் கை நெல்லிக்கனிபோல் விளங்கும். மேற்கூறிய சாஸ்திரங் களெல்லாம் நமக்கு இக்காலத்தில் தெரிந்த அவ்வளவு முற்காலத்து மகான்களுக்குத் தெரியவில்லையென்று அவர்

களை உதாசினம் செய்வதுகூடாது. இக்காலத்திலுள்ள முஸ்லிம் வேதபாரங்கதர்களுள் சிலருக்கு இந்தச் சாஸ்திரங்களெல்லாம் தெரியவில்லையென்று அவர்கள்மீதும் ஒருபோதும் குறைகூறத் துணியோம். எவரையும் குறை கூறி அவருடன் வாதம் செய்வது எமது பிடிவாதமன்று. ஆனால் நவீனகாலத்தில் காணப்படும் எல்லாச் சாஸ்திரங்களின் உண்மையும் தெரிந்துகொண்டு அப்பால் அல்குர்ஆனை ஆராய்ச்சிசெய்வரேல் அப்போது அதன் அந்தரங்க ஆழ்ந்த கருத்தெல்லாம் வெள்ளிடை விலங்கல்போல் தெள்ளிதில் விளங்கும் என்பதே எமது துணிபு.

ஆனால் ஸயன்ஸ் முதலிய மேற்கூறிய சாஸ்திரங்களைப் படிக்கலாகாதென்று சொல்லிக்கொண்டுதிரியும் சிலர்தாம் முற்காலத்திய மகான்களின் வார்த்தைகளில் கியாமத்து நாள்மட்டும் மனிதர்களுக்கு வேண்டிய எல்லாவிஷயங்களும் சொல்லப்பட்டு விட்டன என்று வாதம்பண்ணிப் பிடிவாதம் செய்வர். ஸயன்ஸ் முதலிய சாஸ்திரங்கள் தெரியாத சாமான்யர்களை வேண்டுமாயின் இப்படிப்பட்ட பழயகொள்கைக் காரர்கள் ஏமாற்றித்திரியலாமேயொழிய மேற்கூறிய சாஸ்திரங்களை நன்றாகக் கற்றுணர்ந்தவர்களிடம் அவர்கள் தங்கள் கொள்கையைச் சாதிக்க முடியாது. ஆனால் ஸயன்ஸ் முதலிய சாஸ்திரங்களையெல்லாம் பொய்யென்றும் அவர்களால் ஏண்பிக்கமுடியாது. ஸயன்ஸ் பொய்யென்று ஸயன்ஸ் படித்தவர்களாலேயே ஏண்பிக்க முடியாதபோது ஸயன்ஸே இப்படிப்பட்டதென்று உணரமுடியாதவர்கள் அதை எவ்வாறுபொய்யென்று வாதித்துச் சாதிக்கமுடியும்? இஸ்லாமார்க்கத்தில் வேதபாடம் கற்பவருக்கு மேற்கூறிய சாஸ்திரங்கள் தே

வையில்லை யென்றால் அறிவை அப்பால் ஒதுக்கிவைத்து மூடநம்பிக்கையில் மூழ்குவதுபோலாகும். அந்தச் சாஸ்திரங்களை யெல்லாம் கற்றுணர்ந்தால் தப்பான வழியில் கொண்டுபோய்ச்சேர்த்துவிடுமென்று சொல்வோர் ஸயன்ஸே இன்னதென்று அறியாதவரென்றே சொல்வோம். ஸயன்ஸ் படிக்கத் தேவையில்லை யென்றும், அதைப்படிப்பது தகாதென்றும் சொல்வோமாயின் நாம் அந்தச் சாஸ்திரங்களைக்கண்டு பயந்தவராகவே இதரமதத்தினரால் கருதப்படுவோம்; அப்போது நமது தீனுல் இஸ்லாம் ஏனை மதங்களைக் காணச் சிறந்ததென்று நம்மால் எண்பிக்க முடியாமல் போவதோடு முஸ்லிம்களுக்குள்ளேயே ஈமானில் மோசம் நேரிடும். சகோதரர்காள்! நவீனகாலத்து மேல்நாட்டுக்கல்விகளைக் கற்கக்கூடாதென்பது பயங்காளியின் தொழிலாகும். மேல் நாட்டுக் கல்விகளை எவ்வளவு ஆழமாய்ப் படித்தபோதிலும் அதற்குத்தக்க வண்ணம் அல்குர்ஆனிலும் ஆழ்ந்த கருத்து அமைந்திருக்கிறதென்று எண்பித்தால்தான் இதர சமயங்களைக்காண இச்சன் மார்க்கம் (தீனுல் இஸ்லாம்) மேலான சிறப்புற்றதென்னலாம். அஃதின்றேல் பிறமதத்தினரிடத்தில் நம்மதத்தினர் தோல்வியடைவதோடு முஸ்லிம்களுடைய கட்டும் கெட்டுப்போகும். ஸயன்ஸ்முதலிய சாஸ்திரம் படிக்கக்கூடாதென்ற காலம் பழங்காலமாய் விட்டது. இனி ஸயன்ஸ் ஞானத்தைத் தடுப்பது எவராலும் முடியாது. முஸ்லிம் சகோதரர்காள்! உங்களுக்கு இப்போதொரு விஷயம் சொல்கிறேன்; அதை நன்றாகக் கவனித்து அதில் உங்களுடைய சிலாக்கியமான பகுத்தறிவைச் செலுத்திப் பாருங்கள்; அதன் முடிவு என்ன ஆகின்றதென்று நோக்குங்கள்; ஸயன்ஸ் படிக்குக்

கூடா தென்பதை நாம் கருதவேண்டாம்; அது முடியாத காரியம். ஸயன்ஸ் படித்த பின் அதன் அறிவின் காரணமா யுண்டாகும் பிரத்தியக்ஷப்பிரமாணம் மெய்யெனக் கண்டபின் அப்பிரமாணத்துக்குத் தக்க ஆதாரம் 1000 வருஷங்களுக்கு முன்னிருந்த மகான்களின் வார்த்தைகளில் இல்லையென்று கண்டு ஸயன்ஸே சரியென்றும் தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கமே தப்பென்றும் அடியோடு தள்ளி விடுவது நியாயமா? அல்லது, முற்காலத்திய மகான்கள் தங்களுக்குத் தெரிந்தமட்டும் எழுதிவைத்தார்கள்; இக்காலத்திய ஸயன்ஸாலும் இனிப் பிற்காலத்தில் வெளியாகும் ஸயன்ஸாலும் எண்பிக்கப்படும் உண்மைகளுக்குத் தகுந்த ஆழமான அர்த்த புஷ்டியுள்ள அருமைக் கருத்தையெல்லாங் கண்டுபிடித்து அல்குர்ஆன் வேதத்துக்கும் ஸயன்ஸுக்கும் உள்ள பொருத்தத்தைப் பொருத்திக் காட்டுவது நியாயமா? மேற்கூறிய இரண்டு விஷயத்தில் எது நியாயமென்று தெரிந்து கொள்ளுங்கள். மனிதர்கள் எவ்வளவு ஸயன்ஸ் அறிவில் முதிர்ந்தபோதிலும் அல்குர்ஆனும் அதற்கு ஒத்திருக்கிறதென்று எண்பிப்பது சிலாக்கியமா? அல்லது ஸயன்ஸ் படித்துவிட்டு முற்காலத்திய மகான்களின் வார்த்தை ஸயன்ஸுக்கு ஒத்தில்லையென்று அடியோடே இஸ்லாமார்க்கத்தைத் தப்பென்று தள்ளிவிடுவது சிலாக்கியமா? நீங்கள் மகாபுத்திமான்களானதால் திடுமென்று என்மீது கோபியாது தீர்க்காலோசனை செய்து பாருங்கள். "ஆற்றோடு போனாலும் போவேன்; ஓடக்காரனுக்கு ஒரு காசும் கொடேன்," என்று புத்திமான்கள் வாதிப்பார்களோ?

மார்க்கத் தர்க்கம் செய்யும்போது பிறமதங்களைக்

காண நம்சன்மார்க்கம் சிறப்புற்றதென்று எண்பித்து ஜயம்பெற விரும்புவோர், "ஸயன்ஸ் படிப்பதாலுண்டாகும் உமது உண்மை ஞானத்தை ஒதுக்கி வைத்துவிட்டு வாரும்; பிறகு வாதம்பண்ணலாம்," என்று சொல்வாராயின் பிறமதத்தினர் அதை ஒத்துக்கொள்வரோ? நம்முடைய பகுத்தறிவுக்குத்தான் இது பொருத்தமாயிருக்கிறதா? இக்காலத்தில் இவ்வுலகில் காணப்படும் மேல்நாட்டு நாகரீகக் கல்வியையெல்லாம் கற்றுணர்ந்து அதனாலுண்டாகும் பகுத்தறிவைக்கொண்டு குர்ஆன் ஷரீபிலும் ஹதீது ஷரீபிலும் ஆழ்ந்து கிடக்கும் புதையல்களை யெல்லாம் வெளிப்படுத்தினல் முஸ்லிம்களுடைய தெய்வபக்தியும் முதிர்ந்து பிறமதங்களைக்காண இஸ்லாம் மேம்பட்டதென்னு உண்மையும் வெளியாகி நாம் முன்னுக்கு வருவோம். அவ்வாறின்றி முற்காலத்திய மகான்கள் கியாமத்து நாள் மட்டும் வேண்டிய விஷயங்களையெல்லாம் 1000 வருஷங்களுக்கு முன்னமேயே எழுதிவைத்து விட்டபடியால் அதுவே சரியென்றும் போதுமென்றும் சொல்லி இக்காலத்திய மேல நாட்டுக் கல்வியறிவே முஸ்லிம்களுக்கு வேண்டாமென்போமாயின் நாம் இப்போதிருப்பதைக்காண இன்னும் ஆயிரமடங்கு தாழ்ந்த நிலைமைக்குப் போய்விடுவோம். இப்போதிருக்கும் நிலைமையே இஸ்லாத்துக்கு அதிக அபாயமான நிலைமையாயிருக்கிறது; இதைக்காண இன்னும் தாழ்மையான கதியை நாம் அடைவோமாயின் அதினின்றும் அப்பால் தப்பிப்பிழைப்பதே கஷ்ட சாத்தியமாகும். இது நிச்சயமென்று முஸ்லிம் உலகின் தற்கால நிலைமையை நன்குணர்ந்த உலமாக்கள் உரைத்திருக்கின்றனர்.

இப்போது நம்மவருக்கிருக்கும் அற்பபலத்தையும்

சொற்ப செல்வாக்கையும் ஆராயுங்கால் கத்தியெடுத்து ஜிஹாத் செய்து முன்னிருந்த பெருமையையும் மேன்மையையும் நாம் அடைவது முடியாத காரியமாய்க் காணப்படுகின்றது. கத்தியெடுத்து ஜிஹாத் செய்தகாலம் பழங்காலமாய் விட்டது. ஆதலின் இப்போது நாம் செய்யவேண்டிய ஜிஹாதேகபீர் என்னவென்றால் நம்முடைய சன்மார்க்கத்தின் உண்மையான பெருமை வாய்ந்த தத்துவங்களை உள்ளது உள்ளவண்ணமே முஸ்லிம்களுக்கும் இதரர்களுக்கும் எடுத்துக்காட்டி நம் சன்மார்க்கத்தைப் பரப்பவேண்டுவது (இஷா அத்தே இஸ்லாம்) தான். இப்படிப்பட்ட சன்மார்க்கப் பரவுதலுக்கு நாம் செய்யவேண்டிய வழிகள் பல உண்டு; இவற்றுள் முக்கியமானது யாதெனின், முற்காலத்திய மகான்களின் கிரந்தங்களையும் இக்காலத்திய மேல்நாட்டு ஸயன்ஸ் முதலிய கல்விகளையும் சந்தேகமறக் கற்றுணர்ந்து, பின்னர் அநேக ஆண்டுகள் வரையில் இஸ்லாமார்க்கத்தையும் இதர மதங்களையும் ஆராய்ச்சி செய்வதில் காலங் கழித்து இக்காலத்திய கால தேச வர்த்தமானங்களுக்கும் அறிவின் நாகரீக முதிர்ச்சிக்கும் தக்கவண்ணம் தம்முடைய பகுத்தறிவைச் செம்மையாய்ச் செலவு செய்து குர்ஆன் ஷரீபுக்கும் ஹதீது ஷரீபுக்கும் முற்காலத்திய மகான்கள் செய்த அர்த்தத்துக்குமேல் அதிகமான புஷ்டியையுடைய ஆழ்ந்த கருத்தையெல்லாம் கண்டுபிடித்திருக்கும் மகாபெரிய உலமாக்களின் அபிப்பிராயத்தை உலகமறியச் செய்வதுதான் இவர்கள் முற்காலத்திய மகான்களின் கருத்துக்கு முரணாகத் தம்முடைய மனம் போனபடி யெல்லாம திருவேதத்துக்கு அர்த்தம் செய்து அனர்த்தம் செய்துவிட்டதாக எண்ணிவிடவேண்

டாம். மெய்யன்பர்காள்! இறைவனுடைய திருவேதம் (அல்குர்ஆன்) திரிகாலத்துக்கும் பொருந்தும்படி அமைக்கப்பட்டிருப்பதால் இக்காலத்தில் ஸயன்ஸால் நிலை நாட்டப்பட்டிருக்கும் பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்குத் தக்கபடியான ஆழ்ந்த கருத்தை யெல்லாம் நம்மால் மேலே சொல்லப்பட்ட உலமாக்கள் வெளியாக்கி வருகின்றனர்.

இப்படி நாம் சொல்லும்போது சிலர் வேறுவிதமான ஆக்ஷேபமொன்று செய்யலாம்: "நபிகள் பிரானே அநேக குர்ஆன் ஆயத்துக்களுக்குத் தங்கள் காலத்தில் அர்த்தம் செய்திருக்கிறார்களே; அப்படி யிருக்கும்போது இப்பொழுது எப்படி நீங்கள் வேறு புஷ்டியான ஆழ்ந்தகருத்தையெல்லாம் கண்டுபிடிப்பதாய்ச் சொல்லுகிறீர்கள்?" என்று அவர்கள் ஆக்ஷேபிக்கலாம்; உண்மைதான். அவர்களுடைய ஆக்ஷேபத்தை ஒத்துக்கொள்ளுகிறோம். ஆண்டவனுக்கும் ரஸூலுக்கு மட்டும் திரிகாலக்ஞானத்தால் கியாமத்து நாள் வரையில் நடப்பதெல்லாம் தெரிந்திருந்ததென்றும், நபியவர்களின் தோழர்களுக்கு அப்படிப்பட்ட திரிகாலக்ஞான மில்லாததால் அக்காலத்திய சாதாரண அறிவின் முதிர்ச்சிக்குத் தக்க வண்ணம் அவ்வியாக்கியானங்களை நபியவர்கள் செய்துகாட்டினார்கள் என்றும் நாம் சமாதானம் சொல்வோம். நபியவர்களுக்கு ஈடு நபியவர்களே. வேறு யாரும் அவர்களுக்கு ஈடில்லாததால் நபிகள் பிரான் தங்களுக்குத் தெரிந்த முழுவிஷயத்தையும் அக்காலத்தவருக்கு வெளிப்படையாய்ச் சொல்லாமல் குறிப்பால் உணர்த்தி யிருப்பார்கள். இக்குறிப்புத்தான் பிற்காலத்தவருக்குப் பயன் தருவது. எமக்குத் தெரிந்தவரையில் நமது நபிகள் நாயகம், ஒரு குர்ஆன் ஆயத்துக்கு அக்காலத்தில்

செய்த வியாக்கியானமே சம்பூரணமாய் விட்டதென்றும் அதற்குமேல் அந்த ஆயத்தில் ஆழ்ந்த கருத்தில்லை யென்றும் எங்கேயாவது சொல்லியிருப்பதாய் ஏற்படவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட நவீன ஸுன்னத்து ஜமா அத்து உலமாக்களின் கருத்தை உள்ளது உள்ளவண்ணம் ஒளியாமல் வெளிப்படுத்துவது மட்டும் போதாது; அன்னியமதச் சகோதரர்கள் நம்முடைய தாய்பாஷையில் தங்களுடைய வேதங்களை மொழிபெயர்த்து நம் முஸ்லிம்களின் வீடுகள்தோறும் பரப்புகின்றனர். அந்தோ பரிதாபம்! நம் தென்னாட்டுத்தமிழறி முஸ்லிம்களில் முக்காலே மூன்றுவீசம் முக்கால்வீசம் சாஹிபுகளுக்கு*நம்முடைய குர்ஆன் ஷரீபில் என்ன சொல்லியிருக்கிறதென்பது தெரியாது. என்னகேவலம்! நாம்தானு நம்முடைய வேதத்தைப் பிறருக்கு உபதேசம்செய்து நம்முடையசன்மார்க்கமு பெரிதென்று சாதிக்கப் போகின்றோம்? தென்னாட்டைப்பற்றி மட்டும் நாம் கருதுவதாயின் இத்தென்தேசத்தின் தாய் பாஷையாகிய சேந்தமிழில் குர்ஆன் ஷரீபும் ஹதீது ஷரீபும் இன்னும் மற்ற இஸ்லா மதக்கிரந்தங்களும் வெளியாதல் வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் தன் மார்க்கம் இப்படிப்பட்டதென்று நெஞ்சார உணரவேண்டும். இன்னும் நம் வேதபாரங்கதர்க ளெல்லாரும் தமிழிலும் பாண்டித்தியமடையவேண்டும். அப்போதுதான் இஸ்லாத்தின் பெருமை தமிழறி முஸ்லிம்களுக்கும் இதரமதத்தமிழ்மக்களுக்கும் விளங்கும். முஸ்லிம் வேதபாரங்கதர்கள் தங்களுக்குத் தமிழ் தெரியுமென்று மனோராஜ்யம்செய்வது மட்டு

* 10,000 பேர்களில் 9,999 சாஹிபுகளுக்கு நம் திருவேதத்தில் சொல்லியிருப்பது இன்னதென்பது இன்னும் தெரியாது.

மாவது தமிழ் தெரிந்ததுபோல் நடிப்பதுமட்டுமாவது போதாது. தமிழிலும் இலக்கண இலக்கியமுணர்ந்து பாண்டித்திய மடையவேண்டும். இன்னும், வெள்ளிக்கிழமை ஜும்ஆவில் ஓதும் நஸீஹத்தென்னும் குத்பாவை இந்நாட்டாருக்கு விளங்கும்படி செந்தமிழிலேயே ஓத வேண்டும்; அர்த்தம் விளங்காத அரபில் மாத்திரம் குத்பா ஓதி முஸ்லிம்களைத் தூங்கச்செய்வதால் இஸ்லாமும் தூங்கிக்கொண்டே போகின்றது.

இப்படியெல்லாம்தான் நாம் ஜிஹாதே கபீர் செய்ய வேண்டும்; இன்றேல் இஸ்லாம் இன்னும் க்ஷீணித்துப் போகும். சன்மார்க்கப் பரவுதலுக்காக நாம் மேலே சொன்ன நவீன உலமாக்களைப் பின்பற்றி அவர்கள் முறையையே யனுசரிப்போம். இதற்காகச் சிலர் சில சில சிறு சிறு இடையூறுகளெல்லாம் செய்வர். அவர்களுடன் நாம் வாதம் செய்யாமலும் அவர்களாலுண்டாகும் இடையூறுகளைப் பொருட்படுத்தாமலும் இஷாஅத்தே இஸ்லாம் காரியத்தின்மேல் கண்ணுயிருப்போம். இவர்கள் செய்யும் சிறு சிறு இடையூறுகளை யெல்லாம் நாம் பெரிதாயெண்ணி நமக்குள்ள அற்ப பலத்தையும் சொற்ப கல்வியையும் செலவுசெய்து நம்மவருக்குள் ஒருவரோடொருவர் வீண்வாதம் செய்து சண்டைபோட்டுக்கொண்டிருப்போமாயின் இவ்வுலகின் ஒவ்வொரு மூலையிலும் முடுக்கிலும் நம்முடைய சுத்த சத்திய தீனுல் இஸ்லாம் என்னும் சன்மார்க்கத்தை எப்படிப் பரப்பமுடியும்? முஸ்லிம் சகோதரர்காள்! எங்களுடைய துண்டுப் பிரசுரங்களில் குற்றங் கண்டுபிடிக்கும் எமது நண்பர்கள் தங்களுடைய காலத்தையும் சிரமத்தையும் வேறு நல்லவழியில்

செலவு செய்வார்களேல் எம்மைப்போல் தாங்களும் இஷா அத்தே இஸ்லாம் செய்யலாம். உலகத்திலுள்ள எல்லாக் குற்றங்களையும் தாங்கள் திருத்தி விட்டதுபோ லும் இனி எமது துண்டுப் பிரசுரங்களில் பிழை கண்டு பிடித்து எம்மைத் திருத்துவது மட்டும் பாக்கியிருப்பது போலும் அவர்கள் எங்கள்மீது பாணப்பிரயோகம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இஷா அத்தே இஸ்லாம் எமது முக்கிய நோக்கம். இஸ்லாத்தை முதலில் பரவச்செய்து விட்டால் பிறகு சிறு சிறு நுட்பங்களையெல்லாம் சீர்திருத் தம் செய்துகொள்ளலாம். எம்மீது குற்றம் கற்பிக்கும் எமது முஸ்லிம் நண்பர்கள் தாமேயாவது தாய்பாஷை யாகிய தமிழைக் கற்றுணர்ந்து இத்தென்னாட்டில் இஷா அத்தே இஸ்லாம் செய்யமாட்டார்கள்; பிறர் தமிழில் எழுத முன்வந்தபோதிலும் அதற்கும் இடங்கொடுக்க மாட்டார்கள். முஸ்லிம் நண்பர்காள்! யாமே ஒன்றையும் சிருஷ்டித்து இஸ்லாத்துக்கு முரணாக அச்சிட்டுவிடவில்லை. வேறொரு விளம்பரத்தில் யாம் எழுதியிருப்பதுபோல் எமது ஒவ்வோர் இதழின் ஒவ்வொரு வாக்கியத்துக்கும் தக்க உலமாக்களின் மேற்கோளுண்டு; எம்மீது சந்தேகங் கொண்டவர்கள் அந்த உலமாக்களைக் கேட்டுத் தம்மு டைய சந்தேகம் தெளிவார்களாக. வட இந்தியாவில் உரு தில் நடக்கும்இஷா அத்தே இஸ்லாத்தை இத்தென்னாட் டில் செந்தமிழில் துண்டுப் பிரசுரமாய் வெளியாக்கு கிறோம். ஆதலின் சிலர் தங்களுக்குத்தான் மார்க்க கிரந்தங் களில் தேர்ச்சியிருப்பது போலும் முஸ்லிம் சங்கத்தாருக் கும் அவர்களுக்கு ஆசிரியர்களான வடஇந்திய மௌ லவிகளுக்கும் அக்கிரந்தங்களில் தேர்ச்சியில்லாததுபோ

னும் எம்மீதுள்ள தங்களின் பொறுமையால் வெளியாக்கும் இடையூறுகளை யாம் லக்ஷியம் செய்யாமல் அல்லாஹ்வுக் காகவும ரஸூலுக்காகவும் இஸ்லாத்தின் தத்துவததை இனிபதமிழில் வெளியாக்குவோம். ஆண்டவனுடைய சத்தியசன்மார்க்கத்துக்காக நாம் பாடுபடும்போது அவனது திருவருளே பொறுமைக்காரரின் பொறுமையினின்றும் எம்மைக்காத்து ரக்ஷிக்கும். சிலரின் பொறுமைக்காக ஆண்டவனுடைய காரியம் குந்தகமடையாது. இது திண்ணம்; இது சத்தியம். இச்சத்தியமே ஜயமடைய இறைவன் துணைசெய்வானாக. ஆமீன்.

"நல்ல வக்கீலான அல்லாஹுத்தஆலா எங்களுக்குப் போதுமானவன்; (அவன்) நல்லநேயன், நல்ல உதவிக்காரன்"— அல்குர்ஆன்.

---

கமலம்—1 அனுபந்தம் 4 இதழ்—20

31—12—19

## அல்கௌலு பி பனாயின்னாரி

Q B F

(நரகமுடிவுக்கு அத்தாக்ஷியுண்டு)

---

"பொதுவாக முஸ்லிம் சகோதரர்கள் மார்க்கவிஷயங்களைத் தக்க உலமாக்கள் (?) மூலமாய்த் தெரிந்து

(?) தக்க உலமாக்கள் இன்னவர்களென்றும் தேர்ச்சி பெற்ற உலமாக்கள் இன்னவர்களென்றும் அவர்கள் இலக்ஷணம் சொல்லாததால் யார் தக்கவர்களென்றும் தேர்ச்சி பெற்றவர்களென்றும் எமக்கு விளங்கவில்லை; ஒருகால் தங்களையே தக்க உலமாக்களென்றும் தேர்ச்சிபெற்ற உலமாக்களென்றும் அவர்கள் நம்பி

அதன்படி நடந்து கொள்வார்களாக. நாச்சியார்கோவில் முஸ்லிம் சங்கத்தாரும் தேர்ச்சிபெற்ற உலமாக்களுடன் (?) கலந்துகொண்டு மார்க்கவிஷயங்களைப் பிரசுரிப்பார்களானால் தாங்கள் தவறுகளிலிருந்து தப்புவதோடு பிறருக்கும் நன்மை செய்யக் கூடியவர்களா யிருப்பார்கள்," என்று எங்களுக்கு நல்லறிவு போதிக்கும் திண்ணிய எண்ணத்துடன் முன்வந்ததாகத் தம்மை மதித்திருக்கும் எமது கண்ணுண் மணியான கருத்துக்கினிய 'உலமாக்களுக்கும் அவர்களைப் பின்பற்றினோர்க்கும், எமக்கு அவர்கள் நல்லறிவுச் சுடரைக்கொளுத்தவேண்டுமென்னும் நல்லெண்ணத்துடன் தாம் முன்வந்ததாக எண்ணி எமக்கு எச்சரிக்கை செய்த நன்றிக்காக எமது மனதார்ந்த வந்தனத்தை அவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். நரகத்தின் முடிவு எல்லாமாந்தருக்கும் ஒருகாலத்தில் உண்டென்று யாம் முன்னம் எழுதியது சத்தியசன்மார்க்கக் கொள்கைக்கு முரணானதென்றும் முஸ்லிமபாவிக ளல்லாத ஏனையபாவிகளுக்கு நரகவேதனை நித்தியமென்றும் மேலே குறிப்பிடப்பட்ட எமது முஸ்லிம சகோதரர்கள் கூறுகின்றனர்; ஆனால் நரகமுடிவு ஒருகாலத்தில் எல்லோருக்கும் உண்டென்று சொல்லும் இம்மிஸ்கீன்களாகிய எமக்கும் அவர்களைக் காண மிகத் தேர்ச்சிபெற்ற தகுதிவாய்ந்த மகாபெரிய மௌலவிகளின் ஆதாரம் உண்டெனபதை இத்தென்னாட்டினர் எல்லாரும் தெரிந்துணரும்படி உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கிக்காட்டும் பொருட்டு எமது பேராசிரியர்க

---

யிருப்பார்களாயின் அதை யாம் ஒத்துக்கொள்ளும் விஷயத்தில் எமக்கு அபிப்பிராய பேதமுண்டென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்

ளிட மிருந்து எமக்குக் கிடைத்திருக்கும் கடிதத்தை இதன்கீழ் எடுத்து எழுதுகின்றோம். கற்றோரெல்லாம் கருத்திலுணர்வர் ; மற்றோரெல்லாம் மயக்கம் தீர்வர் :—

லாஹூர்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

நரகத்தை அடைந்தவருக்கு முடிவில்லாத நித்திய கால தண்டனை யுண்டாகுமென்பதும், அவர்கள் எக்காலத்திலும் வேதனையிலிருந்து விடுவிக்கப் படமாட்டார் என்பதும், ஆகிய இக்கொள்கை குர்ஆன் ஷரீபின் எந்த வாக்கியத்தாலும் ஏற்படமாட்டாது. காபிர்கள் நித்திய காலத்துக்கும் வேதனை யடைந்துகொண் டிருப்பார்கள் என்று எண்ணும் மனிதர்கள் ஸூரத்து ஹூதில், "பஅம் மல்லதீன ஷகேள" என்ற ஆயத்தில் வருகிற "இல்லா மாஷாஅ ரப்புக"—அதாவது உம்முடைய நாயன் நாடின(வர்) தவிர—என்ற வாக்கியத்தை ஆதாரமாகக்கொண்டு, அதற்கு மூமின்களான பாவிகளை மாத்திரம் வேதனையிலிருந்து விடுவிப்பதென்பதே கருத்து என்கிறார்கள்; இன்னும் காபிர்களுக்கு நித்திய காலமும் வேதனை யுண்டாகுமென்பதை ஸ்தாபிக்க அவர்களிடத்தில் ஏதேனும் பிரமாணம் இருக்கும்பக்ஷத்தில் காபிர்களின் விஷயத்தில் குலூது அல்லது அபது என்ற பதம் வழங்கப்பட்டிருப்பது மாத்திரமே அந்தப் பிரமாணமாயிருக்கலாம். ஆனால் அவர்களின் இந்தக் கொள்கை தவறாகும். ஏனெனின், குர்ஆன் ஷரீபும் இதை ஒப்புக்கொள்ளவில்லை ; ஹதீது ஷரீபினாலும் இதை ஸ்தாபிக்க முடியாது. இஃதேபோல் அனேகம் அஸ்ஹாபுகளும் தாபிஊன்களும் அவர்களுடைய இந்தக் கொள்கையில் ஒத்திருக்கக் காணோம்.

முதலாவது.—குலூது என்ற பதத்தைப் பார்க்கும் போது இது குர்ஆன் ஷரீபில் காபிர்கள், மூமின்கள் ஆகிய இருதிறத்தாரைக் குறித்தும் வழங்கிவந்திருப்ப தாகத் தெரியவருகிறது. உதாரணமாக, அடியில் காணும் இரண்டு ஆயத்துக்களும் இருதிறத்தாருக்கும் சமமாகச் சாட்சியம் பகர்ந்துகொண் டிருக்கின்றன:—

(1) "எந்த ஜனங்கள் தீத்தொழில் புரிந்து அவர்க ளுடைய தீங்குகள் (நான்கு பக்கத்திலும்) அவர்களைச் சூழ்ந்துகொண்டனவோ அவர்கள் நரகத்தாராவர்; அவர் கள் அதில் குலூது செய்பவராயிருப்பார்கள் (தங்கி யிருப் பார்கள்)."—ஸூரத்துல் பகர் 9-வது ருகூவு.

(2) "எந்த ஜனங்கள் காபிரானார்களோ இன்னும் நம்முடைய ஆயத்துக்களைப் பொய்யாக்கினார்களோ அவர் கள் நரகத்தாராவர்; அவர்கள் அதில் குலூது செய்பவரா யிருப்பார்கள்."

பின்னர் இந்த இரண்டு ஆயத்துக்களும் இருக்கும் போது காபிர்களின் நித்தியகாலவேதனை விஷயமாக குலூது என்னும் பதத்தைப் பிரமாணமாக எடுத்துக் காட்டி (இல்லா மாஷா அ ரப்புக) "உம்முடைய நாயன் நாடின(வர்) தவிர" என்னும் வாக்கியத்தால் மூமின்க ளான பாவிகள் தவிர என்ற கருத்தை யமைக்க எவருக் கும் பாத்தியமில்லை; மேலும் "தவிர" என்ற இச்சொல் பொதுப்படையானதென்று ஒப்புக்கொள்ள நேரிடும்; அதாவது, நரகத்தவர் காபிர்களாயிருந்தாலும் மூமின்க ளான பாவிகளாயிருந்தாலும் அவர்கள் எல்லாரும் ஒரு காலம் வரையில் நரகத்தில் கிடந்து பிறகு அதிலிருந்து எடுத்து விடப்படுவார்கள் என்பதுதான். குலூது (தங்கி

யிருத்தல்) என்னும் பதம் (எடுத்து விடப்படுவார்கள் என்ற) இப்பொருளுக்கு மூரணுகாது; ஏனெனின், குலூது என்பதற்கு எப்போதும், நித்தியமும், சதா சர்வகாலமும் என்பன மாத்திரமே பொருளல்ல; நீண்டகாலம் என்பதும் அதற்குப் பொருளாகும்.

உதாரணமாக.—அல்லாமா ஜமக்ஷரீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களுடைய தப்ஸீர் கஷ்ஷாபில் கலத என்னும் (இறந்தகால வினைச்) சொல்லுக்கு "அவன் நெடுநாள் நிலைத்திருந்தான்," என்று அர்த்தம் செய்திருக்கிறார்கள். இன்னும் (கலத என்னும் இப்பதத்தடியாய்ப் பிறந்த) கவாலிது என்னும் (பன்மைப்பெயர்ச்) சொல்லுக்கு அடுப்புக் கற்கள் என்று அர்த்தமுண்டு. அக்கற்கள் ஒரு நீண்டகாலம் வரையில் கிடப்பனவாகையால் அவற்றிற்கு கவாலிது என்று சொல்லுகிறார்கள்.

இனி அபது என்னும் பதமும் கவனிக்கத் தக்கது; குர்ஆன் ஷரீபில் எப்படி இந்தப் பதம் சுவர்க்கவாசிகளின் விஷயத்தில் வழங்கப்பட்டிருக்கிறதோ அப்படியே நரகவாசிகளின் விஷயத்திலும் வழங்கப்பட்டிருப்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. உதாரணமாக, குர்ஆன் ஆயத்து— "அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் மாறு செய்பவர் யாவரோ அவர்களுக்குத் திட்டமாக நரகத்து நெருப்புண்டு. அவர்கள் அதில் அபதாகத் தங்கியிருப்பார்கள்." ஆனால் அபது என்னும் இப்பதத்தினுல் சுவர்க்கவாசிகள் எப்போதும் சுவர்க்கத்தில் நிலைத்திருப்பார்கள் என்று நாம் சொல்வதுபோல் இந்த அனுமானத்தினுல் நரகவாசிகளும் அவ்வாறு நரகத்தில் தங்கியிருப்பார்கள் என்று நாம் சொல்ல முடியாது; ஏனெனின், முதலாவது

இந்த ஆயத்துக்களில் கூறிய வண்ணம் குர்ஆன் ஷரீபின் மற்ற இடங்களில் காணப்படும் சிற்சில வாக்கியங்களின் வியாக்கியானங்களை உற்று நோக்குங்கால் (மூமின்கள், காபிர்கள் ஆகிய) இருதிறத்தார் விஷயத்திலும் வழங்கப் பட்டிருக்கிற இந்த அபது என்னும் பதம் (பலபொருள் ஒரு சொல்லாக) வெவ்வேறு அர்த்தமுள்ள தென்பது தெளிவாகின்றது. அதாவது, சுவர்க்க வாசிகளின் விஷயத்தில் வந்திருக்கிற (அதாஅன் கைர மஜ்ஸூஸ்) "துண்டிக்கப்படாத கொடையாக" என்னும் இந்த ஆயத்தானது, அபது என்பதற்குப் பொருள் முடிவில்லாத நித்திய காலம் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆனால் காபிர்களின் விஷயத்தில் (லாயிதீன பீஹா அஹ்காபா) அவர்கள் அதில் (அஹ்காபு) பல்லாண்டு கணக்காகத் தங்கியிருப் பார்கள் என்று வந்த ஆயத்தானது அவர்களுக்கு நித்தியகாலவேதனை யுண்டென்று சொல்லுவதைத் தடைசெய்கிறது. ஆதலின் காபிர்களின் விஷயத்தில் அபது என்பதற்கு ஒரு வரையறையான காலம் என்று பொருள் கொள்ள வேண்டுவது அவசியமாயிற்று. இதன் உண்மை அரபி பாஷையின் உயர்தரக் கிரந்தங்களாலும் (Literature) லுகத்து என்னும் அரபு அகராதி நூல்களாலும் ஏற்படும், உதாரணமாக:—

இமாம் ராகிப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களுடைய முப்ரதாத்தில் தஅப்பதஷ்ஷைவு என்ற வாக்கியத்தை வழங்குவதில் "கருதியபொருள் நீண்டகாலம் நிலைத்திருக்கிற ஒரு வஸ்துவாகும்," என்று எழுதியிருக்கிறார்கள். இதுவுமன்றி அபது என்னும் இப்பதத்திற்கு முடிவில்லாத நித்தியகாலம் என்பதே பொருளாகும் பக்ஷத்

தில் ஆபாது என்னும் பதத்தை இதன் பன்மையாக வழங்குவது வீணேயாகும்; ஆனல் அரபி பாஷையின் உயர்தரக் கிரந்தங்களில் இது அநேகமாக வழங்கிவந்திருக்கக் காண்கிறோம்.

இனி ஹதீதுகளேயும், அஸ்ஹாபுகள் தாபிவூன்கள் இவர்களுடைய வாக்கியங்களேயும் நாம் கவனிப்போமாக. அவர்களுடைய கொள்கையும் (ஜஹன்னம்) நரகத்துடைய வேதனை நித்தியவேதனை யல்லவென்ற கொள்கையாகத் தான் இருந்ததென்பது தெளிவாகும்.

நரகம் ஒரு நாள் அழிந்துபோம் என்னும் இச்சொல்லே அஸ்ஹாபுகளில் நின்றும் தாபிவூன்களில் நின்றும் ஒரு தொகையாரால் இமாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நகல் செய்திருக்கிறார்கள். (தப்ஸீர் பத்ஹுல்பயானைப் பாருங்கள்.)

அப்துல்லா ஹிப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களைக் கொண்டு இமாம் அஹ்மதுஹம்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ரிவாயத்துச் செய்திருப்பதாவது.—"நரகத்தில் ஒருவருமில்லாமல் அதன் வாயில் (கதவு)கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருக்கும் படியான ஒருநாள் அதற்கு வரும். அந்நாளோ நரகவாசிகள் அதில் பல்லாண்டுகள் தங்கியிருந்த பின்னர் வருவதாகும்," என்பதே. பத்ஹுல்பயான் என்னும் தப்ஸீர்கார் இந்த (ஹதீது) வாசகத்தை அப்படியே பெயர்த்தெழுதி அதன்கீழ் அவர் எழுதுகிறதாவது:—"இதே வாக்கியம் இப்னு மஸ்ஊது, அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹுமா இவர்களால் பன்முறை நகல்செய்யப்பட்டிருக்கிறது. ஷைகுல் இஸ்லாம் இப்னுதைமிய்யா ரஹி

மஹு ல்லாஹு அவர்களும் இப்படியே சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் ஹஜரத்து உமர், இப்னு அப்பாஸ், அனஸு ரலியல்லாஹு அன்ஹும் முதலான அஸ்ஹாபுகளின் கொள்கையும் இதுதான்," என்பதே. இது அஸ்ஹாபுகளைப்பற்றிப் பொதுப்படையாய்ச் சொன்ன சங்கதியாயிருக்கிறது. அவர்களுள் சில அஸ்ஹாபுகளின் ரிவாயத்துத் தனித்தனியாகவும் இருக்கின்றன. அவை விவரமாக இதனடியில் வரையப்படுகின்றன.

ஹஜரத்து உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்து:—"நரகவாசிகள் உலகத்தின் மணலத்தனையாக நரகத்தில் தங்கியிருந்த போதிலும் அவர்கள் அந் நரகத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுகிற ஒரு நாள் அவர்கள் மீது வரும்."

இன்னும் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் அப்துபுனு ஹமீது அவர்களும் இதுபோல்வதான ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். அந்த ரிவாயத்தில் சம்பந்தப்பட்ட எல்லாப் புருஷரும் நாம் சார்ந்து நம்பத்தக்க மகான்களாகவே யிருக்கிறார்கள்.

ஹஜரத்து அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் வார்த்தை இது:—"(ஜஹன்னம்) நரகத்தில் ஒருவரும் தங்கியிராத ஒருநாள் அதற்கு வரும்." அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இதைச் சொன்னதன் பின்னர் பஅம்மல்லதீனஷகோ என்ற ஆயத்தை முடிய ஓதினார்கள்.

இபுனு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் வந்த ரிவாயத்து இது:—"நரகம் சுத்தசூன்யமாய் ஒழிந்து போகிற ஒரு காலம் அதன்மீது வரும்."

கத்தாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் அபுஷ்ஷைகு ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ரிவாயத்துச் செய்கிறதாவது:—"கத்தாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பஅம்மல்லதீனஷகேள என்னும் இந்த ஆயத்தை ஓதிப் பின்னர் இதன்கீழ்வரும் ஹதீதை அனஸு ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் தமக்குச்சொன்னதாகச் சொன்னார்கள்:—'ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுளமானார்கள்—நரகத்தில் நின்றும் ஒரு கூட்டம் வெளியேறும்—என்று;' அதிற்புகுந்தவன் பின்னர் எப்போதும் அதிலேயே கிடப்பான் என்று நாம் சொல்லமாட்டோம்."

ஜாபிரு ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் ரிவாயத்துச் செய்யப்பட்டிருப்பதாவது:—"ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் (பஅம்மல்லதீனஷகௌ) என்ற இந்த ஆயத்தை ஓதிப் பின்னர் திருவுள மானார்கள்: '(ஷகிய்யாகிய) அந்த மூதேவிகளை அல்லாஹுத் தஆலா நாடினால் நரகத்திலிருந்து அப்புறப்படுத்தி அவர்களைச் சுவர்க்கத்தில் புகுத்துவான்,'"—என்பதே.

ஷஃபீ என்பவர்களால் இப்னுஜரீர் அவர்கள் நகல் செய்திருப்பதாவது:—"இரண்டு வீடுகளில் நின்றும் (ஜஹன்னம்) நரகமானது அதிசீக்கிரத்தில் அடர்ந்தோங்கிச் செழிப்பதாயும் அதி சீக்கிரத்தில் அழிந்து பாழாய்ப் போவதாயுமிருக்கிறது," என்பதே.

அம்றுப்னுல் ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் அஹ்மது ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ரிவாயத்துச் செய்திருப்பதாவது:—நரகத்தில் ஒருவருமில்லாமல் அது ஒழிந்து போகிற ஒருநாள் அதன்மீது வரும்," என்பதே.

ஹஜ்ரத்து ஷெய்கு முஹ்யித்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நரகவேதனை முடிவில்லாத நித்தியவேதனையல்ல என்பதற்கு அடியிற்கண்டவண்ணம் சமாதானம் கூறுகின்றார்கள். "(பரிசு கொடுப்பதாக) ஒருவருக்கு வாக்களித்தால் அதை நிறைவேற்றுவதுதான் புகழத்தக்க செய்கையாகும்; தண்டிப்பதாகப் பயமுறுத்தினல் அதை நிறைவேற்றுவது புகழல்ல; ஆனால் அதைப் பாராட்டாமல் மன்னித்து விடுவதே புகழாகும். அல்லாஹுத் தஆலா தான் செய்த ஆதாரவான வாக்குறுதிக்கு விரோதம் செய்யாதவன் என்றனே தவிர அச்சம் புகட்டினதற்கு விரோதம் செய்யாதவன் என்று அவன் சொல்லவில்லை. மேலும் பாவங்களைப்பற்றி மனிதருக்கு அவன் அச்சம் புகட்டியிருப்பதுடன் அவர்களின் பாவங்களுக்காக அவர்களைத் தண்டிக்காமலும் விட்டுவிடுவான் என்றும் சொல்லி யுள்ளான்," என்பதாகும்.

இன்னும் சில வியாக்கியானிகள் பஅம்மல்லதீனஷகௌ, லாபிதீனபீஹா அஹ்காபா இந்த இரண்டு ஆயத்துக்களினாலும் (ஜஹன்னம்) நரகவேதனை (நித்தியமென்பதில்லை; ஆனால்) அற்றுப்போம், என்பதற்கு எடுத்துக் கூறும் அத்தாக்ஷியாவது: அக்கிரமக்காரன் செய்த பாவம் வரையறையுள்ளதாய் (அற்பகாலத்திய குற்றமாய்) இருக்கிறது; அந்தப் பாவத்துக்காக வரையறையில்லாத நித்தியகால வேதனையில் துன்புறுத்துவது அதர்மமாகும்," என்பதே. *

---

* நரக வேதனை காபிர்களுக்குச் சதாசர்வகாலமும் உண்டென்று வாதிக்கும் நமது நண்பர்கள் கவனிக்கத்தக்க வினாக்கள்: (1) நபிகள் நாயகத்தின் தாய்தந்தையர்கள் முஸ்லிம்களா அல்லது

இப்போது இத்தனை ஹதீதுகளும் மஹான்களாகிய அஸ்ஹாபுகள், இமாம்கள் இவர்களது வாக்கியங்களும் நரகவேதனை துண்டித்துப் போம் என்று தெளிவாய்க் காட்டிக் கொண்டிருக்கின்றன. சில ரிவாயத்துக்களில் (லைஸபீஹா அஹதின்) "அதில் ஒருவருமில்லாமல்" என்று வந்திருக்கும் வாக்கியமானது பொதுவாக எந்த மனிதரும் நரகத்தில் இரார் என்று எண்பிக்கின்றது. இவ்வாறு வெளிப்படையான ஆதாரங்கள் இருக்கும்போது அவற்றைத் திருப்பி இதாவார்த்தைகளைக் கற்பித்து அவற்றை ராவிகள் மீது சுமத்துவது அவர்களைக் குறித்து அவதூறு பேசுவதாயிருக்கிறது.

எப்போது நரகவேதனை துண்டித்துப்போம் என்று ஏற்பட்டதோ அப்போதே அல்லாஹுத் தஆலா தனக்கு ஷிருக்கு (இணை) செய்வதை மன்னிக்கமாட்டான் என்ற ஆயத்தின் கருத்தும் தெளிவாகத் தெரியவந்தது. அதா

---

வேறு மார்க்கத்தை அனுசரித்தவர்களா? முஸ்லிம்களல்லாத பக்ஷத்தில் அவர்கள் கதி என்ன? (2) நமது நபிகள் நாயகத்துக்கு முன்னுள்ள ஹாத்திம் தை போன்ற மனிதர்களின் கதி என்ன? (3) இக்காலத்திலும் இஸ்லாமார்க்கம் இன்னதென்று உணர்ந்து கொள்ள முடியாத பிரதேசங்களில் பிறவியால் மட்டும் காபிர்களாயிருந்து கொண்டு மஹா நல்லவர்களா யிருக்கிறார்களே அவர்களின் கதி என்ன? (4) கலிமாச் சொன்ன ஒரு மூமின் மகா கொடிய ஹராமியாயிருக்கிறான்; ஒரு காபிர் புத்ஹானை வணங்குவது தவிர மற்றெல்லாக் காரியங்களிலும் நல்லமுஸ்லிமைக்காண நல்லவனாயிருக்கிறான்; இவ்விருவருள் யார் நல்லவர்? கலிமாச் சொன்ன ஷை. ஜாஹிலான ஹராமிக்கு நரகமுடிவுண்டு; ஆனால் விக்கிரக ஆராதனைமட்டும் (ஷிருக்கு) செய்யும் மகா உத்தமகுணம் நிறைந்த காபிருக்கு மட்டும் நரகம் முடிவில்லையோ? இதுதான் தெய்வநீதி போலும். (5) 10வயது மட்டும் ஒரு காபிர் இருந்து இறந்து போகிறான்; இன்னொரு காபிர் 100 வயது மட்டும் புத்ஹானை வணங்கி மரிக்கிறான்; இருவருக்கும் தண்டனையில் வித்தியாசமில்லையோ? (6) ஒரு காபிர் இஸ்லாம் இன்னதென்று நன்

வது:—இணை வைத்துப் பூஜிக்கும் காபிருக்கு அவசியம் நரகதண்டனை கிடைக்கு மென்பது தான். இதே தவிர அவன் அந்தத் தண்டனையில் நித்தியமாயிருப்பான் என்பதல்ல. இதுவுந்தவிர இந்த ஆயத்தால் முஷ்ரிகு (இணைவைப்பவர்) களை மாத்திரம் என்ற குறிப்பு எதுவுமில்லை. ஏனெனின் இவ்வகையான சொற்கள் குர் ஆன் ஷரீபில் இதர காபிர்களுக்காகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. அஃதெப்படி யெனின், "காபிரானவர்களுக்கும் அக்கிரமம் செய்தவருக்கும் அல்லாஹ் (அக்குற்றங்களை) மன்னிப்பவனு யிருப்பதில்லை," என்று திருவுளமாகிறுன்.

ஆனல் மேலே சொன்னதுபோல் எவ்வாறு காபிர்களுக்கு ஒரு காலத்தில் அவசியம் வேதனையிலிருந்து விடுதலைகிடைக்குமோ அவ்வாறே இணைவைத்துப் பூஜிக்கும் முஷ்ரிகானவனும் ஒரு காலத்தில் விடுதலை பெறப் பாத்தியஸ்தனுவான்.

மௌலானு அமீரெகௌம் அவர்களுக்காகப்
பிரைவேட் ஸெக்ரெட்டரி,

லாஹுர், அப்துஸ்ஸுப்பூஹின்,
10—12—19 ஹஸ்தலிகிதம்.

---

ருக உணர்ந்த பின்னும் ஈமான் கொள்ளாமல் வர்மம் செய்கிறுன்; வேறெரு காபிர் இஸ்லாத்தை யுணர ஆசைகொண்டு தக்க மௌலவிகளிருந்து அவனை இம்மார்க்கத்தில் கொண்டுவர ஹேதுவில்லாமல்போய் அக்காபிர் குபிர் மார்க்கத்திலேயே யிருந்து இறந்து போகிறுன். இவ்விருவருக்கும் ஒரேதண்டனை தானே? இருவருக்கும் நரகவேதனை நித்தியம்தானே? இதுதான் அஹ்கமுல் ஹாக்கிமீனின அல்லாஹ்வின் நீதியோ? அல்பாருக்

மேலே விவரித்துக் காட்டப்பட்டிருக்கும் விஷயங்களை யுணர்ந்து இனியேனும் எமது வார்த்தையில் நம்பிக்கை வைத்து இம்முஸ்லிம் சங்கத்தாரும் "தேர்ச்சி பெற்ற தக்க உலமாக்களுடன் கலந்துகொண்டு தான் மார்க்க விஷயங்களைப் பிரசுரிக்கின்றார்கள்," என்று எமது நண்பர்கள் தேறுதல் அடைவார்களாக. எம்மீது பழிசுமத்தும் எமது கண்ணுண் மணியான மித்திர ரத்தினங்கள் மேற்கூறிய கடிதத்தைப் படித்துப்பார்த்துப்பின்னர் இச்சங்கத்தாருக்கும் இதன் ஆசிரியர்களுக்கும் அரபிபாஷையிலுள்ள மூலக்கிரந்தங்களில் தேர்ச்சியுண்டா இல்லையாவென்று சிந்தித்துத் தெளிவார்களாக. இவ்வளவு நிதானத்துடன் ஆய்ந்தோய்ந்து பாராமல் அவசரப்பட்டு எம்மீது குறைகூறித் துண்டுப்பிரசுர மொன்றை அச்சிட்டு வெளியிட்ட எமது கல்புக் கனியான முஸ்லிம் ஸ்ரீதேவிகள் மீது ஒருபோதும் யாம் குறையேகூறோம். எவரையும் தூஷிப்பது எமது நோக்கமன்று; ஏனெனின், இஸ்லாத்தின் ஸலாமத்தைக் கோரும் யாம் எவருடனும் வாதம் செய்து பிடிவாதம் செய்வது எமக்குக் கவாவக் குறைவாகக் காணப்படுகிறது. இவ்வளவு சொல்லியும் இன்னும், "தமது கொள்கையும் (அகீதாவும்) (அதாவது, காபிர்களுக்கு நரகவேதனை முடியவே மாட்டாது என்பது) அதுவே," என்று கொண்டது விடாது சண்டைக்கு வருவரேல் அவருடன் எமது நேரத்தை இனி வீண்போக்கோம். இம்முஸ்லிம் சங்கத்தார் ஸுன்னத்து ஜமாஅத்தின் கொள்கைக்கு மாறான விஷயங்களையெல்லாம் இத்தென்னாட்டில் பரப்பி விடுகின்றனர் என்று எமது பொறாமைக்காரர் பரப்பிவரும் ஒரு பொய்யான வதந்தியால்

நம்முஸ்லிம் நண்பர்கள் பயந்து ஒருகால் யாங்கள் முஸ்லிம்களைக் கெடுக்கவந்த கெட்டமக்களென்று எண்ணி விடுதல் கூடுமென்று யாம் கருதி அவர்களுடைய மனத்தின் கண்ணுள்ள ஆதாரமற்ற திகிலை ஒழித்தோட்டும் பொருட்டு இம்மட்டும் எழுதினோம். குடலைப்பிறிக் காட்டினாலும் குறளி வித்தைதான் என்று சொல்பவருடன் யாம் இனிச்சண்டை செய்யோம். இஸ்லாத்தின் தத்துவங்களை உள்ளது உள்ளவண்ணம் உலகத்தவருக்குணர்த்தி இங்கிலாந்தில் சென்று 6 வருஷத்துக்குள் 600 பேர்களை இஸ்லாத்தில் கொண்டுவந்திருக்கும் சன்மார்க்க போதகர்களைப் பின்பற்றி யாம் இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைக்காக உழைக்கின்றோம். எம்மீது வீண்பழி கூறும் எமது உத்தம மித்திரர்காள்! நீங்களும் எங்களுடன் கலந்து ஒத்துழைப்பீரேல் நமது சத்தியசன்மார்க்கம் இத்தென்னாட்டினரின் அக இருள், புற இருள் ஆகிய இரண்டையும் ஓட்டிச் சுத்த சத்தியத்தை நிலைநிறுத்தும்; இன்றேல் நாம் இருவரும் நம்மார்க்கத்தின் நுண்ணிய விஷயங்களில் யுத்தம்செய்து கொண்டிருக்கும் போது நமது சொல்ப சக்தியும் அல்ப அறிவும் கிஞ்சித்துச் சாவகாசமும் நம்சண்டையில் செலவழிந்துபோகும்; அப்போது நமது இஸ்லாத்தின் பெரிய விஷயங்களெல்லாம் பிறர் தெரிந்து கொள்ளச் சாவகாசமில்லாமல் கடைசியில் நமது மார்க்கமே துர்ப்பலமடைந்துபோம் இப்போதே நாம் நமது பலத்தை யிழந்துகொண்டே போகிறோம். நீங்கள் மஹா மதியூகிகளானமையின் இம்மட்டும் சொன்னோம். இனியுங் கேளாமல், “சந்துவிட்டால் வந்து விட்டேன்,” என்றும், “வந்ததடி சண்டை, இறக்கடி கூடையை,” என்

றும் சொல்வதே போல் எம்முடன் சண்டையிட்டே தீர வேண்டுமென்றால் அச்சண்டையில் யாம் தலையிடோம். சன்மார்க்கப் பரவுதலே எமது முக்கிய நோக்கம்; தர்க்கத்தையும் குதர்க்கத்தையும் விலக்கிக் கொள்ளுகிறோம். இம்மட்டும் சொல்லியும் கேளாதவருக்கு இதனடியில் காணும் கவிகளையே அவர்களின் ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறோம்.

"கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்றகலை யுணர்ந்தார் ஓதுகிறார்—மெத்த
வெறும்பந்த யங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்."

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

"பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும்."

"எதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னுமுயிர்க் கு."

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

"கற்றோராவர் குற்றம் பாரார்."

முற்றிற்று.

---

PRINTED AT THE GUARDIAN PRESS, MADRAS.

## விக்ஞாபனம்

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு."—குறள்.

தென்னாட்டின் கண்ணுள்ள ஸுன்னத்து ஜமாஅத்தாரின் மேன்மையின் பொருட்டு அதற்குரிய எல்லா ஏற்பாடும் செய்யவேண்டுமென்பது எமது நோக்கம். இந்நோக்கத்துக்கிணங்கப் பலகாரியங்களும் செய்வதுடன் சன்மார்க்கப் பிரசார சம்பந்தமான பிரசுரங்களும் செந்தமிழில் இனிய நடையில் அச்சிட்டு இலவசமாய்ப் பரவச் செய்தலும் ஓர் அவசியமான காரியமெனக் கைக்கொண்டிருக்கின்றோம். இக்காலத்தில் காகித விலையும் அச்சுக் கூலியும் நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போகின்றன. யாங்கள் எடுத்துக்கொண்ட பிரசார வேலையை இனிது நடத்துவதற்கு உங்களுடைய உதவி அதிகம் வேண்டும். இக்காலத்தில் ஐசுவரிய பலமில்லாமல் ஒரு பலனும் கைகூட மாட்டாதானமையின் நம்முஸ்லிம் ஸ்ரீமான்கள் தங்களாலியன்ற திரவிய சகாயம் செய்தருள்வார்களென்று யாம் அதிவினயமாய் விக்ஞாபனம் செய்து கொள்ளுகின்றோம்., லில்லாவுக் களிப்போர் எல்லா நலனும் எய்துவர்.

நாச்சியார் கோவில்
1—7—20

கு. அமீருத்தீன் சாஹிபு,
காரியதரிசி.

170241

## குர்ஆன் ஆயத்து

---

“(மனிதர்களுக்குத்) தப்பானதைத் தடுத்துச் சரியானதை விதிக்கவும் (அவர்களை) நன்மையான வழியில் அழைக்கவும் உங்களுள் ஒரு வர்க்கத்தார் இருப்பது அவசியம்; இவர்கள் தாம் ஜயமுடையவர்களாவார்கள்.”—(3: 103)

“காலத்தைக் கவனியுங்கள்; உறுதிகொண்டு அதன்படி நற்கிரியைகளைச் செய்பவர்களும் ஒருவருக்கொருவர் உண்மையை விளக்கி உபதேசிப்பவர்களும் ஒருவருக்கொருவர் பொறுமையை விளக்கி உபதேசிப்பவர்களும் தவிர மற்ற மனிதர்களெல்லாரும் நிச்சயமாக நஷ்டத்திலானவர்களாயிருக்கிறார்கள்.”—(ஸூரா 103)